மேலாண்மை பொன்னுச்சாமி

# பூக்கும் மாலை



திருவரசு புத்தக நிலையம்

# பூக்கும் மாலை

மேலாண்மை-பொன்னுச்சாமி

திருவரசு புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : அக்டோபர், 2007
உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பாசிரியர் : வானதி திருநாவுக்கரசு

---

**விலை : ரூ. 70–00**

* Title **POOKKUM MAALAI**
* Language Tamil
* Subject Short Stories
* Author Melanmai Ponnuswamy
* Edition First Edition, October - 2007
* Pages xiv + 210 = 224
* Publication **Thiruvarasu Puthaka Nilayam**
  23/13 Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai -17
  Ph: 24342810 / 24310769
* Price : Rs. **70-00**

---

ஒளி அச்சு : நேரு அச்சகம், இராயப்பேட்டை, சென்னை – 600 014

Printed at: Nathan & Company, Chennai-42.

# சமர்ப்பணம்

அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் பொறுப்பாளர்களில் முக்கியமானவரும், விசா கிடைக்காமல் போன துரதிருஷ்டத்தால் அமெரிக்கப் பயணம் தடைப்பட்ட பின்பும், அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை எனது தமிழ்ப்பணிக்கென அறிவித்திருந்த கீர்த்திமிக்க- பணமதிப்புமிக்க - 'மாட்சிமைப்பரிசு' எனும் சிறப்புமிகு விருதை...

சென்னைக்கே வந்திருந்து... என்னையும், என் குடும்பத்தினரையும் சென்னைக்கு வர வழைத்து மிகச் சிறப்பான - செழிப்பான - விழா நடத்தி, விருது தந்து கௌரவித்தவரும்,

தமிழையும், தமிழ்ப் படைப்பாளிகளையும் போற்றிப் பாதுகாத்து மகிழ்கிற உயர் பண் பாளருமான...

(Axes) ஆக்ஸஸ் டெக்னாலஜி திருமிகு பால்பாண்டி அவர்களுக்கு.

# அகம்-முகம்-உயிர்

தமிழில் சிறுகதை இலக்கியம் தொடர்கதை எனும் நாவல் இலக்கியம் இரண்டுக்கும் நீண்ட நெடிய பாரம்பர்யம் இருக்கிறது. புகழ்மிக்க வரலாறு இருக்கிறது.

சமகாலத்தின் சாஸ்திரங்களும், சடங்கு சம்பிர தாயங்களும், நிலவிய கருத்தியல்களும் ஒப்புக் கொள்ள முடியாத அளவுக்கு மீறிச் செயல்பட்டு... பால்ய மண எதிர்ப்பு, விதவா விவாகம், சர்வஜன சமத்துவம் என்று புதிய தடத்தில் துணிவுடன் சிந்தித்த வ.வே.சு. ஐயர், மகாகவி பாரதி போன்றவர்கள்தாம் முதல் சிறுகதைகளைத் தமிழில் படைத்தனர். தமக்கான புதிய சூழலைப் படைத்தனர்.

சிறுகதை இலக்கியம், நாவல் இலக்கியம் தமிழில் ஒவ்வொரு காலத்திலும் அலைவட்டமென விரிந்து பரந்து சென்று கொண்டேயிருந்தன. அறிவு ஜீவிகள் சொத்தாக மட்டுமே சுருங்கிக் கிடந்த இலக்கியம், நவீனக் கல்வி மக்களுக்குப் பரவப் பரவ... பரந்து விரிந்த வெகுஜன மக்கள் சிறுகதைகள் தொடர்கதைகள் வாசித்தனர்.

ஒவ்வொரு குடும்பமும் சிறுகதைகள் தொடர் கதைகள் வாசிக்க... வாசிக்க... வாசிப்பியக்கமும், கல்வி இயக்கமும் பெருகப் பெருக... வெகுஜனப் பருவ இதழ்களின் விற்பனையும் லட்சக்கணக்கில் பெருகிற்று.

இன்றைக்கு என்ன நிலை?

சிறுகதை இலக்கியம் உயிருடன் இருக்குமா? தொடர்கதை எனும் நாவல் இலக்கியம் நிலைக்குமா? நீடிக்குமா? இடமற்றுப் போகுமா? இல்லாமலேயே போய்விடுமா? தமிழில் சிறுகதை, நாவல் இலக்கியமே மறைந்துவிடுமா? ஒழிக்கப்பட்டுவிடுமா?

இப்படிப்பட்ட கேள்விகள் ஏன் எழுகின்றன?

வாரத்துக்கு நான்கு சிறுகதைகள் பிரசுரித்த வெகுஜன வாரஇதழ்கள், இப்போது ஒன்றே ஒன்று பிரசுரிக்கின்றன.

இரண்டு தொடர்கதைகள் பிரசுரித்து வந்த அதே வார இதழ்கள் சுத்தமாக நிறுத்திவிட்டன. பிரசுரிக்கிற ஒற்றைச் சிறுகதையும் ‘மூன்று பக்கங்களுக்கு மிகாமல்’ என்ற எச்சரிக்கையுடன் பிரசுரிக்கப்படுகிறது.

இது ஏதோ ஒரு வார இதழ் மட்டுமல்ல... தமிழின் அத்தனை வார இதழ்களிலும் இதே போக்குதான்.

இந்தப் போக்கு, சிறுகதை, நாவல் போன்ற படைப்பிலக்கிய உருவாக்கத்தில் இருக்கிற எழுத்தாளர்களுக்கு மிகப்பெரிய சோர்வையும் அயர்சி யையும் ஏற்படுத்தியிருக்கிறது. ‘பிரசுரிக்க இதழ்கள்

இல்லாமல், ‘எழுதிவைத்து என்ன செய்ய’ என்ற ஆயாசத்தில் மனச்சோர்வடைந்து மூடிக்கொண்ட பேனாக்கள் நிறைய.

இப்படியான சோர்வூட்டுகிற — அயற்சியூட்டுகிற இறுக்கமான புறச்சூழல் சுற்றிவளைத்து முற்றுகை யிட்டு மூச்சுத் திணறடிக்கின்ற தருணத்தில் எழுதப் பட்டவைதாம் இந்தச் சிறுகதைகள்.

நான் சோர்வடையவில்லை. அயற்சியடைய வில்லை. தொடர்ந்து எழுதுகிறேன்.

1972 நவம்பரில் எனது முதல் சிறுகதை ‘பரிசு’ செம்மலர் இலக்கிய இதழில் பிரசுரமாயிற்று.

இடை இடையே அவ்வப்போது குறுநாவல்கள், சிறுநாவல்கள், அணிந்துரைகள், மதிப்புரைகள் எழுதி யிருந்தாலும் அறுபடாத தொடர்ச்சியுடன் தொய்வில் லாத பயணமாக நடைபோடுவது, சிறுகதைப் பாட்டையில்தான்.

நான் பெற்றிருக்கிற பரிசுகளும், விருதுகளும், சிறப்புப் பாராட்டுகளும், சந்தோஷங்களும் சிறுகதைப் படைப்புகளில்தாம். அதுவே எனது அகம். முகம். உயிர்.

உரைநடைப் படைப்பிலக்கியவாதிகளை மூச்சுத் திணறச் செய்து, நெருக்கடி தந்து நிர்மூலமாக்குகிற இந்த மோசமான புறச்சூழலின் தட்பவெப்பம் முழுமை யையும் உணர்ந்திருக்கிற நான், எவ்வித மனத் தொய்வுமில்லாமல் எனது சிறுகதைப் பயணம்

தொடர்கிறது. அதுவே எனது ஆத்மாவின் அசலான வெளிப்பாட்டு வடிவம்.

புறச்சூழலுக்கு எதிராக முரட்டுத்தனமாகப் பயணம் செய்வது சரியா? சூழல் யதார்த்தம் புரிந்த பின்பும், கண்டுகொள்ளாமல் பயணப்படுவது புத்தி சாலித்தனமா?

யோசித்துப் பார்த்தால்... முடிவில்லாத நீண்ட யாத்திரையான மனிதகுல வாழ்க்கையே இயற்கை யெனும் புறச்சூழலுக்கு எதிரான பயணம்தான். இயற்கையை எதிர்த்து மனிதன் நடத்திய மீறலிலும் போராட்டத்திலும்தான் விஞ்ஞானம் பிறந்தது. மானுட ஆற்றல் எனும் கூட்டுச்சக்தி பிறந்தது. மனித சமூகம் உருக்கொண்டது. அடித்துக் கொன்று தின்ற மிருகங் களை வசக்கி... வளர்க்க முனைந்ததில் மேய்ச்சல் சமூகம் தோன்றியது. உழவு தோன்றியது. உணவு உற்பத்தி வந்தது. மனிதகுல நீள்வரலாறே மீறல் களும், போராட்டங்களும் நிறைந்ததுதான்.

இயற்கையுடன் தோழமை பூண்டுகொண்டே இயற்கையின் உற்பாதங்களை எதிர்த்து மனிதகுலம் நடத்திய போராட்டத்தில்தான் கப்பல்கள் தோன்றின. கட்டிட நாகரிகம் தோன்றியது. அணைக்கட்டுகளும், அக்னி தீண்டாத அரண்களும், காற்று புக முடியாத காவல் கோட்டைகளும் எழுந்தன.

எனது பின்தங்கிய கிராமம், பின்தங்கிய பொருளாதார வாழ்க்கை, குறைந்த கல்வி எல்லாமே ஓர் எழுத்தாளனை முளைக்கவிடாத புறச்சூழல்தான்.

முளைத்துவிட்டேன். எனது கடை வியாபாரமும், அதன் விதிகளும் பொதுவாழ்க்கைக்கு என்னை நகரவிடாத புறச்சூழல்தான்.

பொதுவாழ்க்கையில் தொடர்ந்து இயங்கி வருகிறேன். இப்போதும் நான் தொய்வின்றி தொடர்ச்சியாக சிறுகதைப் பயணமும், படைப்பும் செய்கிறேன். எனக்கொன்றும் பயமில்லை. மனிதகுல வரலாறு அறிந்த எவருக்கும் பயம் வராது.

மனிதன், சூழலின் வார்ப்பு. சூழலின் கைதியல்ல. சுயமான செயலாற்றல் மிக்கவன். சூழலைப் புதிதாக்க அவனுக்கு இயலும். அதுதான் வரலாற்றின் வரலாறு.

இப்போதைய புறச்சூழலும் மாறும். நான் நிச்சயமாக நம்புகிறேன்.

1980களின் துவக்கத்தில் தொலைக்காட்சிகள் பெருகி, சேனல்கள் ஏராளமாகி... எல்லா வீட்டு அடுப்பங்கரைக்குள்ளும் கொண்டுவந்து சேர்க்கிற கேபிள் தொழிலும் பெருகி...

எல்லோரும் சின்னத்திரையெனும் சிந்தனைச் சிறைக்குள் சிக்கிக்கொண்டபோது, புத்தக விற்பனை சுத்தமாக நின்றுபோயிற்று.

'புத்தக வாசிப்பு என்பதே புராதன அனுபவமாகி விடும், புத்தகம் அருங்காட்சியகப் பொருளாகிவிடும்' என்று எல்லா அறிவுஜீவிகளும் ஒரே குரலில் பயத்துடன் கத்தினர். இப்போது நிலைமை என்ன?

தொலைக்காட்சி தொலையவில்லை. சேனல்கள் குறையவில்லை. தொடர்களும் சலிக்கவில்லை.

ஆயினும்,

புத்தக வாசிப்புப் பழக்கம் மீண்டும் அரும்பி, மலர்ந்து வாசம் பரப்புவதைப் பார்க்கிறோம். புத்தகக் கண்காட்சிகள் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்று வருவதைக் காண்கிறோம்.

சிறுகதைகள், தொடர்கதைகள் பிரசுரிக்காமல் மறுதளிக்கிற இதே வாரஇதழ்கள்... மீண்டும் 'சற்றே பெரிய கதை'களைக் கேட்டு வாங்கிப் பிரசுரிக்கவே செய்யும்.

மகாகவி பாரதி, வ.வே.சு. ஐயர் போன்றவர்கள் எழுத ஆரம்பித்தபோது, சிறு பத்திரிகைகளில்தான் எளிய பயணம் துவங்கியது. புதுமைப்பித்தன், கு. அழகிரிசாமி, மௌனி போன்ற சிறுகதைப் படைப் பாளிகள் சிறு பத்திரிகைச் சூழலில்தான் இயங்கினர். சிறுகதைப் பத்திரிகைகளில் இயங்கிவந்த ஜெய காந்தன் தாம், வெகுஜனப் பத்திரிகைகளில் சிம்மாசனம் பெற்றார்.

வெகுஜன இதழ்கள் வரவேற்புத் தராத காலங் களிலும், சிறுகதை இலக்கியப் பயணம் சிறு பத்திரிகைச் சூழலில்தான் செழிப்பாகவும் சிறப்பாகவும் நடைபோட்டது. அதே சிறு பத்திரிகைச் சூழல் இப்போதும் நீள் சிறுகதை இலக்கியத்துக்கான தள மாகவும் களமாகவும் இருக்கிறது. வெகுஜன வார இதழ்கள் மீண்டும் சிறுகதை இலக்கியத்தை நாடிவரு கின்ற காலமும் சமீபத்தில் இருக்கிறது.

சினிமா சார்ந்த துணுக்குகள், நடிகைகள் சார்ந்த செய்திகள், பணக்காரர் ஆவது எப்படி, பெரும்பதவிக்கு வருவதெப்படி போன்ற சூட்சுமக் கட்டுரைகள், நிம்மதி தானம் தருகின்ற ஆன்மிக அருள்வாக்குகள், ஜெயித்த அரசியல்வாதிகள் பற்றிய சுவாரஸ்யங்கள் மட்டுமே புதிய இதழியல் போக்குக்குப் போதுமானதாகக் கருதப் படுகிறது. இவையெல்லாம் இலக்கிய வாசிப்பு எனும் பேரனுபவத்துக்கு ஈடாகாது. மாலைநேரக் கொறிப்புகள் முழுநேர உணவாகிவிடாது.

சிறுகதை, தொடர்கதை வாசிப்பு என்பது வாழ்க் கையைக் கலாபூர்வக் கலவையுடன் பிசைந்து தருவது. கனவுகளும் நிஜங்களும் கைகோர்க்கிற வினோதமான அனுபவம். மனசுக்குப் பரவச அனுபவத்தையும், அறிவுக்கு செழிப்பான உரத்தையும் ஒருசேரத் தர வல்லது.

மனிதர்களின் வாழ்க்கை, அன்பு, பண்பு, சிறுமை, பெருமை, அற்பம், உன்னதம் சகலத்தையும் கலந்து கலையெனும் அழகியலோடு பரிமாறுகிற அந்த விருந்துக்கு வெறும் மாலைநேரக் கொறிப்புகள் மாற்றாகிவிடாது.

மீண்டும் மனசுகள், இலக்கிய வாசிப்புகளுக்கு ஏங்கும். தேவையை உணரும். 'கொண்டு வா' என்று வார இதழ்களை உத்தரவிடும்.

எனக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது.

தமிழ் உள்ளவரை, மானுடம் உள்ளவரை உரை நடைப் படைப்பிலக்கியத்திற்கான அகத் தேவைகள் பெருகிக்கொண்டே இருக்கும்.

நான் தொடர்ந்து எழுதுகிறேன். நம்பிக்கையுடன் எழுதுகிறேன்.

அரசாலும், வரலாற்றினாலும், கைவிடப்பட்ட கிராமங்களைப் பற்றித் தொடர்ந்து எழுதுகிறேன். வாருங்கள், வாசிப்பதற்கு. எழுதுவோம், புதிய புறச் சூழலை.

இந்தத் தொகுப்பில் இருக்கிற கதைகளில் ‘நடை நடையாய்’ குறிப்பிடத்தக்க கதை. கிராமத்திற்கும் வந்துவிட்ட பணக்கார நோய்களுக்கான காரணங் களையும் தீர்வையும் சொல்கிற கதை. உழைப் பின்மையால் வருகிற நோய்கள் என்று நினைக்கப் பட்டதைத் தகர்த்து வருகிற கிராமத்துக் கசப்பு நிஜங்கள். கடின உழைப்பாளிகளுக்கும் அதே நோய்கள். சிறுகதை என்ற அளவிலும் சரி... உள்ளடக்க அளவிலும் சரி... மிக முக்கியத்துவம் பெறுகிற கதை.

கிளிகள், மயில்கள் அழகான பறவைகள். அழ குணர்ச்சி மிக்க கவிஞர்களின் கதாசிரியர்களின் வர்ணிப்புகளுக்கான உவமைகளாக உச்சரிக்கப் படும். நகரத்துப் பிள்ளைகள் மயில்களையும், கிளிகளையும் பார்த்தாலே பரவசப்பட்டு மகிழ்ச்சியோடு கூச்சல் போடுவார்கள்.

விவசாய உழைப்பில் ஈடுபடுகிற வியர்வை மனிதர்கள் அனுபவத்தில் கிளியும் மயிலும் அதன் கவித்துவ அழகையெல்லாம் உதிர்த்து... வெறும் தொல்லை தருகிற ராட்சஸப் பிராணிகளாக புதிய பிம்பம் பெறுகிறது. 'கிளியும் மயிலும்' மிகவும் வித்தியாசமான தனித்துவச் சிறப்புமிக்கது. கரிசல் காட்டு கிராமத்தானுக்கு மட்டுமே இப்படியான கருப்பொருள் கையாளும் வாய்ப்பு உள்ளது.

'மன உடைப்பு' கதையில் வருகிற ஆட்டுக்காரர்களை வேறு யாரும் இத்தனை யதார்த்தமாக யாராலும் பிரதிபலித்துவிட முடியாது.

இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகளைப் பெருந்தன்மையுடன் பிரசுரித்து கௌரவித்த அத்தனை இதழ்களுக்கும் என் சிறப்பான நன்றிகள்.

எனது படைப்புகளையெல்லாம் சிறப்பான முறையில் வெளியிட்டு, அன்பும் பரிவும் காட்டி பாசத்தைப் பொழிகிற பதிப்பாசிரியர் புகழ்மிகு வானதி பதிப்பக உரிமையாளர் ஐயா. திருநாவுக்கரசு அவர்களுக்கும், அழகான அட்டை ஓவியம் படைத்துத் தந்த ஓவியர் அவர்களுக்கும், எனது இலக்கிய வாழ்வுக்கு எப்போதுமே ஆணிவேராகவும், ஆதார பலமாகவும் இருக்கிற என் தம்பி செ. கரிகாலனுக்கும் என்றென்றும் எனது நன்றிகள் உரித்தாகும்.

பொதுவாக... எனது பெரும்பான்மையான தொகுப்புகளின் தலைப்புகளில் 'பூ' என்ற சொல்

வாசத்துடன் மலர்ந்திருக்கும். பல நண்பர்கள் அதைச் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். நானும்கூட... இனிவரும் நாளில் 'பூ' என்ற வார்த்தையைத் தவிர்க்கலாமே என்று நினைத்தேன்.

ஆனால் இந்தத் தொகுப்புக்கு 'பூக்கும் மாலை' என்ற தலைப்பே மிகவும் கச்சிதமாகப் பொருந்தி வருகிறது என்று அழுத்தமாக வாதாடி என்னை ஒப்புக்கொள்ளச் செய்த எனது மகன் கவிஞர் வெண்மணிச்செல்வன் B.E. எனது சிறப்பான பாராட்டுக் குரியவனாகிறான்.

இனி.. நீங்களும்.... 'பூக்கும் மாலையும்...' வாசித்து முடித்துவிட்டு மௌனத்தில் ஆழ்ந்துவிடாமல்... வாசித்த கதைகளால் உங்களுக்குள் எழுந்த உணர்வுகளை ஒரு கடிதமாக எழுதி அனுப்புங்கள், தயவுசெய்து.

உங்கள் பாராட்டுகள் என் பேனாவுக்கு இன்னும் மையூற்றும்; நீங்கள் கண்டுணர்ந்து சொல்கிற குறை களும்கூட என்னைச் செதுக்கி, மேலும் கூர்மை யாக்கும். இரண்டுமே இலக்கியத்துக்கு சிறப்பு செய்யும். நன்றிகள்.

என்றும் உங்கள்
**மேலாண்மை பொன்னுச்சாமி**

மேலாண்மறைநாடு
626127
இராஜபாளையம் வழி
விருதுநகர் மாவட்டம்
04562/271233
9942610700

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. பூக்கும் மாலை | 1 |
| 2. அரிவாள் வெட்டு | 13 |
| 3. கிளியும் மயிலும் | 21 |
| 4. உள் மன முள் | 36 |
| 5. மன உடைப்பு | 47 |
| 6. விளக்குமாறு | 59 |
| 7. வெள்ளை மனசு | 72 |
| 8. போதி மரம் | 83 |
| 9. பால் பானை | 94 |
| 10. சந்தேக நோய் | 105 |
| 11. ஒரு சிறு துளி | 116 |
| 12. அமாவாசை | 130 |
| 13. ஆண் கர்வம் | 142 |
| 14. நடை நடையாய்... | 154 |
| 15. ஒண்ணே ஒண்ணு | 174 |
| 16. அரண்டவள் கண் | 185 |
| 17. மனித மனசு | 195 |
| 18. சகலமும் சரசு | *203* |

# 1 பூக்கும் மாலை

தீயாய் தகிக்கிற உச்சி வெயிலில் நடந்து வந்தது அருணாசலத்துக்கு வியர்த்துக் கொட்டியது. நஞ்சடித்த கெண்டையாக கிறுகிறுக்கிறது. ‘எங்கடா வுழுவோம்’ என்று மனசு கிடந்து துவண்டு சரிகிறது. கண்ணைக் கட்டிக்கொண்டு வருகிறது. காதடைக்கிறது.

வீட்டுக்குள் நுழையக்கூட மதியில்லாமல், அப்படியே தாழ்வாரத் திண்ணையில் உட்கார்ந்து சுவரில் சாய்கிறார். கண்ணை மூடித் திறக்கிறார். வண்ண ரேகைகள் பூச்சிகளாகப் பறக்கின்றன.

‘நம் பயலுக்கு எப்பதான் மாலை பூக்கப் போகுதோ’ என்ற நினைவின் சலிப்பு. பெண் கேட்டுப் போகிற இடமெல்லாம்... உபசாரம், வரவேற்பு, விசாரிப்புகள் தடபுடலாக நடக்கின்றன. ‘இந்த வீட்டோடு சம்பந்தம் ஆயிருமோ... பயலுக்கு மாலை பூத்துருச்சோ’ என்ற நம்பிக்கைகள் அரும்புகின்றன. அப்புறம் நாலைந்து நாள் கழித்து... ‘தோதுப்படாது’ என்ற தாக்கல் வந்து தொலைக்கிறது.

மனசு கிடந்து துவண்டு சரிகிறது. விரக்தியும் அயர்ச்சியுமாகிவிடுகிறது. ஆம்பளைப் பயலுக்குப் பெண் பார்ப்பதில் இத்தனைத் தடங்கல்களா? இம்புட்டுச் சிரமங்களா?

“பொம்பளைப் புள்ளைக்கு மாப்பிள்ளை கிடைக்க மாட்டேங்குறது.. உலக நடப்பு, ஊர் நடப்பு. ஆம்பளைப் பயலுக்கு பொண்ணு கிடைக்காம யாராச்சும் அலையுறா கன்னா அது புது நடப்புதானப்பா; நம்ம அருணாசலம் மகனுக்கு பொண்ணு கிடைக்காம தட்டழிஞ்சு வர்றா ரப்பா. நல்ல கூத்துதான்.”

“சாமியைப் புடுங்கி தலைகீழா ஊனணும்னு ஒத்தைக் கால்லே நிக்கிற இந்த ஆளு புத்திக்கு... அப்படித்தான் அமையும்.”

தெருக்காட்டில் இவரைப்பற்றி நாலுபேர் நாநூறு விதமாகப் பேசிச் சிரிக்கிறார்கள். இவரது நாத்தி கத்தின்மீது ஏகக் காட்டம்.

யாராச்சும் தெருவில், நேருக்கு நேராகப் பார்த்தாலும் கூச்சப்படாமல் முகத்துக்கு முகமாகக் கேட்டுவிடு கிறார்கள். “பொண்ணு தட்டுப்படுதா... படல்லியா? சிக்குமா, சிக்காதா?”

பதிலை எதிர்பார்க்காமல், நக்கலாக ஒரு சிரிப்பு வேறு. அருணாசலம் நொந்து நூலாகிப் போகிறார்.

“பொண்ணு எப்ப கிடைக்கும், எந்தத் திசையிலே கிடைக்கும்னு ஜோசியம் கீசியம் பாக்கலாம்லே?”

“முகம் பாத்து புளுகுறவங்கிட்டே கேட்டு என்னாகப் போவுது?” என்று இவர் பதிலடி கொடுப்பார்.

**வீ**ட்டுக்குள் ஆளிருப்பது பண்ட பாத்திர சத்தத்தில் தெரிந்தது. உலர்ந்த உதடுகளை நாவால் பிரித்துக் கொண்டே சத்தம் கொடுத்தார்.

"ஏய்... கொஞ்சம் தண்ணி கொண்டா."

"வந்துட்டீங்களா?" என்ற விசாரிப்பும், தண்ணீர்ச் செம்புமாகத் தளும்பி நின்றாள் முத்துலட்சுமி.

செம்புத் தண்ணீரை வாங்கி 'மடக் மடக்'கென்று குடித்தார். நெஞ்சில் தண்ணீர்க்கோடு வழிந்தது.

சட்டையைக் கழற்றி பக்கத்தில் வைத்திருந்தார். கழற்றப்பட்ட பனியன் தோளில் கிடந்தது. நெஞ்சுக்குழி ரோமங்களில் பாதி நரைத்திருக்கிறது.

"போன காரியம்... காயா, பழமா?"

"காய்தான்."

"ஏன்... என்னவாம்?"

"பட்டிக்காட்டுக்குப் பொண்ணு தரமாட்டாளாம். கவர்மெண்டு மாப்புள்ளைதான் வேணுமாம்."

அவரது குரலில் தொனிக்கிறது கசப்பும், தளர்வும். அவமானத்தை விழுங்குகிற மனவேதனையின் கருநிழல்.

ஊர்க்காரர்களைப் போலவே, வெறுப்புடன் புருஷனைப் பார்க்கிற முத்துலட்சுமி, 'இந்த மனுசராலே நம்ம புள்ளை கேவலப்படுதே' என்ற கசப்புணர்வு.

"ஒரு நல்லதுக்குப் போற மனுசரு சாமியைக் கும்புட்டு பயபக்தியோடப் போகணும். அப்பத்தான் போற காரியம் ஒண்ணுக்குப் பாதியாச்சும் ஒப்பேறும்."

"இந்த ஒலகத்துலே சாமி கும்புடுறவங்கதான் ஏக ஜாஸ்தி. சங்கடப்பட்டு சஞ்சலப்படுறவங்களும் ஜாஸ்தி தான் தெரியுமா?"

"இந்தப் பேச்சுல ஒண்ணும் குறையில்லே. போற காரியத்துலேயும் உருப்படுறதுல்லே. ஓங்க பிடிவாதத் தாலே எம் புள்ளை மானம் காத்துலே பறக்குது."

"என்னத்துக்கு?"

"ஆம்பளைக்கு பொண்ணு கெடைக்கலேன்னா கேவலமில்லியா? அவன் மனசு எம்புட்டு அவமானப் படும்?"

"அதுக்கு நா என்ன செய்ய?"

"சாமி இல்லே, பூதம் இல்லேன்னு வாய்க்கு வாயா பேசி எல்லாரையும் தூரந்தொலைவுலே நிக்கவைச்சாச்சு. மனுச மக்களோட அனுசரிச்சு அண்டிப்போற ஆளா யிருந்தா நாலா எடத்துலேயிருந்து நாலு தகவல் சொல்ல ஆளுக இருக்கும். எம்புள்ளைக்கு ஏதாச்சும் ஒரு தெசை யிலே மாலை பூக்கும். அதுக்குத்தான் வழியில்லியே?"

முத்துலட்சுமியின் அனல் தெறிப்புகளாக அங்க லாய்ப்புகள். காதில் வந்து தீ சுட்டாலும் பொறுமையாக இருக்கிற அருணாசலம்.

'ஏனிப்படி அறியாமையில் ஊறிக்கிடக்கிறார்கள்? ஊறிக்கிடப்பதே சரி என்று எருமைகளைப் போல சிந்திக்கிறார்கள்?' - அருணாசலத்துக்குக் கடுப்பாக இருக்கிறது.

"சாமியைக் கும்புடுறாங்க. கோயிலுக்குள்ளே பூஜை பண்றாங்க. கோடி கோடி ஜனங்க சாமி கும்பிட்டாலும், கோடி கோடி ஜனங்க துயரப்படுறாங்க. இத்தனையையும் பார்த்தபிறகும் கோயில், குளம்னு சுத்தி சுத்தி காசைக் கறியாக்குறாங்க. எப்பத்தான் இந்த ஜனங்க திருந்தப் போறாங்களோ... ச்சே..."

—முணுமுணுத்துக்கொண்டே, உள்ளே வந்தார். தொட்டியிலிருந்த தண்ணீரால் முகம், கால், கை, உடம்பு என்று அலசினார். மேல்துண்டால் அழுந்தத் துடைத்தார்.

"சோத்தை வை." என்றவர், "பயலை எங்க?" என்றார்.

"தெக்குப் புஞ்சைக்கு மருந்தடிக்கப் போயிருக்கான்."

வட்டிலை முன்வைத்தாள் முத்துலட்சுமி. கருவாட்டுக்குழம்பு வாசம் அவரைத் தூக்கியது.

"வாளைக் கருவாடா?"

"ம்..."

கருவாட்டுக் குழம்பின் ருசியில் மனசின் எரிச்சல் மறைந்திருந்தது. ஒரு சாந்தம். ஒரு திருப்தி.

"என்ன இருந்தாலும்... ஒங் கைப்பக்குவத்துக்கே தனி ருசி வந்துருது."

"ரொம்பத் தாளிக்காதீக... சாப்புடுங்க..."

புருஷனின் பாராட்டு, அவளுக்குள் பூக்களாக இதழ் விரித்து மலர்ந்தன. அதன் வாசமும், ஒளியும் முகப்பெருமிதத்தில் தெரிந்தது.

"இன்னும் கொஞ்சம் சோறு வை."

"கொழம்பு நல்லாருக்கா?"

சோத்தைக் கொண்டா... கொண்டா...ங்குது."

வயிறு நிறைந்து, மனசு நிறைந்து, முகம் மலர்ந்து மேல் துண்டால் ஈரக்கையைத் துடைக்கிற அருணாசலம். மீசையின் ஈரத்தைத் துடைத்துக்கொண்டே முத்துலட்சுமியைப் பார்த்த பார்வையில் ஒரு புன்னகை மின்னல்.

அன்றைக்கு ராத்திரி. கயிற்றுக் கட்டிலில் படுத்திருக்கிற அருணாசலம். பக்கத்திலேயே பாயில் படுத்திருக்கிற முத்துலட்சுமி. இரவின் நீட்சியில் வாழ்க்கையின் இரைச்சல் மெல்ல மெல்ல அடங்குகிறது.

"என்னங்க..." கம்மிய குரலில் அவள். மனக்கெஞ்சல் வழிகிற மயக்கக்குரல்.

"சொல்லு..." ஏதோ யோசனையில் அவர்.

"வேலுச்சாமி மாமா வந்து ஒங்களைப் பார்த்தாரா?"

"இல்லியே... எதுக்கு?"

"நம்ம குலதெய்வம் கோயிலுக்குப் போறதுக்கு பஸ் பிடிக்கப் போறாகளாம். நம்பளையும் கூப்புட்டாரு. ஒங்களைக் கேட்டு சொல்லுதேன்னு சொன்னேன்."

"கோயில்லே போய் என்ன செய்யப்போறோம்?"

"கும்மியா அடிப்பாக?"

"கும்புட்டு என்ன ஆகப்போகுது?"

முத்துலட்சுமியின் குரல் கரகரப்பு. அழப்போவது போன்ற உணர்வு. கலங்கிய மனசின் முகம்.

"ஊரு ஜனம் பூராவும் எப்படியெப்படியோ கோயில் குளம்னு கொண்டாடினாலும்... நாம எந்தக் கோயிலுக்கும் போனதில்லே, கொளத்துலே குளிச்சதில்லே..."

"ஆமா..."

"ஒங்க பிடிவாதத்தை ஒருபக்கம் ஒதுக்கி வையுங்க. என்னையும் ஒரு மனுசியா மதிச்சு... என்னோட ஆசையை யோசிப்பீகளா? உங்ககூட இம்புட்டுக் காலம்

கட்டுப்பட்டு, உங்க இஷ்டம் போல உங்களைப் போக வுட்டு என் இஷ்டப்படி எதையும் செய்யாம கல்லாக் கிடந்த என் கண்ணீரை மதிப்பீகளா?"

கண்ணீர் வெப்பமாக அவள் குரல். கலங்கிப்போன மனசின் சோகம். நூற்றாண்டு காலத்து ஒடுக்குமுறையினால் உறைந்துபோன சுதந்திர உணர்வின் மெல்லிய விசும்பல்.

அருணாசலத்துக்குள் அரிவாள் வெட்டாக விழுந்தது அந்தச் சோகக் குரல். தடுமாறித் தத்தளித்துப் போனார். உயிர்ப் பங்காளியின் உள்ளத்தைக்கூட உணராத முரடனாக தாம் வாழ்ந்திருக்கிறோமோ என்கிற குற்ற உணர்ச்சியின் முள் குத்தல்.

"சொல்லும்மா... என்னன்னு சொல்லு."

பதறிப் பதைத்துப்போன அவரின் மனத் திடுக்கிடல். உருகிக் கரைந்து நெகிழ்ந்துபோன ஈரமனக் கனிவு.

"கோயிலுக்குப் போகணும். நா... ஆசைதீர சாமி கும்புடணும். அதுக்கு நீங்களும் கூட வரணும்..."

நெகிழ்ந்துருகிப்போன அருணாசலம். தனது உயிர் பாதியின் உணர்வுத் துடிப்புக்குள் அவரது உயிர்ச் சிறகடிப்பு.

"சரி... நா வாறேன். போவம்... ஆனா ஒண்ணு!"

"என்ன...?"

"என்னைக் கும்புடச் சொல்லக்கூடாது. ம்?"

"ம்.."

'சுற்றுலா' போர்டு மாட்டி அந்தப் பேருந்து திருச் செந்தூர் நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. ஒரே ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம். முறைக்காரப் பெண்கள் கூச்சநாச்சம் பார்க்காமல் நையாண்டி பண்ணி கூத்தடித் தார்கள்.

வழக்கமான உழைப்புச் சுமையிலிருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றாக றெக்கையடிக்கிற மானுட மனப் பண்பாடு.

அருணாசலம் மூணாவது சீட்டில் உட்கார்ந்திருந் தார். அவர் பயந்து நடுங்கிய மாதிரி எதுவும் நடக்க வில்லை. நாத்திகவாதியான அருணாசலம் கோயிலுக்கு வருவதைச் சொல்லி... பரிகாசம் பண்ணி மூக்கை உரிப்பார்களோ என்று நடுங்கிப்போய்க் கிடந்தார்.

நல்ல வேளை- யாரும் இவரைக் கண்டுகொள்ளவே யில்லை. சுதந்திரப் பேருணர்ச்சியின் உல்லாசத்தோடு எல்லார் மனசுகளும் ததும்பி வழிந்தன.

முத்துலட்சுமி புருஷனைக் கனிவுடன் பார்த்தாள். டிரைவர் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற மகன் மணிமுத்து வையும் பார்த்தாள். அவனது வாலிப மிடுக்கு. மடக்கி விட்ட சட்டைக்கையை மீறிக்கொண்டு திமிறுகிற சதைத் திரட்சி. கறுத்த முகத்தின் சீரான அழகு. மீசையின் லட்சணம்.

'இம்புட்டு லட்சணமான உழைப்பாளிக்கு பொண்ணு கெடைக்கமாட்டேங்குதே- ம்ம்ம்..' - அவளுக்குள்ளிருந்து பீறிட்ட மனச்சோகப் பெருமூச்சு...

அம்மன்புரத்தைத் தாண்டியவுடன் விலக்கு ரோட்டுக்கு மாறிய பேருந்து. தென்னைகளும், வாழைத்

தோப்புகளுமாக செழித்த காடு. 'அருஞ்சுனை காத்த அய்யனார் கோயிலுக்குச் செல்லும் வழி' என்ற மஞ்சள் நிற போர்டு. ஒரே செம்மண் காடு. தாழம்பூ வாசம். பனைமர அடர்த்தி.

ஆகாய வெயிலை வெகு உயரத்திலேயே தடுத்து விடுகிற பெரிய பெரிய மருத மரங்கள். புதிதாக வர்ண மேற்றி, அழகுபடுத்தப்பட்ட கோயில். பெரிய நீர்ச்சுனை. எப்ப குளித்தாலும் வெதுவெதுப்பாக இருக்கிற அருஞ்சுனை.

பஸ் ஓரங்கட்டப்பட்டிருந்தது. ஒன்றிரண்டு வேன்கள், கார்கள், டாடா சுமோக்கள். குளிப்புகளும், புது வேட்டி சேலைகளும், பொங்கல் வைப்புகளும், மொட்டை யடிப்புகளும் அதுபாட்டில் நடந்தது. முத்துலட்சுமி பொங்கல் வைப்பதில் மும்முரமாயிருந்தாள். பஸ்ஸில் வந்தவர்கள் சமையலுக்கு ஏற்பாடு செய்தனர். மகன் மணிமுத்து விறுவிறுப்பாக ஓடியாடி உதவி செய்து கொண்டிருந்தான்.

அருணாசலம் சகலத்தையும் கவனித்துக்கொண் டிருந்தார். கர்ப்பக்கிரகம் முன் பயபக்தியோடு கும்பிட்டு-அடிமனத் தவிப்போடு முணுமுணுக்கிறவர்களின் முகத் தீவிரத்தையும் பார்த்தார். எதுவும் வேஷமில்லை. பாவனையில்லை.

'இங்கு முறையிட்டால்... குறை தீரும்...' என்று அச்சு அசலாக நம்புகிற அந்த அப்புராணி ஜனங்களைப் பார்த்தால், பரிதாபம்தான் வருகிறது அருணாசலத்துக்கு.

இவரைப்போலவே தனித்து நிற்கிற ஒருத்தர். உடன் வந்திருந்தவர்களுடன் ஒண்டாமல், அண்டாமல், விலகி நிற்கிறவர். ஏறக்குறைய சமவயது. காதோர நரை. மீசை முழுக்க நரை... ஆனால், உழைக்கிற திரேகம் என்று காட்டுகிற உடல் வலிமை.

சிநேகிதமான மென்னகையோடு பக்கத்தில் போய் உட்காருகிற அருணாசலம்.

"எந்த ஊரு... நீங்க?"

"புளியங்குடிப் பக்கம்."

"இதான் உங்களுக்குக் குலதெய்வமா?"

"இல்லே. இந்தக் குலதெய்வத்தைக் கும்புடுற வகையறாக்களுக்கு சம்பந்தகார மொறை உள்ளவன். எந்தங்கச்சி இந்தக் கோயிலுக்கு வந்திருக்கா, குடும்பத் தோட. செய்முறை செய்ய வந்திருக்கேன்."

அவர் பக்கத்தில் மஞ்சள் பை. அதில் புடைத்துக் கொண்டு புதுத் துணிமணிகள்.

அவரது பார்வை, ஓடியாடி வேலை செய்கிற மணி முத்து மீதே இருந்தது. அருணாசலத்தின் பார்வையோ, ஒரு பெண்ணை கவனித்தது. துறுதுறுப்பான பெண். பளிச் பளிச்சென்று பேசுகிறாள். சிரிக்கிறாள். நல்ல உழைப்பாளி.

ரெண்டுபேரும் பரஸ்பரம் பேசிக்கொண்டனர். 'காட்லே என்ன போட்டுருக்கீக...? மழை தண்ணி எப்படி? வெள்ளாமை விளைச்சல் எப்படி?'

மண்ணை நம்பி வாழ்க்கை நடத்துகிற வியர்வை மனிதர்களின் மனச்சங்கமங்களாக உரையாடல்.

"இந்த வருஷ வெள்ளாமையிலே எப்படியும் எம்பொண்ணுக்கு ஒரு நல்லது செய்யணும்."

"செய்ஞ்சுர வேண்டியதுதான். நானும் எம் பையனுக்கு பொண்ணு பாத்துக்கிட்டிருக்கேன்."

"அமைஞ்சுருச்சா? மாலை பூத்து வருதா?"

"வரும்... வரும்... வராமலா போயிரும்?"

அருணாசலத்தின் கண்ணில் வந்து முட்டிய அவரது பார்வை. கலந்து பேசிக்கொண்ட பார்வையில் ஓர் எண்ண உதயம். நினைவு மலர்கள்.

முளைத்த கணத்திலேயே விருட்சமாகிவிடுகிற மன நினைப்பின் தெறிப்பு. மாலையாகவே பூக்கிற மனப் பூக்கள்.

"அதுதான்... உங்க பையனா?"

"ம்... உங்க பொண்ணு?"

"அதோ... அந்தா... குளிச்சுட்டு படியேறுதுல்ல, அதான்."

**ம**திய பூஜை முடிவதற்குள்... வெவ்வேறு மூலைகளிலிருந்து வந்திருந்த அந்த சாதிசனம். 'கசபுசா'வென்று பேச்சு. 'அதா...' 'இதா' என்ற விசாரிப்புகள். முத்துலட்சுமிக்கு பெண்ணைப் பிடித்துவிட்டது.

காடுகரை, நகைநட்டு, சொத்துபத்து... எல்லாம் விசாரித்து, கலந்து பேசி, எல்லா ரகத்து மனிதமனங்களும் ஒரு நினைவுப் புள்ளியில் மையம் கொண்டு... ஒப்புதலாகி... ஆவணியில் முகூர்த்தம் என்பதுவும் முடிவாகி...

*சாயங்காலம். பேருந்து புறப்பட்டது. முத்துலட்சுமி முகம் பூரித்துக் கிடந்தது. கண்களில் நீர்க்கசிவு.*

*மகனுக்கு மாலை பூத்துவிட்ட மனக்கெந்தளிப்பு.*

*அருணாசலத்தைப் பெருமிதமும், வெற்றிச்சிரிப்புமாகப் பார்த்தாள்.*

*"கோயில்லே வந்து சாமி கும்புட்டோம். சாமி ஒரு வழியைக் காட்டிருச்சு, பார்த்தீகளா?"*

*"சாமிக்கும் இதுக்கும் சம்பந்தமில்லே. நாலுஊரு மனுசமக்க கூடிப் பேசுறப்பதான் இப்படியான உறவு பூக்கும். நீயும் நானும் மட்டும் வந்து சாமி கும்புட்டிருந்தா... இது நடந்திருக்குமா?"*

*சந்தோஷமான மன நிலையிலும் அவரவர் கோணத்திலிருந்து எதிரும் புதிருமாக வந்து முட்டிக்கொள்கிற நம்பிக்கைகள். கோபதாபமில்லாமல் மோதிக்கொள்கிற சிந்தனைகள்... விவாத உரசல்கள்...*

*முடிவற்ற உரசலாக... நீள்கிற அந்த வாக்குவாதங்களை ஒரு மென்னகையுடன் பார்த்துக்கொண்டே... கல்யாணம்... காட்சி, குழந்தை குட்டி என்று ஓடுகிற வாழ்க்கைப் பேருந்து.*

–'குங்குமம்,' 14–1–2007

# 2 அரிவாள் வெட்டு!

**சா**மிநாதன் திண்ணையில் புத்தகங்களுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறான். பைக்கட்டு கிடந்தது. அறிவியல், வரலாறு புத்தகங்கள் விரிந்த நிலையில். தமிழ் நோட்டும் இருந்தது. அதற்குள் பேனாவும் பென்சிலும் இருப்பது, அதன் புடைப்பில் தெரிகிறது.

ராசபாண்டி சின்ன சைக்கிளில் சர்ர்ர்ரென்று வந்து, இவன் வீட்டு முற்றத்தில் வட்டமடித்து, ஒற்றைக்காலை ஊன்றினான். கேரியரில் மட்டை சொருகப்பட்டிருக் கிறது.

"ஏலேய் சாமி, கெளம்பு... கெளம்பு... சீக்கிரம்."

"எங்க?"

"மறந்துட்டியா? இன்னிக்குத்தாண்டா, மேட்ச்? ஆவுடையாபுரம் பையங்க வர்றாங்க. நாமளும் போகணும். போன வாரமே நாம ஃபிக்ஸ் பண்ணினது தானே?"

சாமிநாதனுக்குள் 'குபுக்'கென்று உடைத்துக்கொண்டு ஊற்றென பீறிடுகிற விளையாட்டாசை. மனசின் இறக் கைகள் விரிகின்றன. உள்ளுக்குள் விசிலடிக்கிற மனசு. ஓடணும் என்று துறுதுறுக்கிற வயசு.

இந்த ஏரியாவிலேயே சாமிநாதனை மிஞ்சிய பந்து வீச்சுக்காரன் எவனுமில்லை. ஒரே சீராக ஓடிவந்து, 'சட்'டென்று வேகமெடுத்து ஒரு தாவு தாவி, கையைச் சுழற்றிப் பந்தை வீசினானென்றால்... மின்னல் வெட்டு தான். இடிமுழக்கம்தான். அப்படியொரு சூட்டிகை; சுறுசுறுப்பு; துள்ளல்.

ராசபாண்டி அவனைத் துரிதப்படுத்தினான்.

"பைக்கட்டை எடுத்து வைச்சுட்டு... பெறப்புடு..."

புத்தகங்களையும், பைக்கட்டையும் ஓரமாக ஒதுக்கி வைக்கப் பரபரத்த சாமிநாதன், பிரேக் போட்ட மாதிரி 'சட்'டென்று தேங்கித் திகைத்தான்.

"நா வரல்லேடா-" உயிரில்லாத குரலில் வந்த மறுப்பு. மனசின் வலி, முகத்தில் வாட்டநிழலாகப் படர... மறுக்கிறான்.

"ஏண்டா?"

"எக்ஸாம் நெருங்குது... நா வரல்லே."

"எனக்கு எக்ஸாம் இல்லையா?"

"இல்லேடா ராசபாண்டி, நீங்க வசதியானவுக. என்ன மார்க் எடுத்தாலும்... லெவன்த் போயிருவீக. எங்கதையே வேற..."

சாமிநாதனின் கம்மிய குரலில் வெட்டுண்ட மனசின் வலி. அவனது ஏழ்மையையும், இயலாமை யையும் அறிந்திருக்கிற ராசபாண்டியும் மௌனமானான்.

முதல்நிலை மாணவ - மாணவியர் பத்துப் பேரில் ஏழாவது ரேங்கில் இருப்பவன் சாமிநாதன். ரொம்ப ரொம்ப ஏழை. அன்றாடக் கூலிக்காரியின் மகன். மேல்

*நிலைக் கல்விக்குப் போக இயலாது என்பது சூரிய வெயிலைப்போலத் துல்லியமான நிச்சயம்.*

*உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகப் பணியாற்றுகிற பாதிரியார், சாமிநாதனைத் தனியாக அழைத்துப் பரிவுடன் சொன்னார். "ஏழாவது ரேங்க்லே இருக்கே. முயற்சி பண்ணி கஷ்டப்பட்டுப் படி. ஃபர்ஸ்ட் ரேங்க் எடுத்திட்டா... உன்னை ப்ளஸ்டூ வரைக்கும் படிக்க வைக்க எங்க பங்குச்சபை ஏற்பாடு பண்ணும். அதுக்கு நான் கேரண்டி..."*

*அதுவரை ஏனோதானோவென்று பள்ளி வந்து போயிருந்தவன்- விளையாட்டில் அதிக அக்கறை காட்டி யவன், கிரிக்கெட்டே கதியாய்க் கிடந்தவன், 'பத்து வரைக்கும்தானே நம்ம எல்லை' என்று அசமந்தமாக இருந்தவன்... ரொம்பவே மாறிவிட்டான்.*

*புதிய குறிக்கோள். புதிய உற்சாகப் பெருக்கு. நிறைய்ய 'புதிய'கள்.*

*வலிமையிழந்த பலவீனக் குரலில் கேட்கிற ராச பாண்டி. "இன்னிக்கு ஒருநாள் மட்டும் வாயேண்டா..."*

*"இல்லே... முடியாதுடா..."*

*கண்ணோரங்களில் விளையட்டாசையைப் புதைத்த மனப்பிசைவின் ஈரக்கசிவு.*

*தூக்குச்சட்டியும் சுரண்டியுமாக வீட்டுக்குள்ளிருந்து வெளியே வருகிற தாயம்மா.*

*"பொழுது ஓடிருச்சு. சின்னையநாயக்கரு புஞ்சைக்குக் களை வெட்ட ஓடணும்... அம்மா போய்ட்டு வரட்டா?"*

"சரிம்மா..."

"ம்..."

"தீப்பெட்டியாபீஸுக்கு குச்சியடுக்கப் போயிருக்குற அக்கா சாப்பிட வர்றப்ப நீயும் சாப்பிட்டுக்கோடா..."

"ஆட்டும்மா..."

வாய்ச்சொல் வாயிலிருக்க, வண்டிப் பாதைக்குப் போய்விட்ட அம்மாவின் பாதங்கள். பாசத்தில் குழைகிற மனசைக் கட்டியிழுத்துச் செல்கிற தாட்சண்யமற்ற லௌகீக வாழ்க்கை.

கொஸ்டின் பேப்பரில் கேள்வியை வாசித்துவிட்டு, அறிவியல் புத்தகத்துக்குள் பதிலைத் தேடி... குவிகிற மனக்கவனம்.

**க**ருமருந்து நாற்றமும், பசை வீச்சமும் கலந்த ஒரு நெடி, சாமிநாதனின் நாசியைத் தாக்கியது. தீப்பெட்டி யாபீஸுக்குப் போயிருந்த அக்கா வர்றாளோ?

நினைவை மெய்யாக்கி, வெயிலில் வந்துகொண் டிருக்கிற ராசாத்தி.

"ஒனக்கும் சோறு வைச்சிரவா?"

"ம்..."

வட்டில் முன் உட்கார்ந்து சோற்றைப் பிசைகிற சாமிநாதன். அக்காவைப் பார்க்கிறான். கனத்த பெரு மூச்சு நெஞ்சை வகிர்ந்துகொண்டு வெளிவருகிறது.

கறுப்பாக இருந்தாலும் லட்சணமாக இருக்கிறாள். இவனைவிட பத்து வயதுக்கு மூத்தவள். இவன் ஒண்ணாப்பு படிக்கும்போது அவள் சடங்கானதாக மெல்லிய ஞாபகம்.

இவள் வயசுப் பெண்களெல்லாம் வாழ்க்கைப் பட்டுப் போய் ரெண்டு பிள்ளைக்குத் தாயாகிவிட்டனர். காலத்தால் கைவிடப்பட்ட கல்லைப்போல நின்று நிலைத்துப் போனவள் அக்கா மட்டும்.

சாமிநாதன் மனம் கனக்கிறது.

குச்சியடுக்க ஓடணுமே என்று அவசரமாகச் சோற்றையள்ளி வாயில் போடுகிற அக்காவைப் பார்க்க மனசு தாளாமல், முகம் தாழ்த்திக்கொள்கிற சாமிநாதன்.

மறுபடியும் திண்ணையில் வந்து உட்கார்ந்து புத்தகத்தை எடுத்தான்.

பரீட்சைக்குப் புறப்படுகிறபோது, பாதிரியார் அழைத்து... ஆசிர்வதித்தார்.

உயிரையே திரட்டி சுட்டுவிரலில் நிறுத்தி பரீட்சை எழுதினான். நன்றாகவே எழுதிவிட்டான்.

'நிச்சயமாக ஃபர்ஸ்ட் ரேங்க் வந்துரலாம்' அவனுள் வேர்பிடித்து விழுதுகளை இறக்குகிற நம்பிக்கைகள். சம்மர் லீவுக்கு சும்மா இருக்க விரும்பாமல் கட்டட வேலைக்குச் சித்தாளாகப் போனான். செங்கல் சுமக்க, மணல் சலிக்க, சிமெண்டுச் சாந்துச்சட்டி சுமக்க... என்று வேலையில் மும்முரமான தருணத்தில்—

அன்றைக்கு ராத்திரி உழைப்பின் வலியறிந்து பழகாத உடம்பு... உழைத்த களைப்பில் உண்டவுடன் படுத்து விட்டான். உறங்கியும் உறங்காத திரிசங்கு நிலை.

அம்மாவின் கம்மலான குரல். கலக்கமும் சோகமுமாக கனக்கிற குரல்.

"ராசாத்தி... எனக்கென்னமோ... இப்ப வந்துருக்குற எடத்தை வுட்ரக்கூடாதுன்னு தோணுது. நகை நட்டுன்னு பெருசா கேக்கலே..."

"அப்புவும்... கல்யாணச் செலவு, கம்மல், மூக்குத்தி, ஒரு தாலின்னு பாத்தாலும் முப்பதாயிரம் வேணுமே... நம்மகிட்டே ஏது? பேசாம... இதை வுட்டுட்டு வேற பேச்சு பேசும்மா..."

"இல்லேடி.. தீப்பெட்டியாபீஸ்லே கெஞ்சிக் கூத்தாடி, பத்தாயிரம் அட்வான்ஸா வாங்கிரலாம்."

"மிச்சத்துக்கு?"

"வீட்டைக் கட்டுன சாமி, வாசல் வைக்காமலா வுட்டுருவாரு? ஒனக்கொரு வழியைக் காட்டமாட்டாரா?"

சாமிநாதனுக்கு நெஞ்சு கலங்கியது. மூடியிருந்த கண்ணோரங்களில் மனக்கசிவு. இன்னும் இருபதாயிரத்துக்கு எங்க போக?"

**அ**ந்திப்பொழுது. மஞ்சள் வெயிலும் மங்கி மறைய, இருளின் கரிய நிழல் பரவிக்கொண்டிருந்தது. சித்தாள் வேலை முடிந்து சாமிநாதன் வீடு திரும்புகிறான். கால் கையெல்லாம் சிமெண்டுச் சாந்து. ரத்தத்தை உறிஞ்சுகிற காந்தல். எவ்வளவு கழுவினாலும் போக மறுக்கிற சிமெண்டுக் கறை.

ராசபாண்டி எதிர்ப்பட்டான்.அவ்வப்போது சந்தித்து ஆத்மார்த்தமாகப் பேசிக்கொள்வார்கள்.

"டேய் ராசபாண்டி கொஞ்சம் நில்லுடா."

"என்ன சாமிநாதா?"

"அக்காவுக்கு இழுத்துப்பிடிச்சு எப்படியாச்சும் கல்யாணம் நடந்திரும்னு பாத்தேன். நடக்காது போலிருக்கு."

"ஏண்டா?"

சாமிநாதன் சொல்லத் துவங்க—

"மேலத்தெரு குருசாமி உங்க வீட்லே வந்து உங்கம்மா கிட்டே பேசுனது ஒனக்குத் தெரியாததா?" என்ற ராசபாண்டி நடந்த விபரம் சொன்னான்.

மேலத்தெரு குருசாமி வீட்டிற்கு வந்து வலிய சொல்கிறார்.

"பதினையாயிர ரூவா முன் பணமா தர்றேன். கல்யாணத்தை ஜாம்ஜாம்னு நடத்துங்க."

அம்மா முகம் அப்படியே பூவாக மலர்ந்து சிரிக்கிறது.

"அய்யா... உங்களுக்குக் கோடி புண்ணியம்."

"புண்ணியத்தை வைச்சு என்ன செய்ய? மெட்ராஸ்ல எம்மகன் மூணு மளிகைக் கடை வைச்சிருக்கான். கடைக்கு ஆள் தேவைப்படுது. ஓம் மகனை அனுப்பு. சாப்பாடு, தங்குற எடம் ஓசி. சம்பளமும் தருவான். என்ன சொல்லுதே?"

அரிவாள் வெட்டு விழுந்த மாதிரியிருந்தது அம்மாவுக்கு. முகத்தில் கலக்கம். உயிரின் ஆணிவேர் வரைக்கும் பரவி உலுக்குகிற அதிர்வு.

"எங்க வம்சத்துலேயே மொத மொத படிப்பு வர்றது இவனுக்குத்தான். மேல்படிப்புக்கு வாய்ப்பும் வந்துருக்கு.

அவன் தலையெழுத்தாச்சும் நல்லபடி ஆகட்டும். எங்க தலையெழுத்து எப்படியானாலும் சரி... சாமி விட்ட பாதை."

வைராக்கியமாக அம்மா மறுத்துவிட்டாள். ராச பாண்டி சொன்னபிறகுதான் சாமிநாதனுக்குத் தெரிகிறது. சாமிநாதன் என்ன நினைத்தானோ குருசாமி வீட்டை நோக்கி நடந்தான்.

**வை**காசியில் அக்கா கல்யாணம் முடிய... அடுத்த வாரமே பஸ் ஏறினான் சாமிநாதன், சென்னைக்குப் போக. பஸ், கிராமத்தைக் கடந்தபோது—

பள்ளி வளாகத்தில் கிரிக்கெட் நடந்துகொண் டிருக்க.. பையன்கள் ஆட்டமும் கூச்சலுமாக இருந்தனர். பள்ளியும், கிரிக்கெட்டும் தூரம் தூரமாகப் போக... பஸ் விரைந்துகொண்டிருந்தது.

அந்த ஆண்டின் தேர்வு முடிவு வெளியாகியபோது, பள்ளியின் ஃபர்ஸ்ட் ரேங்கில் தேர்வாகியிருந்தான் சாமிநாதன்.

—கல்கி, 6–5–2007

# 3 கிளியும் மயிலும்

அம்மாவைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது, வடிவேலனுக்கு. அவள் பாடாய்ப் படுகிற பாடுகளையும், ஆயாசத்தையும் பார்க்கப் பார்க்க மனசுக்கே சங்கடமாக இருக்கிறது.

வீட்டு முற்றத்தில் நின்றுகொண்டு மேலத்தெரு ஆச்சியிடம் மனச்சோகத்தைச் சொல்லிப் புலம்புகிற அம்மா.

"கம்பு வெள்ளாமையைக் காப்பாத்தி- களம் கொண்ணாந்து சேக்குறதுக்குள்ளே... உசுர் நரம்பு அ(று)ந்து போகுது."

அம்மா குரலின் அயர்ச்சி. அதில் தெரிகிற மனப் பாரம்.

தாழ்வாரத்துத் திண்ணையில் தமிழ்ப்பாடம் படித்துக்கொண்டிருக்கிறான்.

"காக்கைக்குருவி எங்கள் ஜாதி—நீள்

கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

ரிதமில்லாமல் கத்தரித்து கத்தரித்து உச்சரித்தான். மனப்பாடம் பண்ணுகிற யத்தனிப்பு. அவன் மனம் பூராவும் அம்மா மீதுதான்.

மேலத்தெரு ஆச்சியின் நரைத்த தலைமுடி காய்ந்து கனல் பறந்து கிடக்கிறது. பேசுகிற பேச்சுக்கேற்ப தண்டட்டி போட்ட காது ஆடுகிறது.

"கம்பங்கருது மணிபுடிச்சுருச்சா?"

"இப்பத்தான் பால் கோதி வருது. அதுக்குள்ளே கிளியும் மயிலும் நாசக்காடு பண்ணிச் சீரழிக்குது."

"அதுக பண்ணுகிற அழிமானம் ரொம்ப. நாசமாய்ப் போற கிளியும் மயிலும் நம்பளைப் பாடாய்ப்படுத்தி எடுத்துரும்."

"அதையேன் கேக்கீக- மந்தைமந்தையா வந்து வுழுந்து வெள்ளாமையையே கொள்ளையடிக்குது."

அம்மா குரலின் சோர்வு. மனச்சலிப்பு.

அம்மாவுக்காக ஏதாச்சும் செய்யணும் என்கிற முரட்டுத் தீவிரம். 'என்ன செய்ய' என்று யோசித்த கணத்தில் சூழ்ந்து மொய்த்துக் கொள்கிற குழப்ப இருட்டு. வெறுமையாகிப் போகிற நினைவுகள்.

அன்றைக்கு ராத்திரி கனா பூராவிலும் கிளிகளும் மயில்களும் வந்தன.

அம்மா கைதட்டி கைதட்டி சின்னப்பிள்ளை மாதிரி சிரிக்கிறாள். ஆதாளி தாங்காத மனச்சிரிப்பு. மனக் கொந்தளிப்பு.

இவன் பெரிய்ய்ய்ய ராட்ஸன் மாதிரி ஆகாசம் உசரத்துக்கு இருக்கிறான். பறந்து பறந்து வருகிற கிளி களையெல்லாம் 'லபக் லபக்'கென்று பிடித்து, கழுத்தைத் திருகித் திருகி எறிகிறான். கொன்று போட்ட கிளிகள். எடை போட்டுக் குவித்த கொத்தைப் பருத்தி மாதிரி

சிறு குன்றாக குமிந்து கிடந்தன. மயில்களையெல்லாம் நீளமான கையால் ஓங்கி அடிக்கிறான். ஒரே அடியில் பல நூறு மயில்கள் காட்டுக் கத்தலாகக் கத்திச் சாகின்றன. செத்துக்குவிகிற கிளிகளையும் மயில்களையும் பார்த்து அம்மா சிரிக்கிற சிரிப்பு. குதித்துக் குதித்து கைதட்டி அவள் குதூகலித்து சிரிக்கிற சிரிப்ப(ா)ணிகள்.

கண்ணுமுழித்துப் பார்த்தபோது விடிந்திருந்தது. வைகறை விடியல். சாரல் மேகத்து இருட்டு விலகியும் விலகாமலும் இருக்கிறது. அம்மாவைக் காணோம். எங்க போய்ட்டா?

உறக்கச்சடவை முகத்தில் வைத்துக்கொண்டு, புஞ்சையைப் பார்த்து ஓடினான். வழிந்த கோழை உலர்ந்துபோய் வெள்ளைக்கோடாக இருந்தது.

சாரல் மேகம் ஆகாயத்தை மறைத்திருந்தது. குற்றாலத்து மூலைக்காற்று, ஈரச்சிலிர்ப்பாக வந்து அப்புகிறது.

இந்தக் கிணற்றைத் தாண்டினால் ஓடை. ஓடை நிறைய வேலி மரச்சுவர். கரையேறினால் எங்கள் தோட்டம். அம்மா சத்தம் கேட்கிறது.

"த்தோ... த்தோ...த்தோய்..." என்று நாயை உசுக்காட்டி விடுகிற சத்தம். மயிலை விரட்டுகிறாளோ? நாய் வருது என்று மயில்கள் பதறியோடும் என்ற தந்திரமா?

ஓடைக்குள் விழுந்து கரையேறுகிற வடிவேலன். சாம்பல் பூத்த வெளிர்ப்பச்சையாக கம்பம் பயிர்கள். காற்றின் கட்டளைக்கேற்ப ஒருசேரத் தலையாட்டுகிற கம்பங்கதிர்கள். கதிர்களில் அப்பியிருக்கிற தேன்நிறத்துப் பூக்கள் மரத்தூசிகளாக உதிர்கின்றன.

அம்மா கீழப்பொழியில் ஓடுகிறாள். "த்தோ.. த்தோ... த்தோ.." என்ற கூப்பாடு. மயில்கள் அகல இறக்கைகளை விரித்துக்கொண்டு வடக்காமல் ஓடுகின்றன. பொட்டை மயில்கள் பதறியடித்துக்கொண்டு ஓட்டம் பிடிக்கின்றன. "பீக்கா...க், பீக்கா...க்" என்ற பயக் கதறல்கள். ஆண் மயில்கள் தோகை மண்ணில் புரள, தூரத்தில் நிற்கின்றன.

அவள் வடக்கு நோக்கி மயில்களை விரட்டி ஓடுகிறாள். தெற்கிலிருந்து பச்சைப்பசேரென்று கிளிக் கூட்டம் மொளோரென்று பறந்துவந்து... கதிருக்கொன் றாக உட்கார்கின்றன. நூற்றுக்கும் மேலான பச்சைப் பேரலை.

அங்கிருந்துகொண்டே கையிலுள்ள கல்லால் எறி கிறாள்.

கல்லைக் கண்டவுடன் அரைப்பயத்துடன் பறந் தோடுகிற கிளிகள். போன வேகத்தில் திரும்ப வந்து மொய்க்கிற கள்ளம். கிளித்தட்டு விளையாட்டு விளை யாடுவதைப் போல அம்மாவை ஓடவைத்து... கத்த வைத்து- கதறச்செய்து- கல்லெறிய வைத்து.. அங்குமிங்கு மாக அலைக்கழித்து... நோகடித்து...

அம்மா முகமெல்லாம் வியர்வைக்காடு. ஈரக்காற் றையும் மீறுகிற வியர்வை. முழங்கால் தெரிய சேலை நுனியை இடுப்பில் சொருகிக்கொண்டு ஓடித்தவிக்கிற அவள்.

"அட நாசமாய்ப்போற கிளிகளா... உங்களுக்கொரு பேதி வரல்லியா? றெக்கையிலே புத்து பெறப்படலியா? எங்க உசுரை வாங்குறீகளே, பாவீகளா..."

கண்ணீர்பிசுக்கான அவளது அழுகைக் கதறல். கொதிமனச் சாபம்.

இப்படியே எட்டுமணி வரைக்கும்.

பொழுது புறப்பட்டு உயரத்தில் வந்தபிறகுதான் மயில்கள் இரை தேடி வேலிமர நிழல்களுக்குப் போயிற்று. கிளிகள் சூரியகாந்திப் புஞ்சைகளை நோக்கிப் பறந்தன.

அதற்குள்...

அம்மா அரை உயிராகிப் போனாள். சட்டையெல்லாம் வியர்வையால் 'தொப் தொப்'பென்று நனைந்து கிடந்தது. ஓடிக் களைத்துப் போனாள். மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. 'கேது கேது' என்று இளைத்தாள்.

"யம்மா..."

"என்னடா... நீ எதுக்கு இங்க வந்தே?"

"ஒன்னைத் தேடிதான் வந்தேம்மா..."

"உங்க ஆத்தா எங்க போயிருவா? இங்க கெடந்து சீரழியுற விதி இருக்குல்லே?"

முந்திச்சீலையில் முகத்து வியர்வையைத் துடைத்துக் கொள்கிற அம்மா. அவளது கசந்த மனசின் உலர்ந்த சிரிப்பு.

"என்னம்மா... கிளியும் மயிலும் ஒன்னை இந்தப் பாடு படுத்துது?"

"என்ன செய்றது? அதுக உசுரை வளர்க்க எரை பொறுக்க வருதுக. நாம நம்ம வெள்ளாமையைக் காப்பாத்த மல்லுக்கட்ட வேண்டியிருக்குது."

மூச்சிறைப்புடன் சொல்கிற அம்மாவின் கண்ணில் ஓர் ஈர மின்னல். மிருதுவான பார்வை.

"ஏம்பா... உங்க ஆத்தா மேலே ஒனக்கு இம்புட்டு எரக்கமா?"

மகனின் பரிவில் நெகிழ்ந்துபோகிற அம்மாவின் பாசமனசு. பாசத்தின் ஈரக்காற்றில் சிலிர்த்துப்போகிற தாய்மைக் குழைவு.

அம்மாவின் மணிக்கட்டைப் பிடித்தான். வியர் வையின் வெப்ப வெதுவெதுப்பு.

"வாம்மா... வீட்டுக்குப் போவமா?"

"வாய்யா... எஞ் செல்லராசா..."

வேப்ப மரங்களில் தூரந் தொலைவில் உட்கார்ந் திருக்கிற கிளிகளையும், தூரத்தில் ரெக்கை விரித்து மாரடித்துக்கொண்டு போகிற மயில்களையும் பார்க்கிற வடிவேலன்.

அவன் மனசில் கனல்கிற வன்மம்.

'அம்மாவை இழுத்தடித்து, அலைக்கழித்து நாசம் பண்ணுகிற நாய்களா... உங்களைக் கொல்லாமல் விட மாட்டேன்.'

அவனுக்குள் பொங்கித் தெறிக்கிற வெறுப்புத்தீ. மயில்களையும், கிளிகளையும் ஒருசேர ஒழித்துக்கட்ட நினைக்கிற கொலைவெறி. அதன் வம்சத்தையே ஆணி வேரோடு அறுத்துச் சாய்க்க ஆசைப்படுகிற பாசப் பூமனசு.

அம்மா நடையில் ஒரு வேகம். ஆம்பளைகள் மாதிரி 'தக்தக்'கென்று தரையதிர நடக்கிறாள். விரைவான நடை. நடைபோல ஓட்டம்.

*"என்னம்மா இந்த ஓட்டம்?"*

*"இனிமே போய்த்தான் கஞ்சி காய்ச்சணும். ஒனக்குப் போட்டுப் பள்ளிக்கோடம் அனுப்பணும். நானும் நாலு வாய் அள்ளி வயித்துலே போட்டுட்டுக் கூலி வேலைக்குப் போகணும்லே? நாசமத்துப் போற மயிலு, கிளிச் சனியங்களாலே. பொழுது உசக்க வர்ற வரைக்கும் உயிரைக் குடுத்துருக்கு."*

*வாய்ச்சொல் வாயிலிருக்க, காலிரண்டும் வாழ்வை நோக்கி ஓடுகிற வெறிப்பாய்ச்சலில். அடுப்பை மூட்டணுமே என்ற பதைப்பு.*

*'செவத்தத் தோலுமேலே ஆசைப்பட்டு, ஒரு பொட்டச்சியை இழுத்துக்கிட்டு ஓடிட்டான். ஆம்பளை செய்ய வேண்டிய வேலைகளை யெல்லாம் சேர்த்து நா செய்ய வேண்டியிருக்கு. ஏழையைக் கண்டா மோழையும் (கொம்பில்லாக் காளை) பாயும்னு சொல்லுவாக. என்னைக் கண்டா... கிளியும் மயிலும்கூட கிண்டி மேயுது...'*

*அடிமனசை வருடிக்கொண்டு வெளிப்பட்ட அவளது வருத்தப் பெருமூச்சை மட்டும் கேட்டான் வடிவேலன். அவளது அபலைத்தனமான புலம்பலும் முணுமுணுப்பும் அவனது உள்மனசை அறுக்கிறது.*

*பள்ளிக்கூடம் விட்டு வந்த வடிவேலன் பைக்கட்டு முதுகில் பேயாகக் கனக்கிறது. அதோடு கழுதையைப் போலவே குதித்து குதித்து நடக்கிற அவனது சந்தோஷ விளையாட்டு. மனக்குதூகலம்.*

*வீட்டுக்குப் போனா அம்மா இருப்பா. கூலி வேலைக்குப் போய்த் திரும்பி... கடைக்கும் போயிட்டு*

வந்திருப்பா. தீம்பண்டம் வாங்கி வைச்சிருப்பா. 'இந்தாடா கண்ணு' என்று வாஞ்சையுடன் நீட்டுவாள்.

முறுக்கு இருக்குமா? சேவு இருக்குமா? பஞ்சு கேக் இருக்குமா? நினைக்கும்போதே நாக்கில் எச்சில் ஊறுகிறது.

ஆவல் பறப்புடன் றெக்கை விரித்துப் பறந்து வருகிற வடிவேலன். வீட்டு முற்றம் பூட்டிக் கிடக்கிற கதவு.

வந்து மோதுகிற வெறுமை. அம்மா இல்லாத சூன்யம். குதூகலம் உடைந்து நொறுங்கி சிதறுகிறது.

தாழ்வாரத் திண்ணையில் பைக்கட்டைப் போடு கிறான். நாவும் தொண்டையும் உலர்கிறது. பச்சைத் தண்ணீர் குடிக்கக்கூட பாதையில்லை.

மயில்களையும் கிளிகளையும் விரட்டத்தான் அம்மா போயிருப்பாளோ...

இந்தச் சனியன்களை நெஜத்துலே ஒழிச்சுக்கட்ட ஏதாச்சும் வழி கெடைக்குமா...?

ச்சீயென்று வந்தது. வெறுப்பும் ஏமாற்றமும் சேர்ந்து ஆத்திரமாக நிறம் மாற... மயில்களையும் கிளிகளையும் மானாங் காணியாக வைது தீர்த்தான். காட்டை நோக்கி ஓட்டமாய்ப் பாய்கிற வடிவேலன்.

ஓடை முழுக்க சீமைக் கருவேல மரங்கள். குயில் ஒன்று கருமின்னலாகப் பாய்ந்து மறைகிறது. மஞ்சணத்தி மரத்தில் செம்போத்து சோகலயமாகக் கூவுகிறது.

ஓடையில் விழுந்து கரையேறின வடிவேலன். அரங்கேற்றம் சினிமா பிரமீளா மாதிரி... கிறுக்கி மாதிரி... தகர டின்னைத் தட்டிக்கொண்டே ஓடுகிறாள். மயில்

களைச் சொல்லி நாற வசவு வைகிறாள். நாய்களை உசுக்காட்டி விடுகிற மாதிரி 'த்தோய்... த்தோய்...' என்று பெருங்கத்தலாக வீறிடுகிறாள்.

பொழுதுக்கும், வேனாக் கொதிக்கிற வெயிலில் கூலிக்கு உயிரைக் கொடுத்துவிட்டு வந்த அம்மாவை உஸ் என்று உக்கார விடாமல... இழுத்தடிக்கிற மயில்களும் கிளிகளும்.

ஆகாய மார்க்கமான பச்சைச்சேலை பறப்பாகக் கிளிக்கூட்டம் சிறகடித்து வருகின்றன. கொள்ளைக் கூட்டமாக கம்பங்கதிர்களில் விழுகின்றன. அம்மாவின் தகரடின் சத்தத்தைக் காதிலேயே போட்டுக்கொள்ளாத திமிர் பிடித்த கிளிகள், விர்ர்ரென்று பாய்ந்து வருகிற கல்லுக்குத்தான் கொஞ்சம் பயப்படுகின்றன.

வடிவேலனும் ஏழெட்டுக் கற்களை பொறுக்கிக் கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாக எறிகிறான். கிளிகளை, 'ஹோய்க்... ஹோய்க்' என்று சத்தம் போட்டு விரட்டுகிறான்.

கிறுக்கச்சி மாதிரி தகரடின் கொட்டோடு அங்கும் இங்குமாக ஓடுகிற அம்மா, இவனைப் பார்த்துவிட்டு... "எப்படா வந்தே... செல்லம்?" என்றாள்.

"இப்பத்தான்."

"ஸ்கூல் வுட்டுட்டாகளா?"

"ம்..."

"அம்மாவைக் காணோம்னு ஓடியாந்தியாக்கும்?"

"ம்...."

அவன் தலையைக் கோதி, மென்மையான கரு ரோமங்களை வருடுகிறாள். மகன் முகத்தை வலது உள்ளங்கையால் வழித்து முத்தமிடுகிறாள்.

'கண்ணும் தலைமுடியும் அச்சு அசலா... அந்தப் பாவிப்பய மாதிரியேயிருக்கு...'

மனசுக்குள் ஒரு நினைவு மின்னல். அவளைக் கருக்கி கட்டையாக்குகிற மின்னல்.

அம்மா நெற்றியெல்லாம் வியர்வை மணிகள். சட்டையெல்லாம் உலர்ந்த வியர்வையின் உப்புக் கோடுகள். ஏறியிறங்குகிற நெஞ்சில் தெரிகிற மூச்சிரைப்பு.

"ஏம்மா... எப்பவுமே இப்படித்தானா? மயிலுக்காடு உசுரை வாங்குமா?"

"இல்லை கண்ணு... முந்தியெல்லாம் கண்மாயோட உள்வாய்ப் பகுதியிலே வேலிமரங்க, கருவமரங்க, வேப்ப மரங்க நெறைய இருக்கும். அங்கதான் மயிலுக திரியும். மரங்களைப் பூராவும் வெட்டி விறகாக்கிட்டாக. மயிலுக உசுரைக் காபபாத்திக்கிட, ஊர்ப்பக்கம் வந்துருச்சு."

"கிளிக?"

"ஒன்னைமாதிரி சின்னப் புள்ளைகளுக்கு 'இதுதான் கிளி'ன்னு காட்டுறதுக்குக்கூட ஒத்தைக்கிளி கண்ணுல தட்டாது. முந்தி, பருத்தி, மிளகா வெவசாயம் கட்டுப் படியாகாமப் போனதாலே- தான்ய வெள்ளாமை, சூரிய காந்தி வெள்ளாமைன்னு தெசை மாறிருச்சு. சூரியகாந்தி விதைகளை மோப்பம் பிடிச்சு... கிளிக படைபடையா பறந்து வந்துருச்சு. அதுக, நம்ம உசுரைப் புடுங்கி, அலைக் கழிச்சு, கூத்து கட்டுதுக..."

*தகரடின் சத்தம் கேட்காத நிமிஷங்களைப் புரிந்து கொண்டு, ஓடிய மயில்களில் சில ரெக்கையடித்துக் கொண்டு திரும்பி வந்தன. கிளிகளும் மாரி மூலையில் வந்து கூட்டமாய் உட்கார்ந்தன.*

*பிய்த்துக் கொண்டோடுகிற மாதிரி அம்மா, தகர டின்னைத் தட்டிக்கொண்டும், கூவல்காடு போட்டுக் கொண்டும், கிறுக்கச்சி மாதிரி ஓடுகிறாள், பொழியில்.*

*உதடெல்லாம் காய்ந்து வெடித்துக் கிடக்கிற அம்மாவைப் பார்க்கப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது வடிவேலனுக்கு. கிளிகளையும், மயில் சனியன்களையும் வெறிக்கோபமாக வெறித்தான். அவன் மனசெல்லாம் தீ. கிளிகளையும் மயில்களையும் சுட்டுச் சாம்பலாக்க வெறிகொண்ட தீ.*

***ம**ண்டிக்கால் போட்டுக்கொண்டு வீட்டுப்பாடம் எழுதிக்கொண்டிருந்தானே... பயல் எங்க போயிட்டான் என்று தேடத்துவங்கி, வீட்டு முற்றத்துக்கு வந்தவளை, எதிர்கொண்டான் வடிவேலன்.*

*பஞ்சாயத்து டி.வி.யில் தலைப்புச் செய்திகள் சொல் லுகிற சத்தம். மணி எட்டேகாலா, எட்டேமுக்காலா? 'எங்கே போயிட்டு வாரான் இந்தப்பயல்?'*

*ஓடிவருகிற வடிவேலன் கையில் சின்னஞ்சிறு வட்ட டப்பா. எக்காலெக்ஸ் மருந்து டப்பா. பூச்சிக்கொல்லி நஞ்சு. அம்மாவை எதிரில் பார்த்ததும், டப்பாவை முதுகுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டான்.*

*"எங்கடா போயிருந்தே?"*

“மாரிச்சாமியைப் பார்க்கப் போயிருந்தேம்மா...”

அம்மாவுக்குத் தெரியாமல் மருந்து டப்பாவை வீட்டுக்குள் ஒரு மூலையில் மறைத்து வைத்தான்.

நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. அம்மா கூலி வேலைக்குப் போனபிறகு, கொஞ்சம் தானியத்தில் நஞ்சைக்கொட்டி பிசைந்து, கம்பம் புஞ்சையைச் சுற்றிலும் பொழிகளில் வைத்துவிட வேண்டும். மயில் களும் கிளிகளும் ஆவல் ஆவலாக வந்து கொத்தித் தின்னும். றெக்கையை விரித்து மல்லாந்துரும். செத்துத் தொலையட்டும் சனியன்கள். அம்மாவையும் வெள் ளாமையையும் நாசக்காடு பண்ணித் தொலைக்கிற பாவிகள் செத்து நாசமாகட்டும்.

வடிவேலனுக்குள் திட்டம் முண்டிக் கொண்டே யிருந்தது. ‘அதை எப்படி செய்ய... எந்நேரம் செய்ய... யார் உதவியுடன் செய்ய’ என்று ஏகப்பட்ட யோசனை கள். நினைவுக் குழப்பங்கள். நச்சரிக்கிற யோசனைத் தீவிரத்தில்... வீட்டுப் பாடத்தில் மனசு ஒட்டவில்லை.

விடிந்தது. அம்மா போட்டுக்கொடுத்த டீத் தண்ணீரைக் குடித்து முடித்தான். ஓடைக்குப் போக அருவருப்பாக இருந்தது.

நேற்று... தாங்கமுடியாத வீச்சம். செத்த நாயொன்று வேலிமரப் புதருக்குள் அழுகிக் கிடந்தது. வீச்சம் குடலைப் புரட்டிக்கொண்டு வந்தது.

வீட்டை விட்டு வெளியே வந்தான். செத்துப்போன எலியைக் கொத்திக் கொண்டோடுகிற காகம். அழுகி நாறிக்கிடந்த தவக்காயை (தவளை) கொத்தித் தூக்கிச் செல்கிற பருந்து.

"ஏலேய் சீனி... ஓடைக்குப் போயிட்டா வர்றே?"

"ஆமா..."

"அய்யய்யே... ச்சீய்ய்..."

"ஏண்டா..."

"செத்த நாய் கெடந்துச்சே... நாத்தம் குடலைப் புடுங்குச்சே..."

"நேத்துச் சாயங்காலமே காக்கா, பெராந்துக வந்து பெறக்கித் தின்னுட்டுப் போயிருச்சு..."

"நல்லவேளைடா..." என்று டவுஷர் பித்தானைக் கழற்றிக்கொண்டே ஓட்டமாய் ஓடுகிற வடிவேலன்.

ஓடைக்குப் போய்விட்டு வந்து சீனியைத் தேடிப் போனான். எலிக்கு விஷம் வைப்பதில் - புகையிலைத் தூள் போட்டு மீன் பிடிப்பதில் மகா பெரிய கெட்டிக் காரன்.

மயில்களை - கிளிகளைத் தீர்த்துக்கட்டுவதற்கான போர்த்திட்டத்தில் அவன் யோசனை ரொம்ப உதவிகர மாக இருக்கும்.

சீனி கூட்டுறவு சொஸைட்டி ஆபீஸ் பக்கத்தில் நின்றான்.

"சீனி..."

"என்னடா..."

"ஒன்னாலே ஒரு காரியம் ஆகணும்டா..."

சொஸைட்டி ஆபீஸ் படிக்கட்டிலேயே ரெண்டு பேரும் உட்கார்ந்து ரொம்பநேரம் பேசிக்கொண்டிருந் தனர்.

அவன் மனசுக்குள் அம்மாவைக் காப்பாற்றுகிற வீர சாகச உணர்வு. செத்துக் கிடக்கிற மயில்களையும் கிளிகளையும் பார்த்து... சந்தோஷப்படுவாள். 'நல்ல வேளை' என்று முகம் பூத்துச் சிரிக்கும். "எம்புள்ளே தங்கப்புள்ளே-" என்று பாசத்துடன் தலையை வருடுவாள்.

வேக வேகமாக வீட்டுக்குள் வருகிற வடிவேலன். மேலத்தெரு ஆச்சியுடன் ரொம்ப நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிற அம்மா.

"அதுக்காகக் கொன்னுரவா முடியும்? பாவம்லே? எந்த உசுரையும் கொல்லலாமா? அந்தப் பாவத்தை எங்க போய்த் தொலைக்குறது? சூரியன் சூட்டை தாம் மட்டுமா வைச்சுக்கிடுது? ஊர் ஒலகத்துக்கும் உயிர் ராசிகளுக்கும் உயிர்ச்சூடு தர்றதில்லியா? அதுமாதிரித் தான் தான்யம் வெளையவைக்குற சம்சாரிகளும். தானே அவிச்சுத் திங்கலாமா? ஊர் ஒலகத்துக்கும் குடுக்கணும். நம்மளை அண்டி நிக்கிற ஜீவராசிகளுக்கும் குடுக் கணும்லே?"

"மயிலும் கிளியும் ஒன்னைப் பாடாய்ப் படுத்து தேன்னு நா அந்த யோசனையைச் சொன்னேன்..."

"நம்ம புள்ளே சேட்டை பண்ணுது. அடிச்சுத் திருத்து வோம். கொல்லவா செய்வோம்? அப்படித்தான் இதுவும். சண்டை போட்டுக்கிட வேண்டியதுதான்... கூடிக்கிட வேண்டியதுதான். மயிலே இல்லாம ஒழிச்சிட்டோம்னா- பாம்பு நம்மளைக் கொத்திக் கொன்னுரும்லே?"

கேட்டுக்கொண்டே வீட்டுக்குள் நுழைகிற வடி வேலன். அம்மா... மயில்களுக்கும் கிளிகளுக்கும் அம்மா வாகிப் போன அம்மா...

*அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பம். திகைப்பு. கிறுக்கச்சி மாதிரி ஓடி மூச்சிறைத்த அம்மா... இப்படிப் பேசுகிற அம்மா... எது நிஜ அம்மா?*

*ஒண்ணு மட்டும் நிச்சயம்.*

*கிளிகளையும் மயில்களையும் நஞ்சு வைத்துக் கொன்றால், அம்மா சந்தோஷப்படமாட்டாள். 'ஏம் புள்ளே தங்கப்புள்ளே' என்று தலையை வருடிப் பூரிக்க மாட்டாள்.*

*ஒளித்து வைத்திருந்த எக்காலெக்ஸ் டப்பாவை எடுத்து அம்மாவுக்குத் தெரியாமல் ரகசியமாக அப்புறப் படுத்திய பிறகுதான் அவனுக்குள் ஓர் ஆசுவாசம் பிறந்தது.*

–'செம்மலர்' – செப்டம்பர், 2006

# 4 உள் மனமுள்

எட்டாம் வகுப்பு வாத்தியார் முக்கி முனகி பாடம் நடத்திக்கொண்டிருக்க, சாமிநாதன் கடைசிப் பெஞ்சில் உட்கார்ந்த நிலையில் குனிந்து சில்மிஷம் செய்துகொண்டிருந்தான்.

மூன்று பெஞ்சுக்கு முன்னால் உட்கார்ந்திருக்கிற மூக்கையாவின் காலடியிலிருந்த பைக்கட்டுக்குள் தனது பால்பாயிண்ட் பேனாவை யாருக்கும் தெரியாமல் போட்டுவிட்டான், கமுக்கமாக.

கரும்பலகையில் துணியால் அழித்துவிட்டு, மறுபடி எழுத மேஜையிலிருந்த சாக்பீஸை எடுக்கும் தருணத்தில், அவரது அரைப்பார்வையில் சிக்கிக்கொண்டான் சாமிநாதன்.

"என்னடா... என்ன பண்ணுறே?"

"சார்... என் பேனாவைக் காணலே. தேடிக்கிட்டிருக்கேன், சார்."

"கீழே போட்டுட்டியா?"

"இல்லே சார்... யாரோ எடுத்துக்கிட்டாங்க சார்."

"யார்றா அவன்? எவண்டா அவன் பேனாவை எடுத்தது?"

மொத்த வகுப்பிலும் பரவிய கிலி. 'கப்'பென்று வந்து உட்கார்ந்துகொண்ட மௌனத்தின் இறுக்கத்தில், முகம் காட்டிய அச்சம். 'சகட்டு மேனிக்கு எல்லாருக்கும் அடி விழுமோ...'

முன் அனுபவத்தில் முளைத்த யூக நடுக்கம்.

'எட்டாப்பு வாத்தியார் அடி எப்படி' என்று எல்லா ருக்கும் தெரியும். சாணி பிதுங்கிப் போகும். எதிரியை அடிக்கிற மாதிரி ஓங்கியறைவார். ஓங்கி வந்த கை, முதுகு பக்கம் நெருங்கும் கணத்தில், ஒரு சுழல் சுழலும்.

கையே சாட்டையடி சுழற்சி மாதிரி சப்பென்று வந்து விழும். விழுந்த இடத்தில் கன்றிப்போகும். தீப் பிடித்த மாதிரி, ஒரு காந்தல் பரவும்.

ரொம்ப அப்பிராணி மாதிரி 'எந்திச்சு' நின்ற சாமி நாதன், வராத கண்ணீரைக் கசக்கிக்கொண்டிருந்தான்.

'புதூ...ப் பேனா சார். எங்கய்யா முந்தா நாதான் வாங்கித் தந்தாரு சார்... ரொம்ப நல்ல பேனா."

"சரிடா- ரொம்ப நடிக்காதே. எங்கேயோ தொலைச் சிட்டு... இங்கவந்து உசுரை வாங்குறே."

"இல்லே சார்- கிளாஸுக்குள்ளே வர்றப்ப வைச்சிருந் தேன் சார்... மூக்கையாகூட பார்த்தான் சார்..."

"ஏலேய் மூக்கையா, பாத்தீயாடா? வைச்சிருந் தானா?" மூக்கையா 'விலுவிலு'வென்று விழித்தான்.

அழிந்த நிலையில் கரும்பலகை. அறுந்துபோன சினிமாப்படமாக, பாதியில் கலைந்துபோன பாடம். சட்டம் ஒழுங்கு கெட்ட நிலையில்... மொத்த வகுப்பும்.

கள்ளனைக் கண்டுபிடித்து கைது செய்ய முடியாத பலவீனத்தில் வாத்தியார். இயலாமையால் வருகிற சண்டாளக் கோபத்தில், தீக்கனலாகக் கனன்றார். அதட்டலும் மிரட்டலுமாக சவுண்டைக் கொடுத்தார்.

"யாராச்சும் எடுத்திருந்தா ஒழுங்கு மரியாதியா குடுத்துடுங்க. இல்லே- எல்லாரையும் அடி பின்னியெடுத்துருவேன். எம்பூஜை எப்படி இருக்கும் தெரியும்லே?"

அடிஉதட்டைக் கடித்து அரட்டுகிறார். நுனிநாக்கை மடித்து, புடைத்து, புடைக்கவைத்து அச்சுறுத்துகிறார்.

"பாடம் நடத்தவிடாம கெடுக்குதுக்குன்னே நாலு பயக நாசவேலை பண்றீகடா... யார்றா எடுத்தது? குடுத்துருங்கடா... இல்லேன்னா எல்லாரையும் சோதிக்க வேண்டி வரும்டா..."

வகுப்பறை முழுவதும் தகிப்பறையாக உஷ்ணமேறிப் போயிருந்தது. எல்லா பிள்ளைகளுக்குள்ளும் அடிவயிற்றில் பகீரிடல், பயப்பரவல். 'ஒன்றுக்கு' நெருக்குவதைப்போல ஒரு பிரமை. சாமியாடுகிற வாத்தியாரைப் பார்க்க... சாமிநாதனுக்குள் ஒரே சந்தோஷம். கும்மாளமாகக் கூத்தாடுகிற உள்மனசு.

எப்படியும் மூக்கையாவை இன்னைக்கு மப்பைக் கழட்டிடுவாரு. அவர் அடிக்கப்போகிற அடிகளையும், அவன் துடித்தலறி அழப்போவதையும் மனக்கண்ணால் பார்த்தான். ரசித்தான்.

'வேணும்... இந்த நாய்க்கு. இந்தப் பூஜை வேணும்' என்று உள்மன வன்மத்துடன் கருவுகிற சாமிநாதன். ஆனால் முகத்தை அப்பிராணியாக வைத்துக்கொண்

டான். கண்கலங்கிப் போனவனாக, கதிகலங்கிப் போன வனாகத் தோற்றம் காட்டுகிற அவன்.

வாத்தியாருக்கே அவனைப் பார்த்தால், பரிதாபமாக இருக்கிறது. ஒழுங்கைக் காப்பாற்றி, சேட்டையைக் கிள்ளி யெறிய முடியாத இம்சை அரசனாக தான் இழிந்து நிற்பதாக, அவனுக்குள் குற்ற உணர்ச்சி. அந்த முள்குத்த லான குற்ற உணர்வு, முரட்டுக் கோபமாக முறுக்கேறி வெளிப்படுகிறது. கண்களில் ஆத்திர அனல். விறைப் பேறிப் போன முகம். நெற்றியில் குறுக்குக் கோடுகள் அடிக்கடித் தோன்றுகின்றன. எரிச்சலில் புருவங்களை நெரித்து உயர்த்துவதால் வருகிற கோ்டுகள்.

மூக்கையா மழையில் நனைந்த எலிக்குஞ்சாக பயக் குளிரோடு இவனைத் திரும்பிப் பார்க்கிறான். அவன் கண்ணில் மௌனக் கேள்வி. "ஏண்டா என்னை இதுலே இழுத்துவுட்டே?"

இடதுகையால் கண்களைக் கசக்கிக்கொண்டே, அவனைக் கள்ள விழியாகப் பார்க்கிற சாமிநாதன். பார்வையின் ஆழத்தில் குசும்பின் நிழல். 'இருடி... இன்னிக்கு ஒனக்கு இருக்கு சாப்பாடு" அந்தக் குசும்பின் மொழி.

மூக்கையாவின் கண்ணில் பயப்பரவல். உதடுகள் உலர்ந்துபோய், உள்ளூர உதறலெடுத்துப் போயிருக்கிற மூக்கையாவை ரகசியமாகச் சந்திக்கிற சாமிநாதன்.

பத்துநாளைக்கு முன்னாடி—

வகுப்புக்குள் முதல் ஆளாய் நுழைந்தான் சாமிநாதன். ஏழு ஐம்பதுக்கெல்லாம் நுழைந்துவிட்டான். குப்பை யைப் பெருக்குகிற மாரியம்மா அந்நேரம் தான் வேலை

முடித்து முந்திச் சேலையால் வியர்வை முகத்தைத் துடைத்தாள்.

"என்ன ராசா... இம்புட்டு வெருசா வந்துட்டீக?"

"அம்மா விடியக்கால வேலையா கூலி வேலைக்குப் போயிட்டா..."

"நீங்க முத்துலட்சுமி புள்ளேதானே?"

"ம்..."

மாரியம்மாளும் போய்விட்டாள். நீளமான கட்டடம். வரிசையாக ஐந்து வகுப்புகள். காக்கி அட்டைகளிலான சுவர்கள்தான் ஊடுதடுப்பு.

ஒற்றையாளாக இவன் இருந்தான். 'ஹோ'வென்று வெறிச்சென்று கிடந்த கட்டடம். தன்னந் தனிமை. என்னமோ போலிருந்தது. ரெண்டு அணில்கள்தான், சேட்டைகளும் தப்பித்தலுமாக விளையாடிக்கொண் டிருந்தன.

மேஜையில் வாத்தியாரின் மூன்றாவது கையான பிரம்பு. காய்ந்து உலர்ந்துபோன வலிமையான புளிய விளார்.

இதை வைத்துத்தான் முந்தாநாள் இவனைச் சாத்தி னார். சட்டையைத் தாண்டி, முதுகில் தடிப்பு தடிப்பு களாக, வலி தாங்கவில்லை. துடியாய்த் துடித்தான். மறுநாள் குளிக்கும்போதுகூட கை அதன்மேல் பட்ட போது தடிப்புகள் தீயாகக் காந்தியது. அவன் குச்சியை வன்மத்துடன் பார்த்தான்.

யாருமில்லை என்ற தைரியத்தில் பிரம்பை எடுத் தான். மேஜையை வாத்தியாராக நினைத்து... பிரம்பால்

'பளிச் பளிச்' சென்று அடித்தான். ஓங்கி ஓங்கி சுழற்றி சுழற்றி அடித்தான். வாழ்க்கைக்கு என்னத்துக்கு வன்முறை? பள்ளிக்கு எதுக்குப் பிரம்பு?

கை ஓய்ந்து வந்தது. குச்சியைத் துண்டு துண்டுகளாக ஒடித்து, தூசி துரும்புகளாக்கிப் பள்ளிக்கு வெளியே போடப்போனான்.

'ஏன் இங்க குப்பை' என்று மாரியம்மாளுக்கு வசவு விழுமோ என்று நினைத்து, 'பாவம் அவள்' என்று பரிவால் கசிந்து, குப்பையை வண்டிப் பாதையில் கொண்டுபோய் போட்டுவிட்டுத் திரும்பினால்...

மூக்கையா, பைக்கட்டுடன். கண்ணில் ஒரு திகைப்பு. ஒரு கள்ளனைப் பார்த்துவிட்ட தர்மசங்கடம்.

வம்புதும்பு என்றாலே பயப்படுவான். படிப்பில் முதல் வரிசை. வாத்தியாரிடம் அடிவாங்குகிற சூழலே அவனுக்கு நேராது. தப்பித்தவறி, ஏதேனும் சூழல் நேர்ந்தாலும்கூட 'நல்லா படிக்கிற பையன்' என்ற சலுகையில் தப்பித்துவிடுவான்.

"ஏலேய்... மூக்கையா..."

"ம்..."

"யார்கிட்டேயும் சொல்லாதே!"

"ம்..."

"சார்கிட்ட வாயைத் தொறந்துராதேடா."

"நானா சொல்லமாட்டேன்."

சாமிநாதனுக்குள் அடிவயிறு கலங்கியது. அவன் முழுமையாக சம்மதிக்க மறுக்கிறான். 'க்'கன்னா வைக்கிறான்.

“அப்படீன்னா...?”

“ஏங்கிட்டே சார் நேரிடையாகக் கேட்டா... பொய் சொல்ல முடியாது.”

சாமிநாதனுக்குள் சண்டாளமாகக் கோபம் வந்தது. கையறு கோபம். கை வீச முடியாத ஊனக் கோபம். ஆனாலும் அவனிடம் கெஞ்சலும், கொஞ்சலுமாக, மன்றாடி மருகினான். மனசுக்குள் கருவினான்.

“மவனே... நீ மட்டும் போட்டுக்குடு... அப்புறமிருக்கு ஒனக்கு சாப்பாடு...”

வாத்தியார் மிரட்டிய மிரட்டலால், நேரிடையான விசாரிப்பில் உளறிக் கொட்டிவிட்டான் மூக்கையா.

அம்புட்டுத்தான்...

கதை கந்தலாகிவிட்டது. சாமிநாதனுக்கு பூஜை என்றால் பூஜை... செம பூஜை கிடைத்தது. அடிமேல் அடியாக அடித்து, பின்னிவிட்டார். கந்தலாகிப்போன சாமிநாதன், மறுநாள் எதுவுமே நடக்காதது போல... இயல்பாக வந்து சேர்ந்தான். வீட்டுக்கு வீடு வாசல்படி இருப்பதைப்போல, வாத்தியார் என்றால் அடிக்கத்தான் செய்வார். ‘நம்ம நலனுக்காகத்தானே அடிக்கிறார்’ என்று நினைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

ஆனால், மூக்கையாவை மன்னிக்க முடியாது. மறைத்துவிட்டால் யாருக்கும் நட்டமில்லை. வீணாக உளறிக் கொட்டிவிட்டான். எனக்கு அனாவசியமாக ‘வாங்கி’த் தந்துவிட்டான். பெரிய சத்தியவந்தன். உண்மைப் புத்திரன்.

‘இவனை உடப்படாது. இவனுக்கும்... ஒரு நா ஒரு பொழுதாச்சும் அடிவாங்கிக் குடுத்தாகணும்.’

வாத்தியார் வகுப்பு முழுக்கப் பார்வையை ஓட்டினார். ஒவ்வொரு முகமாக உற்றுப் பார்த்தார். 'கண்களின் அடியில் ஏதேனும் ரகசியம் மின்னுகிறதா?'

"பேனாவை எடுத்தது யார்டா? சொல்லித் தொலைங்கடா, நாய்களா... எதுக்குடா இங்க வாரீக? படிக்கத்தானே? படிக்க வேண்டியதுதானே? பாடம் நடத்தவிடாம ஏண்டா இந்தப் பாடு படுத்துறீங்க? ச்சேய்!"

ஆத்திர மூர்க்கமாக மிரட்டுகிற வாத்தியார். அதட்டலில் பயல்களைப் பார்க்கப் பார்க்க குமுறிக்கொண்டு வருகிற கோபம்.

"ரைட்... ரெய்டுதான். வேற வழியில்லே" என்று இடியென முழங்குகிற வாத்தியாரின் பிரகடனம்.

சோதனை நேரத்தைச் சுருக்குவதற்காக வாத்தியார் செய்கிற தந்திரம். ஒருத்தர் பைக்கட்டை இன்னொரு பையன் சோதிப்பது. ஏககாலத்தில் ஆரம்பித்தது.

"ஏலேய் கிருஷ்ணசாமி, நீ மூக்கையா பையைப் பாரு. ஏலேய் மூக்கையா, நீ பால்ராஜ் பையைப் பாரு."

"சார்... மூக்கையா பைக்கட்டுல பேனா சார்."

பேனாவை எடுத்து உயர்த்திப் பிடிக்கிற கிருஷ்ண சாமியின் குரல்.

விட்ட மூச்சை வாங்க முடியாத திகைப்பில், மொத்த வகுப்பே திணறிப் போயிற்று.

'மூக்கையாவா...? மூக்கையாவா...? மூக்கையாவா?'

எல்லாருக்குள்ளும் ஆச்சரிய அதிர்ச்சியான இந்தக் கேள்வி. எல்லோரும் அவன் முகத்தையே பார்க்க...

வாத்தியாருக்குள்ளும் இதே ஆச்சரியம். அவரது மன அதிர்வின் ரேகைகள், முகத்து வியர்வையாக கசிகிறது.

'நல்லா படிக்கிற இந்தப் பயலா இப்படி? பயந்த சுபாவமுள்ள பயலாயிற்றே. அவனுக்குள்ளா களவுப் புத்தி? 'ஊமை ஊரைக் கெடுக்கும்'குறது, இதுதானா? நாம சலுகை குடுக்கிறதாலே இவனுக்கு இம்புட்டு தைர்யமும் சேட்டையும் வருதா?'

வாத்தியாருக்குள் சண்டாளமாகப் பொங்கிப் பெருகுகிற தீக்குழம்பாக, நினைவுகள். அவனைக் கூர்மை யாகப் பார்த்தார்.

கண்ணீர் மளமளவென்று சரிகிறது. நனைந்த கோழிக் குஞ்சாக நடுங்குகிறான். பயத்தில் அல்லாடுகிற சின்ன விழிகள். கால்களில் நடுக்கம். "இல்லே சார்... இல்லே சார்... இல்லே சார்" நடுங்கும் உதடுகள்.

வாத்தியாருக்குள் இறுக்கம். இன்னும் என்னத்தை விசாரிக்க? நல்லாவே படிக்கிற பையனாயிருந்தாலும், களவுப் புத்தியை அனுமதிக்கக்கூடாது. சலுகையைப் பயன்படுத்தி, தப்பு பண்ணுகிற நோயை, வளரவிடக் கூடாது.

"படிப்பு எழுத்துக்களையும் நம்பர்களையும் மட்டும் மண்டையிலே ஏத்தக்கூடாது. பண்பையும், ஒழுக்கத் தையும், உயர்ந்த அறிவையும் மனசுலே ஏத்தணும். பண்பு இல்லாத படிப்பு, ஒழுக்கமில்லாத கல்வி... சமூகத்துக்குப் பேராபத்தையே உண்டாக்கும்."

கரகரத்த வாத்தியாரின் குரலில் ஒரு மனநடுக்கம்.

"இந்தக் களவாணிப்பயலை, வகுப்புலேயிருக்கிற எல்லாரும் ஆளுக்கொரு குட்டாகக் குட்டுங்க. இதுதான் இவனுக்குத் தண்டனை."

வகுப்புப் பிள்ளைகள் மூக்கையாவைப் பரிவுடன் பார்த்தனர்.

எல்லாருக்குள்ளும் ஈரக்கசிவு.

'இவன் இப்படி செய்திருக்கமாட்டான்' என்ற நம்பிக்கை. 'அநியாயமாக இந்தப் பயல் அவமானப்படு கிறானே' என்கிற இரக்க உணர்ச்சி. பச்சாதாபம்.

ஆனாலும் வாத்தியார் சொல்லுக்குக் கட்டுப்பட்டு... எல்லாரும் வரிசையாக வந்தனர். சோகமாக நெருங் கினர். குட்டுகிற மாதிரி பாவனை செய்துவிட்டு நடந்தனர்.

சாமிநாதனும் வந்து ஒரு குட்டு குட்டினான். அவனுள் ஒரு வெற்றிக் களிப்பு. கெக்கலிச் சிரிப்பு.

அன்றைக்குத்தான் வாத்தியாரிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட அடிகளின் வேதனையை மனசுக்குள் நினைத்துக்கொண்டான். அந்த வலிகள், இன்னும் மனசுக்குள் வலிக்கிறது.

அன்றைக்கு ராத்திரி எட்டு மணிக்கெல்லாம்...

தீப்பிடித்த மாதிரி ஒரு செய்தி பரவியது. ஊரின் கால்கள் யாவும் ஒரே திசையில் ஓடிற்று.

"ஐயோ... பாதரவே, இப்படியா நடக்கணும்" என்ற சோகப் பதைப்புக் குரல்கள். ஆணும் பெண்ணுமாக ஓட்டம். பெண்கள் கண்ணீரும் அழுகையுமாகக் கதறிக் கொண்டே போகின்றனர்.

"இம்புட்டுச் சின்ன வயசுலே.. இந்தக் கதியா? அடக் கொடுமையே.. கூத்தவனுக்கும் கண் அவிஞ்சுபோச்சா?"

குலை கொதிப்பும், குமுறும் சோகமுமாக ஓடுகிற கிழடுகள்.

சாமிநாதனும் ஓடினான், மூக்கையா வீட்டை நோக்கி.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு, உள் நுழைந்து பார்த்தான். வாயில் நுரை தள்ள செத்துக்கிடக்கிற மூக்கையா. விவசாய வீட்டில் மிச்சமிருந்த எண்டோ சல்பான் மருந்தை குடித்து மாண்டு கிடக்கிற மூக்கையா.

"வாத்தியாரின் தண்டனை முறையால், அவமானம் தாளாமல்... தற்கொலை செய்துகொண்ட பள்ளி மாணவன்."

மறுநாளே...

காவல்துறை, கல்வித்துறை, தொலைக்காட்சி, பத்திரிகை நிருபர்கள் என்று பெரும் சூறாவளியே இந்தக் கிராமத்தில் நின்று சுழல...

பள்ளியைச் சுருட்டி சூறையாடுகிற சூறாவளி.

சூறாவளியால் தீண்டப்படாமல், கவனிக்கப் படாமல், விடுபட்ட சாமிநாதனுக்குள் பேயறைந்த மாதிரியோர் சவநெடி. குற்ற உணர்வின் பாரத்தில் திணறுகிற மனத்தின் முணுமுணுப்பு.

"மூக்கையாவை நாந்தான் கொன்னுட்டேன்... நாந் தான் கொன்னுட்டேன்.. நாந்தான் கொன்னுட்டேன்.."

உள் மனமுள்ளாக நின்று உறுத்திய இந்த நினைவு, சாகும் காலம் வரை வதைத்தது, சாமிநாதனை.

–'புதியகாற்று'–நவம்பர், 2006

# 5 மன உடைப்பு

இன்னது செய்வதென்றறியாமல் குழம்பிக் கிடக்கிறான். சங்கரன். மருகி மருகிப் புழுங்குகிறான். முன்னாலும் போக முடியாமல், பின்னாலும் வர முடியாமல் அடி வாங்குகிற காளைமாடு போல, தவியாய்த் தவித்து வந்தான்.

பிரம்மதரிசனம் பார்த்தவனுக்குப் பிரச்சினையில்லை. மிதமிஞ்சிய பிரமிப்பில் மலைத்துப்போய் வாயடைத்துப் போய்விடுவான். தொல்லை விட்டது. ஒற்றைக்கொம்பு சைத்தானை தரிசித்தவன் பாடு?

சொன்னாலும் சிக்கல். சொல்லாவிட்டாலும் தொல்லை.

மனசுக்குள் குத்திச் சொருகிக்கொண்ட கருவேல முள்ளின் ரணக்கடுப்பு. கக்கவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் விக்கி விக்கி விலுவிலுக்கிறான்.

ஆட்டுக் கம்பை இன்றைக்குத்தான் தூக்குகிறான். ஆறு வெள்ளாடுகள், ஒன்பது கிடாய்கள், ஐந்து குட்டிகள். காய்ந்து கிடந்த வாகை இலையின் இணுக்குகளை நக்கிக்கொண்டிருக்கின்றன. இவனைக் கண்டதும், 'ம்மேய்ய்ங், ம்ம்மேய்ய்ங்'கென்கிற ஆடுகள். பசியையும் பாசத்தையும் காட்டுகிற அதன் கதறல்கள். ரெண்டுநாள் ஊர்க்காடு சுற்றியதில், ஆடுகள் வாடிவிட்டன.

"பாரு... பாரு. நீயில்லாததாலே... எங்களை ஒண்ணு மில்லாம காயப் போட்டுட்டாக" என்று புலம்பலும் கண்ணீருமாகப் புகார் சொல்வதைப் போலிருந்தது அதன் கதறல் தொனி.

பெற்ற தாயிடம் பிள்ளைகள் கொஞ்சுவதைப் போல உணர்ந்த சங்கரன். நெகிழ்ந்து நெக்குருகிப் போய்விட் டான்.

"அடக் கண்ணுகளா... கொழையும் புல்லும் கண் ணுலே பாக்காம.. காய்ஞ்சா கெடக்கீக? இந்தா.. வந்துட் டேன்லே? இனுமே நா பாத்துக்கிடுதேன்..."

ரெண்டு லிட்டர் பாட்டிலில் தண்ணீர் அடைத் தான். அதன் கழுத்தில் கயிற்றைக் கட்டியிருந்தான். தோளில் மாட்டிக்கொண்டான். கொழை கட்டுகிற நூல் கயிறை பெல்ட் மாதிரி, வேட்டி மேல் கட்டிக் கொண்டான். துரட்டி கட்டிய ஆட்டுக்கம்பை எடுத்துக் கொண்டான். டயர் மிதியடியை மாட்டிக்கொண்டான். பட்டியின் கதவுப்படலைத் திறந்தான்.

ஆடுகளின் மகிழ்ச்சிக் கதறல். கண்ணில் மின்னல். சின்ன வாலை ஆட்டிக்கொள்கிற உல்லாசம். நடந்து கொண்டே 'ஒன்றுக்கு' இருந்துகொள்கிற குதூகல விளையாட்டு.

விட்டு விடுதலையான சந்தோஷக் கும்மாளம். தெருவில் பாய்ந்தன. மூத்திர வாசமும், சாண வாசமும் அவனுக்குள் மணந்தது.

நேற்றுதான் மூக்காத்தா கதிரறுத்திருக்கிறாள். கம்பந் தட்டையில் ஆடுகளை ஆசை தீர விட வேண்டியதுதான்.

கம்பந்தட்டையின் பசுந்தோகைகளை உரித்து உரித்து வயிறாரத் தின்னட்டும். வயிறு முட்ட கழுத்து முட்ட திங்கட்டும்.

விலையாக தட்டைகளை அறுத்துக் கொடுத்துவிட வேண்டியதுதான். ஆடுகளைப் பத்திக்கொண்டு தெருவில் வந்த சங்கரன். கம்மங்கூட்டில் தண்ணீர் பாட்டில் ஆடி ஆடி உரசுகிறது. கிடாய்க்குட்டியின் உரசலைப் போல, பழகிப் பழகி மரத்துப்போன உரசல்.

மூக்காத்தா புஞ்சையை நோக்கி ஆடுகளைச் சாய்த் தான். மனசுக்குள் அந்த வேலி முள்ளின் உறுத்தல். வலி. கடுகடுப்பு.

அவனுக்குள், அந்த சைத்தான் தரிசன அனுபவம்.

பத்து வயசில் ஆட்டுக் கம்பைத் தூக்கியது. காடு கரை, ஓடைமறைவு, ஆற்றோரப் புதர், பனங்காடு, கண் மாய்க் காடு என்று இவன் கால் படாத இடமில்லை. அங்கு, இவன் பார்க்காத சைத்தான்களா?

காட்டு மறைவுகளில் - தோட்ட வெள்ளாமைப் புதரில் இவன் பார்க்காத காட்சிகளா? பார்க்காத அசிங்கங்களா?

யார் யார், யாருடன்... எந்தெந்த ஜோடி, எப்படி யெப்படி மாறியது என்பதெல்லாம் இவன் கண்டு, தேர்ந்து, கடந்த கணக்கு. பார்த்துப் பார்த்துப் புளித்த சமாச்சாரம்.

இதெல்லாம் ஆட்டுக்காரனுக்கு சகஜம். ஆனால், 'இது' இப்படியல்ல. சைத்தான். பயங்கரம். நினைத்தால்... நெஞ்சுக்குள் நெருஞ்சி முள். நினைக்க நினைக்க, 'நறுக் நறுக்'கென்று சுருக்கிடுகிற முள் குத்தல்.

சொல்லவா... வேண்டாமா? புரியலே.

சொன்னா ஒரு குருவிக்கூடு மாதிரி இருக்கிற குடும்பம், கலைஞ்சி சிதறிப் போயிரும். சொல்லாட்டா... மனசுலே ஒரு பாவத்தைச் சுமக்கிற பாரம். மனத் திணறல்.

நம்மூர்ப் பெண்ணை ஓர் அசலூர்க்காரன் ஏமாத்தி துரோகம் பண்றதுக்கு... உடந்தையா இருந்த பாவத்தைச் செய்த மன உறுத்தல்.

சின்னாண்டியின் வெள்ளாடு ஒன்று தப்பிவிட்டது. காடு, மேடு, ஆறு, புதர், வேலிக்காடு பூராவும் தேடித் தட்டழிந்தான். கிடைக்கவில்லை. பணம் பெற்ற ஆடு. கள்ள விலைக்கு விற்றாலும் மூவாயிரத்துக்குப் போகும். பதற்றமும், பதைப்புமாகத் தேடியலைந்து அலுத்த சமயத்தில்—

சோலைசேரி ஆட்டுமந்தையில் வேற்றாடு இருந்ததாக ஒரு பேச்சு நடந்தது... அந்தப் பேச்சும் சின்னாண்டி காதிலும் விழ...

சங்கரனிடம் ஓடிவந்தான், பரபரப்பாக.

"ஏலேய், சோலைசேரிங்குற ஊரு, எங்க இருக்கு?"

"என்ன விஷயம்?"

"அங்க நம்ம ஆடு இருந்தாலும் இருக்கும்னு ஒரு துப்பு கெடைச்சிருக்கு."

"அப்டியா...? நல்லவேளை..."

"ஆட்டுக்கம்பு தவிர வேற ஓர் இழவும் எனக்குத் தெரியாது. நீயும் வா துணைக்கு. போய் விசாரிச்சுட்டு வருவோம்."

"அதுவரைக்கும் ஆடுகளை யாரு மேய்க்குறது?"

"எந்தங்கச்சி பாத்துக்கிருவா."

"அப்ப சரி, போவோம்."

ஆளுக்கொரு சைக்கிள். 'லொங்கு லொங்கு' என்று மிதித்தனர். ஆவணி மாதத்து வெயில். மேல் காற்று நின்றுபோயிற்று. வெயிலின் உக்கிரம், கன்னமேடுகளைத் தாக்கியது. காந்தலும் வேர்வையும் ஒரே சமயத்தில்.

பாறைப்பட்டி தாண்டி, பருவக்குடி முக்குரோடு போய், வடக்காமல் திரும்பி...

சைக்கிள் செக்காக நிற்கிறது. ஏகப்பட்ட மிதி வாங்கு கிறது. உன்னி உன்னி மிதித்தாலும் சைக்கிள் மெதுவாகத் தான் நகர்கிறது.

சோலைசேரி போய் விசாரித்தால்... வெள்ளாடு கிடைத்துவிட்டது. தப்பிய வெள்ளாடு கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில், சின்னாண்டி ஏகத் தடபுடலாக உபசரித் தான். புரோட்டா கடையில் குடல் கறியும், கோழி குருமாவுமாகக் குளிப்பாட்டினான்.

மந்தைக்காரர்கள் அகலப் பலகை தேடி, அதை சின்னாண்டி கேரியரில் கட்டி, அதன்மேல் வெள் ளாட்டைக் கிடத்தி, நூல் கயிறு போட்டுக் கட்டி, அதன் முன்னங்கால், பின்னங்கால்களையும் தனித்தனி யாகக் கட்டி 'ஜம்ம்'மென்று அனுப்பி வைத்தார்கள்.

"போவமா?"

சின்னாண்டி கேட்டான்.

"நீ போ... நா, சாயங்காலம் வாரேன்."

"ஒனக்கு இங்க என்ன சோலி?"

"சும்மாதான்... நீ போ..."

வற்புறுத்திக் கூப்பிட்டும் வர மறுத்துவிட்ட சங்கரன். சின்னாண்டி மட்டும் வெள்ளாடு கட்டிய சைக்கிளுடன் புறப்பட்டான். சங்கரன் மனசுக்குள் ஒரு ரகசிய ஆசை. 'நம்ம ஊரு மூக்காத்தா புருஷன் முனியன் பொறந்த ஊரு, இதுதானே? இங்கதானே வந்துருக்கான்? அவனைப் பாத்துட்டுப் போயிடலாமே' என்றொரு ரகசிய விருப்பம்.

"முனியண்ணன் வீடு எங்க இருக்கு?"

"எந்த முனியன்? உங்க ஊரு பொண்ணைக் கட்டிக் கிட்டு, உங்க ஊர்லே வெவசாயம் பாக்கானே, அவனா?"

"ஆமா..."

"அவுக வீடு வடக்குத் தெருவுலே இருக்கு. ஆனா, அங்க இருக்கமாட்டான். கட்டாயமா பாக்கணுமா?"

"ம்..."

"அப்ப மேலத்தெருவுலே தனியா ஒரு ஓட்டு வீடு இருக்கும், ஒத்தையா. அங்கதான் முனியன் இருப்பான்."

தகவல் சொல்லி, வழிகாட்டியவர் கண்ணில் ஒரு துள்ளல் இருந்தது. ஏதோ ஒரு நையாண்டியும், நக்கலும் உதட்டுக் குறுஞ்சிரிப்புக்குள் பம்மியிருந்த மாதிரி இருந்தது.

சங்கரனுக்குள்ளும் ஏதோ ஒரு அம்மச்சம் (சந்தேகம்) தலைகாட்டியது. இருந்தாலும், குடைந்து கேள்வி கேட்கத் தயக்கம். அயலூர். அறிமுகமில்லாத வேற்றாள்கள்.

மேலத்தெரு நோக்கி நடந்தான். தெருவுக்கே முதுகைக் காட்டிக் கொண்டு தனித்து நின்ற அந்த ஒற்றை வீடு. கதவு, முக்கால் கதவாக சாத்தியிருந்தது.

கூப்புடலாமா? என்னன்னு கூப்புட? உள்ள யாரிருக்கான்னு எப்படித் தெரியும்? யார் வீடு, உள்ளே இருப்பது யார்னு தெரியாம, எப்படி கூப்புட?

அவனுள் தயக்கம். திகைப்பு. குழப்பம்.

கதவில் கைவைத்து, மெல்லத் திறந்தான்.

உள்ளே பார்த்தால்—

சாரைப் பாம்புகளாக பின்னிப் பிணைந்து இரண்டு திரேகங்கள். ஆண் பாம்பு முனியன்.

சரேலென பின்வாங்கினான். வழிகாட்டிய ஆளின் துள்ளல் பார்வைக்கும், நக்கல் சிரிப்புக்கும் சட்டென அர்த்தம் விளங்கியது. 'பட்டப்பகல்லே இந்தக் கூத்தா?'

'இப்ப என்ன செய்ய? இந்த இக்கட்டுலேருந்து எப்படித் தப்பிக்க? அரவமில்லாம நழுவிருவோமா...'

"யார்ரா அது? என்னடா சங்கரா, இங்க என்ன சோலியா வந்தே?"

"சின்னாண்டி வெள்ளாடு தப்பி, இந்த ஊரு மந்தை யோட வந்துச்சுன்னு துப்பு கிடைச்சு வந்ததுலே..."

"என்னை இந்தக் கூத்துலே பாத்துட்டே இல்லே?"

"ம்..."

நெஞ்சு வியர்வையை - முகத்து வியர்வையை - துடைத்துக்கொள்கிற முனியன். இவன் தோளில் பாந்தமாகக் கை போட்டான். தனியாக நகர்த்தி வந்து,

வேப்ப மரத்தடியில் நின்னு ஒரு பீடியைப் பற்றவைத்து, ஒரு சுண்டு சுண்டிவிட்டு சங்கரனைப் பார்த்த முனியன்.

"இவா... ஒரு பாவப்பட்ட பொண்ணு. எங்க கதையே பாவப்பட்ட ஒரு தும்பம்தான்."

"மூக்காத்தாவைக் கல்யாணம் முடிக்குதுக்கு முந்தியே இவளுக்கும் எனக்கும் தொடர்பு. தாலி கட்டி வாழ்றதுக்கு ஆசைப்பட்டோம். முடியலே. அவா... கல்யாணமாகிப் போய்ட்டா. எனக்கு யாரும் பொண்ணு தரல்லே. இவ ளோட தொடுப்பா இருந்ததாலேயே... ஒருத்தரும் பொண்ணு தரமாட்டேனுட்டாக. அப்பத்தான் மூக்காத்தாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, உங்க ஊர் வந்தேன்."

அவனையே கடுப்புடன் பார்க்கிற சங்கரன்.

'எங்க ஊருப் பொண்ணை ஏமாத்தி... துரோகம் பண்ணுகிற அசலூருக்காரன்' என்ற கடுப்பு. உள் குமைச் சலான கோபம். கடித்துத் திங்கலாமா, காறித் துப்பலாமா என்கிற வெறுப்பு நிறைந்த யோசிப்பு.

"வாக்கப்பட்டுப் போன எடத்துலே வதைபட்டு, தீர்வை குடுத்து, 'தீந்துட்டு' வந்துட்டா. கதை கதையா சொன்னா. கேட்ட மனசு நெக்குருகிப் போச்சு. இப்ப... நாந்தா அவளுக்கு ஆதரவு. அப்பப்ப வந்துட்டுப் போறேன்... தப்புதான்... ஆனா, வேற வழியில்லே..."

மறுபடியும் தோளில் கை போடுகிற முனியன். இவள் வதைபட்ட கதைகளை ஒவ்வொன்றாகப் பிரித்து, விலாவாரியாகச் சொல்லுகிற முனியனின் குரலில், ஒரு கரகரப்பு. உணர்ச்சிகரமான தழுதழுப்பு. கலங்கிப் போகிற மனசின் கசிவு.

இவனுள்ளும் இரக்கத்தை - இளக்கத்தை - எதிர் பார்த்து எடுத்துச் சொல்கிற அவனது மனத் தீவிரம். இவனைப் பாசத்தில் குளிப்பாட்டினான். ஒயின் ஷாப் கூட்டிப்போய் குளிப்பாட்டி, புரோட்டா கடையில் போட்டுப் புரட்டியெடுத்தான்.

“ஊர்லே போய் எதையும் கொளுத்திப் போட்டுராதேடா...”

மாறி மாறிக் கெஞ்சிய முனியன். கெஞ்சிக் கூத் தாடிய முனியன். மன்றாடி, மருகித் தவித்த முனியன்.

இவனுள் உஷ்ணம் குறையாத உக்கிர கோபம். ஊர்ப்பாசத்தில் கொதிக்கிற மனசு.

எங்க ஊர்க்காரியை ஏமாத்துறதும், என்னை இளிச்ச வாயனாக்குறதும் ஒண்ணுதானே? இவன் இங்க ஒரு வைப்பாட்டியோட வாழ்றதுக்கு... நா ஒத்து ஊதவா? எங்க ஊருக்கே நா துரோகம் பண்ணவா?

சங்கரனுக்குள் அலைபாய்கிற அனல் காற்று. வெப்ப மான நினைவுகள். சாரைப் பாம்புகளாக பின்னிக் கிடந்த அந்தக் காட்சி. அங்கு... கதிரறுப்புக்கு ஆளில் லாமல் அல்லாடித் தவிக்கிற மூக்காத்தா.

முனியன் சொல்லச் சொல்ல தலையாட்டினாலும், குடித்த ‘தண்ணி’யாலும், தின்ற புரோட்டாவாலும் புதைக்க முடியாத ஒரு சைத்தான். கண்ணால் பார்த்த சைத்தான். காதால் கேட்ட சைத்தான். ‘நம்ம ஊரு அப்பாவிப் பொண்ணுக்கு துரோகம் பண்ணுகிற அயோக்கிய நாய்’ என்கிற நினைவுச் சைத்தான்.

சைக்கிளில் ஊர் வந்து சேர்ந்தபோது, ராத்திரி பதினோரு மணியிருக்கும். அப்பவும் இளம்போதை

மிச்சமிருந்தது. அப்படியே படுத்தவன், அடித்துப் போட்ட நாயாக உறங்கிவிட்டான்.

விடியற்காலம் ஆட்டுக்கம்பைத் தூக்குகிறபோது—

இன்னது செய்வதென்றறியாது குழம்பிக் கிடக்கிறான். சங்கரனுக்கு ஒன்றும் திகையவில்லை.

சொல்லவா, விழுங்கவா?

சொன்னால்...?

குருவிக்கூடு மாதிரி கட்டுக் குலையாத, கச்சிதமாக இருக்கிற குடும்பம் ஒன்று, கந்து கந்தாகப் பிய்ந்து போகுமே...

மூக்காத்தா நாதியற்றவளாகி, முத்துலட்சுமி தகப்பனில்லாதவளாகி, குடும்பமே குரங்கு கையில் சிக்கிய குருவிக்கூடாகிவிடுமே...

நம்ம ஊர்க்காரியோட குடியும் குடும்பமும் நாசமாகுறதுக்கு நாமே காரணமாக இருக்கலாமா? உளறிக் கொட்டி... உள்ளதையும் உடைத்து சிதறடிக்கவா?

சங்கரன் ஆடுகளைப் பத்திக்கொண்டு போனான்.

வாயைப் பொத்திக்கொள்ளணும். பார்த்த சைத்தானை படம் காட்டிரக்கூடாது. கமுக்கமா அமுக்கிர வேண்டியதுதான்.

இப்படி நினைத்தவுடன்—

அவன் மனசில் ஏறிக்கொண்ட கனம். அமுக்கி வைத்துக்கொண்ட சைத்தானின் பார அழுத்தம். நெருஞ்சி முள்ளாகக் குத்தியழுத்துகிற வலி. பாவப் பாரத்தைச் சுமக்க முடியாத மனத் திணறல்.

மறுநாளுக்கு மறுநாள்.

சாயங்காலமிருக்கும். ஆடுகளைச் சின்னாண்டியைப் 'பார்க்க'ச் சொல்லிவிட்டு வந்தவன், ஒரு டீயைக் குடித்து விட்டு ஆடுகளின் மேய்ச்சல் தளத்துக்குப் போகலாம் என்று நினைத்தான். ஒரு டீயும் அடித்தான். பீடியைப் பற்றவைத்துக்கொண்டு, டீக்கடை முன்னால் ஆட்டுக் கம்பை ஊன்றிக்கொண்டு நிற்கிறபோது—

கிழக்கே ஓடுபாலத்தில் கம்பு தூற்றிக்கொண்டிருக்கிற ஓர் உருவம். கொம்மையும், தூசியும் மலையென ஒதுங்கிக் கிடக்க... தூற்றப்பட்ட சுத்தமான கம்பு, குன்றாக இந்தப் பக்கம் கிடக்க...

யாரோ கையசைத்து அழைக்கிற தோற்றம்.

கிட்ட போய்ப் பார்த்தால்—

மூக்காத்தா. முனியன் பெஞ்சாதி.

அவள் நின்ற கோலம். இவனுக்குள் திகீரென்றது. கம்பத்தூசிக்குள் முக்கியெடுத்த மாதிரி நின்றாள். உயிர்க் களை இழந்த முகம். கண்ணிமைகளில்கூட தூசி.

ஒற்றை மனுஷியாகக் கிடந்து சீரழிந்து, உயிரைக் கரைத்திருக்கிறாள் என்பது அவள் முகத்துச் சோர்விலும் அயற்சியிலும் சட்டென உணர முடிந்தது. இவனுள் குலை பதறிப் போயிற்று. இவனது உயிரே சட்டென்று திகைத்துவிட்டு... துடித்தது.

சாரைப் பாம்புகளாகப் பின்னிப் பிணைந்து கிடந்த அந்த சைத்தான்கள். தின்று கொழுத்து, தினவெடுத்துத் திரிகிற முனியன். இங்கே—

*நைந்து கிழிந்த சித்திரமாக மூக்காத்தா. உச்சி வெயிலில் அறுத்துப் போட்ட பச்சைக் கொடியாக வாடிக் கிடக்கிற பரிதாபம்.*

*சங்கரனுக்குள் குலை கொதித்தது. நெகிழ்ந்து நெக்குறுகிப் போன உணர்ச்சிமயமான கணத்தில்—*

*நிகழ்ந்த மன உடைப்பு. தேங்கிக் கிடந்த ரகசியம், உடைப்பில் பாய்ந்து மூர்க்கமாக வெளியேற...*

*உளறிக் கொட்டிவிட்டான்.*

*"முனியண்ணன் வரல்லியா?"*

*"பாத்தீயா?"*

*"முந்தா நா பாத்தேன்..."*

*உளறிவிட்டான். எல்லாவற்றையும் கொட்டிவிட்டான்.*

*இறுகிப்போன அவளது முகம். அவமானத்திலும், கோபத்திலும் துடித்த அவளது கண்கள். மட்டியைக் கடித்த வேகம்.*

*வெகுண்டு விளக்குமாறால் அடிப்பாளோ... நெகிழ்ந்துபோய்... மன்னித்துவிடுவாளோ...*

*என்ன நடக்குமோ...?*

*சங்கரனுக்குள் பாரம் இறங்கிய நிம்மதியை நிற்க விடாமல்... எதையோ குலைத்துவிட்ட ஒரு குற்ற உணர்ச்சி ஏறிக்கொண்டது.*

–'ஓம்சக்தி'–டிசம்பர் 2006

# 6 விளக்குமாறு

'**கூ**றுகெட்ட ஆம்பளை ஊர் வழியிலே சுத்துனா... சோறு காய்ச்சுற பொம்பளையாலே என்ன செய்ய முடியும்? இது பொட்டச்சி செய்யுற சோலியா? பொட்டச்சியாலே முடியுமா? புஞ்சையிலே வெளைஞ்சு கிடக்கிற கம்மங்கருது அறுத்துப் பொறுக்கி, வண்டி பார்த்து லோடு பண்ணி, ரோட்டுக்குக் கொண்டுவந்து, விரிச்சுக் காயப்போட்டு, காவல் காத்து, அடிச்சு, தூற்றி, மூட்டையாக்குறதுன்னா மீசை மொளைச்ச ஆம்பளை இருந்து செய்ய வேண்டிய சோலி. பொட்டச்சியைப் பாருன்னா... முடியுமா?

'இது இது பொட்டச்சியாலே முடியும், இது இது ஆம்பளையாலேதான் முடியும்'னு கணக்கு இருக் குல்லே? ஆம்பளையாலே, புள்ளை சுமந்து முக்கிப் பெற முடியுமா? வேட்டியும் துண்டும் மட்டும் போட்டுக் கிட்டு, பொட்டச்சியாலே தெருவுக்கு வர முடியுமா?'

கொதிபானைப் பருக்கைகளாகக் கொந்தளித்துத் தள தளக்கிற நினைவுகளோடு தெருவில் 'தக்தக்'கென்று நடக்கிற மூக்காத்தா. முகத்தில் நினைவு வெக்கையின் உஷ்ணம். அவள் நடக்கிற நடை. எட்டிப் போடுகிற எட்டு. வேக வேகமாக நடை. தெருவின் தரையே 'திண், திண்'ணென்று அதிர்கிறது. வியர்வைச் சாதிப் பெண் ணின் தாட்டியமான நடை.

“என்ன, மூக்காத்தா... ‘வேகு வேகு’ன்னு போறீயே தூரமா?”

“டக்கர் வைச்சிருக்குற சுப்புராமைப் பாக்கணும்.”

“டக்கர் என்ன? மண்ணடிக்கவா, குப்பையடிக்கவா?”

“கம்மங்கதிரு பொறுக்கணும். வாங்கித் தட்டி, லோடு பண்ண ட்ரெய்லர் வேணும்லே?”

“மேலப்புஞ்சையிலா?”

“ஆமா...”

மூக்காத்தா அவள் முகத்தைப் பார்த்தாள். நீள்கிற பேச்சுக்குள் ஏதோ ஒளிந்திருக்கிற மாதிரியோர் பிரமை.

“கருது பெறக்க ஆள் கூப்பிட்டியா?”

“நீயும் வாரீயா?”

“வாரேன். நாலு நாளா ஒரு சோலியுமில்லே...”

“சரி வா - பண்ணருவாளோட வந்துரு.”

சின்னக்கா முகத்தில் ஒரு தெளிச்சி. ஒளிப் பரவல். ஒருநாள் பாடு கழிந்துவிட்ட நிம்மதி.

“கூலிக்காரி பொழைப்பு இப்படி சீப்பட்டுப் போச்சே...” சின்னக்காவின் வேதனையான அவலப் புலம்பல் மூக்காத்தாவுக்குக் கேட்டது.

“சம்சாரிக பாடும்’ நாறிப் போய்த்தான் கெடக்குது. மண்ணை நம்பி நம்பி மாரடிச்சவன் வாயிலே மண்ணு தான் வுழுது... மண்ணோட மண்ணா மக்கி அழுக வேண்டியதுதான்.”

மூக்காத்தாவின் மனப்புலம்பலில் கசிகிற தேகத்தின் வலி. சுப்புராம் வீட்டு வாசலில் நுழையத் தயங்கி,

முற்றத்திலேயே நின்று கூப்பிட்டாள். "சாமியோ...வ், சாமியோ...வ்."

இது ஆம்பளை இருந்து செய்ய வேண்டியது. டக்கர் பேசி, புஞ்சைத் தலைமாட்டுக்கு டிரெய்லரைக் கொண்டு வந்து நிறுத்தி, பெண்கள் அறுக்கிற கதிர்களையெல்லாம் சாக்குகளில் வாங்கி, டிரெய்லரில் கொண்டுவந்து, தட்டி, ஏறி ஏறி மிதித்து... அமுக்கி...

கூறுகெட்ட ஆம்பளை. பொறுப்பில்லாமல் ஊர்க் காடு சுற்றுகிறது. இவள் கிடந்து ஒற்றையாளாய் சீரழிய வேண்டியதிருக்கிறது. ரெட்டை மாட்டு வண்டிப் பாரத்தை, ஒற்றை மாட்டு வண்டி இழுக்க முடியுமா? நடக்கிற வேலையா?

மூக்காத்தாவுக்குள் அயற்சியின் பரவல். மனசின் நரம்புகளெல்லாம், அறுபட்டுத் துவண்டு சரிவதைப் போல ஒரு தளர்வு.

புஞ்சையைப் பார்த்தால்... கதிர் முற்றிக் காய்ந்து விட்டது. கிளித் தொல்லையும், மயில் தொல்லையும் உயிர் வாதை.

ஓடி ஓடி விரட்டி மாள முடியவில்லை.

மழை மேகம் சினந்து சினந்து திரண்டு கறுக்கிறது. ஆவணி மாசத்தில் மழை வெயில் சுள்ளென்று அறை கிறது.

அஞ்சாறு மழைத்தண்ணீர் விழுந்துவிட்டாலும்... முழு வெள்ளாமையும் மண்ணாகிப் போகும்.

என்ன செய்ய? இந்தக் கூறுகெட்ட மனுசர், 'வரு வார், வருவார்' என்று எம்புட்டு நாள் காத்திருக்க? மழை பொறுக்குமா? நாலு சிணுங்கு சிணுங்கிட்டா...?

ஊர்வழி போன மனுசர் வந்துட்டா நல்லது. நாளைக் காச்சும் வந்துரமாட்டாரா? கதிரு வாங்கிப் போட, டிரெய்லரில் மிதித்து லோடு பண்ண- களத்து வேலைக்கு வந்துரமாட்டாரா? ஆம்பளை சோலி, ஆம்பளையோட போகும். களத்துச் சோலியை அந்த ஆளு பாத்துக் கிட்டா- அடுப்பு சோலியை நா பாத்துக்கலாம்.

நல்ல வேளை... எந்தச் சாமி புண்ணியமோ, சுப்புராம் சரியென்று விட்டார். டக்கரைப் புஞ்சைத் தலைமாட்டுக்குக் கொண்டுவந்து, டிரெய்லரைக் கழற்றி விட்டு வருவதாக ஒப்புக் கொண்டார். மேற்கொண்டு காடியை உயரப்படுத்த, தகரங்களும், முளைக்குச்சிகளும் கொண்டு வருவதாகவும் சொல்லிவிட்டார்.

"நல்லாயிருப்பாரு... அந்தச் சாமியவுக..."

மனசுக்குள் நெகிழ்ச்சி. காரியம் சித்தியான நிம்மதி. எளிய ஜனத்தின் வெள்ளந்தியான வாழ்த்து.

"இதுக்கெல்லாம் நீ வாரீயே, ஒம் புருஷன் முனியனை எங்க?"

"போனதும் வாரேன்னு அவுக அம்மா ஊருக்குப் போன மனுசரை நாலு நாளா காணலை. கருது காயுது. மழை வேற மிரட்டுது. அதான் சாமி, பொட்டச்சி..."

"சரி சரி, போ- மத்த சோலிகளைக் கவனி. டக்கருக்கு நானாச்சு."

"உங்களுக்கு ஏழு கோடிப் புண்ணியம் சாமி!"

"புண்ணியம் இருக்கட்டும். வாடகையைக் கரெக்டா குடுத்துரணும்."

"ஆகட்டுஞ்சாமி!"

ஆம்பளை எங்க, ஆம்பளை எங்க... எல்லாச் சாமி யவுகளும் கேக்காக. நாம வாய் செத்து, மனம் செத்து நிக்க வேண்டியிருக்கு. எல்லாம் நமக்கு வாய்ச்ச மனுசர்.. அம்புட்டு லட்சணம்... ச்சேய்! இன்னிக்காச்சும் வந்து சேர்ந்துட்டா, கடவுள் புண்ணியம்.

ஆயாசமும், சோர்வுமாக நடையை எட்டிப் போட்டாள். ஊரையொட்டி ஓடுபாலம். உள் பள்ளமாக சிமிண்டுப் பாலம். அங்கு தட்டினால்தான் சீக்கிரமாக வேலை முடியும். விரித்துக் காயப் போட அகலமான இடம் கிடைக்கும். மழைத் தண்ணி வந்துட்டாலும், ஒட்டமாய் ஓடி வந்து கூட்டி மூடிடலாம்.

வீட்டு முற்றத்தில் மண்டி போட்டுப் படுத்துக் கொண்டு பாடம் எழுதிக் கொண்டிருக்கிற மூத்தவள். நீலநிறத் தாவணியும், வெள்ளைச் சட்டையுமாக பள்ளிக் கூட யூனிபார்ம்.

"அடியே... உங்க அப்பன் வந்துச்சா?"

"வரல்லியே..."

அவளுக்குள் பகீரிடல், சிறிதாக. மனச்சூன்யம், முகத்தின் இறுக்கமாகியது.

"இன்னும் வரல்லியா?" அடிமன ஏமாற்றமும், சோர்வும் வார்த்தைகளின் மெலிவில் தெரிந்தது.

"அடியே... நீ நாளைக்கு ஸ்கூல் போக வேண்டாம். லீவ் போட்டுரு. கருது பெறக்கணும். நீ இருந்தா அடுப்பு வேலையைப் பார்த்துக்குவே."

தாட்டியமாக உத்தரவிட்டாள், மூக்காத்தா. அவளை நிமிர்ந்து பார்த்த மஞ்சள் நிற ரிப்பன் கட்டிய ரெட்டைச் சடை.

"நாளைக்கு ஸ்கூலை யாரு தெறந்து வைப்பாக? உங்க ஆத்தாளா?"

"என்னடி?"

"ஞாயித்துக்கிழமையில்லே?"

"ஆமா, நானும் ஒரு அறிவு கெட்ட சிறுக்கி- கெழமை கூடத் தெரியாம, நிகார் கெட்டுப்போய் அலையுதேன்."

"அய்யா இல்லாம, கருது பெறக்க முடியுமாம்மா?"

"அதாண்டி நா மலைச்சுப்போய் , மதி கெட்டு நிக்கேன்."

செந்தட்டி அய்யனார் சாமியிலிருந்து, நொண்டி வீரன்சாமி, சக்தி மாரியம்மா என்று எல்லாச் சாமி யையும் ஒரு பாட்டம் கும்பிட்டுத் தீர்த்தாள்.

"ஐயா, சாமிகளா- ரவ்வோட ரவ்வா அந்த மனுசரை நீங்கதா கொண்ணாந்து சேர்க்கணும்..."

மகள் வைத்துக் கொடுத்த சோறு குழம்பை, உணர்வேயில்லாமல் உண்டு முடித்தாள். அவள் கண், உயிர் முழுவதும் ரோட்டு மேல்தான். 'அந்த மனுசர் வந்துரமாட்டாரா? கருதறுக்கிற சோலியை தோள்லே ஏத்துக்கிடமாட்டாரா? மீசை வைச்ச ஆம்பளை இருந்து செய்ய வேண்டியதையெல்லாம், பொட்டச்சியாலே செய்ய முடியுமா?'

ஏக்கமும் புலம்பலுமாக சிணுங்கித் தவித்த அம்மா வைக் கண்டித்துச் சத்தம் போட்டாள் முத்துலட்சுமி.

"ஏதுக்கும்மா இம்புட்டு அலைபாய்ஞ்சு அங்க லாய்ச்சுப் பொலம்புதே...? அய்யா வந்தா வரட்டும். வராட்டாலும்... நடக்குற சோலி, நின்னா போகும்?"

தைர்யமாகப் பேசுகிற மகளை அனுதாபமாகப் பார்க்கிற மூக்காத்தா. 'குட்டி நாய்க்கு என்ன தெரியும்?'

அயற்சியும் மலைப்புமாக பெருமூச்சு விடுகிறாள்.

**வி**டிந்துவிட்டது. யாருக்காகவும் காத்திருக்காமல், பொழுதுக்கால் நடக்கத் துவங்கிவிட்டது.

மூக்காத்தா, வீடு முழுக்க அலசித் தேடி ஏழெட்டுச் சாக்குகளைப் பொறுக்கினாள். சுருட்டினாள். 'கருதறுக்க வர்ற பொம்பளைக, 'தண்ணி, தண்ணி'ன்னு ஆலாய்ப் பறப்பாகளே! ரெண்டு ரப்பர் குடம் தண்ணீரைப் புஞ்சைத் தலைமாட்டிலிருந்த வேப்பமரத்துக்கடியில் வைத்தாள்.

"மொத மொத, மாரி மூலையிலே சாமியைக் கும்புட்டுட்டு, கருதறுக்க ஆரம்பிங்க..." மூக்காத்தா சத்தம் கொடுத்தவள், முதல் ஆளாக மடியைக் கட்டி, கதிர் அறுக்க ஆரம்பித்துவிட்டாள்.

"ஆத்தா... மாரியத்தா... நீதான் மனசு வைக்கணும். வெளைஞ்ச வெள்ளாமை, வில்லங்கமில்லாம வீடு போய்ச் சேர்க்கணும்."

பண்ணரிவாளால் முதல் கதிரை அறுத்து மடியில் போட்டாள்.

சின்னக்காவைப் போல ஆறு பெண்கள். கூலிக் காரிகள். ஆளுக்கொரு நிறையைப் பிடித்து அறுத்தனர். கொண்டு வந்திருந்த துண்டால் தலையில் முக்காடாகக் கட்டி, முதுகில் பரத்திவிட்டுக் கொண்டனர். ஊர்ப் புரணிகளை வாயலுக்காமல் பேசினர்.

*மூக்காத்தா ஊர்ப் பாதையில் உயிரை வைத்திருந் தாள். 'ஊர்வழி போன ஆம்பளை வந்துரமாட்டாரா?'*

*அவளுக்குள் வருத்தமான நினைவுகள். 'அப்பவும் இப்படியுமா ஓர் ஆம்பளை இருக்கும்? வீடு, காடுன்னு அக்கறையில்லாம... போனா போன எடம்னு போக் கழிஞ்சா போயிடுறது? ஆம்பளைன்னா அக்கறை வேண்டாம்? பொறுப்பு வேண்டாம்? பாடுபடணும், உருப்படணும்னு மனசுலே ஓட வேண்டாம்?'*

*அவளுக்குள் சோகம் தாளாத ஒரு விசும்பல். வருத்தத்தில் நனைந்து பொதும்பிய உணர்வுகளின் கண்ணீர்க்கசிவு. துயரப்பட்ட உள் மனசின் வெடிப்பு.*

*காலை வெயில் சுள்ளென்று சுடுகிறது. ஆவணி மாசம். காடு கரைகள் எல்லாம் வெள்ளாமை முடிந்து, உழுது கிடக்கின்றன. இவள் புஞ்சையில் மட்டும் கம்மம் பயிர்கள் காற்றின் கட்டளைக்கேற்பத் தலைவணங்கி அசைகின்றன, லயம் தப்பாமல். பயிர்கள் வாடத் துவங்கி கருக்க ஆரம்பித்துவிட்டன. கதிர் நல்ல முற்றலான விளைச்சல். நல்ல மணிப்பிடிப்பு. கனத்த கட்டியாகக் கதிர்கள்.*

*"யாரு கருதை வாங்குறது?"*

*"ஆம்பளையில்லே. நாந்தான் கெடந்து சாகணும்."*

*மூக்காத்தா சாக்குகளை எடுத்தாள். அறுத்து மடியை நிரப்பியிருந்த பெண்களிடமிருந்து கதிர்களை சாக்கில் வாங்கி, தலையில் சுமந்து, டிரெய்லருக்குக் கொண்டு வந்து தட்டினாள். ஏறி ஏறி மிதித்தாள். கதிர்க்காம்பு கோணூசியைப் போல குத்திக் கிழிக்கிறது, உள்ளங்*

காலை. ரத்தம் வருகிறது. அதைப் பார்த்துக் கலங்கிக் கொண்டிருக்க முடியுமா? பாடு சோலியைப் பார்த்துத் தானே ஆகணும்? வாழ்க்கையோடு மல்லுக் கட்டுகிற வைராக்கிய சுபாவம். கிராமத்து மனுசிக்கேயுரிய போர்க்குணம்.

சாயங்காலம். கதிரறுப்பு நடக்கிறது. கண்ணில் குச்சி இடித்துவிடாமல் கவனமாக அறுக்கணும். கருது தப்பாமல் அறுக்கணும். முழங்கைக்கு மேலே ரணமெடுக்கிற வலி. கால்களில் கம்பந்தட்டை குத்திய கோடுகள். சதைக் கிழிவுகள். ரணப்பாடு.

டிரெய்லர் மேல் முளைக்குச்சிகளை ஊன்றி, பெரிய பெரிய தகரங்களை நட்டுக்க நிறுத்தி, காடிகளை உயரப் படுத்தி, அதற்குள் கதிர்களைக் குவித்து, பரத்தி, மிதித்து... எல்லாமே மூக்காத்தாதான்.

பொழுதடைய சுப்புராம் டக்கரைக் கொண்டுவந்து, டிரெய்லரை மாட்டி இழுத்தார். மிகப்பெரிய படப்பே நகர்கிற மாதிரி, ஒரு கோபுரமே நகர்கிற மாதிரி...

அவள் இன்னும் 'புருஷன் வந்துவிடமாட்டானா' என்ற ஏக்கத் தவிப்போடு, பாதையைப் பாதையைப் பார்த்தாள்.

பாலத்தில் மலைபோல குவிந்து கிடந்த கதிர். இதைக் கொத்தி இழுத்து விரித்துவிடணும். காற்றாடக் காய விடணும். கவட்டைக் கம்பால் கொத்தி இழுத்து விரிப்பது என்றால், மீசை வைத்த ஆம்பளைகள்தான் வேணும். முரட்டு வேலை.

'வீட்டாம்பளை ஊர் சுத்துனா வீடு விளங்குமா? அறுப்புக் காலத்துலே, பொறுப்பத்துத் திரியுற ஆம்பளை

உருப்படுவானா? புள்ளை பொண்டாட்டியை வைச்சுக் காப்பாத்துவானா?'

ஏக்கமும், கவலையும் மனசைக் குடைய, கதிர் குமியில் காலை வைத்து, கவட்டைக்கம்பால் கதிர்க் கற்றையை உடைத்து, குத்திக் குத்தி இழுத்தாள். ஒற்றை மனுஷியாக இவள் கிடந்து சீரழிவதைப் பார்த்து, மூக்காத்தாளின் ஒன்றுவிட்ட தம்பிமார் ரெண்டுபேர் வந்து கை கொடுத்தனர்.

விரித்துவிடப்பட்ட கதிர்களில் டிராக்டர்களும், மினி பஸ்களும், சர்க்கார் பஸ்களும், வேன்களும், லாரிகளும் போய் வந்தன. டயர்களில் மிதிபட்டு நசுங்கிச் சப்பளிக்கிற கதிர்களை கவட்டைக்கம்பால் அவ்வப்போது குத்திக் கிளறிவிடுகிற மூக்காத்தா.

வேலை, வேலையாக நடந்தாலும்... உயிரெல்லாம் புருஷன் மேல்தான் கிடந்தது. 'அந்த மனுசர் எப்பத்தான் வருவாரோ? எங்க, எப்படி சீரழியுறாரோ? சாப்புட்டாரோ, சாப்புடலியோ?' அவளுக்குள் நினைவை சப்பளித்து மிதிக்கிற கவலை டயர்கள். அவளை நொறுக்கிச் சிதைக்கிற ஏக்க டயர்கள். 'இப்படி உருப் படாத - பொறுப்பத்த மனுசரா எனக்கு வந்து வாய்க் கணும்' என்ற மெல்லிய கண்டன நினைவுகள். முத்து லட்சுமியும் கூடமாட அலைந்தாள்.

காவலுக்குக் களத்திலேயே இருக்கிற மூக்காத்தாவுக்குச் சோறும், தண்ணியும், காபியும் அவள்தான் சுமந்தாள்.

பன்றிகளோ, கழுதைகளோ வாய் வைத்துவிடக் கூடாதே என்று பொழுதுக்கும் மூக்காத்தாதான் காவல்.

ராத்திரியிலும் இவள்தான் ஒற்றையில் படுத்திருந்தாள். 'பாவி மனுசர் இன்னும் வரல்லியே' என்ற கவலையும்... உடன் படுத்திருந்தது.

களம் வந்த மூன்றாம் நாள். கதிர் காய்ந்துவிட்டது. பெருமளவுக்கு நசுங்கிவிட்டது. சக்கைகளும், கம்பும் குழம்பிக் கிடந்தது. சக்கைகளை விளக்குமாறால் பரசிப்பரசி ஒதுக்கினாள். நல்லவேளை... பொதிகை மலைத் திசைக்காற்று, வஞ்சகமில்லாமல் அடித்தது. சுளகால் அள்ளி அள்ளித் தூற்றினாள். சூழலே தூசிமய மாக இருந்தது. மூக்காத்தாவும் தூசிக்குள் முங்கி எந்திரித்தவள் போலிருந்தாள். கண்ணிமையிலும் கம்புத் தூசி.

கொம்மையும் தூசியும் காற்றால் இழுபட்டு விலக, சுத்தமான கம்பு, குன்றாக எழுந்தது.

பொழுதடைந்தது. ஏறக்குறைய வேலை முடிகிறது. குமியாகக் கிடக்கிற கம்பை சாக்கில் அள்ளி மூட்டை களாக்கி வீடு போய்ச் சேர்ந்தால் வேலை முடிகிறது. 'இந்த ஆளு வரல்லியே' என்ற கவலையின் நச்சரிப்பு.

மூக்காத்தா ரோஷப்பட்ட வேகத்துடன் பேயாய்ச் சுழன்றாள். புயலாய் - சூறாவளியாய் - சுற்றினாள்.

கம்புக்குமி சாக்கில் அள்ளணும். சாக்கின் வாயை அகலமாக்கிப் பிடிக்க ஓர் ஆள் வேணும்.

தூசிப் பொம்மையாக நின்ற மூக்காத்தா, சுற்றும் முற்றும் பார்த்தாள். ஆவல் பறப்புடன் ஆளைத் தேடி னாள்.

சங்கரன் நின்றான். ஆட்டுக் கம்புடன் டீக்கடை முன்பு நின்றான். கையால் சைகை செய்து கூப்பிட்டாள்.

நம்ம வீட்டாளுக்குக் கூறு இல்லாம, ஊரு வழி சுத்துறதாலேதானே... நாம இப்படி கெடந்து சீரழிஞ்சு சீப்பட வேண்டியிருக்கு...

சங்கரன் வந்தான்.

சாக்கைப் பிடித்தான். சகஜமாகக் கேட்டான்.

"முனியண்ணன் இன்னும் வரல்லியா?"

"பாத்தீயா?"

"முந்தா நா பாத்தேன்."

"எங்க?"

"அவுக அம்மா ஊர்லேதான். ஆனா... அம்மா வூட்லே இல்லே."

"ம்... பெறவு?"

"உங்க கல்யாணத்துக்கு முன்னாடியே - அண்ணன் கூட சிநேகிதமா இருந்த ஒரு பொண்ணு, வாக்கப்பட்டுப் போய், வாழாம வந்து... வாழாவெட்டியா இருக்கா. அவா வீடே கதியா கெடக்காரு..."

கவட்டைக் கம்பால் அவளது உயிரைக் குத்தியிழுத்த மாதிரியிருந்தது. மூக்காத்தாவின் மனசில் குப்பென்று பற்றிக்கொண்ட ரௌத்ரம். கவலையால் மாரியம்மா வாகக் குளிர்ந்து கிடந்தவள், சங்கரன் சொன்ன செய்தியில் - ருத்ரகாளியாய் - பத்ரகாளியாகி விட்டாள்.

அவளுக்குள் தீக்கற்றையென கோப ஜ்வாலை.

*வாழ்வோடு மல்லுக்கட்டுகிறவள். தரையதிர 'தக், தக்'கென நடக்கிற தாட்டியமானவள். ரெட்டை மாட்டு வண்டிப் பாரத்தை, ஒற்றை மனுஷியாக இழுக்கிற உழைப்புப் போர்க்குணம். அவளிடமிருந்து கனல் வார்த்தைகள் தெறித்தன.*

*பொறுப்பின்மையை சகித்துக்கொள்ள முடிந்து கவலைப்பட்ட அவளுக்கு... துரோகத்தைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. "வரட்டும்... விளக்கமாத் தாலே அடிச்சு, நாயை வெரட்டுற மாதிரி, வெரட்டு தேன்..." மனசுக்குள் கனல் மணக்கிற நினைவுகள். டக்கரில் வீட்டுக்குப் போகிற கம்பு மூட்டைகளின் மீது, மூக்காத்தா உட்கார்ந்திருக்கிறாள். விளக்குமாறும் கிடந்தது. உள்ளுக்குள் தகிப்பும் கனன்றது. என்ன நடக்குமோ...?*

–'ஓம்சக்தி' தீபாவளி மலர், 2006

# 7 வெள்ளை மனசு

*வீட்டில் ஊற்றிவைக்க இடமில்லை. ஆனாலும் ரப்பர் குடத்துடன் குழாய்க்கு வந்துகொண்டேயிருந் தாள். அடிக்கடி வந்தாள். தண்ணீர் பிடிக்க அவசரப் படாமல், வருகிறவர்களுக்கெல்லாம் வழிவிட்டு ஒதுங்கி நின்றாள். அவள் பார்வையும், மனசும் சற்றுத் தள்ளி யிருக்கிற சைக்கிள் கடைக்குள் வேரடித்திருந்தது. அங்கே கட்டம் போட்ட கைலியும், முண்டாப் பனியனு மாய் முனியன் உட்கார்ந்திருந்தான். கருவேலங்கட்டை மாதிரி வைரம் பாய்ந்த திரேகம், கரிய மின்னலாக மின்னுகிறது.*

*அவனது பார்வையும் இவளிடம்தான். தலையைக் கோதிவிட்டுக் கொள்கிற அவன். கட்டம் போட்ட துண்டைத் தலையில் வட்டக்கட்டாகக் கட்டிக் கொள்கிற நேர்த்தி. மீசையில் ஒரு கை போட்டவாறே, இவளைப் பார்க்கிற பார்வை. விட்டு விலகாத வைரப் பார்வை. வைர மனசை அறுத்து உள் நுழைகிற பார்வை.*

*மொழியில்லாமல் பேசுகிற மனப் பார்வைகள். கலந்து, குழைந்து பின்னிக்கொள்கிற உணர்ச்சிப் பார்வைகள்.*

*பார்த்த பார்வை விலகாமல், கண்ணை வெட்டுகிற முனியன், 'வாரீயா...?'*

*பார்வை விலகி, உதட்டில் வெடித்த மனச்சிரிப்பை தோளில் அழுத்தி இழுவிக்கொண்டாள். நாணத்தில்*

மின்னி மிருதுவாகிற அவளது முகம். மெல்ல அசைகிற தலை. பருவக்கூத்து.

'போய்யா..' என்கிற வெட்கம். பொய்யான வெட்கம். போலியான மறுப்பு. 'வரலே' என்கிற தலை. 'வரட்டா' என்கிற உதடுகளின் சுழிப்பு.

அவளது முகமேடையில் அரங்கேறும் மனநாடகத்தைக் குறுஞ் சிரிப்பான ரசனையோடு, பார்க்கிற முனியன். மனசுக்குள் றெக்கை முளைக்கிற மாதிரியிருக்கிறது. உல்லாசத்தில் விசிலடிக்கிற அடி மனசு. கண்ணில் ஒரு மோக மின்னல். அடிவயிற்றுக்குள் குறுக்காகப் பாய்கிற ஐஸ் குளிர்ச்சி. திரேகமெல்லாம் சிலிர்த்தோடுகிற மதர்ப்பு.

முனியன் எழுந்தான். இவளை உசுப்புவதற்காகவே சும்மா சைக்கிள் கடையில் உட்கார்ந்திருந்தான். சாயங்கால வெயில். சந்தன வெயில். சந்தோஷ தாகத்துக்குப் பின்னணி இசை வாசிக்கிற சங்கீத வெயில். மரங்களின் நிழல்கள், நீள அகலமாக மண்ணில் விழுந்து கிடந்தது.

முனியன் அண் - டிராயர் பைக்குள்ளிருந்து கணேஷ் புகையிலை எடுத்தான். தங்கநிறக் காகிதம். கிழிந்த வாயைக் கையால் பிடித்துக்கொண்டே, மறு கையில் 'சட்சட்'டென்று அடித்து உதறினான். இடது உள்ளங்கையில் அதைக் கவிழ்த்துத் தட்டினான். வேண்டுமளவு விழுந்தவுடன் நிறுத்தி... உள்ளங்கைத் தூளை வலது கைவிரல்களால் பிசைந்து குழைத்து, உருட்டி, அடி உதட்டை முன்பக்கமாக இழுத்து, அதன் ஆழத்தில் வைத்து அழுத்தினான்... பர்ஸுக்குள் பண மடிப்பைத் திணிக்கிற எச்சரிக்கையுடன்.

அடி உதடு இப்போது கர்பிணிப் பெண் வயிற்றைப் போலப் புடைத்திருக்கிறது. ஊறுகிற எச்சிலும், அதன் எரிச்சலான காந்தலுணர்வும் அவனுக்கு போதை யூட்டுகிற ஆசை ருசியாக இருக்கிறது.

சைக்கிள் கடையை விட்டு வெளியேறுகிற அவன், குழாய் முன் நிற்கிற செங்காளியைப் போதையுடன் பார்த்தான். கண்ணின் மனப்பாஷை - 'வந்துரு.'

எதிரில் முட்டிக்கொண்டு முத்தையா.

"போயிலை இருக்கா?" என்று கையை நீட்டுகிறான்.

"ஒரு தடவைக்கு வரும். இந்தா வைச்சுக்கோ."

கணேஷ் போயிலை போடுகிறவர்களுக்குள் அப்படி யோர் இணக்கம். பரஸ்பரம் கொடுத்துக்கொள்கிற பகிர்ந்துண்கிற பண்பு. போதைக்கே உரிய தாராள கலாச்சாரம்.

நடையை எட்டிப் போட்டான் முனியன். ஊருக்கு வெளியே நடந்தான். ஓடைக்குள் விழுந்து கரையேறி, ஒற்றையடிப்பாதையில் நடந்தான். ஏகப்பட்ட சீமைக் கருவேல மரங்கள் புதர்க்காடாக வளர்ந்து கிடந்தது. உள்ளே போனால் ஓர் இடி கிணறு. இடிந்து சிதிலமாகி விட்ட பாழுங்கிணறு. கிணற்றின் விளிம்பில் காடாக வளர்ந்து கிடக்கிற அரளிச் செடிகள். ஜில்லென்று பூத்துக்கிடக்கிற மஞ்சள் பூக்கள்.

குடிசை போட்ட மாதிரி மறைப்பாக இருந்த இடம். அரளிச்செடியின் காய்ந்த சருகுகள் மேல் உட்கார்ந்தான். சருகுகள் நொறுங்குகிற 'பொரு, பொரு' சத்தம். இந்த இடத்தில்தான்—

இவர்களின் சந்திப்பு. உடல் சங்கமம். மனச்சங்கமம்.

மேல் துண்டை விரித்துப் படுத்தான். கைளைப் பின்பக்கம் மடக்கி வைத்துத் தலையை வைத்துக்கொண் டான். மனசுக்குள் மதர்ப்பான நினைவுகள்.

செங்காளி மனசுக்குள் வந்தாள். அவளது ஒயிலான திரேகம். உருண்டை முகம். கச்சிதமான உதடுகளின் ஈர ரேகைகள். கண்ணின் மாயப் பேரழகு. தொட்டால் குழைகிற அவளது வாளிப்பான இடுப்பு. இவனை எப்போதும் ஒரு மோகத்துடன் பார்ப்பாள். அவளுக்குள் இவன்மீது தீராக்காதல். சொக்கிக் கிடப்பாள்.

அவள் அடி உதட்டைக் கடித்துக்கொண்டு, மார்பில் உரிமையோடு சாய்வாள். ஒட்டி இழைவாள். இவனை வருடி வருடிப் பார்ப்பதில் அவளுக்குள் மோகாவஸ்தை. தோள் புஜத்தை ஆசையோடு கடிப்பாள்.

"தீட்டிவைச்ச வீச்சருவாள் கணக்கா கனகச்சிதமா இருக்கு, ஒம்ம ஒடம்பு. கன்னங்கரேல்னு மின்னுது."

மோகத்தில் குழைந்த குரலில், சர்க்கரைப்பாகு வழியும்.

அவளாகவே இவன்மேல் விழுவாள். அவனை இறுகப் பிடித்து அணைப்பாள். மீசையைப் பல்லால் கடித்து இழுப்பாள்.

"ஏய்க்... என்ன இது, சின்னப்புள்ளை கணக்கா?"

"எனக்கு நீரு சின்னப்புள்ளதான். தூக்கிவைச்சுக் கொண்டாடுவேன்."

கள்ளமில்லாத வெள்ளை மனசு. காமம் நிறைந்த காதல் குழந்தை. வினயம் இல்லை. காரியார்த்தம் இல்லை. கபடம் இல்லை. 'என்னாகும்' என்பதைப் பற்றிய எச்சரிக்கையில்லை.

பூச்சாண்டி காட்டுகிற கிலுக்கை மோகித்து- பின்னா லேயே தொடர்கிற பிள்ளை மனசு.

“யோவ்... இந்த மாசம் தள்ளிப் போகுதுயா...”

“ஏன்...?”

“தங்கியிருச்சு போலிருக்கு... என்னய்யா செய்ய? என்னை தாலியைக் கட்டி, காலடியிலே போட்டுரும்.”

“தாலி கட்டத்தான். அதுக்கு, இது சமயமில்லே. நாலைஞ்சு மாசம் ஆகணும்.”

“அப்ப என்னய்யா செய்ய?”

“பேசாம... பேசாம... பேசாம...”

அச்சமில்லாமல், பதற்றமில்லாமல், கேட்கிற அவளிடம் சொல்லத் தயக்கமாக இருக்கிறது. தாய் மடியில் உட்கார்ந்திருக்கும் குழந்தை மாதிரி, பாதுகாப் புணர்வு மிக்க நம்பிக்கையில் உறைந்திருக்கும் அவளிடம், எப்படிச் சொல்ல?

“சொல்லும்...! அரளிக்கொட்டையை அரைச்சுக் குடிச்சிரவா? கட்டையிலே வெந்துரட்டா?”

“ச்சேச்சே... அதெல்லாம் வேணாம். அப்படியெல் லாம் ஒன்னை, அம்போன்னு உட்டுரமாட்டேன். நீ என்னோட சக்கரைக்கட்டி, செல்லக்குட்டி.”

“அப்ப?”

“பேசாம... பீர்க்கை விதையை அரைச்சுக் குடிச்சிரு. கலைஞ்சிரும். தோதான சமயத்துலே நாம கல்யாணம் பண்ணிக்கலாம்.”

“பீர்க்கை வெதை?”

"நா கொண்ணாந்து தர்றேன்."

அவளது வெகுளித்தனமான நம்பிக்கை, இவன் மன அழுக்கை சலனப்படுத்துகிறது. மனசின் அழுக்கு முள்ளாக மாறி உறுத்தியது.

'என்ன நெனச்சுப் பழகுகிறோம்? செங்காளியோட சேர்ந்து வாழணும்னு நெனைச்சா? அதுலே வைராக்கியம் இருக்கா? ஏதோ கிடைக்குற வரைக்கும் லாபம்ங்குற நெனைப்போட ருசிக்கிறது ஞாயமா? இம்புட்டு வெகுளித்தனமா நம்புற பச்சைப் புள்ளைக்குத் துரோகம் செய்றது, பாவமில்லையா?'

மல்லாக்கப் படுத்திருக்கிறான். ஆகாயத்தில் ஆங்காங்கே தெரிகிற பஞ்சு மேகங்களையும் அரளி இலைகள் மறைக்கின்றன. வெயில் மறைந்த ஒளி தகதகப்பு, ஆகாயத்தில் தெரிகிறது.

சருகுகள் நொறுங்குகிற சத்தம். 'தக், தக்'கென்று பூமியதிர்கிற கிராமத்து நடை. செங்காளி வருகிறாள்.

"வந்துட்டியா?"

"வரமாட்டேன்னு நெனைச்சீகளா?"

"நீ வர்றது நிச்சயம்னு தெரியும்..."

ஓட்டமாய் ஓடிவந்தாள். மேலே சாய்ந்தாள். முண்டாப் பனியனை மீறிக்கொண்டு வெளித் தெரிகிற நெஞ்சுக்குழி ரோமத்தை உதடுகளால் கவ்வினாள். அவள் முதுகைக் கைகளால் வளைத்து நெருக்கினான்.

அவனுக்குள் மோக வேட்கை. உடல் தினவின் முறுக்கேறிய தவிப்பு. அவளது உதட்டைக் கவ்வலாமா என்று நினைப்பதற்குள், இவன் உதட்டைக் கவ்விய

அவள். கன்னங்களில் அவளது எச்சில். காது மடல்களில் அவளது மிருதுவான உதடுகள். அவனை உசுப்பிவிட்டு விரைவுபடுத்தினாள்.

"என்ன அவசரம்?"

"இருட்டிட்டா... அம்மா ஆயிரத்தெட்டு கேள்வி கேட்பா... கெழட்டுச் சிறுக்கி."

அப்படியே எழுந்து அவனது மடிக்குள், பூச்சரமாகக் குழைந்த அவளை.. கீழே மல்லாக்க சரித்தான். அவளது பசியைக் கபடமில்லாமல் வெளிக்காட்டினாள். தீட்டி வைத்த வீச்சரிவாள் மாதிரியான முனியன் திரேகத்தை, ஆசை ஆசையாக அணைத்தாள். கூச்சமற்ற அவள் திரேகத்தின் கூப்பாடு.

நாணத்திரை போடாத அவளது உணர்ச்சிகள்.

மேகத்து வெளிச்சமும் மறைந்து... கருகருவென இருட்டத் துவங்கியபோது...

பிரிய மனசில்லாமல் பிய்த்துக் கொண்டோடினாள்.

'இவனை நம்பி- இவன் பின்னாலே கிறுக்குப் பிடிச்ச சிறுக்கி மாதிரி சுத்துறோமே... கடைசிவரைக்கும் கூட வருவானா? புடிச்ச கையை வுடாம இருப்பானா? தேனை வழிச்சுக் குடிச்சுட்டு... தேனடையைத் தூர வீசியெறிஞ்சிட்டுப் போயிருவானா?'

அவளுக்குள் எறும்பு கடிக்கிற மாதிரியான நறுக் கிடுகிற வலி. மெல்லத் தலை தூக்குகிற அவநம்பிக்கைப் பாம்பு. சட்டென்று துவண்டு சரிகிற உல்லாச மனசு. காற்றுப் போன பலூனாக உயிர் வடிந்த வெற்று மனசு. உருச்சிதைந்த உயிர்.

'... ஆனா... அந்தக் கருஞ்சனியனைப் பார்க்காம இருக்க முடியலியே. தீட்டி வைச்ச வீச்சரிவாள் மாதிரி யிருக்குற அந்தக் கருநாயோட திரேகத்தை அயத்துட்டு (மறந்து) இருக்க முடியலையே... இந்தப் பாதகத்தி மனசு, நஞ்சடிச்ச கெண்டையாக் கெறங்கி... கெறங்கி... அவன் காலடியிலேயே சரியுதே...'

முகமூடி போடாத காதல் பெருக்காக... அவள்.

அவளுள் வேரற்ற நினைவுகள். தொடர்ச்சியற்ற துண்டு துண்டான நினைவுகள்.

அவளது உயிரை அள்ளிக்கொண்டு வெளிப்படுகிற பெருமூச்சு. அடிமனசின் அலைக்கழிவு, காற்றைப் போல கட்டறுந்து சுழன்றது.

... போன புதன்கிழமை. இதே அரளிச்செடி புதருக் குள், இவளது மடிக்குள் அவன் முகம் புதைந்திருந்தான்.

"உங்க பேச்சைக் கேட்டு, இழுத்த இழுப்புக்கெல்லாம் உங்ககிட்டே வந்து, பீர்க்கை விதைக் கரைசலும் குடிச்சிருக்கேனே.. ஏங் கழுத்துலே தாலி போடுவீகளா?"

"போடமாட்டேனா?"

"அம்போன்னு வுட்டுட்டுப் போயிட்டா? ஆம்பளைச் சிங்கம் நீங்க. அசிங்கப்பட்டு நாந்தானே அரளிக் கொட்டையை அரைச்சுக் குடிச்சி, மடியணும்?"

"ஒங்கழுத்துலே தாலியைக் கட்டி, குடும்பமா வாழ்ற துன்னு நெனைச்ச பெறகுதான்... ஓம்மேலே கைபோட் டேன். ஊரே மறிச்சு நின்னாலும்... மதுரை வீரன், பொம்மியைத் தூக்குனமாதிரி... ஒன்னைத் தூக்கிட்டுப் போயிருவேன்..."

அப்பவும் ஒரு பச்சைப்பிள்ளையைப் போல வெள்ளைச்சிரிப்பு சிரித்த செங்காளி. வெள்ளந்தி யானவள்.

"அப்ப... வெள்ளையம்மாளும் சக்களத்தியா வரு வாளா?"

"ச்சேய்... வாயை மூடு நாயே... இந்தச் செம்மத்துலே எம்பொண்டாட்டி நீதான். இது... அந்த முனியாண்டி மேலே சத்தியம்."

இவள் தலையிலடித்து சத்தியம் செய்தான்.

**தை** மாதம் பிறந்தவுடன் ராயகிரியிலிருந்து ஆள் மேல் ஆளாகப் பெண்கேட்டு வரத் துவங்கிவிட்டனர். பரமுவுக்குப் பெண் கேட்டு, மாரிச்சாமி படையெடுத் தார். செங்காளியின் அம்மாவிடம் குழைந்து குழைந்து பேசினார். கொழையடித்துப் பேசினார். அவளும் கரைந்துவிட்டாள். கொடுக்க மனச் சம்மதம்தான்.

"ஏய்க்... கேக்க கேக்கப் பிடி குடுக்காம நழுவிக்கிட் டிருக்கியே என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லே..."

அவளுக்குள் தீட்டி வைத்த வீச்சரிவாள்.

"நாளைக்கு வருவாக, ராயகிரிக்காரவுக. ஒரேயடியா அலைய வைச்சுக் கேவலப்படுத்தக்கூடாது. 'உண்டு, இல்லே'ன்னு ஒரு பதிலைச் சொல்லணும். கட்டன் ரைட்டா இன்னிக்கு நீ எனக்கு ஒரு பதிலைச் சொல்லணும்."

"ஆகட்டும்."

செங்காளி சின்னஞ்சிறு ஆட்டுக்குட்டியாகத் துள்ளிச் சிதறி ஓடினாள். உல்லாச ஓட்டம். வாழ்க்

கையை - வெற்றியை - எட்டிப் பிடிக்கப்போகிற நம்பிக் கையில் பூக்கிற குதூகலப் பெருக்கு.

அரளிச் செடிகளுக்கு இடையில்...

இவள் போவதற்கு முன்பே காத்திருந்த முனியன்.

"கெழட்டுச் சிறுக்கி 'நைய், நைய்'னு நச்சரிக்கா. ராயகிரிக்காரவுகளுக்கு ஒரு பதில் சொல்லணுமாம். என்ன பதில், நா சொல்ல?"

"நானே வழி தெரியாம தெகைச்சுப் போயிருக்கேன்."

"என்னத்துக்கு?"

"இங்க எந்த வேலை சோலியுமில்லாம வெட்டிப் பயலா ஊரைச் சுத்திக்கிட்டிருக்கேன். கேரளாவுக்குக் காஞ்சன் காட்டுக்கு என்னைக் கூப்புடுறாக. போனா... ஒரு வேலை சோலி பாத்து, ஆயிரம் ரெண்டாயிரம் பாத்துட்டு வரலாம்னு இருக்கேன்..."

"எனக்குப் பதில்?"

"நா போய்ட்டு வாரேன்.. கட்டாயம் நா போகணும். திரும்பி வர்றதுக்கு மூணு மாசமாகும். அதுவரைக்கும், நீ கல்யாணமாகாம இருந்தா... நிச்சயமா ஒனக்கு நா, ஊரறிய பரிசம் போடுதேன். இது சத்தியம்."

காரியார்த்தமாகப் பேசுகிற முனியன். விட்டாற்றியான ஒரு மனோபாவம், ஓநாய் முகமாக உள்ளுக்குள் தெரிகிறது.

'பேசாம, சரின்னு சொல்லி- கல்யாணத்தைப் பண்ணிக் கிட்டுப் போயேன்' என்று சொல்லாமல் சொல்லுகிற அவனது விட்டாற்றி.

அவன் முகத்தை ஒரு வெறிப்பாகப் பார்க்கிற செங்காளி. புதுமுகம். ஆண்முகம். மிருக முகம். அவளுக் குள் ஆணிவேர் வரை பரவிய அதிர்வு.

ஆண் கபடம் எனும் பேருலக மூர்க்கத்தை உணர்கிற பிள்ளை மனசு. சட்டென்று தோலுரிந்து, முதிர்வடைகிற மனத்தெளிவு.

ஒரு கிழிந்த முகமாக அவன் மூஞ்சி தொங்குவதைப் போல செங்காளி உணர்ந்தாள்.

தீட்டி வைத்த வீச்சரிவாள்... ஓங்கிய கை மாறாமல், 'ணங்க்'கென்று இறங்கி, 'சதக்'கென்று வெட்டுகிறது, அவளது காதலை; உயிரை; மனசை; பிள்ளை மனவெள்ளை யை; அவளது வாழ்க்கையை. 'அடப் பாவிப் பயலே...'

"முனியாண்டி சாமி மேலே நீங்க செய்ஞ்ச சத்தியம், இம்புட்டுத்தானா?"

"நா இப்பவும் சத்தியமா சொல்லுதேன். கேரளா வுக்குப் போய்ட்டு வந்தவுடனே... நீ இருந்தா... நீதான் என் பொஞ்சாதி."

அவளுக்குள் குமட்டிக்கொண்டு வருகிற கசப் புணர்வு. 'ச்சீய்'யென்று வருகிற அரூயை., 'ச்சீ, நாயே' என்று காறித் துப்ப வேண்டும் போல ஒரு மனக் கொதிப்பு.

"ஆம்பளைப் புத்தியைக் காட்டிட்டயே... பாவி..." என்று காடே அதிர்கிற மாதிரி கத்த வேண்டும் போலிருந்தது.

***

பரமசிவத்துக்கும் செங்காளிக்கும் கல்யாணம் நடக்கிற தருணத்தில்—

காஞ்சன் காட்டில் ஒளிந்துகொண்டது, வீச்சரிவாள்.

–'ஓம்சக்தி'–ஏப்ரல் 2007

# 8 போதிமரம்

முருகேசன் உட்கார்ந்திருக்கிற பெஞ்சு, 'கிடுக், கிடுக்'கென்று ஆடுகிறது. காலொடிந்து மூளியாகி இருக்கிறது. ஒரு செங்கல்லை முட்டுக் கொடுத்தாலும், முழுமைச் சமனம் கிடைக்கவில்லை. காலை வைத்தால்-கையை ஊன்றினால்- மெல்ல அசைந்தால்- லொடுக்குப் பெஞ்சு 'லொடுக்கு, லொடுக்கு' என்று ஆடும். அதைக் கூட அவ்வளவாகக் கவனிக்கவில்லை அவன்.

முருகேசனுக்கு முழுக்கவனமும் வாத்தியார்மேல் தான் - அவரது குரல். ஏற்ற இறக்கம். கரும்பலகையில் எழுதுவதும், அழிப்பதும்.

வழக்கத்துக்கு விரோதமாக, பாடத்தைக் கூர்மை யாகக் கவனித்தான். வேறு எங்கும் நழுவாத தீவிரக் கவனம்.

முருகேசனுக்கே ஆச்சரியமாக இருக்கிறது. 'இது நாந்தானா? எனக்குள்ளே என்னாச்சு?'

முந்தியெல்லாம் முருகேசன் இப்படி இல்லை. வாத்தியார் உயிரைக் கொடுத்து பாடம் நடத்திக் கொண் டிருப்பார். இவனோ முன்னே அமர்ந்திருக்கும் பையன் களின் பிடறி மயிரைப் பார்ப்பான். சட்டைக் காலர் களின் சுருக்கங்களையும், கிழிசல்களையும் கணக் கெடுத்துக் கொண்டிருப்பான். பையன்களின் சட்டை களில் மையை உதறி, கோலம் போடுவான்.

பெண் பிள்ளைகளின் மடக்கிப் பின்னிய இரட்டைச் சடைகளைப் பார்ப்பான். செம்பட்டை எண்ணெய் மினுக்கு, பின்னலுக்குள் மடங்காத ரோமங்களை யெல்லாம் ரகம் பிரிப்பான். சிவப்பு, ரோஜா, மஞ்சள், பச்சை, நீலம், சந்தன நிறம் என்று 'ரிப்பன்'களின் வண்ணங்களை எண்ணுவான்.

வகுப்பறையின் முகட்டில் அணில் கூடு. அணில் களின் உல்லாசச் சத்தங்களைக் கவனிப்பான். வகுப் புக்குள் சிக்கிக்கிடக்கிற பிள்ளைகளை நக்கல் பண்ணுகிற மாதிரி அதன் ஓட்டங்கள், வாலாட்டங்கள், விளை யாட்டுகள் இருக்கும். அவ்வப்போது ஜன்னல் கம்பியில் வந்து உட்காருகிற மைனாக்கள். அதன் மஞ்சள் அலகு. 'மிளகுக் கண்களின் அசைவு. கழுத்தைத் திருப்புகிற போது, அதன் அழகு. 'கிச்சட்டி, கிச்சட்டி' என்று அதுகள் போடுகிற கீச்சிடல்கள்.

வகுப்புக்குள் இருந்தாலும், அவனது மனப்பயணம், வேறொரு உலகத்துக்குள். மனசு அதில்தான் கரையும். அணிலையும், மைனாவையும் பார்க்கப் பார்க்க... மன உலகத்துக்குள் வேறொரு நினைவுப் பயணம்.

மயிலை விரட்டித் திரிந்த நினைவுகள். மயில் முட்டைகள் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில், கண் மூக்கு தெரியாமல் குதித்து கும்மாளமிட்ட பரவசக் காட்சிகள். சீரகம், வெங்காயம், வற்றல் இணுக்குகள் போட்டு, எண்ணெயை விட்டு, முட்டையை அடையாக ஊற்றி, மணமும் சூடுமாய் சாப்பிட்ட சுவைகள்.

சூரியகாந்தித் தோட்டத்தில் நூற்றுக்கணக்கில் மேய்ந்த கிளிகளை துரத்தி விளையாடிய சாயங்காலப் பொழுதுகள். அம்மாவுடன் சண்டை போட்டுக்

கொஞ்சிய தருணங்கள். அய்யா அதட்டலுக்குப் பயந்து, தெற்குத் தெருவுக்கு டி.வி. பார்க்கப் போகிற பதைப்பு நிமிடங்கள்.

ஏழாம் வகுப்பு முழுப் பரீட்சையில் கேள்வித் தாளைப் பார்த்தவுடன், தலை வலித்தது. தாங்க முடியாத மண்டையடி. கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தது. கதை கந்தலாகிவிட்டது புரிந்தது.

முருகேசன் அதுக்கெல்லாம் வருந்தமாட்டான். 'பெயிலாயிருவமோ?' என்றெல்லாம் பயப்பட மாட்டான்.

அவனுக்கொன்றும் பள்ளிக்கூடம் படித்து, பாசாக வேண்டும் என்ற ஆசையெல்லாம் கிடையாது. காடுகளில் பறவைகளோடு பறவையாக சுதந்திரமாகத் திரியத்தான் ஆசை.

அய்யாவிடம் ஒரே தொல்லை. அவரது தாங்க முடியாத அணத்தல். "போடா... படிடா... நல்ல 'மார்க்' எடுடா... என்னைப்போல மண்ணுல கெடந்து மடிஞ்சு போகாதே. நீயாச்சும் வெள்ளைச்சட்டையும், மாதச் சம்பளமுமாய் தப்பிச்சிக்கோ."

அவரோடு ஒரே நச்சரிப்பு.

"ச்சேய்..! நாறவாய்லே குடியிருந்தாலும், நச்சரிப்புலே குடியிருக்க முடியுமா? மனுசப்பய தாங்குவானா, இவரது புடுங்கல்களை... ஐயோ..."

அய்யா தொல்லை தாங்காமல்தான், பள்ளிக்கூடம் வருகிறான் முருகேசன். ஒப்புக்கு மாரடிப்பான். மனசு ஒட்டாத நிலை. தண்ணீரில் விழுந்த எண்ணெய்த் துளி மாதிரி தனிப்போக்கு. சிறகடிக்கிற ஆகாய மனசு. எண்

களும், எழுத்துகளும் கண் முன்னால் வண்ண ரேகை களாக மிதந்து விளையாட்டு காட்டும்.

வாத்தியார் கேள்வி கேட்கிற தருணங்கள். எந்திச்சு நின்னு, முழியாய் முழிக்கிற வேளைகள். அடிவாங்குகிற நேரங்கள். கல்லெறி விழுந்த கிளி இறக்கையாக வலிக்கும், மனசு. சுதந்திரமாகச் சிறகடித்துத் திரிந்த நினைவுப் பறவை, இறக்கையொடிந்து அலறும். குத்துண்ட ரணத்தில் கதறும்.

அவ்வளவுதான். அது சில நிமிடங்கள்தான். அப்புறம் தூசியைத் தட்டிவிட்டு, இறக்கையடித்துப் பறந்துவிடும் மனப்பறவை.

படிப்பு, 'லொடுக்கு'ப் பெஞ்சைப்போல காலொடிந்த மூளியாகிக் கிடக்கும். அதைப்பற்றிய கவலையுமில்லை.

"ஏலேய்... மாடு மேய்க்கத்தாண்டா நீ லாயக்கு."

"................"

"மக்குப் பயலே... மண்டையில் மண்ணா இருக்கு?"

வாத்தியார்களின் அர்ச்சனைகள். பூத்தூவல்கள். ஆசிர்வதிப்புகள்.

அதுக்குப் பெரிசாக அவன் ரோஷப்படுவதுமில்லை. முகம் வாடிப் போவதுமில்லை.

உடம்பில் வந்து ஒட்டுகிற தூசிகளைத் தட்டிவிடு வதைப்போல அதையெல்லாம் வெகு சாதாரணமாகக் கடந்துவிடுவான்.

அவன் உலகம் முழுவதும் - காடு, வனம், செடி கொடிகள், மரங்கள், பூச்சிகள், பறவைகள்.

இந்த முழுப் பரீட்சை விடுமுறை ரொம்பச் சவுகரிய மாக இருந்தது. தடையில்லாமல் சிறகு விரிக்க முடிந்தது.

பனங்காட்டில் சுற்ற முடிந்தது. மயில் முட்டை வேட்டை, ரொம்ப மும்முரம். ஏகப்பட்ட முட்டைப் புதையல். வேலிமரப் புதருக்குள், ஆவரஞ்செடி வேருக்குள், காய்ந்து கருத்த முள்கள் நெருக்கமாக இருக்கும் இடங்களில் முட்டைகள் இருக்கும். ஒரே லாவா லாவிவிடுவான். ஏழெட்டு தேறும்.

அம்மாவிடம் கொடுத்தால் சரிப்படாது. கண்டனமும், கோபமுமாய்க் கத்துவாள்.

'வாயில்லா ஜீவனுகடா- அதுக பாவத்துலே ஏண்டா போய் விழுறே? செந்தூரரான் வாகனம்டா... வேண்டாண்டா' என்பாள். கெஞ்சுகிற மாதிரியும் இருக்கும், சபிக்கிற மாதிரியும் இருக்கும்.

இந்த விசயத்தில், அம்மாவும், அய்யாவைப் போலத் தான். அணத்தல் 'கேஸ்.' நச்சரிப்பு.

இவனாகவே முட்டைகளைப் பக்குவமாக பதமாக வதக்கித் தின்பான். சீரகமும், வெங்காயமும் எண்ணெயில் வெந்து கருக, முட்டையை உடைத்து ஊற்றி கிண்டி எடுத்தால், அது ஏழு தெருவுக்கு மணக்கும்.

முட்டை வேட்டைக்குப் போன இடத்தில், ரெண்டு முரட்டு முயல்கள். கற்றாழைப் புதருக்குள் கண்மூடிக் கிடந்தன. பார்த்துவிட்டான். கையிலிருந்த கட்டையால் ஒரே போடு. இரத்தக்காடு. இவனுக்குத் தாங்க முடியாத கும்மாளக் குதூகலிப்பு. மனசுக்குள் விசிலடிப்பு.

இவன் அடித்துக்கொண்டு வந்த முயல்களை ஊரே ஆச்சரியமாகப் பார்த்தது. மாவீரப் பெருமிதம். சாகசப் பரவசம். முகத்தில்கூட அன்றைக்கு அதிசயமாக ஒரு பெருமிதத் ததும்பல்.

விடுமுறை நாள் சுருங்கிக்கொண்டே வர வர... இவனுக்குள் எரிச்சல் எரிச்சலாக வரும். ‘ச்சேய்... இந்தச் சனியன் புடிச்ச ஸ்கூலை நெனைச்சாலே பத்திக்கிட்டு வருது.’

முருகேசன், அஜீத் ரசிகன். அஜீத் படம் பார்ப்பதற் காகவே தினந்தோறும் பத்திரிகை வாசிப்பான். தவறவிடமாட்டான். ‘திருப்பதி’க்காக ‘தலை’ வளர்த் திருந்த நீள்முடி– ‘பரமசிவ’த்துக்காக உடம்பைக் குறைத்து ஒல்லியாகிய அதிசயம். “தல, நீயே ஒரு அதிசயம், தலை...”

அன்றைய தினசரியை விரித்துப் படித்தான். மறுநாள் பிளஸ்-2 ‘ரிசல்ட்.’

பெரிய எதிர்பார்ப்பை உருவாக்குகிற மாதிரி - தலைப்புச் செய்தியாக்கி இருந்தது, ‘தினத்தந்தி.’

‘தேர்வு விகிதத்தில் மாணவிகள் வழக்கம் போல முந்துவார்களா?’ என்றொரு ஆய்வுக் கட்டுரை.

மறுநாள் - இவன் அதையெல்லாம் மறந்துவிட் டான். விடியற்காலம் கஞ்சியைக் குடித்த வேகத்தில்... மயில்களையும், கிளிகளையும் தேடிப் புறப்பட்டுவிட் டான். நேரம் போனது தெரியாமல்... மனசும், உடலும் கரைந்த மயக்க ருசியோடு கரிசல் காட்டில் திரிந்து விட்டு... சாயங்காலம் மடத்துக்கு வந்தான்.

மேசையில் கிடந்த பத்திரிகையை எடுத்து வாசித் தான். மாநிலத்தில் முதலாவதாகத் தேறி வந்திருந்தவர்கள், இனிப்பு வழங்குகிற மாதிரி குடும்பப் படங்கள் வந்திருந் தன. பார்த்தும் பார்க்காமல் அவற்றைக் கடந்துபோய் விட்ட முருகேசனை ஒரு படம் சுண்டி இழுத்தது.

முழங்கைகக்குக் கீழே இல்லாமல்... மொட்டையாக இருந்த ரெண்டு குறை கையுடன் காட்சி தந்த மாணவர். ஒரு பாடத்தில், மாநிலத்தில் முதல் மாணவராக வந்திருந் தார். படத்துடன், விரிவான செய்தி. ஏனோ... இவனை வாரிச் சுருட்டியது.

ரெண்டு கையும் இல்லாமல் எப்படி? புத்தகத்தை விரிக்க முடியுமா? ஏதாவது ஒரு பக்கத்தில் விரல் வைத்து, புத்தகத்தை மூடிக்கொண்டு, பாராமல் ஒப்பிக்க முடியுமா?

தேவைப்பட்ட வேகத்தில், விரித்து வாசிக்க முடியுமா? இரவில் கண்விழித்து வாசிக்கிறபோது, எந்தக் கையால் சுவிட்சைப் போடுவது? எந்த விரலால் சுவிட்சை அணைப்பது? எப்படி? எப்படி? எப்படி? ஏகப்பட்ட எப்படிகள்!

நினைக்க நினைக்க முளைக்கிற கேள்விகள். கேள்வி களால் கிளறப்பட்ட நினைவுகளில், பிரமாண்டமாகிற பிரமிப்பு. வனமாக விரிந்து படர்கிற ஆச்சரியம்.

மூளியாகிப்போன மொட்டைக் கைகள். மூளியா காமல் முழுச் சூரியனாக தகதகக்கிற படிப்பு. மொத்த உலகமே அண்ணார்ந்து பார்க்கிற முழுமை.

ஏனோ தெரியவில்லை. முருகேசன் தனது இரண்டு கைகளையும் ஒரு சேரப் பார்த்தான். உள்ளங்கைகளை மூடி, விரித்துப் பார்த்துக் கொண்டான்.

முட்டைகளை எடுத்த கைகள். முயல்களை வேட்டையாடிய கைகள். கிளிகளை விரட்டிய கைகள். அணிலைக் குறி பார்த்து எறிந்த கைகள். மூளியாகாத

முழுமைக் கைகள். வலிமைக் கைகள். ஆனால், மூளி யாகிக் கிடக்கிற படிப்பு...

அவனுக்குள் இனம் புரியாத குழப்பத் திகைப்பு. நினைவு மயக்கம். மனச்சலனம். மனக்கிறக்கம். மாய மான ஒரு கலக்க நிலை. ஏதோ தனக்குள் நிகழ்வதை அவனே உணர முடிகிறது.

என்ன நடக்குது? என்ன ஆகிறோம்?

மறுநாளும் காட்டுக்குப் போனான். பறவைகளின் பறவையானான். வனவாசியாக சுதந்திரத்தை ரசித்தான்.

வகுப்பு தொடங்கிவிட்டது. 'மார்க்' பட்டியல் வாசித் தார், கணக்கு வாத்தியார். இவன்தான் கடைசி.

'பாசாகிவிட்டோமா?' அவனால் நம்பவே முடிய வில்லை.

"ஏலேய் முருகேசா... இங்க வாடா..."

"என்ன சார்...?"

"ஒரு பையனோட படிப்பை பாதியிலே அத்து விட்டுரக்கூடாதேங்கிற எரக்கத்துலே போட்ட மார்க்கும் சேர்ந்துதான் நீ 'பார்டர்'லே தப்பிக்குறே..."

"ம்..."

"எட்டாம் கிளாசிலேயாச்சும் படிப்புலே கவனத்தை வையுடா... படிப்பைப் பாதியிலே வுட்டுட்டு மம்பட்டி பிடிக்கிற உத்தியோகத்துக்குப் போயிடாதேடா...?"

"ஆட்டு...ஞ் சார்..."

அவனுக்குள் - கையில்லாத அந்த மாணவ சாதனை யாளர். அவரது வர்ணப்படம். முன்னங்கை இல்லாத

வெறுமையுடன் மூளியாகத் தொங்குகிற மொட்டைக் கைகள். ஒரு சிரிப்போடு ‘தினத்தந்தி’யில் தோற்றமளித்த அவரது முகம், சாதனை முகம்.

இவன் தனது முன்னங்கைகளை மீண்டும் பார்த்துக் கொண்டான். இப்போதெல்லாம்—

முருகேசன் முந்திமாதிரி அணிலையும், மைனா வையும், கிளிகளையும் தேடுவதில்லை. ரெட்டைச் சடைகளையும். ‘ரிப்பன்’களையும் நினைப்பதில்லை. பையன்களின் சட்டைகளில் மை அடிப்பதில்லை. மூளி யாகிப்போன பெஞ்சின் ‘லொடுக்கு’ச் சத்தத்தைக்கூட கவனிப்பதில்லை.

கவனம் முழுமையும் கரும்பலகையில். மூளியாகாத கவனம். முழுமையான கவனக் குவியல்.

இப்போது அரை பரீட்சை ‘ரிசல்’டை தலைமை ஆசிரியர் வாசித்தார். முருகேசனின் பட்டியலும் வாசிக்கப்பட்டது.

தமிழ்-63, கணிதம் 49, அறிவியல் 54, ஆங்கிலம் 43, சமூக அறிவியல் 67.

முருகேசனுக்குள் உல்லாசச் சிறகடிப்பு. கும்மாளம் தாங்காமல் விசிலடிக்கிற உள்மனசு. எந்தப் பாடத்துக்கும் அடியில் சிவப்புக்கோடு இல்லாதது எம்புட்டு அதிசயம்! எல்லாப் பாடங்களுக்கும் கீழே பச்சைக் கோடுகள்.

“ரைட்... போகலாம்” என்று விசில் ஊதுகிற கண்டக்டர். அவனது மாற்றமும், முன்னேற்றமும் எல்லாராலும் கவனிக்கப்பட்டன. கணக்கு வாத்தியார் பெருமிதம் ததும்ப இவனை வகுப்பிலேயே பாராட்டினார்.

“முருகேசனைப் பார்த்தா ரொம்ப சந்தோசமா இருக்கு. நான் ‘பாடத்துலே கவனத்தை வையுடா’ன்னு எட்டாங்கிளாசில் அவங்கிட்டே சொன்னேன். கற்பூரம் மாதிரி ‘கப்’புன்னு பத்திக்கிட்டான். கல்விச்சுடரா நிமிர்ந்து நிக்கிறான். முருகேசன் பெரிய இடத்துக்கு உயரணும். நம்ம பள்ளிக்கூடத்துக்குப் பெருமை சேர்க்கணும். சேர்ப்பான்.”

இவனுக்குள் சிறகு முளைத்த மாதிரி இருந்தது. வார்த்தைப் பூக்கள் உள்ளுக்குள் மென்மையாக விழுந்து, புதுமணம் பரப்பின.

‘காதல் கோட்டை’ அஜீத் மாதிரி ‘டை’ கட்டிய முழுக்கைச் சட்டையுடன் ஒரு பெரிய கம்பெனியின் நிர்வாக இயக்குநராக தானும்...

கனவுப் பறவைகள் சிறகடிக்கும் ஆகாயப் பரப்பாக அவனது மனசு.

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. விடிந்துவிட்டாலும் எழுந்திரிக்க மனசில்லாமல் படுத்துக்கிடக்கிற முரு கேசன். மார்கழி மாசத்துக் காலை, பனியைக் கசிய விட்டது. சமுக்காளத்தை இழுத்து மூடிக்கொண்டு படுத்துக் கிடந்தான். அரை உறக்க மயக்க நிலையில் அவன்.

உள் இழுக்கும் உறக்கம். வெளி இழுக்கும் பகல் கூச்சல்.

காலில் ஒரு குளிர்ச்சி. மென்மையான ஈரமனசின் பாச வருடலைப் போன்ற சிலிர்ப்பு. பாதிக் கண்ணைத் திறந்தான்.

தனது காலை வருடிக்கொண்டிருக்கிற அய்யாவின் கண்ணில் ஈரத்திரட்சி. கண்ணீர் கோர்த்திருக்கிற அடி

இமைகள். மெல்ல... ஒரு பூவைப்போலத் தடவிவிடுகிற அய்யாவின் உள்ளங்கை.

சிடுசிடு அய்யாவுக்குள் இப்படியோர் கனிவான அய்யாவா? இம்புட்டுப் பாச மிருதுவான அய்யாவா?

இவனுக்குள் உடைத்துக்கொண்டு கரைந்தோடுகிற உணர்ச்சிப் பிரவாகம். நெகிழ்ச்சியில், மழை ஈரத்து மண்ணாகக் குழைகிறான். கண்களை இறுக மூடிக் கொண்டு... இந்த உணர்வை மனசால் ரசித்தான்.

அன்றைக்குச் சாயங்காலம்.

வீட்டுப் பாடத்தை எழுதலாம் என்று பைக்கட்டைத் தூக்கப்போன முருகேசனை...

“ராசா-” என்று பாசமிருதுவோடு அழைக்கிற அய்யா. மனசின் ஆழத்திற்குள் பூக்களைச் சொரிகிற நெகிழ்வான குரல். அய்யாவின் குழைவான குரல்.

“என்னைய்யா...”

“பாடம் எழுதப்போறீயா?”

“ஆமாய்யா...”

“அய்யா சொல்லுறதை மதிச்சி, அக்கறை எடுத்து, நீ படிக்கிறதைப் பார்த்தா ரொம்ப சந்தோசமா இருக்கு!” அய்யா முகமெல்லாம் பூரிப்பு.

முருகேசன் மனசுக்குள், பெருமிதப்பட்டுக் கொள்ளுகிற கணக்கு வாத்தியாரின் குரல். கண் முன்னால் அய்யாவின் முகப் பூரிப்பு!

இவனுக்குள், அந்த மூளியான கைகள் இப்போது போதிமரமாய் நின்றன.

—‘ராணி’–28–1–2007

# 9 பால் பானை

**எ**ண்ணூறு ரூபாய்க்கு அந்தப் பொம்மறி ஆட்டை கிரையம் முடித்து, தரகனுக்குத் தரகு ரூபாயும், ஊருக்கு மகமை ரூபாயும் கொடுத்துவிட்டு... வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு வருகிறபோது—

செல்லக்காவுக்குள் ஏகப்பட்ட கனவுகளும், ஆசையும். ஆட்டின் அடிவயிற்றில் சீனிவெள்ளை, மிச்ச இடமெல்லாம் மினுமினுக்கிற கறுப்பு.

புது இடம் வந்தவுடன் பயத்தில் ஒன்றுக்கு இருந்து, புழுக்கைகளும் போட்டது. வீடெல்லாம் கோடு கிழித்து நெளிந்தோடுகிற மஞ்சள் மூத்திரவாசம்.

ஆடு அவளை வெறித்து வெறித்துப் பார்க்கிறது.

"ம் ம் ம் மே ம ய் ங் க்... ம்ம்ம்மேய்ங்க்க்..." அச்சத் திகைப்பில் அபலைத்தனமாகக் கதறுகிறது. சற்று நேரம் இடைவெளி விட்டுவிட்டு... அதே கதறல்கள்.

அகத்திக்கொழையை அதன் வாய்க்கருகில் காட்டினாள். ஈக்குப் பயந்து முகத்தை வெட்டுவதைப்போல, சட்டென திரும்பிக்கொண்டது. அப்புறம் என்ன நினைத்ததோ.. அந்தக் கொழையின் பசுமையை நுகர்ந்து பார்த்தது. அதன் நாசி நுனி விடைத்து விரிகிறது.

நுனிக்கொழுந்தை ஒரு கடிகடிக்கிறது. சட்டென வாசலைப் பார்த்து ஒரு கத்து கத்துகிறது. அதன் பழைய எஜமானியை எல்லாக் கணத்திலும் எதிர்பார்க்கிற ஆவல்.

வரமாட்டாள் என்ற யதார்த்தத்தின் மூர்த்தண்யத்தை நுகர்ந்து பார்த்த நினைப்பில், அகத்திக்கொழையின் மிச்ச நுனியைக் கடிக்கிறது.

இப்போது கத்தல் இல்லை. வாலை ஆட்டுகிறது. தழையை ஆசை ஆசையாகக் கடிக்கிறது. 'இதுதான் நமக்கு விதித்த இடம்' என்ற நிஜத்தைப் புரிந்துகொண்டு, ஒப்புக்கொண்ட மாதிரியான ஒரு முகபாவம். கயிற்றில் கட்டித் தொங்கவிடப்பட்ட கொழையை 'பர்ச், பர்ச்' சென்று கடிக்கிறது.

'தின்ன சோத்தை முழுங்குறதுக்குள்ளே நன்றி மறந்துட்டு பேசுறதெல்லாம்... மனுசக் கழுதையோட புத்தி. இந்த வாயில்லா ஜீவனுக்குத்தான் எம்புட்டு அறிவு... எம்புட்டுப் பாசம்...'

செல்லக்காவுக்குள் பிரமிப்பாக ஓடுகிற நினைவுகள். சிறிய குத்தண்டாவிலிருந்து பழைய கஞ்சித் தண்ணியை மறியின் முன்பு வைத்தாள்.

ரெண்டு சந்தேகப் பார்வை. அப்புறம், குனிந்து தண்ணிக்கு வெகு அருகில் முகத்தை வைத்து, வாயை வைக்காமல் நுகர்கிற அதன் மூச்சுக் காற்றில் அதிர்ந்து அலைவட்டம் எழுப்புகிற தண்ணி.

வாசம், மனசுக்கு ஒப்பியபிறகு, வாயை வைக்கிறது. அதிர்வலை வட்டம் பரவப் பரவ- வைத்த வாய் எடுக்காமல் தண்ணியை உறிஞ்சுகிறது. அதன் புளிப்பு வாசமும்,

பருக்கை ருசியும் அதுக்கு ரொம்பப் புடிச்சுப்போச்சு போலிருக்கு. நுனி வாலை மெல்ல ஆட்டிக்கொண்டு தண்ணி குடிக்கிறது. வாயில் சிக்கிய பருக்கைகளை மெல்லுவதற்காக நிமிர்கிறது. அதன் வாயோரத்து ரோமங்களிலிருந்து நீர் வடிகிறது. செல்லக்கா அதன் தாடையை மெல்ல உள்ளங்கையால் வருடுகிறாள். ரெட்டைக் குறுக்காக இருக்கிற அகலமுதுகை மெல்ல வருடுகிறாள்.

புதிய கையின் வெதுவெதுப்பான தொடு உணர்வு. அதற்கு சுகமாக இருக்கிறது என்பதன் அடையாளமாக அதன் உடலெங்கும் ஓடுகிற புல்லரிப்பின் சலன அலைகள். அதன் கண்கள் இவளை நோக்க... வால் நுனியாட்டத்தில் அதன் நட்பு மனசு.

"மொத ஈத்துலே ஒத்தைக்குட்டி போட்டு, கடைசி வரைக்கும் பால் குடுத்து வளர்த்துச்சு. இனம் பெருகுகிற நல்ல வம்சம். இப்பவும் சினை புடிச்சுருக்கு."

"ரெண்டாவது ஈத்துலே மூணு குட்டி போடும். ஆறு மாசம் வளர்த்தா... முழுக் கடாய்களாயிரும். வித் தாலும்... கணிசமா மொதல் (மூலதனம்) ஆகும். வளர்த் தாலும் வம்சம் தழைச்சு... செல்வம் கொழிக்கும்மா..."

ஆட்டுக்காரரும், தரகரும் மாறி மாறி கும்மியடித் தார்கள். வாய்நீளம் காட்டி வித்தை செய்தனர். இவளும் கிறங்கிப் போய் சாமியாடுகிறவளைப் போல கேட்டுக் கொண்டிருந்தாள். விடாமல், 'ம்' கொட்டினாள்.

தனது காது நுனிகளையும், நாசியையும் தடவிப் பார்த்துக்கொண்டாள், செல்லக்கா. பொடிசான குச்சி

சொருகப்பட்டிருந்தன. ஓட்டை அடைபட்டுவிடக் கூடாதே என்பதற்காகத்தான் இந்தக் குச்சிகள்.

குச்சிகளை உருவியெறிந்துவிட்டு, காலா காலத்தில் கம்மல்களையும் மூக்குத்தியையும் மாட்டணும். மாட்டிக் கொண்டு, முத்துலட்சுமி மூஞ்சி முன்னே கொண்டு போய்க் காட்டணும்.

செல்லக்காவுக்குள் வெப்ப அலையாக வெளியேறிய பெருமூச்சு. மனசுக்குள் அவமான அடிபட்டுக் கொதித்த மனசின் ரோஷாக்னி.

அந்த அவமானத்தை அம்புட்டு லேசுலே அயத்துர முடியுமா? நெஞ்சுலே தழும்பாகிப்போன ரணகாய மில்லியா? நாள்கணக்காக சீழ்ஒழுகிய மனக்காய மில்லையா?

**ரா**ஜபாளையத்தில் மலையடிப்பட்டியில் ஒரு கிரகப்பிரவேசம். இந்த ஊரிலிருந்து பஞ்சம் பிழைக்கப் போன முத்துக்காளைதான்... தத்திப்புத்தி... தடுமாறித் தத்தளித்து, வாழ்க்கையோடு கட்டிப்புரண்டு, கரையேறி, இப்பத்தான் ஒரு வீடு கட்டியிருக்கிறான்.

வந்து பத்திரிகை வைத்து, பாசத்துடன் கூப்பிட்டான். வீட்டடி வாங்கவும், பத்திரம் முடிக்கவும், வீடு கட்டவும் பட்ட பாடுகளையும், ரணங்களையும் சொல்லிச் சொல்லி ஆற்றிக்கொண்டான்.

இவளும், இவள் புருஷன் முருகனும் ‘ம்’ கொட்டினர்.

கேட்கக் கேட்க ஆச்சரியமாக இருந்தது. ஊர்விட்டு ஊர் போய்.. வீடு கட்டி வேர்விட்டு நிற்கிறதில் இருக்கிற

சிரமங்களையும், சோதனைகளையும் எண்ணியெண்ணி மாய்ந்தாள்.

“கட்டாயமா வந்துரணும். ரொம்ப ஆவலா உங்களை எதிர்பார்க்கறேன்.”

கொஞ்சிக் கெஞ்சி மருகினான் முத்துக்காளை.

முருகனும், “நீ போயிட்டு வா” என்று செல்லக் காவைச் சொன்னான், நாலு நாள் கழித்து.

“நா போகலே...”

“ஏன் ?”

“போகலேன்னா... போகலே...”

“அதான் கேக்கேன், ஏன் ?”

கோபத்தில் உயர்கிற முருகனின் குரல். உள்வலியை சகித்துக்கொள்கிறவளைப் போல, வேதனை துடிக்கிற கண்ணால் பார்த்தாள். அவளது மௌனம் சுமந்து நின்ற கனத்த சோகம்.

நோயில் விழுந்து எழுந்திருக்கிற புருஷன். அங்கு இங்கு என்று ஓடியலைய முடியாத உடல் பலவீனம். அவனது நோக்காட்டுக்காக தான் இழந்த இழப்புகள்.

‘அதைச் சொல்லிக் காட்டக்கூடாது. நோய்வாய்ப் பட்ட மனுசரை குத்திக்காட்டுகிறது பாவம். நம்ம கிரகசாரத்துக்கு யாரைக் குத்தம் சொல்ல ?’

நினைவோட்டத்துடன் முருகனைப் பார்க்கிற அவளது சோகத்திலும் ஒரு பரிவு. ஒரு பச்சதாபம்.

‘பாவம், நோக்காடு வந்த மனுசரு’ என்ற அனுதாபம். நெக்குருகிக் கரைகிற மனசின் ஈரம், கண்ணோரங்களில்

கசிகிறது. அந்த ஈரமின்னலை மனசால் பார்க்கிற முருகன்.

உயர்தொனியை தணித்து... குழைந்த கனிவுடன் கேட்டான். "ஏம்மா...?"

"ஒண்ணுமில்லே... நா போயிட்டு வாரேன்..."

"என்னமோ கோபமா ஒதறிப்பேசுனீயே... என்ன விஷயம்?"

"ம்ளச்சூ... வுடுங்க, அது கெடக்கட்டும்."

வருத்தப் பெருமூச்சுடன் எழுந்தவனை அண்ணாந்து பார்க்கிற முருகன். 'செல்லக்கா, அன்பிலும் உயர்ந்த மனுசிதான்.'

அன்றைக்கு விடியற்காலமே எழுந்து வீட்டு வேலை களையும் முடித்துவிட்டு, இவளும் சாப்பிட்டு, புருஷ னுக்கும் போட்டுக் கொடுத்துவிட்டு, எட்டேமுக்கால் பஸ்ஸுக்குப் புறப்பட்டுவிட்டாள்.

மலையடிப்பட்டி - ராஜபாளையம் பஸ் ஸ்டாண் டிலிருந்து ரொம்ப தூரம். நடையாய் நடந்து, ரெயில் தண்டவாளத்தையும் தாண்டிப் போகணும்.

கடாப்பெட்டியைக் குப்புறக் கவிழ்த்துவைத்த மாதிரி சிறிய வீடு. சின்னதாக இருந்தாலும், கச்சிதமாக இருந்தது.

'டவுன்லே சொந்த வீடுங்குறது பெரிய சாதனை யில்லியா...?' மகிழ்ச்சியில் வாழ்த்துகிற மனசு.

செல்லக்கா வீட்டைப் பார்த்தாள்.

செல்லக்கா வந்ததில் முத்துக்காளைக்கு ஏக மகிழ்ச்சி. "அக்கா... அக்கா... அக்கா" என்று உபசரித்துக் கொண்

டாடிக் கூத்தாடினான். மனைவியிடமும், சொந்தபந்தங்களிடமும் “அக்கா, அக்கா” என்று சொல்லிச் சொல்லிப் பூரித்தான். அவளது மனைவி முத்துலட்சுமியின் சிரிப்பில் உயிர்க்களை குறைந்திருந்தது.

மதியச்சோறு சாப்பிட்டு முடித்துவிட்டு, வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்ட செல்லக்கா, நூற்றியொன்று மொய் செய்தாள்.

அதை வாங்கமாட்டேன் என்று பிடிவாதம் பண்ணினான்.

“யக்கா... நீ வந்ததே போதும்க்கா... மனசெல்லாம் நெறைஞ்சு போச்சுக்கா... இது வேண்டவே வேண்டாம்க்கா.”

அவனது பிடிவாதமான மறுப்பை லட்சியம் பண்ணாமல், அவன் உள்ளங்கைக்குள் ரூபாயைத் திணித்தாள்.

“இல்லே, முத்துக்காளை, வேண்டாம்ங்குறது ஒன்னோட பெருந்தன்மை. குடுத்தாகணும்ங்குறது என்னோட தன்மானம். குடுக்கல் வாங்கல் நடந்தாத்தானே, உறவு தொடுத்துத் தொடரும்?”

ஏறக்குறைய எல்லா உறவினர்களும் விடை சொல்லிப் போய்விட்ட பின்பு, கடைசியாக இவள் புறப்பட்டாள். ஐந்து மணிக்குப் புறப்படுகிற பஸ்தான், ஊர் வரை போகும்.

இவளும் எல்லாரிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டவள், பாதித் தெரு கடந்தபிறகு செருப்பை மறந்துவிட்டது ஞாபகத்துக்கு வந்தது.

திரும்பிப் போனால்—

வீட்டுக்குள் பேசுகிற பேச்சில், செல்லக்கா பெயர் அடிபடவே... சற்றே நின்று நிதானித்தாள்.

"அக்கா... அக்கான்னு ஒரேயடியாகத் தாளிச்சுக் கொட்டுனீகளே... அதுக்கு அறிவுகிறிவு கெடையாதா?"

"ஏய்... முட்டாக்கழுதை, அவுகளை அப்படியெல் லாம் தரக்குறைவா பேசாதே. என்னத்துக்கு இப்படிக் கேக்கே?"

"அவுக ஒசத்தின்னு நீங்கதான் மெச்சிக்கணும். கொஞ்சமாச்சும் அறிவு இருந்தா இப்படி வருவாகளா? மானங்கெட்டவுக..."

"எப்படி வந்தாக?"

"காதுலே, மூக்குலே ஒண்ணுமில்லாம மூளியா வந்து நிக்கலே?"

"மச்சானுக்கு சீக்கு வந்துச்சு. காதுலே மூக்குலே கெடந்த தங்கச் சாமானை வித்துத்தான் உசுரைக் காப்பாத்துனாக."

"அப்ப இப்படிப்பட்ட எடத்துக்கு வராம இருக் கணும்."

"ஏன் வந்தா என்ன?"

"நாமே நொடிச்சு நொந்து கீழே கெடந்து... தத்திப்புத்தி மேலேறி இப்பத்தான் வீடு கட்டி இருக்கோம். கிரகப்பிர வேசம் நடக்கிற ஒரு மங்களகரமான எடத்துலே ஒண்ணு மில்லாத மூளியா வந்து நிக்கலாமா? அமங்கலமில்லே?"

"மங்களம்குறது மனசுலே இருக்கு. தங்க நகையிலே இல்லே" என்று ஏதோ பதிலைச் சொல்லி, சமாளிக்கிற முத்துக்காளை.

செல்லக்காவுக்கு ஒரு செருப்பை வாயில் கவ்வக் கொடுத்து, மறுசெருப்பால் 'சப், சப், சப்'பென்று அறைந்த மாதிரியிருந்தது. உயிரின் ஆணிவேர் வரை சுட்டுத் தகித்தது - முத்துலட்சுமியின் தீச்சொல்.

இந்நேரம் வரை முத்துக்காளை உபசார மகிழ்ச்சிப் பரபரப்பில் பால்பானையாகப் பொங்கித் ததும்பிப் போயிருந்த செல்லக்கா, இப்போது காலால் எட்டி உதைத்த பானையாக உருண்டாள்.

உயிர் அறுந்துபோன மாதிரி இருந்தது. நல்லவேளை- இவளது செருப்பு, முற்றத்தில் தனித்துக் கிடந்தன. மாட்டிக்கொண்டு அரவமில்லாமல் நகர்ந்துவிட்டாள்.

ஆனால், அவள் சொற்கள் தீயாய்த் தொட்டு, மனசைப் பற்றிய வார்த்தைகள். அவமானம் தாங்காமல் தவித்தாள். காயம் என்றால், அப்படியொரு காயம். உயிருள்ளவரை மறக்க முடியாமல்- ரணமெடுத்த காயம்.

**பொ**ம்மறியின் காது நுனியை மெல்லத் தொட்டு நசுக்குகிற செல்லக்கா. அவள் மனசுக்குள் குஞ்சு பொரிக்கிற கனவுப் பறவைகள். அவமான அடியாய் வந்த ரோஷாக்னியின் தகிப்பில் பொரிக்கிற குஞ்சுகள்.

தரகர் சொன்னமாதிரியே ஆடு சினை பிடித் திருந்தது. ஆறாவது மாதம், மூன்று குட்டிகள் போட்டது. ரெண்டு கிடாய்க் குட்டிகள். ஒரு பொம்மறி.

ஆறு மாதம் வளர்த்தாயிற்று. முழு கிடாய்களாகி விட்டன. இவள் பாசமும், ரோஷமுமான அக்கறை யினால் வந்த வளர்ச்சி. நல்ல சதைப்பிடிப்போடு... கொழுகொழுவென்று பருத்திருந்தன.

ஆட்டையும், குட்டிகளையும் விற்றால் ஆறாயிரத்துக்குப் போகும். கம்மல், மூக்குத்தி வாங்கி மாட்டணும். குச்சிகளை உருவியெறியணும். முத்துலட்சுமி முன்னால் போய் நிக்கணும்.

'பாரடி.... நானும் மானமுள்ள மனுசிதான்' என்று நெஞ்சு நிமிர்த்தி சொல்லணும். 'பாடுபட்டு, ஆடு வளர்த்து வாங்கிய மானமடி' என்று கம்பீரமாகச் சொல்லணும்.

மனச் சபதம் நிறைவேறப்போகிற நாள்கள், இதோ பக்கத்தில். ஆட்டு வியாபாரி நாளை மறுநாள் வருவதாகச் சொல்லியிருக்கிறார். பால்பானையாகப் பொங்கித் ததும்பிக்கொண்டிருக்கிற செல்லம்மா.

அதை எட்டி உதைத்து உருட்டுகிற மாதிரி ஒரு தகவல்.

முருகன்தான் வந்து சொன்னான்.

"வர்ற வைகாசி எட்டாந்தேதி நம்ம ஊர்ப் பொங்கலாம். சக்தி மாரியம்மா கோயில் திருவிழா."

"வர்ற எட்டாந் தேதியா?"

செல்லக்காவுக்குள் திணறல். மூச்சுமுட்டல்.

சபிக்கவும் முடியாது. சாமி காரியம். சந்தோஷப்படவும் முடியவில்லை. தவித்தாள்.

"ஆமா..." என்கிற முருகன்.

"ஊர் வரி எம்புட்டாம்?"

"வீட்டுக்கு ஐந்நூறு ரூபாயாம்."

"அப்ப ஊர் வரி ஐந்நூறு, வீடு வெள்ளையடிக்க ஐந்நூறு, பலகாரம் பச்சடி செய்ய ஐந்நூறு, புதுத்

துணிமணி எடுக்க ஆயிரம்... ஆக, 'அந்தா இந்தா'ன்னு மூவாயிரம் ஆயிருமோ நமக்கு?"

"ஆகும்."

செல்லக்காவுக்குள் மருகித் தவிக்கிற கனவுகள். ரோஷப்பட்ட மனசின் குமுறல். கம்மல், மூக்குத்தி சபதம்... கானல் நீர்தானா?

எல்லாமே சிக்கலாகிவிட்டது. ஆயினும்—

அந்த ஏழை மனசின் வீராப்பு, வாழ்க்கையோடு மோதி மல்லுக்கட்டுகிற போர்க்குணம். எந்தப் பிரளயத் தையும் எதிர்கொண்டு ஜெயிக்கிற மனிதத்தின் துளி.

அவளுள் ரோஷாக்னி.

"அப்ப, குட்டிகளை மட்டும் கிரயம் பேசி வித்துட்டு... ஊர்ப்பொங்கலைக் கொண்டாடுவோம். ஊர்லே எல்லாரும் கொண்டாடுறப்ப, நாம மட்டும் தெம் மாடியா? நாம மட்டும் எளைச்சவுகளா?"

"அப்ப... கம்மல், மூக்குத்தி?"

"ஆடு இருக்குல்லே? அடுத்த ஈத்துலே நாலு குட்டி போடும்லே? சக்தி மாரியம்மா பார்த்துக்குவா..."

"செல்லம்..." நெஞ்சு கலங்கிப்போன முருகனின் மனக்கண்ணீர்.

"என்னத்துக்குக் கலங்குதீக? நெஞ்சுலே நம்பிக்கை மட்டும் அவிஞ்சுபோகாம இருந்துச்சுன்னா... எல்லாத் துலேயும் நாம ஜெயிச்சிரலாம்..."

சக்தியின் உயிர்க்குரலாக செல்லக்காவின் வார்த் தைகள், மணிநாதமாகக் காற்றை நிரப்புகின்றன.

—ராணி, மே–2007

# 10 சந்தேக நோய்

"இந்தச் சனியன் புடிச்ச பேய்க் குடும்பத்துலே நா இருந்ததும், வாழ்ந்ததும் போதும். சீரழிஞ்சு சித்திரம் குலைஞ்சதும் போதும். என்னை அத்துவுட்டுருங்க. உங்களுக்குக் கோடி புண்ணியம்."

ரௌத்ரகாளியாக சினம் தெறிக்க - அனல் பறக்க- பேசினாலும், ஊரை வணங்கி நின்றாள் செங்காளி. சீலையெல்லாம் புழுதியும் தூசியும். ஜாக்கெட்டில் புதுக்கிழிசல். கிழிந்த இடத்தில் விரல் நகக் கோடுகள். முகமெல்லாம் அடிபட்ட தடிப்புகள். எண்ணெயில் லாமல் காய்ந்த தலைமுடி, பிடித்திழுத்து அலைக் கழித்ததில் சீர்குலைந்து கிடந்தது. சின்ன வயது. பெரிய துயரம்.

ஊர்மடத்தில் கூடியிருந்த சபை, திகைத்தது. சபையின் மௌனம், ஊர்மடம் முழுக்க கால் பரப்பி, கை மடக்கிப் படுத்திருந்தது. ஒரு பேச்சில்லை. ஒரு மூச்சில்லை. எள் விழுந்தால், சத்தம் கேட்கும். அப்படி யோர் இறுக்க மவுனம்.

கனலும் கண்ணீருமாகத் தலைவிரி கோலமாக நிற்கிற செங்காளி. அவளது கோப வெடிப்புக் கதறலில், நீண்ட நாள் துயரம் வெக்கையாகக் கொப்பளிக்கிறது.

ஊர் நாட்டாமையின் செருமல் சத்தம், மௌனத்தை உடைத்தது. அவரது கருத்த திரேகம் நிறைய வெள்ளி முடிகள். நரைத்த மீசை, காவி படிந்து கீழ்நோக்கி இறங்கியிருக்கிறது. சகிப்புத்தன்மையோடு ஒரு வலியைத் தாங்கிக் கொண்டிருப்பவரைப் போல முகத் தோற்றம். அந்தப் பெண்ணைப் பரிவுடன் பார்த்துவிட்டு, மாரிச் சாமி மேல் கடுப்புடன் கால் பதித்தது, அவரது கண்.

"என்னப்பா மாரிச்சாமி என்ன சொல்தே? ஒம் மருமக ஒங் குடும்பத்தையே பேய்க் குடும்பங்கிறா. ஒம் மகன் மட்டுமில்லே, நீயும் இதுக்குப் பதில் சொல் லணும்."

"கொழுத்த சிறுக்கி, அவ அடங்கி வாழமாட்டா. புருஷனைப் புருஷனாகவே மதிக்கமாட்டா. வாய்க்கு வாய் 'பொட்டைப் பய, பொட்டைப் பய'ன்னுதான் பேசுவா. ஆடாத ஆட்டம் ஆடி, எங்க குடும்பத்தைக் கெடுத்து, கீழ வீதியிலே நிறுத்திட்டா."

நாட்டாமை குறுக்கிட்டார்.

"புருஷன் பொஞ்சாதிக்குள்ளே சண்டை, சத்தம் வர்றது சகஜம். நீ பெரிய மனுசன். என்ன பண்ணியிருக் கணும்?"

"சொல்லுங்க."

"சத்தம் போட்டுக் கண்டிக்கணும். இல்லேன்னா... மருமகளை அவுக வூட்டுக்கு அனுப்பி வைக்கணும். அதை வுட்டுட்டு... எல்லாரும் ஒண்ணா கூடிக்கிட்டு ஆளும் பேருமா அந்தப் பொம்பளைப் புள்ளையை ராத்திரி பூரா 'சாத்து, சாத்து'ன்னு சாத்தி சித்ரவதை

பண்ணுனா என்ன ஞாயம்? ஊரா ஊட்டுப் புள்ளையை நீயும் கைநீட்டி அடிக்கலாமா?"

மாரிச்சாமி விடைக்கிறார். மேல் துண்டை மடித்துக் கொண்டு ஆட்டி ஆட்டிப் பேசுகிறார். "அவா, எங்க எல்லாரையும் நாறவசவு வைய்றா. வைஞ்ச வசவை, இங்க சொல்ல முடியாது. நா கூசுது."

"வைய்ஞ்சா...?"

"அடிக்கத்தான் செய்வோம். அதுலே என்ன தப்பு?"

"செங்காளி பொம்பளைப் போலீசுக்குப் போயிருந்தா உங்க கதி என்ன ஆகும் தெரியுமா? எல்லாம் ஜெயில்லே கெடப்பீக!"

"என்ன நீரு... அவா சைடிலேயே பேசுகிறீர்? அவா வெளியூர்க்காரி."

"நம்ம ஊரே தஞ்சம்னு வந்தவுகளை நாம காப் பாத்தணுமா, கதவைப் பூட்டிக்கிட்டு உள்ளே வைச்சு சாத்தணுமா?"

செங்காளி நாட்டாமையைப் பார்த்தாள். அசைகிற உதடுகள். முகத்தின் அசைவுகள். மீசை நுனி ரோமங் களின் சலனம். கறை விழுந்த பற்கள்.

'அத்துவுட்டுட்டாகன்னா... கடவுள் புண்ணியம். இந்தப் பெரியாளும்... நல்லாத்தான் பேசுறாரு. நமக்கு ஆதரவாகத்தான் வாதாடுறாரு!'

அவளுக்குள் ஓடுகிற நினைவுகள். தலைகவிழ்ந்து நிற்கிற புருஷனைப் பார்த்தாள். அவன் தாலி கட்டி னான். நிஜம். ஆனால், புருஷனா? மனுசனா?

கல்யாணமாகி வந்த முதல் நாள். செங்காளி ரொம்ப வாட்டமாய் இருந்தாள். கூப்பிட்ட குரலுக்கு, 'என்ன' என்று கேட்கமாட்டாள். எதையோ பறி கொடுத்தவளைப் போல வெறித்துப் பார்த்தாள். சின்ன முகம். வட்ட முகம். கறுப்புதான். லட்சணமான முக அமைப்பு. கண்ணில் ஒரு சோக மிதப்பு. சின்ன உதடுகளில் உலர்ந்த தன்மை.

சுற்றியிருக்கிற கிராமத்துப் பெண்கள்... புதுப் பெண்ணைப் பார்த்துப் பார்த்துச் சிரித்தனர். கேலியும் கிண்டலுமாய்ப் பேசிக் கும்மியடித்தனர். கல்யாணக் கும்மாளத்தின் நீட்சி.

"என்ன பொண்ணுக்குக் கல்யாணத்துலே இஷ்டமில்லியா? 'கம், கம்'னு இருக்காளே... முகம் வாடிப் போயிருக்காளே."

"பொறந்து, வெளையாண்டு, உருண்டு வளர்ந்த வீட்டை... உத்த உரியவுகளை... சொந்த ஊரை... சாதி சனத்தை வுட்டுட்டு வர்ற வாட்டம் இருக்காதா என்ன?"

அதையெல்லாம் கேட்ட செங்காளிக்குள் இருண்ட நினைவுகள். கருமை படிந்த எண்ணங்கள். ஆழம் காண முடியாத மன ஆழத்தின் மர்ம நிழல்கள். விதியின் கோணல் புத்தியில் கிழிபட்ட ரணம்.

அன்றைக்கு ராத்திரிதான்—

அது நிகழ்ந்தது. நடந்தது கல்யாணமல்ல, அவள் கருமாதி என்று புரிய வைக்கிற அதன் நிகழ்வு.

ஒட்டு வீட்டின் உள்ளறை. மஞ்சள் நிற வெளிச்சம் தருகிற குண்டு பல்ப். பாய் விரித்து, ஜமுக்காளம் விரித்து- இவள் உட்கார்ந்திருக்கிறாள். வருகிறான் பரமு. சந்தனக்

கலர் சட்டையைக் கழற்றுகிறான். சந்தனக் கலர் வேட்டியும், புதுப் பனியனுமாக நிற்கிற அவன் கண்ணில் ஒரு மிரட்சி. 'என்ன செய்ய... எங்க துவக்க' என்ற குழப்ப நிழல். மிரட்சியையும் குழப்பத்தையும் மறைக்கிற சவடால் சிரிப்பு. அறிமுகமாகாத உலகத்தின் இருட்டில் அவனது தடுமாற்றம்.

'திக் திக்'கென்று அவன் இதயம் அடிக்கிறது என்பதை உலர்ந்த உதடுகளின் அச்சம் சொல்கிறது. பேச முடியாமல்... பேந்தப் பேந்த முழித்த அவன்.

இவள்தான் பேச்சைத் துவக்கினாள்.

"உங்க ஐயாவுக்கு நீங்க எத்தனாவது?"

"மூணாவது."

"உங்களுக்கு மூத்ததுக அண்ணனா, அக்காளா?"

"அக்கா மூத்தவள். அண்ணன் ரெண்டாவது."

"உங்க அக்காளுக்குப் பொம்பளைப் புள்ளை இருக்குல்லே? ஏன் கட்டல்லே?"

"சும்மாதா..."

"குடுக்கமாட்டேனுட்டாகளா?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே."

அவனது மழுப்பல், 'அப்படித்தான்' என்ற உண்மையைக் காட்டிக் கொடுத்தது.

பேச்சை மட்டுமல்ல- எல்லாவற்றையுமே இவள்தான் ஆரம்பிக்க வேண்டியிருந்தது. தடுமாறித் தத்தளித்த அவனுக்கு ஒத்துழைக்கிற பாவனையிலேயே... கற்றுத் தந்தாள். வழி காட்டினாள்.

'ஏந் தலையெழுத்து' என்று அவலமாய், ஆழ்மனசில் சலிப்பு. கசப்பின் ருசி மின்னலாய் தொட்டு மறைகிறது.

வயதுக்குரிய உணர்ச்சி. வாழ்ந்து தீர்ந்தாக வேண்டிய விதியின் கட்டாயத்தை உணர்ந்த மனசின் சகிப்பு.

அவளுக்குள் அவன் விழுந்து கிடந்தான். அவளும் தான். அந்த மங்கலான வெளிச்சத்தில் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான். இன்பக் கிறுகிறுப்பை மீறிய மெல்லிய வெறுப்புணர்வு.

பார்வையில் ஒரு முள். குத்துவதற்காக நீண்ட ரண முள்.

"காரியத்துலே கைதேர்ந்தவதான். பழகுன அனுபவமா?"

ஆழ்மனசு வரை அதிர்ந்துபோன செங்காளி. சட்டென்று சமாளித்தாள்.

"ச்சேச்சே..." என்று சொன்ன செங்காளி, எதிர்த் தாக்குதலாக ஓர் அம்பை விட்டாகணும். சும்மா விட்டால், ஒப்புக்கொண்ட மாதிரியாகிவிடும் என்று பபரபரத்தாள்.

"நீருதான் அரைப் பொட்டையாயிருந்தீரு" என்றாள் செங்காளி.

முகம் கருத்துப் போனான். அவமானம் தாளாமல் சிறுத்துப் போனான். தோல்வியையும் அவமானத்தையும் விழுங்கிவிட்டு- ஆம்பளை என்கிற அதிகாரத்தை உணர்ந் தான். 'அது ஓர் ஆயுதமல்லவா' என்று அவனது அடி மனசு சொன்னது. இடுப்பைச் சுற்றி எழுபத்தெட்டு அரிவாள்களைத் தரித்துக்கொண்டது. மௌனத்தின்

இறுக்கத்துக்குள் ஒரு ரணகளம் அரும்பிக்கொண்டே... பொழுது விடிந்தது. அன்றைக்கு ஆரம்பித்த வினை.

பொழுது முழுக்க சண்டை சத்தம். நெட்டி முறிப்பு. வசவுக் கங்குகள். வீடு முழுக்க அனல் வெக்கை. கனல் பெருக்கு.

கடைக்குப் போய்விட்டு வருவாள் செங்காளி.

“சாமான் ரொம்பத் தெரியுதே...” மாமியார்க்காரி கேட்பாள்.

“எட்டே முக்கா ரூவா பாக்கி வைச்சுட்டு வந்தேன்.”

“முக்காத்துட்டு கடன் தரமாட்டாரே, கடைக்கார நாடாரு.”

“சொன்னேன். சரின்னுட்டாரு...”

பரமு குறுக்கே விழுந்தான்.

“தொட்டுத் தடவி சரசம் பண்ணுனா... யாரும் ‘சரி”ன்னுதான் சொல்லுவாக.”

அரிவாள் வெட்டு ‘ணங்க்’கென்று விழுந்து, ‘சதக்’கென்று மனசை வெட்டும். மனசின் குருதி, வார்த்தைகளாக வழியும்.

கண்ணீரும், விசும்பலுமாக அவள் மூலையில் உட்கார்ந்து புலம்புவாள்.

“கொழுப்பெடுத்த சிறுக்கி- அழுது, அழுது வீட்டையே இழவு வீடாக்கவா? சாகசக்காரி.”

“என்னைப் பேசுனா- அந்த நாக்கு அழுகிப் போகும்.”

“கண்ணகி...! சபிச்சிட்டா... பலிச்சிருமாக்கும்?”

ஆவேசமாக காலை ஓங்கி மிதிப்பான். 'நளுக், நளுக்'கென்று மிதிப்பான். வலி தாளாமல் கதறுவாள். "ஐயோ... ஐயய்யோ ஆத்தா... என்னைக் கொல்லுதானே... பொட்டைப் பய..."

"பொட்டைப் பயலா...? நானா? நீதான் ஊர் மேய்ற சிறுக்கி. கொழுப்பெடுத்த ராங்கிக்காரி."

ஓங்கிய நிலையில், ஆங்காரமாய்ப் பாய்ந்து வருகிற காலைப் பிடித்து வாரிவிட்டாள். மட்டமல்லாக்க விழுந்தான், நடுவீட்டில்.

"ஐயய்யோ... பாதகத்தி... எம்புள்ளையைப் போட்டு கொல்லுதீயே... நீ வெளங்குவீயா?"

மாமியார்க்காரி விளக்குமாற்றுடன் பாய்ந்து வந்தாள். வீடே ரணகளம்தான். இப்படித்தான் மாசத்துக்கு ஏழெட்டுத் தடவையாச்சும் நடக்கும், இந்தக் கூத்து.

நல்ல சீலை உடுத்த முடியாது. "எந்தப் புருஷனைப் பார்க்க?" தலைக்கு எண்ணெய் தேய்த்து இழுத்துக்கட்ட முடியாது. "எவனை வளைக்க?" வாசல்படியில் உட்கார முடியாது. "தெருவுலே போறவனுக்கு தூண்டில் போடவா?" குப்பைக்கூடையுடன் குப்பை மேட்டுக்குப் போய்விட்டுத் திரும்பிவர, சற்றுத் தாமதமானால் போதும். "எவன்கூட பேசிக்கிட்டிருந்தே?"

சந்தேகம்... சந்தேகம்... சந்தேகம்... அவளைச் சுற்றிலும் சந்தேக வேலிகள். அப்படியே ரெண்டு வருஷம். ரணகள வருஷம்.

சண்டைச் சத்தம். அடிபிடி. கோபித்துக்கொண்டு ஊர் போக. பஞ்சாயத்து பண்ணிக் கூட்டி வருவது.

மறுபடியும் சண்டைக்காடு. வசவு. ஆங்காரப் பேச்சு. ஒரே கூவல்காடு வீடு முழுக்க. நாளும் பொழுதும் நரகத் தினங்களாக...

இன்றைக்குத்தான்—

சண்டை ரொம்ப முற்றிவிட்டது. வாய்ச் சண்டை பெருகி... அடிதடியாகி... ஆங்காரக் கொந்தளிப்பில் மறுபடியும் அவள் திட்ட, வீடே கூடிக்கொண்டு விடிய விடியப் போட்டு அடிக்க.. சித்திரவதை தாங்க முடியாத நிலையில்—

செங்காளி முடிவுக்கே வந்துவிட்டாள்.

"அத்து வுட்டுருங்க என்னை" என்று ஒற்றைக்காலில் பிடிவாதமாக நின்றாள். அவள் சேலை கிழிந்து, ஜாக்கெட் கிழிந்து, தலை கலைந்து... புரட்டிப் புரட்டி எடுத்ததில் தூசியும் துப்பட்டையுமான திரேகத்துடன் பரிதாபகரமாக நிற்கிற அலங்கோலம்.

"என்னம்மா. சொல்தே?" நாட்டாமையின் தாட்டிய மான குரல், மன உலகத்திலிருந்து இழுத்து வெளியே போட்டது, அவளை.

நிஜ உலகம். பெண்ணை பொம்மையாக நினைக்கிற உலகம். பொம்மையாக இருக்க மறுத்தால், உடைக்கிற மிருக உலகம். அசுர உலகம்.

"என்ன கேக்கீக?"

"இவனைப் பொட்டைப் பயன்னு சொன்னீயா?"

"தாறுமாறா என்னைப் போட்டு அடிக்கிறப்ப.. அடி தாங்காம சொல்லியிருக்கேன்."

“அடிச்சா... ‘ஐயோ’ன்னு அழுகலாம். ‘அம்மா’ன்னு அழுகலாம். ‘பொட்டை’ன்னு வையலாமா?”

“வாய்க்கு வாய் என்னை ‘தேவுடியாச் சிறுக்கி’ன்னு சொல்லுதாரே... நின்னா சந்தேகம், போனா சந்தேகம்னு எந்நேரமும் சந்தேகப்பட்டுப் பேசிப் பேசி... என்னை வையலாமா?”

“அந்தமாதிரியா... வைதான்?”

“ஆமா. தன்னை ஆம்பளைன்னு நம்புற மனுசன், கட்டுன பொண்டாட்டியைச் சந்தேகப்பட மாட்டான். இவரு சந்தேகப்படுதாரு. அப்ப... இவரு பொட்டை தானே?”

நாட்டாமை மீசை தொங்கிக் கிடந்தது. முகம் கறுத்துச் சிறுத்துப் போயிற்று. ஆண் குலத்தையே அவமானப் படுத்திவிட்ட மாதிரியோர் சுருக்கிடல் இவருக்கு.

‘பொட்டைக் கழுதைக்கு இம்புட்டுத் திமரா? வாய்க் கொழுப்புலே ரொம்பத்தான் சேட்டை பண்றா. இவா செட்டை(சிறகு)யை ஒடிச்சு வைச்சாத்தான், அடங்குவா.’

அவருக்குள் இருண்ட நினைவுகள். மனசின் கரிய நிழல். ஆணாதிக்க மனசின் அதிகாரத்துவ சிந்தனைகள்.

“பொண்ணுங்கன்னா அடக்க ஒடுக்கமா இருக் கணும். வாயடக்கம் கையடக்கமாயிருக்கணும். அப்பத் தான்... வீட்லே அமைதி இருக்கும். சகிச்சுப்போற பொம்பளை இருந்தாத்தான், சந்தோஷத்துலே வீடு இருக்கும். இதெல்லாம்... நீ புரிஞ்சுக்கணும்.”

*நாட்டாமை இவளைப் பார்த்துப் பேசினார். இவளைப் பார்த்து மட்டுமே பேசினார். இவளையே குறி வைத்து, வார்த்தைப் பாணங்கள்.*

*அப்படீன்னா... மாரிச்சாமியை நாட்டாமை அரட்டுனது, மிரட்டுனது சும்மாவா? அதட்டுனதும், எகிறுனதும் ஏமாத்தா? மாய்மாலமா? பெண்ணை அடக்கி வைக்கிற ஆண்களின் சதியா?*

*செங்காளி சினத்துடன் நாட்டாமையை எதிர்த்துப் பார்த்தாள். கண்ணகியின் பார்வை. தெளிவடைந்த மனசின் துணிவான பார்வை.*

*தாலியைக் கழற்றினாள், ஆங்காரமாக. நாட்டாமை காலடியில் வீசியெறிந்தாள். மொத்த ஊரையே வெறித்துப் பார்த்தாள். பரமுவைப் பார்த்து காறித் துப்பினாள். வெறிகொண்ட பத்ரகாளியாக... அவள்.*

*"இந்த ஊர்லே... உங்க சபையிலே எனக்கு ஞாயம் கிடைக்காது. நானே என்னைத் தீர்ந்துக் (விவாகரத்து) குறேன். இந்த வீடும் வேண்டாம், இழவெடுத்த குடும்பமும் வேண்டாம்- நா எம் பாதையிலே போறேன்-"*

*நெட்டை மரங்களென நின்ற மனிதர்கள், செய்வதறியாது திகைக்க... நாட்டாமை அவமானத்தில் குன்றிக் கூச- விட்டு விடுதலையான வீராங்கனையாக நடையை எட்டிப் போட்டாள் செங்காளி, தனது ஊரை நோக்கி.*

–ஓம்சக்தி, ஜூலை–2007

# 11 ஒரு சிறு துளி

ஆயாசமாக இருக்கிறது, அண்ணாமலைக்கு. இன்னதென்று புரிபடாத மனச்சோர்வு அவரைப் போட்டு அமுக்குகிறது. செயலற்றுக் கிடப்பதற்கே விரும்புகிற மனமயக்கம். செயலற்றிருப்பது சரிதானா என்ற குற்ற உணர்ச்சி எப்போதோ ஒரு கணத்தில் உறுத்தும். மன ஆழ்மூலையில் உறுத்துகிற அந்த உணர்வையும், நோயின் உபாதைகள் மென்று விழுங்கிவிடும்.

வயது ஐம்பத்தைந்து. மரணத்தின் கண்ணடிப்பில் திகிலுற்று நடுக்குறுகிற ஆழ்மனசின் துவளல். கிலி நிறைந்த நினைவுகளின் மொய்ப்பு. முகத்தில் அச்ச ரேகைகள். வாடிக் கறுத்த கொடிபோல முகவாட்டம்.

வலது மார்புக்கு அடியில் சுருக்கிடுகிற வலி. விலா எலும்பின் அடி நுனி, புண்ணாகிக் கிடக்கிற உள் சதையில் அழுத்துகிற மாதிரியோர் ரணம். மூச்சை இழுக்கிற போதெல்லாம் வலி. வலது கையை அசைத்தால்… கிழிபடுகிற ஜவ்வின் வலி. மெல்ல அசைந்தாலும் வலியில் நடுங்கி அதிர்கிறது.

மூச்சு இழுக்கவே சிரமப்படுகிற இது ஆபத்தல்லவா! சட்டென்று மூச்சு ஸ்தம்பித்துவிட்டால்– என்ன ஆவது?

“அனாவசியமாக பயந்து சாகிறோமோ…” என்றொரு மெல்லிய நினைவு. உடம்பு நிஜம். மார்பு நிஜம்.

திணறலும், வலியும் நிஜம்... உபாதை நிஜம். பயப்பட வேண்டியவற்றுக்கு பயப்படாமலிருப்பதுவும் மூடத்தன மல்லவா!

நாற்காலியில் உட்கார்ந்திருக்கிற அண்ணாமலை, காலை நீட்டி, உடம்பை சரித்திருந்தார். கைகளை மடித்து புறந்தலையை தாங்கிக் கொண்டார். ஏறக்குறைய ஈஸிச்சேரில் படுத்திருக்கிற மாதிரியே நாற்காலியில் துவண்டு கிடக்கிறார், நனைந்து கிழிந்த துண்டுத் துணி போல...

சோம்பல் படிந்த நினைவுகளும் நொண்டித் தவளை யாக ஊர்ந்தன.

அப்போது அண்ணாமலைக்கு முப்பது வயசிருக்கும். ஒரு கூட்டத்தில் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்துவதற் காக பெங்களூர் வந்திருந்த தருணம்.

நிரஞ்சனா எழுதிய 'நினைவுகள் அழிவதில்லை' என்ற நாவல், அப்போது தமிழ்நாட்டில் ஏகப் பிரபல்யம். கன்னடத்தில் எழுதப்பட்டு தமிழுக்கு வந்திருந்தது. நாவலின் களமோ, கேரளம். சுதந்திரப் போராட்ட காலத்துக்குப் பிந்தைய கம்யூனிஸ்ட்களைப் பற்றிய உணர்ச்சிமிகு நாவல்.

முற்போக்காளர்கள் தேடித் தேடி விரட்டி விரட்டி வாசித்தனர். ரொம்பப் பேசப்பட்டது. தோழர்கள் சந்தித்துக் கொண்டால்– "நினைவுகள் அழிவதில்லை வாசிச்சாச்சா?" என்பதுதான் முதல் விசாரிப்பாக இருக்கும்.

அந்த நாவலை எழுதிய நிரஞ்சனா இங்குதான் இருப்பதாக அறிந்த அண்ணாமலை, 'செம்மலருக்காக' ஒரு பேட்டி வாங்கிச் செல்லலாமே என்ற ஆசை.

புகழ்மிக்க பாசத்துக்குரிய படைப்பாளியைப் பார்த்துப் பழகுகிற பரவசம். செம்மலர் இதழுக்கு ஒரு மேட்டர் சேகரித்த மாதிரியும் இருக்குமே...

'ஆடு மேய்த்த மாதிரியுமாச்சு... அண்ணனுக்குப் பொண்ணு பார்த்த மாதிரியுமாச்சு' என்ற சொலவடை ஞாபகத்தில் உரசியது.

மறுநாள். காலை பத்துமணி. வீட்டு முகப்பில் 'கதா' என்ற பெயர் பொறிப்பு. உள்ளே போனால்...

அந்த நாவலாசிரியர். எழுபதுக்கும் மேல் வயது. கதர் ஜிப்பா முழங்கால் வரை. பக்கவாதம் பாதித்த திரேகம். உடம்பின் பாதி செயலற்றுப் போன நிலையிலும், தொடர்ந்து செயல்படுகிற அவரது மன வைராக்கியம். நாலு சக்கரங்கள் மாட்டிய நாற்காலியின் முதுகை ஒரு கையால் பற்றி.. செயல்படாத திரேகப் பகுதியையும் சேர்த்திழுத்து உலவுகிற மன உறுதி. மேஜையில் பேடு. சொருகப்பட்ட காகிதக் கற்றை. தெளிவான துல்லியத்தில் எழுதப்பட்ட கன்னட வாக்கியங்கள்.

பிரமிப்பு விலகாத மயக்க நிலையிலும் கேள்வி கேட்ட அண்ணாமலை. "என்ன இது?"

"புதிய நாவல்."

"இந்த உடல் நிலையிலுமா?"

"மனசுக்கு பக்கவாதம் வரல்லியே..."

"உடம்பை விடவும், மனசு நிஜமா?"

"மனுசனாக அடையாளப்படுத்துற உடம்புக்குத்தான் நோய், முதுமை, சாவு எல்லாம். நிரஞ்சனாவாக அர்த்தப்

படுகிற என்னோட மனசுக்கு நோய், முதுமை எல்லாம் கிடையாது."

"உடம்பைவிட மனசு நிரந்தரமா?"

"பட்ட அனுபவங்களைப் பற்றி சிந்திச்சு செயல்படுற மனசுதான், கருத்துகளையும்... படைப்புகளையும் உண் டாக்குது. கருத்தும் படைப்பும் சத்தியமாயிருந்தா... சாஸ்வதம்தான்."

பிரம்மதரிசன மௌனத்தில் அலமலர்ந்து கிடந்த அண்ணாமலையைப் பார்த்து சிரித்த அவர்...

"மார்க்ஸ் இறந்ததை... ஏங்கல்ஸ் இப்படி வார்த்தைப் படுத்துனாரு... 'மார்க்ஸ் சிந்திப்பதை நிறுத்திவிட்டார்' என்று. ஏன்னா... மார்க்ஸோட சிந்தனையிலேதான் மார்க்ஸ் இருக்கார்."

பக்தி நிலையில் பரவசமாக இருந்த அந்த மயக்க தருணத்திலும்... 'இவர் பேசுறது, கருத்து முதல்வாதம்' என்று விடலைத்தனமாக சிந்தித்ததை...

அண்ணாமலை இப்போதும் நினைத்துச் சிரித்துக் கொள்கிறார். 'அது... அந்த வயசோட துடுக்குத்தனம்' என்று சோம்பலாகவும், சோர்வாகவும் நினைத்துக் கொள்கிற அண்ணாமலை.

'ஏன்... இந்த நெனைப்பு இப்ப வந்துச்சு? செயல், செயல், செயல்... என்று தன்னை வெளிப்படுத்திக் கொள்கிற முனைப்பில் - உடம்பின் நோயை எதிர்க்கிற போர்க் குணத்தில் - தீவிர உச்சமாக இயங்கிய அவரை ஏன் இப்ப நெனைக்கேன்? சோம்பிச்சுருண்டு கிடக்கிற என்னை நானே விமரிசித்துக் கொள்றதுக்கா?'

அவருள் நீள்கிற யோசனைகள்.

ஏதோ ஒரு முடிவுடன் தலையை அசைத்துக் கொள் கிறார். என்னோட நோய், என்னன்னே தெரியலே. “என்ன ஆகுமோ ஏது ஆகுமோ”ன்னு திகிலாயிருக்கு. பயத்துலே நனைஞ்சு நடுங்குற மனசுலே, தைர்யத் தீ எப்படி சுடர் விடும்?

நடுச்சுவரில் வந்து கிடக்கிற கடிதங்கள். ஒரு மாத மாக வந்த கடிதங்கள். அவ்வப்போது வெளிவந்து, மறுபதிப்புக் கண்ட சிறுகதைத் தொகுப்புகளை வாசித்த மனநிலையில் எழுதப்பட்ட பாராட்டுக் கடிதங்கள். விமர்சனக் கடிதங்கள்.

எல்லாக் கடிதங்களிலும் “ஏன்- சமீபமாக அதிகமாக எழுதுவதில்லை” என்ற அர்த்தத்திலான வாக்கியம் இருக்கும்.

பதில் எழுதக்கூட இயலாத அளவுக்கு ஆயாசம். பாராட்டுக்கள் மனசுக்குள் பூக்களைச் சொரிகின்றன. எப்போதோ... பத்து வருஷங்களுக்கு முன்பு எழுதிய சிறுகதையையும் இப்போது ஒருவர் பாராட்டி எழுதுகிற போது, மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. பெருமிதமாகத் தான் இருக்கிறது.

ஆயினும்—

பேனாவைப் பார்த்தாலே மலைப்பாறை மாதிரி கனக்கிறது. தூக்கினால், ஆளைப் போட்டு அமுக்கி விடுமோ என்ற பய நடுக்கம்.

உடம்பையே உற்றுப் பார்க்கிற மனசு. உடம்புக் குள்ளேயே ஒவ்வொரு அங்குலமாக ஆய்ந்து பயணம்

செய்கிற நினைவு. நோயின் உபாதை குறித்த முனகல். நோயின் உபாதை குறித்தே நினைவுகள். உள்ள உபாதை வளர்ந்துகொண்டே போவதாக ஒரு பிரமை.

வீடு பார்க்காமல் வெளி பார்க்காமல் - உலகம் நோக்காமல் - பிறர் வலிகள் பற்றி நினைக்காமல்... எந்நேரமும் நோய்க்குள்ளேயே நோண்டிக்கொண்டிருக்கிற மனசு. புண்ணுள்ள குரங்கு போல, நோயையே சொறிந்து சொறிந்து... நோய் குறித்த கற்பனையாலேயே கரைந்து... மனசு துவண்டு... சோர்ந்து...

என்னத்தை எழுதி- என்ன செய்ய? இருக்கிற புகழை வைச்சிக்கிட்டு நாக்கு வழிக்கவா?

பேரு பெத்த பேரு. தாகத்துக்கு நீலு லேது என்ற தெலுங்குச் சொலவடைதான், நம்ம பொழைப்பு.

கதை என்று உட்கார்ந்து எழுதி, மூணு நாலு மாதம் இருக்கும். கதைகள் மனசுக்குள்ளே நிறைய கிடக்கின்றன. எழுதுகிற ஆர்வம் இல்லை. வெளிப்படுத்துகிற வெறி இல்லை.

‘இப்படி ஒரு நோயிலே வந்து மாட்டிக் கிட்டோமோ’ என்ற கவலை. ‘எனக்கு மட்டும் ஏனிப்படி நோய் வந்து சேர்ந்தது’ என்ற கோணத் தலையெழுத்து பற்றிய மனப்புலம்பல். சிணுங்கி சிணுங்கி அழுகிற நினைவுகள்.

ஐம்பத்தைந்து ஒரு வயதா? ஒரு முதுமையா? இந்த வயதிலேயே “அசைந்தால் அடி நெஞ்சில் வலி” என்று வந்து விடிந்தால்... என்ன செய்ய?

அண்ணாமலைக்குள் அயற்சியூட்டுகிற சோம்பல் நினைவுகள். சலிப்பும் துயரமுமான எண்ண மொய்ப்பு.

ரெண்டு மாசமா... இந்த வலி. ஹோமியோபதி டாக்டர் மூணு தடவை மாத்திரை மாற்றி மாற்றிக் கொடுத்தார். அவர் சொன்னபடி வாயைக் கட்ட முடியலே. கண்டதையும் தின்னு வயித்தைக் கெடுத்தாச்சு. மாத்திரையையும் நாம் பாட்டுக்கு என்னோட இஷ்டத்துக்கு சாப்பிட்டு... ஓவர் டோஸாகி... உள்ள நோய் ஓவராகி...

பதறியடிச்சு போன் பண்ணினா... டாக்டர் திருச்சியிலே இருக்காரு. என்ன செய்ய? ஆத்திர அவசரத்துக்கு பக்கத்து டவுன் அலோபதி டாக்டர்கிட்டே போனா...

இன்ன நோய்ன்னு கண்டுபிடிக்க மாட்டாம, அவரு தட்டழிஞ்சாரு. எக்ஸ்ரே, நீர் டெஸ்ட், ரத்த டெஸ்ட் என்று ஏகப்பட்ட டெஸ்ட்கள். ஊசி. மாத்திரைகள். ஒரே நாளில் முந்நூறு காலி. மாத்திரைகளைச் சாப்பிட சாப்பிட... சைடு எபெக்ட். இருக்குற நோய் குறையாமலேயே, புது நோயும் வந்து சேர்ந்துச்சு. வயித்தாலே போக ஆரம்பிச்சு...

நல்லவேளை... அதுக்குள்ளே வந்து சேர்ந்த ஹோமியோபதி டாக்டர். இந்த நாலைஞ்சு நாளா அவர் குடுத்த பொட்டலங்கள்தான், வலி குறைஞ்சு வருது; சுத்தமாகலை.

அண்ணாமலைக்கு ஹோமியோபதி மீது கூடுதல் நம்பிக்கை. செலவில்லாத வைத்திய முறை, தப்பு வராத வைத்திய முறை என்ற நம்பிக்கை. ஆற்றல் மிக்க வைத்திய முறை என்றும் நம்பிக்கை.

குருட்டு நம்பிக்கையோ அசட்டு நம்பிக்கையோ அல்ல. அனுபவ ரீதியான அறிவார்ந்த நம்பிக்கை.

இதே ஊரில் பாக்கியசாமி என்று ஒரு பெரியவர். அவருக்கு கல்லீரல் புற்றுநோய். ஸ்கேனில் கண்டுபிடித்து விட்ட அலோபதி டாக்டர்... நைஸாகப் பேசி அனுப்பி விட்டார். 'ஜோலி முடிஞ்ச மாதிரிதான்' என்று சொல்லாமல் உணர்த்தி... கை கழுவிட்டார். ஹோமியோபதி டாக்டர், அவரது கல்லீரல் புற்றுநோயை முற்றிலுமாக குணப்படுத்திவிட்டார். இதோ... அந்தப் பெரியவர் கல்லுப் பிள்ளையார் மாதிரி தெம்பாக உட்கார்ந்திருக்கிறார்.

அதே அலோபதி டாக்டர் மறுபடி ஸ்கேன் பண்ணிப் பார்த்து, மறைந்து போன கேன்ஸரை கண்ணால் கண்டு வாயாற வியந்தது, தனிக் கதை.

தொலைபேசி சிணுங்கி சிணுங்கி அலறுகிறது. அண்ணாமலைக்கு எழுந்து போக பயம். எழ முயன்றாலே... வலது பக்க மார்பெலும்புக்கு அடியில் வலி. உயிர் அந்து போகும்.

மூச்சு பிடித்து.. 'தத்தக்கா, புத்தக்கா' என்று தடுமாறி... சுவரைப் பிடித்து நிமிர்ந்து, எழுந்து, நகர்ந்து... போனை எடுத்தால்...

ஒரு பத்திரிகையின் ஆசிரியர்.

சிறுகதை கேட்கிறார். ஒரு வாரத்திற்குள் வேண்டுமாம். கௌரவமான இதழ்தான். எழுதினால் நல்லதுதான். முடியணுமே...

"ஒடம்புக்கு முடியலே.. நானே தத்தளிச்சு தடுமாறிப் போய்க் கெடக்கேன்..."

"ட்ரீட்மெண்ட் எடுக்கலியா?"

"எடுத்துக்கிட்டிருக்கேன்..."

"கதை அனுப்ப முடியுமா?"

"ஒடம்பு சரியாயிருச்சுன்னா... எழுதியனுப்புறேன்." ரிஸீவரை வைக்கிறபோதே- அண்ணாமலைக்குள் ஓடுகிற நினைவு. 'ஆத்தாடி, அம்மாடின்னு காத்தாடிப்போய் கெடக்கையிலே... கதைக்கு எங்க போறது?'

சலிப்பும் சோர்வுமான எதிர்மறைச் சிந்தனை. சாத்தியமேயில்லை. எழுதவே முடியாது. கதை அனுப்ப முடியாது. இங்கு... கதையே கந்தலாகிக் கிடக்குதே...

மறுபடியும் நாற்காலியில் வந்து உட்கார்ந்த அண்ணா மலை. குனிந்தால்... அல்லை (விலா எலும்பு)யில் வலி. நாற்காலியில் கையூன்றி அமரப் போகிறபோது... மேல் வயிற்றுக் குடல்கள் முழுவதும் முறுக்கிப் பிழிகிற மாதிரி வலி. யாரோ ஒரு ராட்சஸக் கரம் கவ்விப் பிடித்து இழுக்கிற மாதிரியோர் பிசைவு.

அங்குலம் அங்குலமாக உட்கார்வதற்குள் குத்திச் சரிக்கிற வேதனையில், ஒரு யுகத்தையே சுமந்த மாதிரி யோர் அயற்சி. 'எழுதுறவனை எழுத விடாம... எனக்கு மட்டும் ஏனிப்பிடி நோய்ப் பிடுங்கல்? சிலந்தி வலை பின்னப்பட்ட மூலைக்குள் சிக்கிய அந்துப்பூச்சி மாதிரி, நா."

நோய் பிடித்த சவளையான நினைவுச் சலிப்பு.

கண்ணை மூடுகிற அண்ணாமலை. கண்ணுக்குள் வர்ண ரேகைகளின் மொய்ப்பு.

தெருவில் பரபரப்பு. ஏதோ நடந்து விட்டதுபோல, வேக வேகமாக விரைகிற பாதங்கள்.

'என்னாச்சோ- ஏதாச்சோ' என்ற பதைப்பும், வருத்தப் புலம்பல்களுமாய் 'தக், தக்தக்'கென்று நடக்கிற கிராமத்துப் பெண்கள். ஓடுகிற டவுஷர்கள், பாவாடைகள்.

அண்ணாமலை மெல்லத் துணுக்குற்றார். தன்னையே சுமக்க முடியாமல், தனக்குள் தானாக முடங்கிக் கிடந்த அவரின் நெஞ்சில் ஒரு மெல்லிய திடுக்கிடல்.

தத்தித் தடுமாறி எழுந்தார். வலிக்கிற இடத்தில் வலது கையால் அமுக்கித் தாங்கிக்கொண்டு எழ முயன்று... கண்ணைக் கட்டிக்கொண்டு வருகிற மாதிரி யான ஒரு மயக்கம்.

வெளியே வந்தார்.

"என்னம்மா...?"

"தெரியலே. சுப்புத் தாய் வீட்லே ஒரே அழுகையும், கதறலுமாயிருக்கு."

"ஏதும் பிரச்சினையா?"

"என்னமோ தெரியலே. போனாத்தான் தெரியும். சுப்புத்தாய் மகளுக்கு வாந்தியும், காய்ச்சலும், வவுத்து வலியுமா இருந்துச்சு. என்னாச்சோ?"

அவள் போய்விட்டாள். அவரைக் கடந்துகொண்டு சிறுசுகள், பொடுசுகள்- கிழடுகள்- கிராமத்துப் பெண்கள்.

அண்ணாமலையும் நிமிரமுடியாத நிலையில், குன்னப் பிடிக்கிற அல்லையின் வலியோடு சற்றே குனிந்த நிலையில் மெல்ல நடந்தார். நடக்க நடக்க வலது நெஞ்சுக்கடியில் கவ்விப் பிடிக்கிற 'சுருக்' வலி.

அவரையும் தொற்றிக் கொண்ட ஊர்ப் பரபரப்பு. துயரப்பட்ட மனிதருக்காக ஊரே பதறிப் பதைத்துப் புலம்புகிற கிராமத்து மனித நேயம், அவருள்ளும்.

சின்னக்கூரை வீடு சுப்புத்தாயிக்கு. அவள் வீட்டு முற்றத்தில் நெருக்கியடித்துக் கொண்டு கிராமத்து ஜனம்.

“ஐயோ பாதரவே... இப்படியுமா ஒரு மனுஷிக்கு தும்பம் வரணும்?”

“அன்னாடம் ஒழைச்சுக் கஞ்சி குடிக்குற கூலிக் காரிக்கு இப்படியொரு நோய் வந்து சேரணுமா? கூத்துவனுக்கும் கண்ணு இல்லே.”

“ரெண்டு நாள்லே ஆபரேஷன் பண்ணலேன்னா... குடல்வால்வ் வெடிச்சு... பொண்ணு செத்துருமாமே...?”

“ஆபரேஷன்னா- சும்மாவா? பானஞ்சாயிரத்துக்குக் கொறையாம வேணும்?”

“அம்புட்டு ரூவாக்கு சுப்புத்தாய் எங்க போவா? யாரு நம்பிக் குடுப்பா? குடுத்தாலும்... திருப்பிச் செலுத்த முடியுமா, இந்தக் கூலிக்காரியாலே?”

பதற்றப் பதைப்பும், கண்ணீர் சிதறலுமாய் மனித நேய ஈரக்குரலில் ஜனங்கள் பேசிக் கதறுகின்றனர்.

அண்ணாமலைக்குப் புரிகிறது, நிலவரம்.

முற்றத்தில் நைந்து கிழிந்த காகிதமாகக் கிடக்கிற தாவணிப் பெண். வாந்தியிலும் காய்ச்சலிலும் அறுத்துப் போட்ட கொடியென வாடிக் கிடந்தாள். வலி தாளாமல் குன்னிக் குறுகித் துடித்தாள். அடிவயிற்றைக் கையால் அமுக்கி... கதறினாள்.

"ஐயய்யோ... யம்மா..."

பக்கத்தில் தலைவிரி கோலமாக சுப்புத்தாய். தலையிலும் மார்பிலும் 'மடேர், மடேரெ'ன்று அடித்துக் கொண்டு அழுது புலம்புகிறாள்.

"எம்புள்ளையைப் பெத்து வளர்த்தது... ஏங்கண்ணு முன்னாலே சாகக் குடுத்து பாக்கவா? அட ஆண்டவா, ஒனக்கும் கண்ணத்துப் போச்சா? தாலியத்த சிறுக்கி.. நாதியத்த பொட்டச்சி... ஏதுமத்த வெறுங்கழுதை... என்னை நம்பி யாரு குடுப்பா, இம்புட்டுப் பணம்? எம்புள்ளே, எங்கண்ணு முன்னாலே, குடல் வெடிச்சுச் சாகுறதைப் பாத்துக்கிட்டு- நா உசுரு வைச்சிருக்கணுமா?"

அவளது கண்ணீரும் கதறலும் அண்ணாமலை மனசை அறுக்கிறது. பணமில்லாமல் நோயில் வளர்ந்த மகளை சாகக் குடுப்பது... சாதாரணக் கொடுமையா? மனசையே நடுங்க வைக்கிற அவலமல்லவா!

அவளும் செத்து.. இவளும் அரளிக் கொட்டையில் உயிரை மாய்த்துக் கொண்டால்...?

பகீரிடுகிற இவரது மனசு. உள்மனசின் தவிப்பு. பிரவகிக்கிற இரக்கத்தினால் பரிதவிக்கிறார்.

"யம்மா... சுப்புத்தாய்..."

கூட்டத்தைப் பிளந்துகொண்டு உள் நுழைந்தார். இவரைஅண்ணாந்து பார்க்கிற சுப்புத்தாய்.

"ஓம் மகா... சாகப்போறா. நீயும் சாகப்போற. சரி. ரெண்டுபேரும் வாழ்றதுக்கு ஒரு வழி இருக்கு. செய்றீயா?"

"சொல்லுங்க... சாமி..."

"மாசம் முப்பது ரூவாதான், மருந்துச் செலவு. ஒன்னாலே முடியுமா?"

"முடியும்யா..."

"மினி பஸ்ஸைப் பிடிச்சு... கோவில்பட்டிக்குப் போ. ஹோமியோபதி டாக்டர் பன்னீர்செல்வம்கிட்டே மகளைக் காட்டு. குடல்வால்வ் பிரச்சனையை ஏற்கெனவே குணமாக்கியிருக்காரு..."

"ஆபரேஷன் இல்லாமலா?"

"ம்..."

நெருக்கிக் கொண்டிருந்த ஓர் இளவட்டம் இடக்காகக் கேட்டான்.

"ஆற அமரத்தானே அந்த மருந்து வேலை செய்யும்? ஆத்திர அவசரத்துக்கு ஒத்து வருமா?"

அண்ணாமலை அவனைக் கடுப்புடன் பார்த்தார்.

"விவாதிக்கிற நேரமல்ல... செயல்பட வேண்டிய தருணம்" அவருக்குள் ஒரு சாட்டைச் சுழற்சி.

சுப்புத் தாயிடம் சொன்னார்.

"நிமிசத்துலே வேலை செய்ற மருந்தும் உண்டு. நீ போறதுன்னா... கூட்டிட்டுப் போறதுக்கு வழியைப் பாரு. நானும் போன் பண்ணிச் சொல்லிருதேன்."

மரண விளிம்பில் மகளை வைத்துக்கொண்டு, கையறு நிலையில் கதியற்றுக் கதறிக்கொண்டிருந்த சுப்புத் தாயின் கண்ணில் சின்ன ஒளித்துளி.

*அவளுக்குள் தொற்றுகிற துரிதம்.*

*அண்ணாமலையும் வீட்டுக்குத் திரும்பினார், அவசர மாக. போன் பண்ணனுமே...*

*பல சமுத்திரங்களாக பொங்கிப் புரளுகிற உலகத் துயரத்தில், தனது வலி ஒரு சிறு துளிதான் என்றெல் லாம் நினைக்காமல்.. நடையை எட்டிப் போட்டார்.*

*மனசின் ஆழத்தில் சுட்ட சுப்புத் தாயின் கண்ணீரை விசாரித்து ஒரு கதை எழுதலாமே என்ற எண்ணம்... மெல்ல முளைத்தது.*

# 12 அமாவாசை

அந்த நாளை மறந்துட முடியாது ராக்கம்மாவி னால். கனத்த அமாவாசை. தெரு வெறிச்சோடிக் கிடக் கிறது. எல்லாரும் காடுகரைக்குப் போய்விட்டனர். சின்னஞ்சிறிசுகள் பள்ளிக்கூடத்தில்.

இவளும் நாராயண நாயக்கரு புஞ்சைக்கு மிளகாய்ப் பழம் பொறுக்க வாரேன் என்றிருந்தாள்.

என்னமோ தெரியவில்லை. இவளுக்கு விடிஞ்ச திலிருந்தே மனசு சரியில்லை. வேலைக்குப் போக இஷ்ட மில்லை. வீடு தேடிப் போய் நின்றாள்.

"சாமி... நா வேலைக்கு வரல்லே..."

"ஏன்... ராக்கு? ஒன்னை நம்பித்தானே வேற ஆள் கூப்புடாம இருக்கேன்...?"

"இல்லே சாமி.. ஒடம்புக்கே சீரில்லே. ஆசுபத்திரிக்குப் போகணும்..."

"நோவுன்னு சொல்றப்ப, என்ன செய்ய? சரி நீ போ..."

"நாளைக்குக் கட்டாயமா வாரேஞ்சாமி..."

"ம்...ம்...ம்..."

தப்பித்து வந்துவிட்டாள் ராக்கம்மா. வீடு வந்து சேர்ந்தாள். என்னமோ போலிருந்தது. உடம்பே 'திகு

திகு' வென்றிருந்தது. நெட்டி முறித்தாள். மாராப்புச் சீலை நழுவிச் சரிந்தது. பதறாமலிருந்தாள். ஆவி பதற... ஓடி எடுக்கவில்லை. என்னமோ ஒரு நோக்காடு. மன நமைச்சல்.

"ஒடம்புக்கே சீரில்லே" என்று சொன்னது சரிதான். சீரில்லைதான். உடம்பு மட்டுமல்ல, மனசும் சேர்ந்து தான்.

ரெண்டு மகள்களும் பள்ளிக்கூடம் போயிருக் கிறார்கள். பொழுதுக்கால் உயர வந்துவிட்டது. பத்துமணி இருக்குமா? சும்மாவே படுத்துக் கிடந்தாள். வாய்த் துணைக்கு ஒரு நாதியில்லை. வாசல்படியில் தலை வைத்துப் படுத்திருந்தாள். கண்ணசந்த நேரமெல்லாம் 'கசாமுசா'வென்று கனாக்கள். தப்புதப்பான கனா. நாலைந்து வருஷத்துக்கு முந்தி எவளுடனோ ஓடிப் போன புருஷன், நோண்டுகிற மாதிரி கனா. பக்கத்தில் வந்து படுத்து... இவளைப் பிடித்து இறுக்கி அணைக்கிற மாதிரி. துணிமணியை விலக்கி... இவளைப் பாடாய்ப் படுத்தற மாதிரி.

கண் விழித்துப் பார்த்தால்... வெறிச்சோடிய தெரு. குப்பென்று வந்து மனசை அப்புகிற தனிமைச் சூன்யம். உள்ளுக்குள் மோதி நிறைகிற வெறுமை உணர்ச்சி.

அலைபாய்கிற மனசையும் உடம்பையும் விலகி நின்று நினைத்துப் பார்க்கிறாள். அவளே அவளை காறித் துப்பிக் கொள்கிறாள். திட்டிக் கொள்கிறாள். லகான் போட்டு வசக்கிக் கொள்கிறாள். 'ஒழுங்கா இரு' என்று லகானைச் சுண்டுகிறாள்.

கண்ணை மூடினால்... மறுபடியும் அந்தப் பாவிப் பயல். கன்னங்கரேலென்று கருத்த கட்டை.

"யம்மா... யம்மா... யம்மா..."

கண் விழித்தாள். ஆறாப்பு படிக்கிற மூத்தவள்.

"என்னடி...? ஒண்ணுக்கு வுட்டாச்சா?"

"ம்..."

"பதினொரு மணியாயிருச்சா?"

"ம்... என்னமாச்சும் தீம்பண்டம் இருக்கா?"

"இல்லேம்மா..."

"துட்டு...?"

"இல்லேமா... மதியம் வா. அம்மா ஒனக்கு என்ன மாச்சும் வாங்கி வைக்கேன்... என்ன கண்ணு?"

"ஆட்டும்-" உயிரில்லாத குரலின் வாட்டம். ஏமாற்றத் தால் அறைபட்ட மனசின் தளர்வு.

வீட்டுக்குள் புகுந்து வெறும் தண்ணீரைக் குடித்து விட்டுப் போகிற மகளைப் பார்க்கப் பார்க்க... இவளுக்குள் குலை கொதித்தது. 'பாதகத்தி... இதை நெனைக்காம இருந்துட்டேனே...'

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். ஆட்டுக்கும் கிடாய்களுக்கும் கயிற்றில் கொழையைக் கட்டித் தொங்க விட்டாள். துவைக்காத ஊர்த்துணி மூட்டை கிடந்தது. துவைத்துக் காயப்போட்டு எடுத்த துணிப் பொட் டலமும் கிடந்தது. இனம் பார்த்துக் கொடுக்கணும்.

முந்தி மாதிரி இல்லை. ஏதோ பேருக்குத் தொழில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆடு குட்டி வளர்ப்பதிலும்...

காடு கரைகளில்கூட கூலி வேலை பார்ப்பதிலும்தான் வயிற்றுப் பாடு கழிகிறது.

கதவைச் சாத்திய அவளுள் ஒரு சோகப் பெருமூச்சு. வெயில் சிற்றெறும்புப் படையாக ஊர்ந்து வந்தது. சுள்ளென்று அடிக்கிறது. கடைக்கு வந்தாள்.

"என்ன ராக்கம்மா... கடைப்பாக்கி முந்தாநாளே தாரேன்னு சொன்னீயே... தரல்லியா?"

"முடியலேய்யா... நாளைக்குத் தாரேன். இன்னிக்கு சரக்கு குடுங்க..."

"இல்லேம்மா... கடன் குடுத்து ஏவாரம் செய்றது கட்டுப்படியாகலே. குடுத்த கடன் வரமாட்டேங்குது. எதை வைச்சு சரக்கு வாங்க?"

கடைக்காரரின் மறுப்பில் அதிர்ந்து போனாள். சாயங்காலம் புள்ளைகளுக்கு காப்பி போட்டுத் தரணுமே- தின்பண்டம் வாங்கித் தரணுமே- சோறு காய்ச்சி, குழம்பு வெச்ச, வட்டில்லே போடணுமே...

தாய் மனத் தவிப்புடன் கடைக்காரரைக் கெஞ்சலாகப் பார்த்தாள். மருகிக் குழைந்து மன்றாடினாள்.

"அந்தப் பேச்சே வேண்டாம்மா- போதும் போதும்... கடன் குடுத்ததும், ஏவாரம் வித்ததும். துட்டு இருந்தா கேளு. இல்லேன்னா... ஆளை வுடு..."

வெறும் கையுடன் திரும்புகிற ராக்கம்மாவுக்குள் அவமானத் தகிப்பு. புள்ளைகளுக்கு எப்படிச் சோறு போட? இன்னைய பொழுதை எப்படிக் கழிக்க? அதுக மூஞ்சியிலே எப்படி முழிக்க?

மனசை அறுத்துக் கொண்டோடுகிற நினைவு களுக்கு மத்தியில்... புருஷனின் முகம். அற்பச் சிறுக்கி ஒருத்தியுடன் இவளை வாழாவெட்டியாகத் தெருவில் நாதியற்ற சிறுக்கி போல அலையவிட்டு விட்டுப் போனவன்...

முட்டிக்கொண்டு வருகிற அழுகையை தன்மானத் துடன் அடக்கிக் கொண்டாள். கண்ணுக்குள் நெருஞ்சி முள்ளாக வந்து உறுத்துகிற மனக்கண்ணீர். அதன் தகிப்பு.

"ஏய் ராக்கு..."

யாரோ கூப்பிடுகிற சத்தம். சுப்புக்கண்ணு நாடார் வீட்டம்மாதான் கூப்பிடுகிறது.

"என்னம்மா...?"

"ஒரு ஒத்தாசை செய்யணுமே... செய்றீயா?"

"சொல்லுங்கம்மா."

"சின்னஞ்சிறிசுக துணிமணி, சுடிதார்க, சமுக்காளம், என்னோட சேலைன்னு ஒரு முப்பது உருப்படிக கெடக்கு. இன்னிக்குச் சாயங்காலமே வேணும். வெளுத்துத் தாரீயா? ரொம்ப அர்ஜண்டு."

"திடுதிப்புன்னு இப்ப சொல்லுதீகளே... எப்படிம்மா முடியும்?"

"சோப்பும் தர்றேன். சாயங்காலமே முழுச் சம்பளமும் தந்துருதேன்- மாட்டேன்னு சொல்லாம- மகராசி செய்ஞ்சு தரணும்."

கெஞ்சி மருகுகிற அந்த அம்மாவின் முகம். 'முழுச் சம்பளம்' என்ற சொல், இவளது உயிரைச் சுண்டியதிர வைக்கிறது. பிள்ளைகள் முகங்கள்...

'ஒரு வாசலை சாத்துன கூத்துவன், இன்னொரு கதவைத் தெறந்துவிடுதாரு... 'கப்பு'ன்னு புடிச்சுக்கோ...'

"சரிம்மா... உருப்படிகளை எண்ணிக் குடுங்க..."

முப்பத்தாறு உருப்படிகள். பழைய சமுக்காளத்தில் பொட்டலமாகக் கட்டினாள். சோப்புக் கட்டியையும் உள்ளே திணித்தாள்.

"அப்ப... ஆத்துக்குப் போய்ட்டு வாரேம்மா..."

"சாயங்காலம் கட்டாயமா வேணும்..."

"உங்க உருப்படிக மட்டும்தானே? கல்கிடங்குத் தண்ணியிலே தொவைச்சு காயப்போட்டு... மடிச்சு... கொண்ணாந்துருதேன்..."

"இரு ராக்கு- கொஞ்சம் பழைய கஞ்சியும்,துவையலும் இருக்கு. குடிச்சுட்டுப் போ..."

இவளுக்குள் மனசு குளிர்ந்தது. சிறுபிள்ளை மனசு போல வெள்ளையாக சிரித்தாள். பூப்போல சிரிப்பு.

கஞ்சியில் கை வைத்த ராக்கம்மா மனசுக்குள் வந்து போன பெண் பிள்ளைகள். பிள்ளைகளின் முகங்கள்.

"பள்ளிக்கூடத்துலே சத்துணவு சாப்பிட்டுக்கிடுவாக-"

அவளுக்கு அவளே சொல்கிற சமாதானம். உண்டு முடித்தாள். வயிறும் மனசும் நிறைந்தது. ஒரு தெம்பு

வந்திருந்தது. வாழ்க்கையோடு கட்டிப்புரண்டு மல்லுக் கட்டலாம் என்கிற தைர்யம் வந்திருந்தது.

தலையில் பொட்டணத்துடன் வெயிலில் இறங்கினாள். தெருவில் நடந்தாள். ஊருக்குக் கிழக்கில்தான் கல்கிடங்கு. கல்குவாரி இருந்த இடம். மழைத் தண்ணீர் சமுத்திரமாகத் தேங்கிக் கிடக்கும். கருங்கல் பாறைகள். துவைத்துக் காயப் போட்டு, கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தால் போதும்- தும்பைப் பூவாய் உலர்ந்து துணிகள் பளிச்சிடும்.

கற்கிடங்குக்குள் இறங்கினாள். ஏகப்பட்ட ஆழம். செதில் செதிலாக இருக்கிற கருங்கல்லைப் படிகளாக மிதித்து இறங்கி... துணிமணிகளை நனைத்து ஊற வைத்துவிட்டு... மேடேறினாள்.

ஆடு குட்டிகளை நினைத்தாள். அதுவும் பிள்ளைகள் மாதிரிதானே? ஆற்றுக்குள் இறங்கி... காட்டுப் புல்லை கையாலேயே பற்றி பற்றி இழுத்தாள். கற்றை கற்றையாகப் புல். பச்சைப் பசேலென்ற புல். அத்துடன் சவுண்டல் மரத்தில் கைக்கெட்டும் கொழைகளைக் கொப்பு கொப்பாக ஒடித்தாள்.

குடித்த கஞ்சி, உயிர் தந்தது. உயிருக்கும் உரம் தந்தது. ஓடி உழைக்கிற மனசு தந்தது. ஒரு கட்டு சேர்ந்தது. ரெண்டு கையாலும் கூட்டிப் பிடித்து அள்ளிக்கொண்டு வந்து, ஒரு மஞ்சணத்தி மரத்து நிழலில் போட்டாள்.

கற்கிடங்குக்குள் இறங்கினாள். பரம்பரைத் தொழில். உறக்கத்திலும் செய்கிற தொழில். கையும் மனசும் ஒன்றுபட்டு இயங்க... பரபரவென்று வெளுக்க...

ஈரத்துணிகளை மேலே கொண்டு வந்து– பாறையில் விரித்துப் போட்டாள். சிறுசிறு கற்களை அதன்மேல் போட்டு வைத்தாள். காற்று தூக்காமலிருக்க வேண்டுமே.

"ஸ்ஸ்ஸ்– யப்பாடா ஜோலி முடிஞ்சது. துணி காய்ற வரைக்கும் காத்திருந்தாப் போதும்... முழுச் சம்பளம். சோறு தண்ணி... புள்ளைகளுக்குக் கூடுதலாக ரெண்டு மூணு தீம்பண்டங்கள் வாங்கித் தரலாம்."

தாய்மையில் குழைந்த மனசின் நெகிழ்வுகள். வேலி மரத்தில் படர்ந்திருந்த கோவைக் கொடியை அறுத்தாள். அதை கயிறாகக் கீழே விரித்து... புல்லையும் கொழை யையும் அள்ளிப் போட்டுக் கட்டினாள்.

வெயில் தீயாகக் காய்ந்தது. கன்னமேடுகளிலும் தோள் பட்டையிலும், திகுதிகுவென எரிந்தது. கண்ணைச் சுருக்கிக்கொண்டு உச்சிவானம் பார்த்தாள்.

அலசிக் காயப்போட்ட துணியாகக் கிடந்தது ஆகாயம். உச்சியிலிருந்து மேற்கில் சரிந்துவிட்ட பொழுது. சுட்டெரிக்கிற வெயில்.

காந்தல் தாங்க மாட்டாமல்... அப்படியே கிடங்குத் தண்ணீருக்குள் இறங்கினாள். பாவாடையை நெஞ்சு மறைய கட்டிக்கொண்டு உடுத்தியிருந்த சேலையையும் ஜாக்கெட்டையும் துவைத்தாள். முங்கிக் குளித்தாள்.

வெதுவெதுப்பான நீரின் தழுவல், ஏனோ புருஷனை நினைவுபடுத்தியது. அவனது மூர்க்கத்தை, மூச்சின் உஷ்ணத்தை, தேக வியர்வை வாசத்தை...

அவளுக்குள் அவன். அவளை அள்ளிக்கொண்டு, தன்னை வழங்குகிற அவன். அமாவாசை இருட்டான சுறுப்பு ராட்சசன். விட்டோடிப் போனவன்.

நீரைவிட்டு எழுகிறபோது மனசுக்குள் தாக்குகிற ஒரு சூன்யம். தனிமைத் தகிப்பு. ஏக்கப் பெருமூச்சு. மேடேறினாள் ராக்கு...

உடுத்தியிருந்த சேலையைப் பாறையில் விரித்து காயப் போட்டுவிட்டு ஈரச்சட்டையும் பாவாடையுமாக வெயிலில் நின்றாள். காய்கிற துணிகளை சரி பார்த்தாள். அடிக்கிற வெயிலைப் பார்த்தாள். காற்றில்லாமல் அசை வற்றிருக்கிற வேலி மரங்களைப் பார்த்தாள்.

அங்கே...

ஆட்டுக்காரக் கோவிந்தன். இவளையே குர்ர்ர் ரென்று பார்க்கிறான். இமை தட்டாமல் மோகத்துடன் பார்க்கிறான். புல்கட்டுக்குப் பக்கத்தில் மஞ்சணத்தி மரநிழலில் நிற்கிறான்.

அவனும் அமாவாசைக் கறுப்புதான். முறுக்கான இளவட்டம்.

"இங்க வா..." மெல்ல கையை ஆட்டுகிறான்.

"ச்சீ... நாயே" என்பதுபோல கோபமாக முறைத்து, முகத்தை வெட்டுகிற ராக்கம்மா...

அவன் மீண்டும் மீண்டும் கையசைக்க...

இவள் மறுத்து மறுத்து தலையசைக்க...

இந்தப் பக்கமாக திரும்பி நின்றுகொண்டாள், மறுப்பின் அடையாளமாக. வெறுப்பின் அடையாளம்.

அவளுக்குள் ஏதோ பிரளயம். மனச்சலனம். கனாவில் வந்த புருஷன்... கட்டித் தழுவிய புருஷன். அமாவாசை நாளின் கடலலையாக தத்தளிக்கிற திரேக மனசு. கனத்த அமாவாசை நாளின் உக்கிரம்.

அவள் தோள்பட்டையில், சுவாசச் சூடு. திரும்பினால்—

அவன். அப்படியே அவளை அலாக்காகத் தூக்கி... பூப்பந்து போல கொண்டு போகிறான், நிழல் மறைவுக்கு. அவள் மறுக்கிறாள். உயிரில்லாத மறுப்பு. திமிறுகிறாள். அரை மனசான திமிறல்.

துணிமணிகளை வெளுக்க வந்த இடத்தில்... உடம்பு அழுக்காகிவிட்டது, ஆசை தீர.

**அ**ந்த நாளை மறக்க முடியாமல் அடிவயிற்றில் ஒரு முள். ராக்கம்மா ஒரு நிலையில் இல்லை. நிம்மதியற்று தவித்தாள். அவளுக்கே அவள்மேல் கோபம் கோபமாக வந்தது.

"ஐயோ... புத்தியை கடன் குடுத்துட்டேனே... மனசு போன தெசையிலே போய்... குழியிலே விழுந்துட்டேனே..."

உள்ளுக்குள் மறுகிப் புலம்பினாள். அவளே அவளை காறித் துப்பிக் கொண்டாள். தன்னைத்தானே அருவருத்தாள். அசூயைப்பட்டாள். மலத்தை மிதித்துவிட்டவளைப் போல உள் மனசின் ஆணிவேர் வரை கூசினாள்.

அடுத்த இருபத்தைந்தாவது நாள்.

மாதவிலக்காகவில்லை. ராக்கம்மாவுக்குள் நறுக்கிட்டது. திகைத்தாள். தடுமாறித் தத்தளித்தாள். வேற ஏதாச்சும் காரணமாக இருக்குமோ? மேலும் ஒரு மாதமாயிற்று. சோறு தங்கவில்லை. வாந்தியெடுத்தாள்.

“ஐயோ... நான் என்ன செய்வேன்? வெளியே தெரிஞ்சா... கேவலமே. ஊரு சிரிச்சிருமே. காறித் துப்பிருமே. ‘அடக் கொழுப்பெடுத்த சிறுக்கி...’ன்னு சாதிசனம் சபிக்குமே. நாறவசவு வைவாகளே...”

மனசுலே தவித்துக் கிடந்தாள். ராவும் பகலுமாகப் புலம்பிக் கிடந்தாள். ‘என்ன செய்ய, ஏது செய்ய’ என்று புரியாமல் அழுது கிடந்தாள்.

‘அரளிக் கொட்டையை அரைச்சுக் குடிச்சி- மாண்டு மடிஞ்சிருவமா?’

தகப்பனைப் பறிகொடுத்த ரெண்டு பச்சை மண்ணுகள். இதுகளை தவிக்க வுட்டுட்டு சாகவா? நாதியத்துப் போய் இதுக சீரழியவா?

அவளுக்குள் பகீரிடல். பதறிப் பதைத்தாள்.

யார் யாரோ வயதான பெண்கள், கிழடு கட்டைகளுடன் எப்போதோ பேசிக்கொண்டிருந்தபோது காதில் விழுந்த தகவல்—

“பழுத்து முற்றிக் காய்ந்த பீர்க்கையின் விதைகளை அரைத்துக் குடித்தால்... நாலுமாசக் கருவைக்கூடக் கரைச்சுடும். அடித்து இழுத்துக்கொண்டு வந்துவிடும். ரத்தம் ரத்தமாய் போயிரும்.”

ரத்தம் ரத்தமாய்ப் போயிற்று. ஆனால் நிற்கவில்லை. நிறுத்த வழி தெரியவில்லை. அவள் பிள்ளைகள்- பச்சை மண்ணுகள்... கதறுகிற சிறுமிகள்.

“ம்மா... யம்மா...”

துவள்கிற அவளை அமாவாசை இருட்டாக மரணம் சூழ்ந்துகொண்டது.

ராக்குவின் சாவுக்கும் தனக்கும் சம்பந்தமிருப்பதை கோவிந்தனின் உள்மனம் மட்டுமே அறிந்திருக்கிறது. குற்ற உணர்ச்சியின் கனத்தில் அலை பாய்ந்தான்.

அந்த உள்மனம் இப்போது முள்மனமாகி விட்டது.

–'தினமலர் வாரமலர்'–மே 2006

# 13 ஆண் கர்வம்

முனியனுக்கு ஆண்கர்வமும் மமதையும் ஜாஸ்தி. எல்லா ஆண்களுக்கும் உள்ளதுதான் என்றாலும், முனியனுக்கு சற்றுக் கூடுதல்.

"ஆம்பளைக்கென்ன கொம்பா முளைச்சிருக்கு? அவனுக்கு மட்டுமென்ன அம்புட்டு அதிகாரம்?" என்று யாராச்சும் முறிக்கமுடியாத கேள்விக் கணையால் அவனைச் சுற்றி வளைத்தால்...

கர்வத்துடன் தலையைச் சிலுப்புவான்.

"ஆமா... கொம்பு மொளைச்சிருக்கு. ஆண் என்கிற பிறப்பே, கொம்புதானே? குத்திக் கிழிக்கிற கொம்பு" என்று கண்ணைச் சிமிட்டுவான்.

வாயைக் கொடுத்த பெண்கள் வெட்கமும் அருவருப்பு மாகக் கூசிப் போய் "த்தூய்... த்தூய்... வெக்கங்கெட்ட மிருக ஜென்மம்" என்று காறித் துப்பிவிட்டுச் செல்வார்கள். அவனோ வெற்றிக்களிமிதத்துடன் வக்கிரமமாகச் சிரிப்பான்.

"ஆண்டவன் பாத்துப் பாத்துப் படைச்சது... ஆம்பளையைத்தான். ஆம்பளை பாத்து எரக்கப்பட்டுப் போட்ட விலா எலும்புப் பிச்சைதான், பொம்பளை.

பொம்பளையைப் படைச்சது, எதுக்கு? ஆம்பளைக ஆண்டு அனுபவிச்சு ருசிக்குறதுக்குத்தான்."

தத்துவ நியாயம் என்று தெரியாமலேயே அவனை அவனது கர்வம் பேச வைக்கும். வேதக்கோயில் மைக் பிரச்சாரத்தில் கிடைக்கிற பிட்டை எடுத்து, அவன் தன் இஷ்டத்துக்கு பில்டப் பண்ணிக்கொள்வான்.

அவனது ஆண் கர்வத்துக்குத்தான் இப்போது ஏகப் பட்ட சோதனைகளும், நெருக்கடிகளும். இன்னும் சொல்லப் போனால்... அவனது ஆண் கர்வத்தால்தான், அவனுக்கு ஏகப்பட்ட நெருக்கடிகளும், சோதனைகளும்.

நேற்று ஊர்மடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்த இளவட்டங்கள் இதைத்தான் பேசிக் கொண் டிருந்தனர்.

"பொண்ணுக்கு மாப்பிள்ளை கிடைக்கலே. வந்து வந்து பாத்துட்டு, சத்தமில்லாமப் போயிருதாகங்குறது. ஊர்லே உலகத்துலே நடக்குற சகஜம்."

"ஆமாமா...! இது என்னடான்னா... எங்கேயுமில்லாத அதிசயக் கூத்தாயிருக்கு. ஆம்பளைக்கு பொண்ணு கெடைக்க மாட்டேங்குதுன்னு எங்காச்சும் உண்டுமா? கேவலக் கூத்தா இருக்கே?"

"ஏதோ... கால் கை வெளங்காத ஊனம், பொண்ணு கெடைக்க மாட்டேங்குதுன்னா... அதுலே ஒரு ஞாயம் இருக்கும். கருவேலங்கட்டையிலே உருட்டிச் செதுக்குன மேக்காத்தடி (முகக்கால்தடி) கணக்கா... ஆளு வாட்ட சாட்டமாயிருக்கான். இவனுக்குல்லே... பொண்ணு கெடைக்க மாட்டேங்குது."

"இது என்னடா கொடுமை..."

"முனியனுக்கு வந்த சோதனை."

"மூஞ்சியிலே அறையுற மாதிரி... பொண்ணு இல்லேங்குறாக... 'ஓடு,ஓடு'ன்னு வெரட்டியடிக்காக."

"இது ஒரு ஆம்பளைக்கு எம்புட்டுக் கேவலம்?"

"மானரோசமுள்ள ஆம்பளையாயிருந்தா... நாண்டுக்கிட்டுத்தான் சாகணும்..."

"இவன் சாகமாட்டானப்பா... உதிர்த்துன கழுதை ஊருக்குப் பெரிய கழுதைன்னு.. மானங்கெட்டுப் போய் அலையுதான்."

ஊர்மடத்து வராண்டாவில் ஒரே சிரிப்பாணிக் கூத்து. இளவட்டங்களின் வெடிச் சிரிப்பு, அணிஅணியாக வரிசை கட்டி ஒரே கூவல்காடு.

ஊர் முழுக்க இதுதான் பேச்சு. இப்படித்தான் பேச்சு. முனியனுக்கு ரொம்ப அவமானமாக இருக்கிறது.

நேற்றுக்கூட தொம்பக்குளம் போயிருந்தான்.

அங்கே போனமாசம்தான் ஒரு பெண்ணைப் பார்த்து விட்டு வந்திருந்தார்கள். "போங்க... தாக்கல் சொல்லியனுப்புதோம்" என்றார்கள்.

கிணற்றில் போட்ட கல்லாக சத்தமில்லாமல் கிடந்தது. பெரியாட்களை நம்பினால் கதையாகாது என்று இவனே புறப்பட்டான்.

போய் விசாரித்தால்—

அந்தப் பெண்ணுக்கு வேறு இடத்திற்கு 'பூ' வைத்தாகி விட்டது.

இவனுக்கு செருப்பால் அடிபட்ட மாதிரி இருந்தது. உள்மனசின் சதைப் பகுதி பறிபோனமாதிரி- பகீரென்கிற வெறுமை உணர்ச்சி. ஒரு சூன்யத் தாக்குதல்.

போகிற இடமெல்லாம் இதேதான் கூத்து. நம்ப வைத்து நட்டாற்றில் விட்டுவிடுகிறார்கள்.

பெண் இருப்பதாக துப்பு கிடைத்தவுடன் "பார்க்க வரலாமா" என்று தாக்கல் சொல்ல, "வாங்க... வந்து பாருங்களேன்" என்று பதில் வர...

அம்மா அய்யா- உறவு முறைகள் சகிதமாகப் போய்ச் சேர்ந்தால்... ஒரே தடபுடல்தான். அமர்க்களமான உபசரிப்பு. "வாங்க... இருங்க... காப்பி குடிங்க..." என்று மும்முரமான கவனிப்பு. முகமெல்லாம் சிரிப்பு. ஆனந்த வெளிச்சம். நுணுகி நுணுகி... அணுகி... அணுகி... விசாரிப்புகள்: "காடு கரைக எம்புட்டு... வீடு, கூரை வீடா, காரை வீடா... மாடு கன்றுக இருக்கா..." என்று ஏகப்பட்ட விசாரிப்புகள். விசாரித்தவர்கள் கண்ணில் திருப்தி ஒளி. மனநிறைவின் மலர்ச்சி முகத்தில் மனச் சம்மத அடையாளம்.

'பொண்ணு அமைஞ்சிரும்- இந்த எடத்துலே நமக்கு மாலை பூத்துரும்' என்று உறுதியாக மனசுக்குள் நம்புகிற மாதிரி, எல்லா நிகழ்வுகளும் நடக்கும்.

அப்புறம் பார்த்தால்...

கையை விரித்துவிடுவார்கள்.

ஓர் ஆண்மகனுக்கு - முழுத்த இளவட்டத்திற்கு - காடு கரை, சொந்த வீடு, விவசாயம் என்று சொத்து உள்ளவனுக்கு பெண் தர மறுத்தால்—

முனியனின் ஆண் கர்வம் சோதனைக்காளாகாதா? நெருக்கடிக்காளாகாதா?

'நீயெல்லாம் மீசை மொளைச்ச ஆம்பளையா பொறந்து என்ன பிரயோசனம்? ஒன்னை ஆம்பளைன்னு ஒரு பொண்ணும் ஒத்துக்கிடலியே?'

இந்தக் கேள்விகள் நீண்டு, சுருண்டு, முறுக்கேறி சாட்டையடியாக இவனைச் சுழற்றின. மனச்சதையை பிய்த்தெறிந்தன. ரத்த வரிகளில் காந்தல்.

நடுத்தெருவுக்கு வருவதற்கே அஞ்சுகிற முனியன். ஊர்மடத்துப் பக்கம் தலைவைத்தே படுக்கமாட்டான். நம்ம பாயாசத்தை ஊர்ப்பயல்கள் ஊதி ஊதிக் குடிப் பான்கள். ஈனப்பயக... பயல்களைக் கண்டாலே மனசு கிடந்து பதறுகிறது.

'எருதுவுக்கு நோவு - காக்கைக்குக் கொண்டாட்டம். நாம அவமான வலி தாங்காம நொந்து நூலாகிக் கிடக்கோம். இந்தப் பயக நம்ம புண்ணைக் கொத்திக் கொத்தி கூத்தாடுறாங்க... ச்சேய்...'

வெறுப்பில் குமைகிற முனியன்.. சற்று நேரத்துக்குள் தன்னைப் பற்றிய சுயபச்சதாபம் கொள்கிறான். 'நம்ம தலையெழுத்தோட லட்சணமும், கேவலக் கூத்தாத் தானிருக்கு...'

கைலியும் பனியனுமாகவே தெருவில் திரிவான். தலையில் துண்டை வட்டக்கட்டாகக் கட்டியிருப்பான். உதட்டுக்கு மேல் வளர்ந்து நிற்கிற வசீகரமான மீசை, நுனியில் தேள் கொடுக்கு மாதிரி மேல்நோக்கி வளைந்திருக்கும். அதை நுனிவிரல்களால் கவ்விகவ்வி...

நீவிவிட்டுக் கொள்வதில் அவனுக்குத் தனி ருசி. அவனுக்குள் கால்களைப் பரப்பி விசுவரூபமெடுத்து நிற்கிற கர்வத்துக்கு ஒரு நிறைவு. ஒரு சந்தோஷம்.

சொல்லி வைத்து அடித்துத் தந்த வீச்சரிவாள் மாதிரி இவன் திரேகம் இருப்பதில், பல பெண்கள் கிறங்கிக் கிடப்பதாக இவனுக்குள் நினைப்பு. அதில் உண்மையும் உண்டு.

கர்வத்தில் அவனது கண்கள் போதையேறி... விரியும். பெருமிதமாக சிரிக்கும்.

செங்காளியே இவனைப் பார்த்துக் கிறங்கிக் கிடந்ததும், நஞ்சடித்த கெண்டையாக சொக்கி சொக்கி, சுற்றி வந்ததுவும்- இவன் இஷ்டத்துக்கெல்லாம் வளைந்து கொடுத்ததுவும் உண்மைதானே! ஒரு தடவை... இவன் சொன்னவுடன் கர்ப்பம் கலைத்தாளே... மந்திரத்துக்குக் கட்டுண்டவளைப் போல மயங்கிக் கிடந்தாளே...

இப்ப ஏன்... ஒரு பொட்டைக் கழுதையும் சம்மதிக்க மாட்டேங்குது? 'புடிக்கலே, புடிக்கலே' என்று எல்லா நாய்களும் சொல்லி வைத்தமாதிரி ஒன்றுபோல குரைக்குதுகளே...

"நீயெல்லாம்... ஒரு மனுசனா? ஆம்பளையா? புருஷனா இருக்குறதுக்கு என்ன யோக்யதை இருக்கு?" என்று எல்லாரும் ஊரறிய நாடறிய காறித் துப்பு கிறார்கள்.

இப்ப இவன் குன்றிக் கூசிக் கிடக்கிறான். ஊர் மடத்துக்கு - சைக்கிள் கடைக்கு - நாலு பயல்கள் கூடுகிற எந்த இடத்துக்கும் போக முடியவில்லை. அவ

மானப்பட்டு, அசிங்கப்பட்டுப் போக நேரிடுமோ என்ற பதற்றம். நடுக்கம்.

மீசையில் கை போடமுடியாத நடுக்கம். கர்வம் சிதைந்த மனநிலை. கம்பீரம் காணாமல் போன மாயம். தனக்குள் தானே தலைகவிழ்ந்து... நாணப்பட்டு உயிர் கருகுகிற பரிதாபம்.

அவனது உள்மன மூலையில் ஒரு சின்னப் புள்ளி யாக ஒரு வெளிச்சம். "செங்காளிக்கு நா செய்ஞ்ச துரோகமும் பாவமும்தான்.. என்னை இப்படிக் கேவலப் படுத்தி சிறுமைப்படுத்துதோ...?"

அரளிச் செடிகளின் அடர்ந்த புதருக்குள் தன் மடிக்குள் பூச்சரமாகக் கிடந்த அந்த வெள்ளை மனசு. என்னை நம்பி தன்னையே தந்தவள். சாகவும் தயார் என்றவள்...

அப்பேற்பட்ட அந்தப் பூமனசுப் பெண்ணுக்கு நான் எத்தனை வஞ்சகமாக துரோகம் செய்தேன்?

"கேரளாவுக்குக் காஞ்சன் காட்டுக்கு 'தொழில்' செய்யப் போயாகணும். வர்றப்ப நீ இருந்தா.. ஒன்னைய நிச்சயமா தாலிகட்டி பொண்டாட்டியாக்கிக்கிடுவேன்.."

வரும்வரை அவளால் காத்திருக்க முடியாது என்று தெரிந்து சொன்ன வஞ்சகம். எவனுக்கோ வாழ்க்கைப் பட்டு, எப்படியோ நாசமாகப் போகட்டும் என்று நினைத்த அயோக்கியத்தனம்.

ஊரறிய நாடறியப் பழகிவிட்டு ஒருதடவை கருவும் கலைக்கச் சொல்லிவிட்டு வஞ்சகமாகக் கை கழுவிய

அந்தப் பாவம்தான்... என்னை இப்படிச் சீரழிய வைத்து அசிங்கப்படுத்துகிறதா?

செங்காளியின் உயிருலை கொதித்து வந்த கண்ணீர் தான், வாளாக வந்து தன்னை வெட்டிச் சரிக்கிறதா? "நீ ஆம்பளையே யில்லே" என்று கெக்கொலி கொட்டிச் சிரிக்கிறதா?

உள்ளூர உடைந்து சரிகிற முனியன்.

செங்காளியை ருசி பார்க்கிறபோது அடிக்கடி அரளிப் புதருக்கு வரச் சொல்லி அனுபவித்தபோது குற்ற உணர்ச்சி எழுந்ததாக நினைவேயில்லை.

இதெல்லாம் சகஜம் என்று பெருமிதப்பட்ட ஆண் கர்வம். அந்த ஆண்கர்வச் செயல்தான், இப்போது இவனது ஆண் கர்வத்துக்கு சோதனை தருகிறது. நெருக்கடி தருகிறது.

நம்பி வந்த பொண்ணை நட்டாத்துலே வுட்ட பயலை நம்பி எவன் பொண்ணு கொடுப்பான்?

அவனுள் குற்ற உணர்ச்சி ஒரு முள்ளாகச் சொருகி ஆழத்தில் இறங்கி...

கணேஷ் புகையிலை போடுகிற பழக்கத்தைக் கூட விட்டுவிட்டான்.

"இந்தப் பொண நாத்தத்தை எந்தப் பொண்ணும் சகிச்சிக்கிடமாட்டா" என்று விளையாட்டாக தெற்குத் தெரு சின்னச்சாமி சொன்னான். உடைந்து நொறுங்கிக் கிடந்த முனியன், நாற்றமெடுத்த அந்தச் சனியனை அன்றே தலைமுழுகிவிட்டான்.

நல்ல பெண்ணா... சிவப்பா... கறுப்பா... அழகா... அழகு இல்லையா என்றெல்லாம் அலசிப் பார்த்த காலமெல்லாம் மாயமாகி... ஏதோ நெட்டையோ கட்டையோ ஒரு பொண்ணு கிடைத்தால் போதும் என்ற நிலையில் நிற்கிற முனியன்.

அப்பத்தான்—

இருபத்தைந்து மைல் தூரம் தள்ளிய கிராமத்தில் ஒரு பெண் இருப்பதாகத் தரகர் சொன்னார். "வர்ற வெள்ளிக்கிழமை வரச் சொல்லியிருக்காக" என்றார்.

முனியன் ஊரில் அகப்பட்ட எல்லாச் சாமி களையும் கும்பிட ஆரம்பித்துவிட்டான். "இதாச்சும் சம்மதம்னு சொல்லணுமே" என்று மூச்சுக்கு முன்னூறு தடவை ஜெபம் பண்ணத் துவங்கிவிட்டான்.

அவனுக்குள் பதற்றம். கண்ணில் உறக்கம் ஒட்டாமல் பித்து பிடித்துப்போய் திரிந்தான்.

வெள்ளிக்கிழமை வந்தது.

அம்மா, அய்யா, தரகர், ஒன்றுவிட்ட அக்கா இவன் என்று ஐந்து பேர் மட்டுமே போனார்கள். நம்பிக்கையற்ற மனநிலை.

இங்கேயும் இல்லையென்றுதான் ஆகப்போகிறது என்ற தெளிவான முன் முடிவில் வந்த ஏனோதானோ கணக்குகள். விரக்தியான உணர்வுகள்.

டவுன்பஸ் ஏறிப்போய் இறங்கி, மினிபஸ் பிடித்து, இன்னொரு ஊரில் இறங்கி, ரெண்டு மைல் காட்டுப் பாதையில் நடந்த பின்புதான் அந்த ஊர் வந்து சேர்ந்தது. ஒரே சீமைக் கருவேலங்காடு.

வீடு, காரைவீடு. காடுகரையென்று சற்றே பசையுள்ள குடும்பம். கிழவிதான் இருந்தாள். எல்லாரையும் உபசரித்தாள். பக்கத்து வீட்டுப் பெண்கள், ஒத்தாசைக்கு வந்திருந்து வீட்டுக்குள் அங்கும் இங்குமாக மின்னலடித் தார்கள்.

கிழவி தாட்டியமானவள். தொங்குகிற காதுகளில் தங்கத் தண்டட்டி ஊசலாடுகிறது. மாப்பிள்ளையை வெறித்து வெறித்துப் பார்த்தாள்.

தரகரிடம் பேச்சு கொடுத்தாள். தடங்கலற்ற பேச்சு.

"நல்ல மாடுன்னா- உள்ளூர்லே வெலை போயிருக்கும், பொண்ணு கெடைக்காம தட்டழியுதீகளாம்லே அப்ப டீன்னா... என்ன அருத்தம்? மாப்பிள்ளைப் புள்ளாண் டன்கிட்டே என்ன கொறை?"

"கொறை குத்தமெல்லாம் ஒண்ணுமில்லே. கடுமை யான உழைப்பாளி."

"ஏதோ- ஒரு பெண்ணோட பழக்கம் வழக்கம் இருந் துச்சாம்லே? ஆண்டு அனுபவிச்சுட்டு... அம்போன்னு கை கழுவிட்டாகளாம்லே? இது என்ன கொணம்? குத்தமில்லியா? நாளைக்கு... ஏம் பொண்ணுக்கும் இவரு இந்தத் துரோகத்தைச் செய்ய மாட்டாருன்னு என்ன கேரண்டி?"

'டாண் டாண்' என்று கோயில் மணியடிக்கிற மாதிரி, கிழவி கேட்ட கேள்வியில், எல்லோருக்கும் முகம் செத்துவிட்டது. 'இத்தனை வெளிப்படையான தாக்குதலா' என்ற திகைப்பிலும், வெலவெலப்பிலும் வாயடைத்துப் போனார்கள். தத்திப்புத்தி... தடுமாறி... என்னத்தையோ சொல்லிச் சமாளிக்கிற பரிதாபம்.

எதை எதையோ கதை ஜோடித்து... விளக்கெண்ணெயில் வதக்கிய வெண்டைக்காய் மாதிரி கொள, கொளக்கிற தரகர்.

முனியனுக்குள் உயிர் நரம்பு அறுந்துபோன மாதிரியிருந்தது.

நட்ட நடுச்சபையில் நிர்வாணமாக நிறுத்தி வைத்து, நனையப் போட்ட விளக்கு மாறால் 'சப்,சப்,சப்'பென்று அறைகிற மாதிரியோர் அவமானத் தகிப்பு.

அந்த விளக்குமாறு நுனியில் செங்காளியின் சிறு முகம் தெரிவதுபோல ஒரு பிரமை...

வெண்டைக்காய் கதை விளக்கத்தை... சகிக்க முடியாமல், சட்டென்று குறுக்கிடுகிற கிழவி.

"சரி சரி... 'வளவளா, கொளகொளா' பேச்சை நிப்பாட்டுங்க. நேரா விஷயத்துக்கு வாரேன். முந்துன கதையை மூட்டை கட்டி வையுங்க, மூலையிலே. இனிமேல்- இபபடிப்பட்ட துரோகம்ங்குற பாவம் செய்ற கொணத்தையும் மூட்டை கட்டி மூலையிலே எறிஞ்சாகணும். அப்புறம் முக்கியமா ஒரு கண்டிஷன்..."

கிழவி பேச்சை நிறுத்தி முனியன் முகத்தில் பார்வையை நங்கூரமிட்டாள்.

"எனக்கு ஒரே பொண்ணு. காடு கரைக நிறைய இருக்கு. வீடு இருக்கு. மாடு கன்னு கெடக்கு. மாப்பிள்ளை- இங்க வந்து வீட்டோட மாப்பிள்ளையாயிருந்து- வீட்டை நிர்வாகம் பண்ணச் சம்மதிச்சா- நா பொண்ணு தர்றேன்- என்ன சொல்லுதீக?"

**க**ல்யாணம் தடபுடலாக நடந்து... மாப்பிள்ளை ஊருக்கு 'மறுவீடு' போய் ஊர்க்கோயிலுக்கு தேங்காய் உடைத்து வணங்க மணக்கோலத்துடன் முனியனும், மூக்காத்தாவும் தெருவில் நடந்தனர். சுற்றிலும் உறவுப் பட்டாளத்தின் கும்மாளம். குதூகலப் பேரிரைச்சல்.

"பொண்ணை கல்யாணம் முடிச்சு கூட்டிட்டு வருவாக. இதுதான் உலக நடப்பு. இங்க பாரப்பா... மாப்பிள்ளைய கல்யாணம் முடிச்சு... பொண்ணு வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறாக. உலக மகா கூத்தாயிருக்கு."

ஊர்மடத்து இளவட்டங்களின் நையாண்டிகள். மங்கலாகக் காதில் விழ ஆண் கர்வம் நெருக்கடிக் குள்ளாகி... தத்தளிக்கிற முனியன்.

–'ஓம் சக்தி'– 2007.

# 14 நடைநடையாய்

சென்னைக்குப் போய் , தி. நகர் கட்சியாபீஸில் தங்குகிற போதெல்லாம், வாக்கிங் போவதற்கு நடேசன் பார்க் வந்துவிடுவது சீனிவாசன் வழக்கம்.

நடைப் பயிற்சிக்கு ரொம்ப வசதியான இடம், நடேசன் பார்க். சதுரம் சதுரமான சிமிண்டுக் கற்களால் பதிக்கப்பட்ட வட்டவட்டமான வழித்தடம். குறுக்கும் நெடுக்குமாக நேர்ப்பாதைகள். நீள்வட்டம் குறுவட்டம் எல்லாவற்றிலும் நெரிசலாக மனிதப் பாதங்கள். உரசிக்கொண்டு போகிற அளவுக்கு மனித நெரிசல்.

உட்கார்ந்து மூச்சு வாங்க, சிமிண்டுப் பெஞ்சுகள். நின்று சாமி கும்பிட சின்னக் கோயில். அதில் எந் நேரமும் பக்தி சுலோக இசை. குனிந்து, வளைந்து, தொங்கி பயிற்சி செய்ய குழாய்க் கம்பிகள்.

காலை நேரம் போனால், பார்க்கில் ஏகக்கூட்டமாக இருக்கும். நகரும் மனிதப் பாதங்கள். எல்லோருமே உயர் ரக வி.ஐபிகள். கால்களில் கட்ஷுக்கள். வெள்ளை பேண்ட், கச்சிதமான சட்டை. கைகளில் கடியாரமும், செல்போனும். சமூக அந்தஸ்தில் உயர்ந்தவர்கள். டவுஷர், டி. ஷர்ட்களும் உண்டு.

கார்கள் - பைக் என்று வந்து, அவற்றை 'பார்க்' பண்ணி வைத்துவிட்டு, வாக்கிங் போகிறவர்கள்.

சீனிவாசன் அந்தக் கூட்டத்தில் ஒட்டாமல் நிற்பான், தண்ணீரில் விழுந்த எண்ணெய்த் துளிபோல. எண்ணெய் வழிகிற கிராமத்து முகம். அழுக்கான கதர்ச்சட்டை. மடித்துக் கட்டிய கைலி. செருப்புக்குள் பாதங்கள். தாறுமாறான வேகத்தில் நடை. 'தக், தக்'கென்று தரை அதிரும். தாராளமாகக் கை வீசுவான், வேகமாக. விலகி முந்திப் போகிற அவனது வேகத்தில் எழுகிற காற்று. எல்லாரும் அவனை ஏளனமாகப் பார்ப்பார்கள். 'யார் இது, காட்டான்?'

சீனிவாசன் அவர்களைப் பற்றி ஏளனமாகவே நினைப்பான். 'நகரத்து மனிதர்கள், வெறும் ஊளைச் சதை மனிதர்கள். பூ நடை பூனை நடையாக நடக் கிறார்கள். பொத்திப் பொத்தி 'பொன்னோ பூவோ' என்று பாதத்தை வைக்கிறார்கள். அலுங்காத நடை. இதுக்கெதுக்கு வாக்கிங்?'

கூட்டம் பெருங்கூட்டமாயிருக்கும். சத்தம் அவ்வள வாக இருக்காது. யாரும் எதுவும் பேசுவதில்லை. பேசினாலும், யந்திர உதடுகளின் உச்சரிப்புதான். உதடு அலுங்காத பேச்சு. அத்தனை பெரிய பார்க்கில்... அத்தனை பெரிய மனித நடமாட்டத்தில்... இறுகலான மௌனமே இருக்கும்.

கிராமத்தில் ஒரே இடத்தில் இம்புட்டு கூட்டம் கூடிவிட்டால், கூச்சல் ஏழு ஊருக்குக் கேட்கும். சந்தைக் கடை இரைச்சலாக கூவல் காடு, வட்டாரமே அதிரும். உதடு விட்டு, மனம் விட்டு, களங்கமில்லாமல் - சுதந்திர மாகப் பேசிச் சிரிப்பார்கள்.

"என்ன பழநி, இந்தப் பக்கம்? எதுனாச்சும் விசேஷமா?" என்ற விசாரிப்பே, பெருங்கத்தலாக இருக்கும். உதட்டில் மனசை வைத்து, வெள்ளந்தியாகப் பேசிக் கழிப்பார்கள், மன ஆற்றாமைகளை. நாசூக்கு, பாவனைப்பகட்டு, மௌனத்துப் பூச்சு என்று ஒருத்தன் இருந்தால், அவனை 'ஊமைக்குட்டான்' என்று பட்டம் கட்டி ஓரம் கட்டி வைத்துவிடுவார்கள்.

"என்ன மாமு, எங்க குளிக்கவா?"

"தோள் நிறைய அழுக்குத் துணிகளோட போறதைப் பாத்தா... ஒனக்கு என்ன தோணுது? குளிக்கத்தான் மருமகனே!"

"பாத்துட்டு ஒண்ணும் பேசாமப் போனா- அதுக்கும் கோவிச்சுக்கிடுவீர்லே?"

"ஆமா. கோவிக்கத்தான் செய்வேன். மனுசரை மனுசன் எதுரே பாத்துட்டா- 'என்ன, ஏது'ன்னு விசாரிக் காம போகலாமா? அது மனுசத்தன்மையா? ஆடுமாடுக, பன்றி நாய்கதான்... பேசாம வெலகிப் போகும்."

இதுதான் பட்டிக்காட்டு மனிதத்தன்மை. விஷயம் இல்லாமலும் விசாரித்துப் பழகுவது, எதிரில் முகம் பார்த்துவிட்டால்... வாயால் மனசுக்குள் புழங்குவது என்பதுதான் கிராமத்து மனித உறவின் பண்பாடு.

இங்கு பார்த்தால்... எல்லாமே, 'கம், கம், கம்'தான். இழவு வீடுபோல இறுகலான மௌனம். வாய் அதிர்ந்து பேசுவதையே நாசூக்கற்ற செயலாகக் கருதுவது. நாகரிகப் பாவனையிலான மனமுக்காடுகள். மௌன மயானம். மனிதருக்கு மனிதர் புன்னகைத்து விட்டால்கூட, 'வம்பு

வழக்கு வந்துவிடுமோ' என்ற அச்ச நரகம். தனித்தனித் தீவு மனிதர்கள்.

வாக்கிங் என்னத்துக்கு?

உணவு முறையில் செயற்கை. ஏ.சி.யிலேயே இருப்பு என்கிற செயற்கை. உழைக்கப் பிறந்த உடம்பு, உழைக்காத செயற்கை. பிறர் மீது பரிவு காட்டுவதே இயல்பெனக் கொண்ட மனித மனதை, சுயநல உணர்வு பீடித்ததால் திணறடிக்கிற செயற்கை. செயற்கைகளாகிப் போன இந்த வாழ்க்கை முறையில் வருகிற நோய்களுக்கு மருந் தில்லாத இயற்கை முறையிலான மருத்துவம்தானே, வாக்கிங்?

அதையும் இப்படியா, செயற்கையாக்குவது? உடைகள் செயற்கை. போர்த்தியிருக்கிற மௌனம் செயற்கை. பூ நடை செயற்கை. எல்லாமே... நகரத்துக் கலாச்சார நாடக பாவனை.

சென்னை வருவது எப்போதோ... ஓரிரு நாட்களில் தான். மற்றபடி, கிராமத்தில்தான் இருப்பு, சீனிவாசனுக்கு.

கிராமத்தில் வாக்கிங் போவது, மகாப்பெரிய சிரமமாக இருந்தது, ரெண்டு மூன்று வருஷத்துக்கு முன்பு வரை.

வாக்கிங் போகிறவனை, கிராமத்தாட்கள் மகா ஏளனமாகப் பார்ப்பார்கள். அடிக்கண்ணால் சிமிட்டி, இகழ்ச்சியாக உதட்டைப் பிதுக்குவார்கள். சாக்கடை யிலேயே சோம்பலுடன் படுத்துப் புரளுகிற பன்றியைப் பார்க்கிற மாதிரிதான் பார்ப்பார்கள்.

டவுனில் வாக்கிங் போவதென்றால்... பெருமை. உயர் அந்தஸ்தின் குறியீடு. சுகவாசி என்ற பெருமித

அடையாளம். கிராமங்களில் மகா பாவம். சிறுமை. அற்பப்பதர்.

"குனிஞ்சு வளைஞ்சு மம்பட்டி புடிச்சு வஞ்சக மில்லாம ஒழைச்சிருந்தா– இந்தச் சீக்கு வருமா? வாக்கிங் போறானாம், பெரீய்ய வாக்கிங். எங்க புஞ்சையிலே வந்து நாலு நாளைக்கு களை வெட்டச் சொல்லு. களையை மாதிரியே சீக்கும் மாயமா பறந்துரும்" என்று எகத்தாளமாகச் சொல்லிவிட்டு, சிரிக்கிற சிரிப்பு இருக்கே... அதைப் பார்த்தால் நாண்டுக் கொண்டுதான் சாகணும், வாக்கிங் போகிறவன்.

கிராமத்தின் சுபாவமே– இயற்கையானதாக இருக்கும். உடம்போடு ஜென்மமெடுத்ததே– உழைப்பதற்காகத்தான் என்ற இலக்கணம். விடிந்தபொழுது, அடைந்த பிறகும் விடாது உழைத்துக் கொண்டிருப்பது... கிராமத்து மனித இயல்பு.

வீடுகளில் உழைப்பு. காட்டுக்குப் போனால், மாட்டோடு மாடாகப் பொழுதுக்கும் கட்டிப் புரளுகிற உழைப்பு. வீடு வந்தால், தொழுவத்தில் உழைப்பு. களத்து படப்பில் உழைப்பு. படுக்கப் போகும்போதுகூட, பருத்தி விதை நனைய வைக்கிற உழைப்பு.

பெண்களுக்கு இதைவிடவும் கூடுதலான உழைப்பு. சோறாக்குகிற உழைப்பு. குழந்தைகளைச் சுமந்து, பெற்று, ஆளாக்குகிற உழைப்பு. ஆண்கள், பெண்கள், குழந்தை, குட்டிகள், பெரிசு, கிழடு கட்டைகள் எல்லோருமே உழைப்பைச் சுவாசமாகக் கொண்டு செயல்படுகிற சுபாவமுள்ள கிராமத்தாட்கள்... 'வாக்கிங்' போவதை மகாக் கொடிய செயற்கையாக - பாவமாகத்தான் -

பார்ப்பார்கள். பணக்கார ஆடம்பரமாக நினைத்து வெறுப்பார்கள்.

“ஓடியாடி பாடுபடுறதுதான், மனுச சுபாவம். உக்காந்து திங்கிறவன், மனுச செம்மமா? அப்படி... சும்மாவே உக்காந்து திங்கிற சோம்பேரிக் கழுதை களுக்குத்தான்... இப்பேற்பட்ட சீக்குக வரும்” என்று கூச்ச நாச்சமில்லாமல்... முகத்தில் மனசை வைத்து... வெளிப்படையாகப் பேசிவிடுவார்கள்.

சீனிவாசனுக்கு முதுகெலும்பில் ரெண்டு இடங் களில் தேய்மானம். உயர் ரத்த அழுத்தம். சர்க்கரையும் எட்டிப் பார்க்க ஆரம்பித்துவிட்டது. குடலிலும் பிரச்சினை. வாய்வுக் கோளாறு.

“கட்டாயம் நீங்க வாக்கிங் போயாகணும்.”

முதன்முதலில் வாக்கிங் போவதற்கு முடியாமல் கூசிக் குறுகிப் போய், தவித்தான். ‘ஊர், கேவலமாகப் பேசுமே’ என்ற பதற்றம். உள்நடுக்கம்.

விடியற்காலம் நாலரை மணிக்கு எழுந்து, பல் தேய்ப்பு. ஹோமியோபதி மருந்துப் பொட்டலத்தைக் கரைத்துக் குடிப்பு. பாலைக் குடித்து, காலைக் கடன் முடித்து... இருட்டோடு இருட்டாக நடையைப் பிடிப் பான். விடிவதற்கும் முன்பே... மிச்சமாக இருட்டு இருக்கும்போதே வீடு வந்துவிடுவான்.

யார் கண்ணிலும் பட்டாலும் பட்டிருப்போமோ என்ற சந்தேகத்தில் குலை பதறிக் கிடப்பான்.

“களவாண்டவன்கூட ஊருக்கு இம்புட்டுப் பயப்பட மாட்டான். நீங்க என்னத்துக்கு இப்படிக் கழியுறீக?”

என்று கேலி பண்ணி, ‘சிரியோ, சிரி’யென்று சிரித்து கூத்து கட்டுவாள், பெஞ்சாதி.

இவனுக்கோ சுயகழிவிரக்கம்.

“நமக்கு மட்டும் என்னத்துக்கு இம்புட்டு நோக்காடு? என்ன பாவம் செய்ஞ்சேன்? என்னத்துக்கு இந்தக் கேவலப்பட்ட சீப்பாடு? பயந்து பயந்து வாக்கிங் போய், சீரழிஞ்ச பொழைப்பு. ச்சே!”

இதெல்லாம் ரெண்டு வருஷத்துக்கு முந்தி. இப்ப வெல்லாம்- நிலைமை மாற்றம். வாக்கிங் போகவேண்டிய கேஸ்கள், பதினொன்றுக்கு மேலாயிற்று. பத்து படித்த பையன்கள் பட்டாளத்துக்குப் போவதற்காக ரன்னிங் போகிறார்கள்.

எல்லாரும் தார் ரோட்டில் நடையைப் போடு வார்கள். சீனிவாசனுக்கு தனிரூட்.

வாயைக் கழுவி, ஹோமியோபதி மருந்து கலக்கிக் குடித்து, பாலைக் குடித்து, காலைக் கடன் முடித்து, காலில் செருப்பை மாட்டி.

தெருவில் இறங்கும்போது, மணி ஆறு முப்பதுக்குள் ஒரு நேரம்.

மடித்துக் கட்டிய கைலி. கழுத்தில் துண்டு. மற்றபடி வெற்றுடம்புதான். ஊரைச் சுற்றி வட்டமடித்துப் போகிற வண்டிப் பாதையில் நடையைப் பிடிப்பான். மென் புழுதி, செருப்புக்கு மிருதுவாக இருக்கும். காலைக் காற்றின் சிறுகாற்று சருமத்துக்கு இதம் தரும். வைகறைப் பிஞ்சு வெயில், மழலை விரலாக வருடும்.

'வேகு, வேகு' என்று நடப்பான். அகல நடை, துரித நடை. செருப்புச் சத்தத்தில் பதறித் தெறிக்கிற மைனாக்கள். 'வந்துட்டான்... வந்துட்டான்' என்று கீச்சிடும் குரலில் உயிர் காக்கிற விளையாட்டுப் பயம்.

குயில்கள் கருமின்னல்களாக 'விர்ர்'ரென்று சீறிப் பாயும். ஆளைக் கண்டவுடன் உயிர்ப் பயத்தில் கத்தும். ஆண் குயில்கள் லட்சணமாகக் கருமையாக மின்னும். பெண் குயில்கள் வெளிறிய சாம்பல் நிறத்தின் புள்ளி களோடு அவலட்சணமாகப் பறந்து போகும்.

எல்லாக் கவிஞர்களுக்கும் பிடித்தமானது, குயில். கிராமத்தாட்களுக்குக் குயிலைக் கண்டால், அவ்வளவாகப் பிடிக்காது. அதிலும் பெண்களுக்கு சுத்த மாகப் பிடிக்காது.

"இட்ட முட்டைகளைப் பொத்திக் காத்து, குஞ்சு பொறிச்சு, பறக்காட்ட வக்கில்லாத இதெல்லாம் ஒரு உசுர்ப் பிராணியா? ஜோடி வேணும், சுகம் வேணும், சுமை மட்டும் ஆகாதுன்னு திரியுற தினவெடுத்த ஜென் மத்தோட மூஞ்சியிலே முழிச்சாலும் வெளங்குமா?" என்று வெறுப்பும், அசூயையுமாக முகம் சுளிப் பார்கள்.

"இதுக்கு... காக்கா எம்புட்டோ உசத்தி. குயிலு முட்டைகளையும் குஞ்சுகளையும் தனதா நெனைச்சு, ஊரா புள்ளைகளையும் ஊட்டி வளர்க்குற ஈர மனசு."

நகரத்து இளைஞர்கள், பார்க்காத குயிலுக்கு எதை எதை உவமை சொல்லலாம் என்று மண்டையைக் கசக்குகிறபோது, அன்றாடம் குயிலைப் பார்க்கிற கிராமத்தின் மனோபாவ வித்தியாசம்.

இதை யோசித்துக்கொண்டே வண்டிப் பாதையில் நடக்கிற சீனிவாசன். வண்டிப் பாதையின் மிருதுவான புழுதியில் பாம்பு ஊர்ந்த தடங்கள். இராவெல்லாம் ஊர்ந்து இரை சேமித்த எறும்புகள், இப்போதும் வரிசை பிடித்து ஊர்கின்றன. அதை மிதித்துவிடாமல் தாண்டி நடக்கிறான்.

வண்டிப் பாதைக்கு வடக்கில் ஆறு, கிழக்காக நீள் கிறது. ஒரு காலத்தில் முடிவில்லாத மணல் உயரமும், நீரோட்டமுமாய் இருந்தது ஆறு. இப்போது சீமைக் கருவேல மரங்களும் பாறை முடிச்சுகளுமாய்ப் பார்க்கவே லட்சணமில்லாமல் கிடக்கிறது. தெற்கில் புஞ்சைகள். சூரியகாந்தி வெள்ளாமை. சந்தன மஞ்சள் நிறத்தில் பூக்களின் பிரகாசம். சாம்பல் படிந்த பசிய செடிகளைப் பார்க்கவிடாத ஈர்ப்பொளி.

சூரியகாந்திப் பூக்களில் பால் கோர்க்க ஆரம்பிக்கிற விதைகளைக் கொத்துவதற்கு படைபடையாகப் பச்சைக் கிளிகள். சூரியகாந்தி விதைகளையும், சோளக் கதிர்மணி களையும் கொத்திக் களவாட 'கீச்சு, கீச்'சென்று அலை பாய்ந்து வருகிற திருட்டுக்கிளிகள்.

இந்தக் கிளிக் கொள்ளையிலிருந்து வெள்ளா மையைக் காப்பாற்ற புஞ்சைக்காரர்கள் படுகிற பாடு, பெரும்பாடு. அரும்பாடு.

முந்தியெல்லாம்- பருத்தி, மிளகாய் என்று விவசாயம் மும்முரமாக நடந்த காலத்தில், இந்தப் பக்கம் கிளிப் பறப்பே கிடையாது. கண்ணில் தட்டவே தட்டாது. விவசாயம் கட்டுபடியாகாமல்... கொய்யா, சூரியகாந்தி

என்று பயிரிட... கிளிக்கூட்டம் வந்துவிட்டது, கொள்ளை யடிக்க.

காலமாறுதலால் வந்த கோலமாறுதல்களைப் பற்றி யோசித்துக்கொண்டே நடக்கிற சீனிவாசன்.

பெருமாள் கோயில் முன்னால் நிற்கிற உயரமான கல்தூணின் உச்சியில் நீள்தோகையுடன் உட்கார்ந் திருக்கிற ஆண்மயில்.

காலடிச் சத்தம் கேட்டவுடன் "பீக்கா...க், பீக்கா...க்" என்று உயிர்ப் பயத்துடன் கூப்பாடு போடும். ஆங்காங்கே வேலிக் காட்டுக்குள் இரை தேடிக் கொண்டிருக்கிற மயில்களெல்லாம் எச்சரிக்கையாகி, எச்சரிக்கைக் குரல் கொடுக்கும்.

"வர்றாண்டா.. வர்றாண்டா" என்ற தொனி. தவ்வித் தவ்விப் பறந்து பூச்சிகளைப் பொறுக்குகிற செம் போத்துகள். பனந்தோப்புக்குள் ஆனி மாதக் காற்றின் பேயிரைச்சல். ஓலைகளின் காட்டுக்கூச்சல். பனங் காடை ஒன்று நீலநிறத்தில் பறந்துபோகிறது, கர்ண கடூர வீறிடலுடன்.

நடையை எட்டிப் போடுகிற சீனிவாசன். மாடசாமி கோயில் நெருங்கியவுடன், விலகிச் செல்கிற ஒற்றையடிப் பாதையில் நடப்பான். துளசிச் செடிகள், பிரண்டைக் கொடிகள், நிலவாகைச் செடி, கொளுஞ்சிச் செடிகள் கோடை வெயிலுக்குக் காய்ந்து போய் குச்சிகுச்சியாக நிற்கின்றன.

வெள்ளோடையை விட்டு விலகி, மேற்காமல் நடையைப் பிடிப்பான். உவர்மண் பொங்கிப் பொதும்பிப்

போயிருக்கும். மின்கம்பிகளில் வரிசையாகத் தவிட்டு நிறத்துப் படைக் குருவிகள் நின்று கீச்சிடும்.

மயில்களும், இந்தப் படைக் குருவிகளும் கம்பு வெள்ளாமை போட்டிருக்கிற சம்சாரிகளை கதறக் கதற அழுகடித்துவிடும். அம்புட்டு அழிமானம் பண்ணி, நாசக்காடு செய்யும்.

கசிவுநீர் குட்டை காய்ந்து கிடக்கும். இந்த இடத்தில் தான், நாலு மாசத்துக்கு முந்தி ஒரு பெருநரியைப் பார்த்தான். இவன் பதறிப் போனான். இவனைப் பார்த்தும் பார்க்காதது போல, தன் போக்கில் போய் விட்ட அந்த ஒற்றை நரி.

அப்புறம் விசாரித்துப் பார்த்தால்... அதற்கொரு சோகக் கதை இருந்தது. கொய்யாத் தோப்பின் பொழியில் புதைத்து வைத்திருந்த வேட்டு வெடித்ததில் துணைநரி துள்ளத் துடிக்க செத்துவிட்டது. பதற்றத்தில் தெறித்தோடிய இதற்கு, அது செத்தது தெரியாது. அந்த நாளிலிருந்து துணை நரியைத் தேடிக்கொண்டே இந்தப் பக்கத்தில் உலவுகிறதாம், இந்த ஒற்றை நரி. அதன் மனசில், இன்னும் துணைநரி உயிரோடிருக்கிறதாம்...! ‘கண்ணில் படும்’ என்ற ஆவலுடன் நம்பிக்கொண்டு அலைகிறதாம்...

வேக வேகமாக நடந்து வந்த சீனிவாசனுக்கு இந்தக் கொய்யாத் தோப்புதான், எல்லை. ஏறக்குறைய ஒன்றரை கிலோமீட்டர் தூரமிருக்கும். ஒரு வேலி மரத்தடியில் நிற்பான்.

சள்ளென்று வியர்த்துக் கொட்டும். மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கும். நின்ற நிலையிலேயே ஐந்து நிமிச

நேரம், தியானம். ஏதேனும் ஒரு நினைவில் மையம் கொள்கிற மனசு. அதிலேயே தீவிரப் பயணம். உடலுக்கு ஓய்வு. மனசுக்குப் பயிற்சி.

தியானம் முடிந்தவுடன் வந்த வழியிலேயே திரும்பவும் நடை. மேல்துண்டைத் தலையில் வட்டக்கட்டாகக் கட்டிக் கொள்வான். மேகத்துண்டுகளை வெள்ளிக் கட்டிகளாகத் தகதகக்க வைத்து மேலேறி வந்துவிட்ட சந்தனப் பொழுது. அதன் வைட்டமின்-டி வெயில், உடல் முழுக்க கசிவெடுக்கிற வியர்வையை முத்தமிடும்.

முரட்டு வீறிடலுடன் பயந்தோடுகிற பனங்காடை. உவர்மண் புழுதியில் கால் பதித்தும் பதிக்காமலும் பறந்தும் ஓடியுமாக தப்பிக்கிற கௌதாரிகள். மஞ்சணத்தி மரத்தில் ஏறி விளையாடுகிற அணில்.

நடக்க நடக்க நரம்புக்குள் புதுரத்தம் ஊறுவதாக உள்ளுக்குள் நிறைவுத் ததும்பல். நோயை எதிர்த்த... மருந்தில்லாத இயற்கை முறையிலான போராட்டத்தில் ஈடுபட்ட மனக் கிளர்ச்சி. இயற்கையான சூழலிலேயே, இயற்கையான உடற்பயிற்சி. ‘காக்கைக் குருவி எங்கள் ஜாதி’ என்ற அந்யோந்யத்துடன் தாவரங்களோடும், பறவைகளோடும், பிராணிகளோடும் கூடிப் பழகிக் களித்த மனநினைவுப் பறவை. மனப்பறவைக்குரிய ஆகாயச் சந்தோஷம். இயற்கையின் மடிக்குள் பத்திரமாக உயிர் வளர்த்த ஆதிமனித உணர்ச்சியின் மரபுத் தொடர்ச்சி. மனப்பரவசம்.

இந்தப் பரவச மனக் கிளர்ச்சி, நடேசன் பார்க்கில் அனுபவமாவதே இல்லை, சீனிவாசனுக்கு. அதிலும்

இங்குள்ள மௌன மூடாக்கு நெருஞ்சி முள்ளாகக் குத்தும்.

மருந்தில்லாத இயற்கை முறையிலான மருத்துவ மான நடைப்பயிற்சியில் கூடவா, இத்தனை செயற்கை?

வாழ்க்கையே செயற்கை. வாழ்க்கை முறையின் சகலமும் செயற்கை. ஃபேன் காற்று செயற்கை. ஏ.சி. குளிர்ச்சி செயற்கை. காய்கறி, உணவு எல்லாமே செயற்கை. பழங்கள்கூட நாலைந்து நாளாக வளர்ச்சி யற்று உறைந்து போய்விட்ட ஃப்ரீஜ் பழ செயற்கை. போதாக்குறைக்கு-

உணவுக்கும் கூடுதலாக மாத்திரைகள். மருந்துகள். முழுக்க கெமிக்கல்.

என்னடா... இது? நகர வாழ்க்கையா, நரக வாழ்க் கையா? சீமான்கள் பிழைப்பும், நோக்காடு வாழ்க்கை யாக...! எல்லாமே செயற்கையால் வந்த வினை. இயற் கையை விட்டு விலகி விலகி தூரமாகிப் போனதற்கு- அந்நியப்பட்டதற்கு - தந்திருக்கிற விலை.

ரெண்டு வருஷத்துக்கு முன்பு-

கிராமத்தில் உழுகப் போன நிலத்தில் மயங்கி விழுந்துவிட்டான், கோபாலு.

பரம்பரைச் சம்சாரி, சம்சாரி பெற்ற சம்சாரி மகன். சொந்தக் காடுகள். சொந்த மாடுகள். கடும்பாடு.

சட்டை போட்டறியாத திரேகம். உழைப்பில் வியர்த்து வழிகிற நீர்க்கசிவுதான், நிரந்தரச் சட்டை. கடும் உழைப்பாளி.

அப்பேற்பட்டவன் மயங்கிவிழுவது என்றால்...

ஆத்திர அவசரமாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனால்—

சுகர் 320 இருந்திருக்கிறது.

'கோபாலுக்கு சுகர்' என்ற செய்தியும், உண்மையும் கிராமத்து ஆட்களை ரொம்பவும் திடுக்கிட வைத்தது. மனசின் ஆணிவேர் வரைக்கும் அதிர்வலையின் பரவல்.

'நிசமா...? நிசந்தானா' என்று நம்பமாட்டாமல், கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு மாய்ந்தார்கள்.

'உழைப்பாளிக்கும் சீக்காளியாக நேர்கிற அவலம் வருமா' என்ற நிஜத்தை ஜீரணிக்க முடியாமல் தத்தளிக்கிற கிராமம். சட்டை உரித்துக் கொள்கிற அவர்களது நினைவுகள்.

'அங்கு அன்னாருக்கு,' 'இங்கு இன்னாருக்கு மாரடைப்பு' என்று வருகிற பயங்கரத் தகவல்கள்.

"பாத்தி கட்டிக்கிட்டிருக்கையிலேயே நெஞ்சு வலிக்குதுன்னு இடது மார்பை அழுத்துனாரு. தண்ணியா வேர்த்துக் கொட்டுச்சு. கண்ணை மூடுனாரு, வலி தாங்காம. அப்புறம், கண்ணைத் திறக்கவேயில்லே."

இப்படியான காட்சிச் சித்தரிப்புகள் காடு கரைகளின் வேலைத் தளங்களில் சர்வ சாதாரணமாயிற்று.

"பெரியசாமிக்கு சுகர்... இருளாண்டிக்கு ஃபிரஷர்" என்று அதிர்ச்சியும் வியப்பும் தருகிற தகவல்கள், கிராமத்துக் காற்றுக்கு மூச்சுத் திணறலைத் தந்தன.

"உப்புச்சத்து, கிட்னி பெயிலியர். மஞ்சக்காமாலையிலே லிவர் அடிபட்டுருச்சு" இம்மாதிரியான செய்திகள், கிராமத்துக் காற்றில் புழுக்கத்துடன் உலவிற்று.

சீனிவாசனுக்கோ மகாக் குழப்பம். 'என்னாச்சு' என்று புரியாத மனத்திகைப்பு.

நகரம் கிராமம் என்ற வித்தியாசமில்லாமல் நோய் நோக்குமிடமெல்லாம் நீக்கமறப் பரவுதே, இது ஏன்? உடல் உழைப்பாளிகளும் பெரும் சீக்காளியாகிறார்களே, என்ன காரணம்?

சீனிவாசனை உருட்டிப் புரட்டித் திணறடிக்கிற கேள்விகள். நீண்டு வளைந்து நிமிர்ந்து நெஞ்சுக்குள் இருட்டைப் பரப்புகிற சிந்தனைக் குழப்பம்.

பணக்காரச் சீக்குகள் என்று கருதப்பட்டதெல்லாம், எளியவர்களுக்கும் எப்படி வருகின்றன? கடுமையான உடல் உழைப்பாளிகளிடமும் இந்தச் சீக்கு எப்படி வந்து ஒட்டுகின்றன? எதனால்?

நடக்க ஆரம்பித்து நாற்பது நிமிசமாகிவிட்டது. உட்காரலாமா என்று யோசிக்கிற சீனிவாசன். வட்ட மடித்து வந்த வேகநடையில் மெல்லத் தணிந்தான். தொடை, முழங்கால், புஜங்கள் யாவும் களைப்பின் வேதனைப் பரவல்.

சிமெண்டு பெஞ்சு பக்கம் சீனிவாசன் வருகிறபோது-

ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவன். நீலநிற மேல் சட்டையும், ப்ரவுன் கலர் டவுஷரும் போட்டிருந்தான். கனிந்த சிவப்பு. உயிர்க்களை இல்லாத ஒரு வெளிறல். முகத்தில் ஒருவித நோய்ச் சோகை. சட்டையில் ஒட்டுத் தையல்கள்.

"என்ன தம்பி... படிக்கிறீயா?"

"ம்... செவன்த் ஸ்டாண்டார்டு."

“இங்க எதுக்கு வந்துருக்கே?”

“வாக்கிங் போக...”

“என்ன ப்ராப்ளம்?”

“சுகர்.”

சீனிவாசனுக்குள் தேள் கொட்டிய மாதிரியிருந்தது.

பகீரிடுகிற உணர்வு, ஆன்மாவின் ஆணிவேர் வரை உலுக்கியது. நிலநடுக்கத்துக்கு ஆட்பட்ட பூமியாக பிளவு பட்டு, சிதறுண்டு கிடக்கிற சீனிவாசன்.

“உனக்கா? சுகரா? இந்த வயசிலா?”

மூளை சிதறிப் போனவனைப் போல உளறுகிற சீனிவாசன்.

“ரெண்டு வருஷமா?”

“டெய்லி மாத்திரையா?”

“இல்லே. இன்சுலின் இன்ஜெக்ஷன். நானே எனக்கு போட்டுக்குவேன்...”

அவனுக்குப் பழகிப்போன சோகம். மனசை கசக்கிப் பிழிந்து வசக்கிவிட்ட கொடிய வருத்தம். மரத்துப் போன மனசுடன் சர்வ சகஜமாகச் சொல்லிவிட்டு... விளை யாடப் போகவேண்டிய வயசில், ‘வாக்கிங்’ போகிற அந்த அரும்பு.

அந்தச் சிறுவனின் முதுகையே பரிவுடன் பார்க்கிற சீனிவாசனின் கண்ணோரங்களில் மனக்கசிவு. அந்தச் சிறுவன் எறிந்த ஒவ்வொரு சொற்களும், ஒவ்வொரு குண்டாக அவனுள் வெடித்து, அவனைச் சிதறடித்து விட்டது.

"இந்த வயசிலா? இம்புட்டு ஏழைக்கா? இன்சுலின் போடுற அளவுக்கு, சுகரா?"

நம்பமுடியாத நிஜத்தின் மூர்க்கத் தாக்குதலில் வெலவெலத்துக் கிடக்கிற சீனிவாசன்.

'இந்த வயசுலே நமக்கு இம்புட்டு சீக்குகளா' என்று மனசை அழுத்திக் கொண்டிருந்த சுய கழிவிரக்கம், போன மாயம் தெரியாமல் போயிற்று.

யந்திரம் போல நடந்தான். வைத்தியநாதன் தெரு கட்சியாபீசுக்குள் போனான். அவனுக்குள்... அந்தச் சிவந்த முகத்துச் சிறுவன். சோகை படிந்த அந்தக் கண்ணின் சோக நிழல்.

சீனிவாசனை சித்ரவதை செய்கிற நினைவு ராட்சஸம்.

பீகார், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் என்று இந்தியா பூராவும் சுற்றி வருகிற விவசாயிகள் சங்கத் தலைவர், நாளிதழ் ஒன்றை விரித்துப் படித்துக் கொண்டிருந்தார். அறிவுக் களையான முகம். கனத்த கண்ணாடி. நறுக்கிவிடப்பட்ட மீசை. அவர் விரித்துப் படித்துக் கொண்டிருக்கிற மூன்றாம் பக்கத்தில் நாலு காலச் செய்தி.

"சர்க்கரை நோய் உலகத்தின் தலைநகரமாக மாறுகிற இந்தியா. வேகமாக நோய் பரவுகிறது. விஞ்ஞானிகளின் திடுக்கிடும் தகவல்."

இவனுக்குள் சிறுவன். கோபாலு மனக்கொதிப் போடு கேட்டான். தெறிப்பான கேள்வி.

"என்ன தோழர், நம்ம தேசமே, நோய்த் தேசமாகுது".

அவருக்குள்ளும் அதே நினைவுச் சலனங்கள். வருத்தம் தொனிக்கிற ஈரக் குரலில் சட்டென்று சொன்னார்.

"எல்லாம்.. பசுமைப் புரட்சியோட சைடு எஃபெக்ட். மோசமான பக்க விளைவு."

திகைப்பின் நிழலிருட்டு அவன் கண்ணில். குழப்பமாகிப் போன நினைவு. 'இதுக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்? மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சா?'

"பெருகி வர்ற ஜனத்தொகைக்கேற்ப உணவு உற்பத்தியைப் பெருக்குறதுக்காக வந்த பசுமைப் புரட்சி. எல்லாத்தையும் ஒட்டுரக வீர்ய விதைகளாக்கிருச்சு. சம்பா அரிசி காணாமல் போய்... ஐ ஆர் இருபது அரிசி. ஒட்டுக்கம்பு. ஒட்டுச் சோளம். காய்கறிக உள்பட எல்லாமே ஒட்டு வீர்ய விதைகள். பேருதான், வீர்ய விதைகள். மனுசரோட நோய் எதிர்ப்புச் சக்திங்குற வீர்யத்தை சாகடிச்சிட்ட விதைகள்."

"அப்படீன்னா...?"

"வீர்ய விதைகள். பெரிய விளைச்சலைத் தந்துச்சு. அந்த உணவைத் திங்குற நமக்கு சதை வளர்ந்துச்சு. கொழுப்பு வளர்ந்துச்சு. வேற சத்துக எல்லாம் வளர்ந்துச்சு. நோய் எதிர்ப்புச் சக்திங்கிற உயிர்ச்சத்து மட்டும் இல்லாமல் போச்சு."

திகைப்பும் வெளிச்சமும் அவனுள் ஒளி நிழலாட, திறந்த வாய் மூடாமல் அவரையே நோக்குகிற சீனிவாசன்.

"ஒட்டுரக வீர்ய விதைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்றபோது, கூடுதல் விளைச்சல் பெறுறதுக்காக ரசாயன உரங்க, பூச்சிகொல்லி நச்சு மருந்துகதான் பயன்படுத்துறாக. இதுக எல்லாமே புதுப்புது நோய்களை உருவாக்குது. ஆக- நாம சாப்பாடுன்னு நெனைச்சு சாப்பிடுற எல்லாச் சாப்பாடும், சாப்பாடு இல்லே... நோ(ய்)க்காடுகதான். நோய் எதிர்ப்புச் சக்தியை தின்னு முடிச்சுட்டு மேய்ற நோக்காடுக.

விதைப் பண்டங்களும் விவசாய முறைகளும் செயற்கையாகிப் போனதாலே... வந்துருக்கிற வினை. சிறுசு, பெரிசு, உழைக்குறவன், சோம்பேரி எல்லாருக்கும் சீக்குன்னு ஆகிப்போச்சு..."

"வினையிலேருந்து தப்பிக்கணும்னா?"

"நம்ம மண்ணுக்கும் நம்ம மக்களுக்கும் பொருத்தமான இயற்கை முறையிலான விவசாய முறையை நடைமுறைப்படுத்துறதுதான்...! பசுமைப்புரட்சிக்கு முந்திய உணவுதானியம், காய்கறி விதைப் பண்டங்களும், ரசாயன உரம், பூச்சிகொல்லி நஞ்சு இல்லாத வெள்ளாமை முறையும் மறுபடியும் கொண்டு வரணும்?"

"பின்னோக்கிப் போறது, பிற்போக்கு இல்லையா?"

"போய்க்கிட்டிருக்கிற போக்குலே தடுமாறி சறுக்கி விழுந்துட்டா... எந்திச்சு, தூசியைத் தட்டிக்கிட்டு முன்னோக்கி நடக்குறது, எப்படி பிற்போக்காகும்?"

சீனிவாசனுக்குள் ஏகப்பட்ட கதவுகளும் ஜன்னல்களும் திறந்துகொண்ட மாதிரியிருந்தது. இயற்கையான காற்றும் சூரிய வெளிச்சமும் புகுந்து, ஆன்மாவை வருடுவது போலிருந்தது.

*இந்தப் பேருண்மையை... கோபாலுவிடம் போய் சொல்லணும். அந்தச் சிறுவனிடம் சொல்லணும். நம்ம ஊர்லே போய் எல்லார்கிட்டேயும் சொல்லணும். எல்லா ஊர்கள்லேயும் படைபடையாய் போய், நடை நடையாய் நடந்து... கதைகதையாய் சொல்லணும்.*

*சொன்னால் கேட்பார்களா?*

*சொல்வது, மனிதக் கடமை. மனிதர்களின் சமூகப் பொறுப்பு. ஊதுகிற சங்கை ஊதி வைக்கணும்.*

*அடைந்த பொழுது, விடியாமலா போகும்?*

*சீனிவாசனுக்குள் அந்தச் சிறுவன். சிவந்த முகத்துச் சிறுவன். மனச்சாட்சியை உலுக்கி, உசுப்பி, செயல்படுத்து கிற சாட்டைச் சுழற்சியாக அந்தச் சிறுவனின் சோகை முகம்.*

–புதிய பார்வை, அக்டோபர் 2006.
–தாய்மண்ணே வணக்கம்.

# 15 | ஒண்ணே ஒண்ணு

சின்னக்கனிக்கு கோபம் என்றால் கோபம், அப்படியொரு கோபம். அடக்கி அடக்கிப் பார்த்தாலும், அடங்க மறுத்து கொந்தளிக்கிற கோபம்.

மேலக்களத்தில் அவன் தனித்து நிற்கிறான். அங்குட்டு மேலக்கடைசியிலே சில்லாங்குச்சி விளையாடிக் கொண்டிருக்கிற பயல்கள். அதிலும் அந்த ஊளை மூக்குப்பயல். நழுவிக்கொண்டு போகிற டவுஷரை இழுத்து இழுத்து, அர்ணாக் கயிற்றில் சொருகிக்கொண்டு, இவனை அடிக்கொரு தரம் கர்வமாக ஏறிட்டுப் பார்த்துக் கொள்கிற கருவாயன். ஒழுகிய மூக்கை புறங்கையால் இழுவி இழுவி கன்னத்தில் படிந்திருக்கிற கறையை அப்பியிருக்கிற புழுதி மறைக்கிறது.

சின்னக்கனிக்குள் வெளம் வெளமாக வந்தது. பல்லைப் பல்லைக் கடித்தான். அப்படியே மண்ணையள்ளி சப்பென்று எறிந்துவிட்டு ஓடிவிடலாமா? அல்லது கல்லெடுத்து ஊளை மூக்குப் பயலைக் குறிபார்த்து, நச்சென்று எறிந்துவிட்டு ஓடிவிடலாமா?

இவனைப் பார்த்து வெற்றிப் பார்வை பார்க்கிற ஊளை மூக்குப்பயல். இடது உள்ளங்கைக்குள் கிடக்கிற குச்சியைத் தூக்கிப் போட்டு... வலது கையிலிருக்கும்

கட்டைக் குச்சியால் ஓங்கியடிக்கிற அவனது ஸ்டைல். விர்ர்ர்ரென்று இரைச்சலுடன் பறக்கிற குச்சி... அதை அப்படியே கப்பென்று பிடித்துவிட அண்ணாக்க பார்த்துக்கொண்டே ஓடுகிற சிறுபயல்கள். ஆகாய வெளியில் பறந்து கீழே விழுந்த குச்சியை ஓடி எடுத்து, "போடட்டா" என்கிற சிவலைப் பயல்.

குழிக்குப் பக்கத்தில் சற்றே குனிந்த நிலையில் கட்டைக் குச்சியால் தட்டிக்கொண்டே... இந்தப் பக்கம் பார்க்கிற ஊளைமூக்கு, பெரீய்ய வீரன்னு நெனைப்பு.

சின்னக்கனிக்கு பொங்கிக்கொண்டு வருகிற ஆங்காரம். வியர்த்திருக்கிற உள்ளங்கைக்குள் வகையான சீனிக்கல்.

குறிபார்த்து எறிந்துவிட்டால்... ஊளைமூக்குப் பயலுக்கு ரத்தம் வழியும். கிறுகிறுத்து கீழே சாய்ந்துவிடு வான்.

ஆனா... ஆனா...

ஊளைமூக்கனுடைய அய்யாவும் அம்மாவும் அழு கையும் ஆத்திரமுமாக அலறிக்கொண்டு வருவார்கள். தெருவையே கூட்டுவார்கள்.

"அய்யோ பாதரவே... இந்தக் கொடுமையை கேப்பா ரில்லியா? பாப்பாரில்லையா? சும்மா வெள்ளாண்டுக் கிட்டிருந்த பச்சை மண்ணை கல்லுட்டு எறிஞ்சு மண்டையை ஒடைச்சிருக்கானே... இந்த சின்னக்கனிப் பய. இவன் வெளங்குவானா? இவன் கையிலே புத்து பெறப்புட. இவனைப் பெத்து வளர்த்து ஊர்லே திரிய விட்டிருக்கிற பொட்டச்சிக்கு மானமிருக்கா? ரோஷ

மிருக்கா? நாண்டுக்கிட்டுச் சாகவேண்டாம், 'இப்படி'ப் புள்ளையைப் பெத்ததுக்கு...?"

காயடிக்கப்பட்ட கடாய்க்குட்டி மாதிரி 'வாள், வாள்' என்று கத்திக் கதறி... ஊரைக் கூட்டுவாள். 'ஊரே கேள், நாடே கேள்' என்று நாறடிப்பாள்.

அப்புறம்... இவனது அய்யா... இவனைப் பிடித்து... அடிஅடியென்று அடித்து... சாணியை பிதுக்கிருவார். நாலு நாளைக்கு ஒத்தடம் குடுத்தாலும், வலி குறையாது. அம்புட்டுத் தூரத்துக்கு மப்பைக் கழட்டிருவார்...

இதையெல்லாம் நினைத்துப் பார்த்து, வியர்வையிலேயே புழுங்குகிற சீனிக்கல். உள்ளங்கைக்குள் சிறைப் பட்டிருக்கிறது. துறுதுறுக்கிறது.

இவனிடமும் சில்லாங்குச்சி இருந்தது. வகையான குச்சி. மஞ்சணத்திக் கட்டையில் கிழவி குளத்து ஆசாரி செதுக்கிக் கொடுத்திருந்தார். பொடிக் குச்சியின் இரு முனைகளையும் ஊசி மாதிரி இழைத்திருந்தார். அடிக்குச்சியின் கைபிடியில் அரிவாள் கைபிடி மாதிரி வேலைப்பாடு செய்து கொடுத்திருந்தார்.

"யோவ் கிழவிகுளம், நம்ம பய என்னமோ 'சில்லாங் குச்சி, சில்லாங்குச்சி'ன்னு உசுரை வாங்குதான். என்னத் தையோ ஒண்ணை செதுக்கித் தாரும்யா."

"வருசக் கொத்து தர்ற மகாராசாமாருக சொல்றதை வாங்கிச் சாப்புடுற ஆசாரி மறுத்திர முடியுமா? புள்ளாண்டன் மனசுக்கேத்த மாதிரி சில்லாங்குச்சி செய்ஞ்சு தர்றேன். தந்துடுறேன்யா. போதுமா?"

நல்லாவே செய்திருந்தார். சந்தனக்கட்டை மாதிரி தங்க நிறம். கையில் வைத்திருந்தாலே கம்பீரமாக

இருக்கும். பெரீயய்ய தலைவர் மாதிரி சின்னக்கனி. பயல்களெல்லாம் சுற்றிச் சுற்றி வருவார்கள்.

"வெளையாடுவமா ?"

"களத்துக்குப் போவமா ?"

"நா வரட்டா ?"

அலைபாய்ந்து வருவான்கள். இவனுக்கு ஏகக் கிராக்கி. ஆல்ர்ய் பறந்து வருகிற பயல்களைப் பார்த் தாலே இவனுக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கும். றெக்கை முளைத்து பறக்கிற மாதிரி, மனசு கிடந்து தத்தளிக்கும். ஆதாளி தாங்காமல் மிதக்கும். தான் ராசாப் ப்ட்டம் கட்டிய சக்கரவர்த்தி மாதிரி மதிக்கப்படுவதாக நினைத்தான்.

பள்ளிக்கூடம் விட்டவுடன் பைக்கட்டை வீட்டில் போட்ட மாயத்தில் களத்தில்தான் நிற்பார்கள்.

சாயங்காலம் காப்பி குடிக்க ஆள்மேல் ஆள் தேடி வரும். அக்கா வருவாள்.

"ஏலேய்... ஒன்னை அம்மா கூப்புடுதா."

"போ... நா வெளையாடணும்..."

"வருவீயா... வரமாட்டீயா ?"

"என்ன அரட்டுதே? என்னத்துக்காம் ?"

"காப்பி குடிக்க வருவீயாம்..."

"ஆமா... தேயிலைத் தண்ணியை குடிச்சுட்டாலும்... வெளங்கிரும்."

"வா.. வா.. ஒன்னை அய்யாகிட்டே சொல்லுதேன்.."

“போ.. போ.. போய்ச் சொல்லு. சொல்லுச் சொல்லு, சோளத்தட்டையை மெல்லு மெல்லு.”

இவன் அடிக்கிற சில்லாங்குச்சி, விர்ரென்று அம்புமாதிரி இரைச்சல் போடும். அதைப் பிடிக்க... அண்ணாக்கப் பாத்து ஓடுகிற பயல்கள். புழுதி பறக்கும். ஒரே கூவல் காடாகக் கிடக்கும்.

அப்படி ஓடுகிற பயல்கள் தடுமாறி விழுவதுவும் உண்டு. முழங்கையில் சிராய்ப்பு வந்து, ரத்தம் கோதி நிற்கும். சிலசமயம் அப்படிப் பாய்ந்து பறக்கிற குச்சி... பயல்களின் நெற்றியில் - கன்னத்தில் குத்திப் பாயும். ஊசி மாதிரியான குச்சி. நங்கென்று மோதி.. சதக்கென்று குத்தும். குத்துக்காயம் போல ரத்தம் குபுக்கென்று கொப்பளிக்கும். அம்புட்டுத்தான்.

காயம்பட்ட பயலின் அம்மா வந்து, அழுகையும் சாபமுமாய் வீட்டு முற்றத்தில் வந்து கத்துவாள். ஆங் காரத்தில் மண்ணை வாரித் தூற்றுவாள். ஊரே வந்து கூடி நின்று கூத்து பார்க்கும்.

சின்னக்கனியின் அம்மா லொங்கிப் போய் நிற்பாள். அவமானத்தில் குன்றிப் போவாள்.

“இப்படி... ஊர்லே அகப்பட்ட சனியன்களை யெல்லாம் இழுத்துக் கொண்ணாந்து வீட்லே விட்டு கூத்து கட்டுகிற கோணப்பயலா வந்து பெறந்துருக் கானே... என்னைக் கேவலப்படுத்தி சீரழிக்கானே. ஒண்ணுக்குமத்த சின்னச்சிறுக்கியெல்லாம் வாயை நீட்டிப் பேச வைச்சு... வேடிக்கை பாக்கானே...” என்று அம்மா ஒரு பாட்டம் வைது தீர்ப்பாள். மனக்கொதிப்பும் பாசத் தத்தளிப்பும் கலந்த அங்கலாய்ப்பு.

சில்லாங்குச்சி செய்து கொடுக்கச் சொன்ன அய்யா மேல் அம்மா பாய்வாள். வீடு, ரணகளப்படும். சண்டையும் சத்தக் காடுமாக மூச்சுத் திணறும். அய்யாவும் அம்மாவும் போடுகிற சண்டைக் காட்டில் அடுப்பங்கரை சும்மா கிடக்கும்.

“எல்லாம்... ஒன்னாலேதானே?” என்று ரகசியமாக கண்டிக்கிற அக்கா.

ஒருதடவை இவன் அடித்த அடியில் சிவ்வென்று பறந்த குச்சி, மூக்கம்மா வீட்டு ஓட்டில் பட்டென்று தெறித்து மோதியதில்...

ரெண்டு ஓடுகள் சில்லுசில்லாக சிதறித் தெறித்தன. அது பெரும் சண்டையில் முடிய... பஞ்சாயத்து கூடி விட்டது. மேல் துண்டை கையிலெடுத்து குற்றவாளியாக நின்ற அய்யா. குத்துண்ட குருவியாக வாடிக் கிடந்த அவரது முகம். அதிலிருந்த வலி.

ஊர்க்கூட்டத்தில் ஆள்ஆளுக்கு வாய்க்கு வந்தபடி பேசினார்கள். சீறிச் சினந்தார்கள். அய்யா தலை தொங்கிப் போய் நிக்கிறதைப் பார்க்கப் பார்க்க பாவமாக இருந்தது.

அம்மாவுக்கு தாங்கமுடியாத வெளம். ஆங்காரமும் ஆவேசமுமாய் இவனைப் போட்டு சாத்தினாள். மிச்ச மிருந்த கட்டைக்குச்சியை அடுப்பில் வைத்தாள். இவன் விசும்பி விசும்பி அழுதுகொண்டே அதைப் பார்த்தான்.

அதனால் களத்துக்குப் போய், விளையாடுவதையே விட்டுவிட்டான் என்றெல்லாம் யாரும் நினைத்துக் கொள்ள முடியாது. கிராமத்தில் சண்டை சத்தம், வம்பு வழக்கு என்பதெல்லாம் ரொம்பச் சகஜம்.

இதற்காகவெல்லாம் விளையாட்டை நிறுத்திவிட முடியுமா?

அவன் பைக்கட்டைப் போட்ட அடுத்த செகண்டில், களத்தில்தான் நிற்பான். ஒவ்வொரு சீசனிலும் ஒவ்வொரு விளையாட்டு. பயல்கள் அத்தனை பேரும் வந்து குவிந்துவிடுவார்கள்.

ஒரே குதூகலக் கூப்பாடாகக் கிடக்கும். அந்தி நேரத்து ஆலமரத்து மைனாக்கள் போல 'கச்சடி, புச்சடி' என்று ஒரே சத்தக் காடாகக் கிடந்து, பயல்கள் இரை வார்கள்.

கிளித்தட்டு விளையாடுவார்கள். எறிபந்து விளை யாடுவார்கள். எறிபந்து விளையாட்டு என்றால்... ஒரே மகிழ்ச்சி. பயல்கள் ஆதாளி பண்ணி சந்தோஷப்படு வார்கள். சட்டை மறைப்புக்குள் கையை வைத்துக் கொண்டு விரட்டுவான்கள். எதிர் குரூப் பையன்கள் படப்புக்காடு, கடவுக்காடு, தாழ்வாரம் என்று ஓடிஓடி ஒளிவார்கள்.

எவன் கையில் பந்து இருந்து எறிவானோ என்று எல்லாப் பயல்களுக்கும் பயந்து ஓடுவதை நினைத்தாலே, அவனவனுக்கு சிரிப்பாணி அள்ளிக்கொண்டு வரும்.

சில்லாங்குச்சி விளையாட்டைப் போலவே, பம்பரம் விளையாட்டும் எப்பவும் நடக்கும். கபடி விளையாட்டும் புழுதியைக் கிளப்பும்.

வட்டத்துக்குள் கிடக்கிற பம்பரங்கள், குத்து தாங்காமல் ரெண்டாகப் பிளந்துவிடும். பிளந்து தெறித்த பம்பரக்காரன் முகம் குறாவி (குறைஆவி)ப் போய்விடு

வான். கண்ணீர் வந்துவிடும். அவனை மற்ற பயல்கள் எல்லாம் கோட்டி பண்ணி, ஒரே சிரிப்பாணிக் கூத்தாகக் கிடக்கும்.

சின்னக்கனிக்கு அம்மா மடியை விட இந்தக் களம் ரொம்பப் பிடிக்கும். மிளகாய் வற்றல் காய்கிற பங்குனி மாசம், பச்சை வைக்கோல் காய்கிற தை மாசம்கூட... களத்தின் மூலைமுக்குகளில் வந்து விளையாட இடம் பிடித்துவிடுவான்கள்.

மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப் படுத்திக் கொள்வதில் ஒரு சந்தோஷம் இருக்கிறது. மனசே கழுவி வைத்த பாத்திரம் போல சுத்தமாக மின்னிச் சிரிக்கும். பள்ளியின் கசடுகளையெல்லாம் கழுவிக் கொள்ளலாம். வியர்வையும் இரைப்புமாக ஓடித் தவிப்பதுவும் மனசுக்கு ஒரு துள்ளல்தான். ஒரு உடற்பயிற்சிதான்.

இன்றைக்கு சின்னக்கனி அம்மா தந்த காப்பியை ஊதி ஊதி சூடாற்றி குடித்து முடித்துவிட்டு வருவதற்குக் கொஞ்சம் தாமதமாகிவிட்டது.

அதற்குள் விளையாட்டில் குரூப் பிரித்து... லீடர் அமைத்து... துவக்கிவிட்டார்கள்.

“ஏலேய்... ஏலேய்... நா வாரேண்டா.”

சின்னக்கனி கெஞ்சிக் கெஞ்சி நச்சரித்தான்.

மற்ற பயல்களெல்லாம் இவனது நச்சரிப்பைப் பரிசீலிக்கலாமே என்கிற நிதானத்தில் திகைக்க.. ஊளை மூக்கன்தான் ஒரேயடியாக மறுத்துவிட்டான்.

"அதெல்லாம் முடியாது. ஆட்டை துவங்கியாச்சு. நீ வேண்டாம்... வேண்டாம்..."

"ஏய் வாரேண்டா..."

"வேண்டாம்னா... வேண்டாந்தான்..."

"ஏலேய்... ஏலேய்... என்னையும் சேத்துக்கடா..."

"ஓங்கிட்டே சில்லாங்குச்சி இருக்குறப்ப... என்னை எம்புட்டுத் தடவை அம்போன்னு அத்துவுட்டுருக்கே?"

ஊளைமூக்கனின் வன்மமான குரலில், சின்னக்கனி உடைந்து போய்விட்டான்.

"கபடமான பய- வஞ்சத்தை மனசுலே வைச்சிருந்து- டயம் வர்றப்ப- வன்மத்தைக் காட்டுதான்- பழிகாரப்பய- இருக்கட்டும் இருக்கட்டும்... பாத்துக்கிடுதேன்..."

கோபம் கோபமாக வந்தது. வெளம் என்றால் வெளம்... அப்படியொரு வெளம். நெஞ்சுக்குள் திகுதிகுவென்று எரிந்தது.

சீனிக்கல்லால் ஒரே இறுக்காக இறுக்கிவிட்டுருவமா என்று துறுதுறுக்கிற கோபமனசு.

பல்லைக் கடித்துத் தன்னை அடக்கிக்கொண்டான்.

ஓடி விளையாடிய உடம்பு. ஓடி ஓடி விளையாடி உல்லாசத்தை ருசித்த மனசு. இருப்புக் கொள்ளாமல் தவித்து, பரபரக்கிற சின்னக்கனி.

'ஊளைமூக்கன் மூஞ்சியிலே காறித் துப்புற மாதிரி, என்னமாச்சும் செய்யணுமே' என்று துடியாய்த் துடித்தான்.

ஒரே பாய்ச்சலில் வீட்டுக்குப் போனான். முள் நறுக்கப் போட்டிருந்த நொண்டி அரிவாளை எடுத்தான்.

சீமைக்கருவேல விளாரில் ஒரு பருத்த குச்சியை வெட்டினான். தொலியை உரித்தான். அரிவாளால் கொத்தலும் குதறலுமாக செதுக்கினான். உள்ளங்கை யெல்லாம் கன்றிச் சிவந்துவிட்டது. தீயாய்க் காந்தியது. சில இடத்தில் தோல் உரிந்து புண்ணாகிவிட்டது.

அதையெல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ள வில்லை. சட்டையில் உள்ளங்கையைத் துடைத்துக் கொண்டான். ஊளைமூக்கன் முன்னால், சில்லாங் குச்சியுடன் நின்றாக வேண்டும் என்கிற வெறி.

பரந்து கிடந்த மைதானத்தில் - களத்தில் - சட்டென்று உதயமானான், சின்னக்கனி. முகமெல்லாம் வியர்வைக் கசகசப்பும், வெற்றிச் சிரிப்பும்.

"ரைட்... சில்லாங்குச்சி ரெடி. யாருயாரு வெளை யாட வர்றது? வர்றவன்லாம் வரலாம்..."

வாகை சூடிய கெளிமிதத்துடன் பிரகடனம் செய் கிற சின்னக்கனி. அவன் கண்ணில் ஓர் ஆனந்த மின்னல்.

இவன் பக்கமும் சிலர் வர... ஊளைமூக்கன் குரூப் பிலிருந்தும் ரெண்டொரு பயல்கள் இங்கு வர...

ரெண்டு டீமும் தனித்தனியாக விளையாட- ஊளை மூக்கன் மூஞ்சி கறுத்துப்போனது.

**சி**ன்னக்கனிக்குக் கல்யாணமாகி ஒரு பிள்ளை. பொம்பளைப் பிள்ளையைத் தூக்கி நெஞ்சில் வைத்துக் கொண்டு ஆசைஆசையாக டி.வி.யைக் காட்ட பஞ்சா

யத்து டி.வி.க்கு வந்தான். "அய்ய்... அய்ய்... பாப்பா... இந்தா... டி.வி.யைப் பாரு."

பஞ்சாயத்து டிவி. முன்பு பள்ளிக்கூடத்து பையன்கள் கிடையாடுகளாக அடைந்து கிடந்தனர். ஒருத்தரை ஒருத்தர் உரசிக்கொண்டும்... இடித்துக்கொண்டும் உட்கார்ந்திருந்தனர். உட்கார இடமில்லாமல்– டி.வி.யைப் பார்க்கிற ஆவலில் ஒருத்தர் மடியில் ஒருத்தர் உட்கார்ந்தனர். மனிதவெக்கை.

கிரிக்கெட் மேட்ச் டி.வி.யில் நடந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்க்கிற ஆவல் பரபரப்பில் பயல்கள்.

விளையாடுகிறவர்களைப் பற்றிய கமெண்ட்கள். சிக்ஸர்... பவ்லர்... ரன்... என்று ஒரே கூவல் காடு.

அம்மா மடியை விடவும் பிடித்திருந்த களம், இப்போது இல்லை. அந்த இடத்தில் ரெண்டு மூன்று வீடுகள்.

ஏகப்பட்ட வீடுகளில் டி.வி., கேபிள் கனெக்ஷன்.

"இப்பவெல்லாம்.. சின்னப் பயக எல்லா வகையான வெளையாட்டையும் அயத்துட்டாக. கிரிக்கெட் ஒண்ணே ஒண்ணுதான் தெரியும். அதையும் விளை யாடுறதுல்லே. உக்காந்து பாக்குறாங்க... பயக"

சின்னக்கனி கால்மாட்டில் உட்கார்ந்து டி.வி. பார்க்கிற டவுஷர் பயல்களைப் பார்த்துக்கொண்டே யோசிக்கிறான். சோகமான யோசிப்பு.

யோசனையை அறுக்கிற மாதிரி... கைப்பிள்ளை சிணுங்கியது.

–'கதைசொல்லி'–ஜூலை இதழ்–2007

# 16 அரண்டவள் கண்

*கடுகு வெடித்தவுடன் தாளிசச் சட்டியில் புளிக்கரைசலை ஊற்றினாள், ராஜம். 'சுர்ர்ர்'ரென்று தன்மானச் சீற்றத்துடன் சத்தம் எழுப்பியது. அம்மியில் அரைத்து உணுக்கி வைத்திருந்த பூடு, மிளகு போட்டு மூடினாள். ரசத்தின் வாசம் கமழ்ந்தது.*

*அதை ரசிக்க பொறுமையில்லாமல் பரபரக்கிறாள். தலைக்கு மேல் ஆயிரத்தெட்டு சோலிகள். முள் மேல் நிற்பதைப் போலிருந்தாள்.*

*விளக்குமாறு எடுத்து 'சள், சள்'ளென்று வீடு முழுக்க தூற்றிப் பெருக்கினாள். ஜாக்கட் முழுக்க வியர்வைக் கசகசப்பு. முகத்தில் வந்து விழுகிற முடிக்கற்றைகளிலும் வியர்வைத் துளிகள். கையால் ஒதுக்கி, காதோரம் சொருகிக் கொண்டாள்.*

*'சோறாக்குற சோலி முடிஞ்சது' என்று ஆசுவாசப்பட முடியவில்லை. இன்னும் கிடந்து நச்சரிக்கிற வேலைகள்.*

*சாப்பிட உட்கார்ந்தவுடன், "அப்பளம் இருக்கா" என்று கேட்பான், முருகேசன். இல்லே என்கிற மாதிரி முகபாவனை காட்டினால் போதும், அவனுக்கு சுள்ளென்று கோபம் வந்துவிடும். சின்ன முகத்தில் ஏழு கோணல்கள்.*

'கோபத்துலே அவுக அப்பனை அப்படியே உரிச்சிக் கிட்டு வந்துருக்கான்' என்று மகனைப் பற்றி நினைத்துக் கொள்கிறாள். உள்ளுக்குள் ஒரு பாசப் பெருமிதம்.

கடைக்கு ஓட்டமாய் ஓடுகிறாள். ஐந்து அப்பளம் வாங்கிக்கொண்டு ஓடி வருகிறாள்.

வீட்டு முன்தாழ்வாரத்தில் கட்டிக் கிடக்கிற இரண்டு கிடாய்க் குட்டிகள். கொழையில்லாமல் தொங்குகிற வெறும் கயிறு. 'ம்ம்ம்மேய்ய்க்'கென்று அடிவயிற் றிலிருந்து குரலெடுத்து கனைக்கிற குட்டிகள். 'ம்மா... பசிக்குது' என்று அந்தக் கனைப்புக்கு அர்த்தம். வீட்டில் ஒரு காய்ந்த சருகோ இலைகளின் இணுக்கோ இல்லை.

'வாயில்லாச் சீவனை பட்டினி போடலாமா? பாவ மில்லியா? என்ன பாவம் செய்ஞ்சோமோ... இப்படிச் சீரழியுறோம். இது போதாதா?'

இரக்கப்படுகிற மனநெகிழ்வான தருணத்திலும், வாழ்வின் கசப்புகளை எண்ணி மாய்கிற அவலம்.

'மேலப்புஞ்சைக்கு ஓடணும். அகத்திக் கொழையும், ஆமணக்குக் கொழையும் ஒடித்துக்கொண்டு வரணும். பொழுது மேற்கில் விழுந்து, ரொம்ப நேரமாயிருச்சு. சாம்பல் பூத்த இருட்டு வந்துக்கிட்டிருக்கு...'

ஓடித் தட்டழிகிற நினைவுகள். நினைவுக்கும் முந்து கிற வேகத்தில் நடை. 'தக்,தக்,தக்'கென்று தரை அதிர்கிறது-

"யம்மா... விடியக்காலம் ஸ்கூலுக்குப் போறதுக்கு டிரஸ் வேணும்மா... துவைச்சு காயப் போட்டு வை..."

வாளியில் நனைய வைக்கப்பட்டிருக்கிற முருகேசனின் காக்கி டவுஷரும், வெள்ளைச் சட்டையும் உடம்பெல்லாம் உப்பு பூத்துக் கிடக்கிற வியர்வைக் கோடுகள். நாயக்கர் புஞ்சையில் பருத்திக்குள் களை வெட்டிய அலுப்பு. வேனாக் கொதிக்கிற கொலைகார வெயிலில் உயிரைக் கொட்டி வந்த களைப்பு. குளிக்கணும். அதுவும் ஒரு சோலி.

நடையை எட்டிப் போட்டாள். அப்பளம் பொரித் தாள்.

வீட்டுக்கதவை இழுத்துச் சாத்தினாள். அவளை அண்ணாந்து பார்த்து கனைக்கிற கிடாய்க் குட்டிகள்.

'பாவம் அதுகள்' என்கிற பரிவுடன் அதை வருடிவிட்டு மேலப்புஞ்சைக்கு ஓடுகிறாள். காலுக்குள் கரிய இருள். தெருவிளக்குகள் விழித்துக்கொண்டன.

துரத்தி துரத்தி நச்சரிக்கிற வேலைகள். ஒற்றை மனுசி யாக அவற்றோடு மல்லுக்கட்டி மாய்கிற அயற்சி.

"அந்த ஒழுக்கரிசிச் சீவன் இல்லாமப் போனதாலே... ஒத்தை மனுசியா கிடந்து அல்லாட வேண்டியிருக்கு."

அவலமான முணுமுணுப்பு. உள்ளுக்குள் பரவுகிற வெட்க உணர்ச்சி.

எவளுடனோ ஓடிப்போன புருஷன். மோகத்தில் ஓடிப்போய்விட்டவன். இவளது பெண்மையை அவ மானப்படுத்திவிட்டுப் போனவன். புறக்கணிக்கப்பட்ட இழிவு.

உடலும் மனசும் புண்ணாகி... அவமானப்பட்டு... தனக்குத்தானே அசிங்கமாகி... சீப்பட்டு அவள் நின்று

புலம்பினாள். வீட்டில் எந்நேரமும் சண்டைக் காடு. வெக்கை.

அவன் யாருடனோ ஓடிப் போய்விட்டான் என்று கேள்விப்பட்ட முதல் கணத்தில்- 'அப்பாடா' என்றிருந்த மனசு. விட்டு விடுதலையான மகிழ்ச்சி. சனியன் தொலைஞ்சது என்றிருந்த சந்தோஷம்.

எல்லாம்... ரெண்டு மாசம்தான்.

அவன் இல்லாத வெறுமை, முள்ளாக உறுத்தியது. தனிமை வாட்டியது. அனாதை என்ற நிலையின் பயங் கரத்தை உணர்ந்தபோது... உள்ளுக்குள் வலித்தபோது.

ஒழக்கரிசிச் சீவனின் அருமையை உணர உணர... தனது தலையெழுத்து ஏனிப்படி கோண எழுத்தாயிற்று என்று எண்ணி எண்ணி அழுவாள்.

முருகேசன் அழுகிற அம்மாவை அச்சமும் கருணை யுமாகப் பார்ப்பான். அவனும் அழப்போவதைப் போல அடிஉதடு நெளியும். கண்ணில் நீர்த்துளி மின்னும்.

"அழாதேம்மா... அய்யா போனா போவட்டும்மா. நா இருக்கேம்மா..."

அவனை இழுத்து மடியில் போட்டுக் கொள்வாள். வயிற்றுப் புருஷனை நினைத்து பெருமிதமும், பூரிப்புமாக பரவசப்பட்டு வெடித்துக் கதறியழுவாள்.

"இந்தப் பச்சை மண்ணுக்கு இருக்குற ஈரம்கூட தாலி கட்டுன அந்தப் பாவிக்கு இல்லாமப் போச்சே..."

அவள் மனசின் கொதிப்பு, முணுமுணுப்பாக உதிரும். மண்டை வெல்லமும் தேயிலையும் கொதிக்கப்

போட்டு, ஒரு வாய் காப்பித் தண்ணீர் குடித்தாலாவது ஒரு தெம்பு வரும். அதுக்கும் வழியில்லை. உடம்பெல் லாம் அயற்சி.

மேலப்புஞ்சைக்குப் போகணுமே என்று பதைப் புடன் நடையை எட்டிப் போட்டாள். பூச்சி பொட்டு இருந்தாலும் கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு இருட்டி விட்டது.

வேதக்கோயில் வாசலில் உட்கார்ந்திருக்கிற முத்து வேலு. இவள் விருட்டென்று கடந்தபோது உள்ளுக்குள் சுருக்கென்று ஓர் உணர்வு. முத்துவேலுவின் பார்வை, இவள் மார்பில் நிலைத்து விலகிய மாதிரியோர் பிரமை. நிஜமா...மாய நினைப்பா?

கடந்து நாலெட்டு வைத்தபின்பும் அரை வெட்டாக திரும்பிப் பார்க்க... இவளையே வெறித்த அவனது கண்.

மனசின் வெறுப்பை காறித் துப்பிவிட்டு நடந்தாள். அப்பளம் வாங்கிக்கொண்டு அவசரமாக ஓடி வந்த போது... ஆலமரத்தடியில் உட்கார்ந்திருந்தான். இவளது முகத்தையே பார்த்துவிட்டு...

"என்ன ராசம், ஒரே ஓட்டமாயிருக்கு?" என்று கேள்வியும் கேட்டான்.

"சும்மாத்தான்... பாடுசோலி கெடக்குல்லே? இம்புட்டு நேரத்துக்குப் பொறகு... கொழை ஒடிக்கப் போக ணும்லே?"

"இருட்டிருச்சே?"

"என்ன செய்ய? ஏந் தலையெழுத்து."

அங்க பேச்சுக் கொடுத்த முத்துவேலு, இங்க என்னத்துக்கு வந்தான்? சும்மா வந்தானா? ஏதாச்சும் உள்நோக்கம் இருக்குமா?

அவளுக்குள் எறும்பு ஊர்கிற மாதிரியோர் உணர்வு.

'இல்லாதவன் பொண்டாட்டி எல்லாருக்கும் மதினி'ன்னு ஒரு சொலவடை சொல்லுவாக. நா இல்லா தவ மட்டுமில்லே, நாதியுமில்லாதவ, அதனாலே நோட்டம் விட்டுப் பாக்கானோ...'

அவளுக்குள் ஓடித் தட்டழிகிற நினைவுகள். கசப்பு களையும் அவலங்களையும் அனுபவித்து அனுபவித்து பலவீனப்பட்ட மனசின் மருட்சி.

ஊரைக் கழித்தவுடன் கோயில். அதையடுத்து நாலைந்து புஞ்சைகள். ஓடையில் விழுந்து கரையேறினால், இவளது புஞ்சை.

அகத்திக் கொழையை 'மடக், மடக்'கென்று வேக மாக ஒடித்தாள். நட்சத்திர வெளிச்சத்தில் குத்து மதிப் பாகக் கொழை ஒடித்தாள். காலில் சக்கரம் கட்டிய பரபரப்பு. மனசுக்குள் படபடப்பு. பயத்தின் பரவல்.

'முழுத்த ஆம்பளை வந்து மறிச்சுக்கிட்டு நின்னா... பொட்டச்சியாலே என்ன செய்ய முடியும்? கத்திக் கதறி கூவல்காடு போட்டாலும், கேவலமும் அவ மானமும் இவளுக்குத்தானே?" பயத்தில் நனைந்த மனசின் நினைவுகள்.

குடங்கை முழுக்க கொழைக்கட்டோடு புறப்படுகிற போது—

பின்னால் ஏதோ காலடி அரவம். கண்களைக் கூர்மையாக்கி உற்றுப் பார்த்தாள். கிணற்றுக்குள் இறங்கிக் குளித்துவிட்டு யாரோ வருகிற சத்தம். ஈரக்கைலியை குறுக்குவசமாக மடித்து இடுப்பில் கட்டியிருப்பதில் ஆண் என்று தெரிகிறது. கரிய நிழலுருவம்.

நின்று யார் என்று பார்ப்பதா, நாம நம்ம பாட்டுக்குப் போவதா? ஒரு கண யோசனை.

செருமித் துப்பிய சத்தத்தில் முத்துவேலு என்று பிடி பட... மனசுக்குள் பூரான் ஊர்கிற மாதிரியோர் உணர்வு. அடிமனசின் நறுக்கிடல்.

இரைக்குக் குறி வைக்கிற பூனையின் பம்மல்தானா? தற்செயலான குறுக்கீடா?

இவள் பாட்டுக்கு நடையை எட்டிப் போட்டாள்.

"யாரது?"

அதட்டலாக முத்துவேலின் சத்தம்.

"நாந்தான்..."

"நீதானா? சரி சரி... ஒம்புஞ்சையிலே வேற யாரோ திருட்டுத்தனமா கொழை ஒடிக்குறதாக நெனைச் சுட்டேன்..."

வலது குடங்கை நிறைய கொழையின் பாரம். தோள் வலித்தது. அதோடு பொழியில் நடந்தாள்.

முத்துவேலு வேறு திசைநோக்கி நடந்தான்.

வீடு போனால், வாசலில் துவண்டு சரிந்து கிடக்கிற முருகேசன்.

"என்னப்பா... கண்ணு?"

“எங்கம்மா போனே? வெள்ளாண்டுட்டு தண்ணி குடிக்க வந்தேன். வீடு பூட்டிக் கிடக்கு.”

“இந்தா வந்துட்டேன்... ராசா.”

கொழையைக் கண்ட குதூகலத்தில் தறியமுறிய குதியாளம் போடுகிற கிடாய்க்குட்டிகள். செல்லக் கத்தலாக அதன் கனைப்புகள்.

திண்ணையில் கொழையை ‘சொத்’தென்று போட்டாள். ஒருபிடி கொழையை எடுத்து, கயிற்றில் சுற்றிக் கட்டித் தொங்கவிட்டாள்.

கதவைத் திறந்தாள். தண்ணீர் தாகத்துடன் உள் பாய்கிற முருகேசன்.

“தண்ணிச்சால்லே காரச்சேவு வைச்சிருக்கேன். எடுத்துக்கடா...”

“அய்ய்க்...! எனக்காம்மா?”

“ஆமடா... செல்லம்.”

இவளுக்கும் நாவறட்சி. தொண்டையெல்லாம் உலர்ந்து கிடந்தது. அலைபாய்கிற மனசு. இப்படியா, அப்படியா என்று நிதானிக்க முடியாத நிலையில் குழம்பித் தவிக்கிற மனசு.

முத்துவேலு... யாரு...? கொத்தவர்ற பாம்பா... சும்மா வழியிலே போற ஆளா?

செம்பு நிறைய தண்ணீரை மோந்து... தாகம் தீரக் குடித்தாள். வயிறு குளிர்ந்து நிறைந்த மாதிரியிருந்தது.

‘உட்கார்...’ என்கிற குறுக்கெலும்பு வலி. ‘சித்தே... கட்டையை கீழே சாய்’ என்று கெஞ்சுகிற காலின் உளைச்சல்.

வாழ்வோடு மல்லுக்கட்டுகிற போர்க்குணம். அயற்சியில் சரிந்துவிடாத தைர்யமனம். இன்னும் கிடக்கிற வேலைகளை எண்ணிப் பார்க்கிற மனத்தீவிரம்.

வாளியில் நனைந்து கிடக்கிற முருகேசனின் சட்டை.

வெளித் திண்ணையில் ஈரத்துணியை அள்ளிப் போட்டு உட்கார்ந்து சோப்பு போட ஆரம்பித்தாள். காரச்சேவை 'நறுக்நறுக்'கென்று கொறித்துக் கொண்டே பக்கத்தில் உட்கார்கிற மகன்.

அம்மாவிடம் ஆசை ஆசையாகக் களத்து அனுபவங்களைச் சொல்லத் துடிக்கிற ஆவலில் துடித்தான்.

"ம்மா... களத்துலே வெள்ளாண்டேன்லே?"

"ஆமா..."

"அப்ப- சண்டை வந்துருச்சு. கருவாயன் சுப்பிரமணி, ஊளை மூக்கன் ராமசாமி, ஒட்டைப்பல்லு வேலாண்டி மூனு தடியன்களும் ஒண்ணு சேர்ந்துக்கிட்டு என்னை அடிக்க வந்தாங்கம்மா..."

"அடிப்பாவிகளா! பெறவு?"

"அந்நேரம் ஒரு பெரியாளு வந்தாரு. அவங்களை அதட்டி சத்தம் போட்டாரு. 'யாருமில்லாத பய'ன்னு நெனைச்சீங்களான்னு அதட்டுனாரு. 'நா இருக்கேன்' னாரும்மா..."

"யாரந்த மகராசன்? அவன் நல்லாயிருக்கணும்."

"முத்துவேலும்மா- அவர் எனக்கு என்ன வேணும்மா? மாமாவா... சித்தப்பாவா?"

இவளுக்குள் திக்கென்றிருந்தது. அடிமனசுக்குள் பாம்பு நெளிந்து ஊர்ந்து வருகிற மாதிரியோர் திகிலுணர்வு... மூச்சு முட்டியது.

"அவரு என்ன சொன்னாரு?"

"மாமான்னு சொன்னாரும்மா..."

ராஜம் அப்படியே குலுங்கி நடுங்கிப் போனாள். உள்ளுக்குள் வெட்கிப் போனாள். 'ச்சீய்ய்' என்று தன்னைத்தானே திட்டிக் கொண்டாள். மனசின் ஆணிவேர் வரைக்கும் கசந்து அழறியது. காறிக்காறித் துப்பினாள்.

'நாதியத்து... ஒத்தை மனுசியா கெடந்து சீரழியுற கொடுமையிலே... மனசும் அவிஞ்சுபோச்சா? உடன் பொறப்புபோல நெனைச்சுப் பழகுகிற மனுசனையும் சந்தேகப்படுற அளவுக்கு... மனசு குருடாகிப் போச்சா...'

தனது மனக்கோணலையும், கோணல் தலையெழுத்தையும் எண்ணிப் பார்த்த ராஜத்துக்கு... 'ஓ'வென்று வெடித்து அழணும் போலிருந்தது.

அடக்கிக்கொண்டு.. மகளைப் பார்த்துக்கொண்டே சோப்பு போட்டாள். நுரையோடு சேர்ந்து அழுக்கும் கலந்து நகர்கிறது.

–'புதிய பார்வை'–ஆகஸ்ட், 2007.

# 17 மனித மனசு

ஆடு குட்டிகளுக்கு மார்கழிப் பனியும், வைகாசி வெயிலும் ஒன்று. ஆடு குட்டிகள் வாலைப் பிடித்துக் கொண்டு பின்னால் திரிபவர்களுக்கும் அப்படித்தான்.

வைகாசி மாச அக்னி நட்சத்திர வெயில், தீயை அள்ளிக் கொட்டுகிறது. காற்றில்லாத வெயிலின் உக்கிரத்தில் முதுகுத்தோல் காந்துகிறது.

இப்பவும்... எப்பவும் போலவே நீல நிறத்து உல்லன் சால்வையைத் துண்டுக்குப் பதிலாக தோளில் போட்டிருக்கிற லட்சுமணன். அவனது கண்ணில் இரை தேடும் பருந்தின் நிழல். தந்திரம் பதுங்கியிருக்கிற உதடுகள்.

முன்னத்திக் கால்களை அகலப் பரத்திக்கொண்டு வர மறுத்து அடம்பிடிக்கிற பெண் மறியை, கழுத்துக் கயிறு கட்டி முக்கித்தக்கி இழுத்து வருகிறான்.

'ம்ம்ம்க்க்க்மேய்ய்ய்க்' பீதியும் பதற்றமும் கருவிழியில் பரிதவிக்க, கர்ணகடூரமாகக் கனைக்கிற அந்தப் பெண்மறி. செல்லச் சிணுங்கலான கனைப்புடன் பின்னால் வருகிற சின்னஞ்சிறு இளங்குட்டிகள். அதுகளும் தாயைப் போலவே மினுமினுப்பான கறுப்பு. அடி வயிற்றில் வெள்ளை.

ஊரின் கீழ்க் கோடியில் பஸ் வந்து வட்டமடித்துத் திரும்புகிற மைதானம். 'பெருந்தலைவர் காமராஜர்

பேருந்து நிலையம்' என்று போர்டு வெயிலுக்கும் மழைக்கும் நனைந்து மங்கலாகிப் போயிருந்தது.

மைதானத்தின் வடக்கு எல்லை பூராவும் வேப்ப மரங்கள். பெரிய சாக்கடை வாய்க்காலின் சிமெண்ட்டுச் சுவர். பஸ் வருகிற நேரம், வராத நேரம் எல்லா நேரங் களிலும் மர நிழலே தஞ்சமென்று உட்கார்ந்திருக்கிற கிராமத்து ஆட்கள்.

உலக அரசியல், மார்க்கெட் நிலவரம், ஊர்ப் புரணி என்று 'சகல'மும் பேசப்படும். எந்நேரமும் காட்ட சாட்டமான மனிதக் குரல்கள். ஆடு புலியாட்டமும் நடக்கும்.

லட்சுமணன் பெண்மறியை முக்கித்தக்கி இழுத்து, ஒரு வேப்ப மரத்தில் கட்டிப் போட்டான். கயிற்றை உள்ளங்கையில் சுற்றி இழுத்த அழுத்தத்தில் ரத்தம் கன்றிப் போயிருந்த கையை வாயால் ஊதிக் கொண் டான்.

"என்ன லச்சுமணா.. உருப்படி எங்க வாங்குனே?"— காளியப்பன். பெரிய வியாபாரி. ஏகப்பட்ட உருப்படி களை வாங்கி லோடு வேனில் ஏற்றி, எட்டையபுரம் சந்தைக்குப் போய் விற்கிறவன். சின்ன வயசிலிருந்தே ஆடுகளுடன் சகவாசம். ஆடு மாதிரியே அடிக்கடி செருமுவான். பச்சைக் கலர் உல்லன் சால்வை தோளில் கிடந்தது.

"கோயிலூர்லே!"

"தீர்ந்த வெலைக்கு மேல அம்பது ரூவா வாங்கிக் கிட்டு அவுத்துடுவியா?"

*"அங்கயிருந்து ரெண்டு மைல் தூரம்... வேனாக் கொதிக்குற வெயில்லே இழுத்துச் செத்துருக்கேன். சும்மாவா?"*

*"நூறு வைச்சுக்கிடுதீயா?"*

*"ஏவாரத்துக்குத் தரல்லே. வீட்லே கட்டிப் போட்டு வளர்க்குறதுக்கு யாராச்சும் கேட்டா தரணும். அப்பத் தான் ரெண்டு சில்லறையைப் பார்க்க முடியும்!"*

*காளியப்பன் மனசுக்கு சபலம். 'எப்படியும் உருப்படி களை வாங்கிப் போட்டுட்டா... நாநூறுக்குக் கொறை யாம லாபத்தைப் பாத்துரலாம்!' என்று நினைவுகளுடன் எச்சில் ஊறுகிறது அவனுக்கு. மறியையும், குட்டி களையும் கூர்மையாகப் பார்க்கிறான். எடை போடுகிற தராசு மனம்.*

*"முக்காலி (மூவாயிரம்)ன்னு முடிச்சுருப்பியா?" வியாபாரிக்கு வியாபாரி பேசிக்கொள்கிற ரகசிய மொழி.*

*"கட்டில் காலு (நாலாயிரம்)க்கு மேலே...!"*

*"நீ புளுகுதே- ஒண்ணும் தெரியாத குருட்டுப் பயகூட இந்த விலை போட்ருக்கமாட்டான். நீயா.. போடுவதா?"*

*"இல்லேண்ணே.. சத்தியமா பொய்யில்லேண்ணே!"*

*"சத்தியந்தான் நம்ம தொழில்லே சக்கரைப் பொங்க லாச்சே...!"*

*பீடி எடுத்து உதட்டில் வைத்தான். நுனியைக் கடித்துத் துப்பினான். பற்ற வைத்துக் கொண்டான். காந்தலான புகை, நாசி வழியே சீறியது. தீப்பெட்டியைத் தலை மகுடமாக பருத்திருந்த தலைப்பாகைக்குள் சொருகிக் கொண்டான்.*

காளியப்பனைக் கள்ளப் பார்வையாகப் பார்க்கிற லட்சுமணன். அனுபவப்பட்ட பெரிய வியாபாரியான அவன், தனது உருப்படிகளை ஆசை ஆசையாகப் பார்க்கிறான். அப்படீன்னா- நல்ல உருப்படிதான். கூடுதலான இருநூறு, முந்நூறு விலை சொல்லலாம்.

ஊருக்குள் போகிறான்... வெயில் கொளுத்துகிறது. தாட்சண்யமில்லாத கொலைகார வெயில்.

"வளர்ப்புக்கு ஒரு பொம்மறி இருந்தா சொல்லு, லட்சுமணா...!" தாகத்தோடு ரெண்டு பேர் சொல்லியிருந்தனர். மேலத்தெரு முருகேசன், நடுத்தெரு முத்தையா... மேற்கொண்டு வடக்குத்தெரு செல்லியம்மாவிடமும் தாக்கல் சொன்னான்.

"நல்ல உருப்படி வந்துருக்கு. அருமையான வம்சம். ஈத்துக்கு ரெண்டு மூணு குட்டி போட்டு... சினையாகுற வரைக்கும் பால் குடுத்து வளர்க்குற நல்ல பரம்பரையைச் சேர்ந்தது. வாங்கி வளர்த்தீங்கன்னா வீடே விருத்தியாகும்!"

மூன்று பேரும் வந்தாயிற்று. ஒரு சின்னச் சந்தை கூடிய மாதிரிதான். கூட நூறு, இருநூறு கிடைக்கும்.

வந்தவர்கள், அனுபவப்பட்ட வியாபாரியான காளியப்பனிடம் யோசனை கேட்டார்கள்.

"வெள்ளாடு... நல்ல வம்சமா?"

"ரெண்டாவது ஈத்துலே ரெண்டு குட்டின்னா- நல்ல வம்சந்தான்!"

"லட்சுமணங்கிட்டே என்ன வெலை, ஏது வெலைன்னு கேட்டு, நீயே வெலை பேசிவிட்டுரு!"

பெரிய வியாபாரி காளியப்பன், இப்போ தரகராகி விட்டான். செருமிக்கொண்டே, "லட்சுமணா, வெலை சொல்லு" என்றான்.

காளியப்பன் கேட்டவுடன் லட்சுமணன் ஒரு விலை சொல்ல, அவன் குட்டிகளைக் குறை சொல்ல... இவன் பெண்மறியைப் புகழ... அவன் பெண்மறியைக் குறை சொல்ல... இவன் கெட்ட வார்த்தையில் வைய...

"சரியப்பா... நிதானமா, ஞாயமா ஒரு வெலை சொல்லப்பா" என்ற அவன் தணிய... லட்சுமணன் எகிற...

ஒரே சத்தக் காடு. காரசாரமான கூவல் காடு.

அந்தா... இந்தா... என்று ஒரே இழுபறி. வாய்ச் சத்தம்.

கடைசியில் செல்லியம்மாளுக்கு ஆடு குட்டி என்று முடிவாகி...

'மூவாயிரத்து நாநூற்று எழுபது' என்று முடிந்தது.

காளியப்பனுக்குத் தரகு ரூபாய் ஐம்பது. செல்லி யம்மா தந்துவிட்டாள். தொகையை வாங்கி எண்ணிச் சரி பார்த்துக் கொள்கிற லட்சுமணன் கண்ணில் மன மின்னல்.

மனசுக்கு றெக்கை முளைத்த மாதிரி இருந்தது. கணிசமான லாபம் பார்த்துவிட்ட மனச் சந்தோஷம். சந்தோஷ போதையில் உல்லாசமாகிற மனசு, 'இன்னும் லாபத்தை உயர்த்த என்ன செய்யலாம்' என்ற யோச னையில் தந்திரம் செய்தது.

கோயிலூர் ராமசாமிக் கோனாரிடம்தான், வெள் ளாட்டையும் குட்டிகளையும் வாங்கினான். இரண்டா

யிரத்துத் தொள்ளாயிரம் என்று விலை பேசி, ஐம்பது பைசா அட்வான்ஸ் தந்தான்.

பதினைந்து நாள் வாய்தா கேட்டான், பணத்துக்கு. அவர் ஒரேயடியாக பதறியடித்து மறுத்துவிட்டார். "நானே ஆத்திர அவசரத்துக்கு வெலை கொறைச்சுத் தந்திருக்கேன். பெத்த புள்ளைக்குக்கூட சீதனம் தர மனசு சம்மதிக்காது. அப்பேறப்பட்ட ஐட்டம். ஐஸ் வர்யம். ரொக்கம்னா பத்திட்டுப் போ! இல்லேன்னா வுட்டுப் போ!"

"சரி, என் சைக்கிளை வைச்சுக்கிரும். சாயங்காலத்துக் குள்ளே ஒம்ம கையிலே ரூவாயை ஒப்படைச்சிட்டு, சைக்கிளை வாங்கிக்கிடுதேன்... சரிதானா?"

"சரி, சரி!"

ஆற்றைக் கடந்து, பனந்தோப்பைக் கடந்து, செவற் காட்டு உழவுப் புழுதியில் நடந்து... கோயிலூர் போய்ச் சேர்ந்த லட்சுமணன், ராமசாமிக் கோனார் முன்னால் போய் நின்றபோது, மணி ரெண்டரை.

அவர் முகமெல்லாம் ஒளிப் பரவல். நரைத்த மீசை மகிழ்ச்சியுடன் சிரித்தது. "வந்துட்டீயா?"

"வந்துட்டேன்!" சுரத்தில்லாமல் உயிர் துவண்ட குரலில் லட்சுமணன்.

"என்னாச்சு... ஒரேயடியா நொந்து போயிருக்கே?"

"வாய்தாவுக்கு வுட்டுருந்தீர்னா... ஆற அமர நாலஞ்சு பேரைப் பாத்து, பேசிக் கீசி வித்து... நூறு இருநூறு லாபம் பாத்துருக்கலாம். நீரு, 'இன்னிக்கே வேணும்'னு சொல்லிட்டீர்லே...?"

"அதனாலே?"

"வாய்ச் சுத்தமா நடக்கணுமேனு... ஏவாரிகிட்ட வித்தேன். நூறு ரூவா கை நட்டத்துக்கு வித்தேன். ஆடு குட்டியைய அக்னி நட்சத்திர வெயில்லே இழுத்து, நடந்து-உசுரு அறு(று)தந்து போச்சு. சீரழிஞ்ச பொழைப்பு. சேதாரப் பொழைப்பு!"

முகம் குறாவிப் போய் நின்றான், லட்சுமணன். மடியிலிருந்து இரண்டாயிரத்து எண்ணூறு ரூபாயை மடித்துச் சுருட்டியவாக்கில் நீட்டினான்.

அவர் எண்ணிக்கொண்டு இருக்கும்போதே, அண்டராயர் பையிலிருந்து ஐந்தும் பத்துமாக நூறு ரூபாயை எடுத்து நீட்டிக்கொண்டு இருந்தான். முகத்தில் வேதனை. கண்ணில் வருத்த நிழல். ரூபாயை எண்ணி முடித்து இவன் முகம் பார்க்கிற கோனார்...

"என்ன... இது?"

"கை நட்டம் என்னோட போகட்டும். பேசுனபடி ஒமக்கு ரெண்டாயிரத்து தொள்ளாயிரம் தரணும்லே?"

அவன் முகத்தைக் கூர்ந்து பார்க்கிற அவர், 'இது பொய்யா, நிஜமா' என்ற சந்தேக நிழல். வெட்டி வெயிலில் போட்ட செடியாக வாடிக் கிடக்கிற இவனது முகம்.

"என்னாலே நீ நட்டமாக வேண்டாமப்பா! அதை நீ வைச்சுக்கோ!"

பெருந்தன்மையின் மிருதுவாக அவரது குரல்.

"அப்ப சரி..." என்று சைக்கிளை எடுக்கிற லட்சுமணனுக்குள் நிலாவெளிச்சம். மனக் குதூகலம். வெற்றி பெற்றுவிட்ட வியாபார மனக் கும்மாளம்.

வெறும் சைக்கிளுடன் விடியற்காலம் புறப்பட்டவன், வாய்ச் சாமர்த்தியம், புத்தி சாமர்த்தியத்தால் அறுநூறு ரூபாய்க்கு மேலான லாபத்துடன் வீடு போகிறான். டிராயர் பைக்குள் சுருண்டு கிடக்கிற ரூபாய் கனத்தில், மனசு ஆகாயத்தில் மிதக்கிறது.

பெடலில் கால் வைக்கிறபோது, கோயிலூரின் மேலத் தெருவில்... யாரோ... யாரிடமோ கண்டனக் கூச்சலாகப் பேசுகிற பெருங்குரல்.

"ஏலேய்... கண்ணு மூக்கு தெரியாம ஆடாதீகடா. நீங்க செய்ற பாவ புண்ணியமெல்லாம் சும்மா போகாது. உங்க புள்ளைக தலையிலே வந்து விடியும்டா!"

லட்சுமணனின் மனச்சாட்சி போல ஒலித்த அந்தக் குரல். வெற்றிக் களிப்பில் மிதந்த வியாபார மனசு, றெக்கை ஒடிந்து, மனுச மனசாக - தகப்ப மனசாக அவன் தன்னை உணர...

டிராயர் பைக்குள் இருந்த பணம், குற்ற உணர்ச்சியாகக் கனத்தது. உள்மனசில் நடுக்க அதிர்வு.

ஒரு கணம்தான். பெடலை மிதித்து ஏறி, ஸீட்டில் உட்கார்கிற லட்சுமணன்.

கனக்கிற மனசை ஒரு பெருமூச்சில் வெளியேற்றி விட்டு... "நாய் வித்த காசு, கொரைக்கவா போகுது? நாறிக் கிடக்குற பொழைப்பு ஞாயத்தைப் பாப்போம்!"

லௌகீக வாழ்க்கையின் மூர்க்கத்துக்குப் பணிந்து... மனித மனசு துவள... உடல் விறைத்து மிதிக்க...

சைக்கிள், 'கொரட், கொரட்'டென்று உருள்கிறது.

–'ஆனந்தவிகடன்'–25–7–2007

# 18 சகலமும் சரசு

சமுத்திரத்துக்கு குதுகுதுவென்று காய்ச்சல் வருவது போலிருக்கிறது. நடுக்கமும் பதற்றமுமாக இருக்கிறது.

வெலவெலத்துக் கிடக்கிற முகத்தைப் பார்த்தாலே பரிதாபமாக வருகிறது சரசுவுக்கு. 'பாவம்... இந்தாளு இப்புடி ஆயிட்டாரே, பேயடிச்ச மாதிரி.'

"சாப்டுதீகளா...?"

"வேண்டாம்."

"என்னத்துக்கு இப்படியிருக்கீக?"

"தெரியலே."

தன்னை உள்ளும் புறமுமாக அளந்து, எடை போட்டு வைத்திருக்கிற துல்லியத்தில் உயிர்ப் பங்காளி. அவளை நிமிர்ந்து பார்க்கிற அவனது கண்ணிமைகள் படபடக்கின்றன, வெட்டுப்பட்ட பல்லி வாலாக.

"பாயை விரிச்சுப்போடு... சித்தே படுக்கணும்."

"பட்டப்பகல்லே என்ன பாயும், படுக்கையும்? அப்படியே தெருக்காட்டுக்குப் போய்... ஒரு டீ, கீ குடிச்சுட்டு வாங்க."

"தெருக்காட்லே மனுசப்பய எவன் இருக்கான்? எல்லாரும் அருவாக்கம்பும் ஆயுதமுமா வேங்கை போல அலையுறானுங்க..."

“அலைஞ்சா ஒங்களுக்கென்ன? ஒங்களையா வெட்டப் போறாக? நமக்கு யாரோட என்ன தாவா?”

அவளைப் பார்க்கிறான். சரசு, சக்தியின் ரூபம். தைரியலட்சுமி. காட்டு வேலைகளிலும் சரி, வீட்டு வேலைகளிலும் சரி... ‘வந்து பார்’ என்பாள். ஆண்களால் மட்டும் செய்ய முடிகிற ‘பாத்தி கட்டு’ போன்ற மம்பட்டி வேலைகளிலும்... புகுந்து மல்லுக்கட்டுவாள். தாட்டிய மானவள். தெருவில் ஏதாச்சும் தகராறு, விவகாரம் என்றால், தைர்யமாகத் தலையிடுவாள். தட்டிக் கேட்பாள். சரிப்படுத்துவாள்.

“தெருவுக்குப் போறீகளா, பாயை எடுத்துப் போடவா?”

“டீக்கடைப் பக்கம் போறேன்...”

அரைமனத் தயக்கத்துடன் துண்டைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வெளியேறுகிற சமுத்திரம், சும்மாவே பயந்த சுபாவம். ‘நமக்கெதுக்கு வம்பு’ என்று ஒதுங்கி ஒதுங்கி, உள்ளுக்குள் பதுங்குகிறவன்.

இப்போது ஊர் நிலவரம் வேறு சரியில்லை. ஊர் முழுக்க அரண்டு கிடக்கிறது. ‘எந்நேரம், எந்த இடத்தில் எவன் தலை உருளுமோ’ என்ற திகிலில் உறைந்து கிடக்கிற பயங்கரம்.

“கையிலே ஆயுதமில்லாம யாரும் போகாதீகடா. எங்க போனாலும் நாலைஞ்சு பேரா சேர்ந்து சேர்ந்து போங்க.”

“வீடு, கடை, தெருவைத் தாண்டி பொண்டு புள்ளைக எங்கேயும் போகக்கூடாது.”

ஊர்க்கூட்டம் போட்டிருக்கிற கண்டிப்பான தடை. ஆங்காங்கே நடக்கிற வன்முறைகள். வெட்டுக்குத்துகள். உயிர்ச் சேதாரங்கள்.

பதினைந்து நாளுக்கும் மேலாகிவிட்டது ஊர்ஜனம் காடுகரைகளுக்குப் போய். ஜாதிப் பகைமை, தீவெக்கை யாகக் கனல்கிறது. முந்தாநாள்கூட ஊரோரத்து ஓடைக் குள் வெட்டுப்பட்ட ரத்தச்சகதியாக பிணமாகக் கிடந் தான் சரவணன்...

அச்சத்திலும் திகிலிலும் முடங்கிக் கிடக்கிற ஊர். ரவ்வும் பகலுமாக வேல்கம்புகளும் அரிவாள்களுமாக வளைய வருகிற இளவட்ட வேங்கைகள்.

“போட்டுத் தள்ளுங்கடா. பாத்தா, எவனையும் வுட்டுராதீகடா. ஜோலியை முடிச்சிருங்க” வன்மப் பகையும் ரத்தப் பசியுமாக அலைகிற ஜாதீய வெறுப்பு.

நித்தம் ஒரு சம்பவம். சுற்றுப்பட்டி நாலு ஊர் களுக்குள் சுழன்று மையம் கொள்கிற பகைப்புயல்.

கடைக்கு சரக்கு வாங்க வந்த அயலூர்ப் பெண் ணிடம் கேலி கிண்டல் பண்ணுகிற பாவனையில், கெட்ட நோக்கோடு பல்லையிளித்து வம்பு பண்ணிய ரெண்டு போதை மப்புகள்.

ரோஷப்பட்ட அந்தப் பெண், கோபமும் கொதிப்பு மாக ஜாதியைச் சொல்லி வைய...

அம்புட்டுத்தான். வேனலும் வெக்கையுமாக தகித்துக் கிடக்கிற கந்தக மண்ணில் தெறிக்கிற ரத்தச்சகதி.

ஜாதியாகத் திரண்டு அரிவாள் கம்புகளோடு நியாயம் கேட்டு வந்த அயலூர்க்காரர்கள்.

"ஊர்விட்டு ஊர் வந்தா வெவகாரம் பண்றீக? ஒங்களுக்கு அம்புட்டு மப்பா?" என்று உலக்கைகளும் மம்பட்டிகளுமாக வன்மத்தீயோடு எதிர்கொண்ட இந்த ஊர்க்காரர்கள்.

வன்மப் பேச்சு சவடால்கள். வார்த்தைக் கங்குகள்.

"வந்து பாருங்கடா... உசுரு அ(று)ந்து போகும்."

"நீங்க என்ன பெரிய கொம்புகளா? பதினோரு மாசமா, நீங்க?"

வெட்டுகளும் குத்துகளுமாக கொலைவெறி மோதல். புஞ்சை வெள்ளாமைகளை நாசமாக்குகிற பகைக் குரூரம். பம்ப்ஷெட் மோட்டார்களை உடைக்கிற மூர்க்கம். பெண்களின் சீலைகளை உருவுகிற துச்சாதனத் தனம். கூளப்படப்புகளை தீ வைத்து சாம்பலாக்குகிற மிருகத்தனம்.

இதுவரைக்கும் எட்டுத் தலைகள் உருண்டுவிட்டன. அங்குட்டு அஞ்சு, இங்குட்டு மூணு. 'எப்ப, என்ன ஆகுமோ... எவர் உயிர் போகுமோ' என்ற பயப் பதைப்பில் நாலு ஊர் ஜனமும்.

சமுத்திரம் உள்ளுக்குள் குலை பதறிக் கிடக்கிறான். பயந்த சுபாவமான சமுத்திரம், இந்தப் பயங்கரச் சூழலில் கிடுகிடுவென்று நடுங்கிச் செத்தான்.

போதாக்குறைக்கு ஊர் மடத்தில் வந்து கேம்ப் அடித்திருக்கிற காக்கிச் சட்டைகளைக் கண்டவுடன், இவனுக்குள் 'டர்ர்ர்'ராகி விட்டது. ஓடைக்கு ஓடாத குறைதான்.

"இந்தா... கள்ளமுழி முழிச்சிக்கிட்டுத் திரியுதானே... இந்தச் சமுத்திரம் பயலைப் பிடிச்சி இழுத்து... நாலு மிதி மிதிச்சு, 'உள்ளே' தள்ளி... வெளியே வரமுடியாத செக்ஷன்லே கேஸைப் போட்டு அமுக்கு."

காவல்துறையின் லத்திக்கம்பு இவனை நோக்கி நீள்வதாகக் கற்பனை, கற்பனைகள்.

"பம்மிப் பதுங்கி, பூனை கணக்கா அலையுதானே... அவனைக் குறிவைச்சு போட்டுத் தள்ளிருங்கடா" என்று அயலூர்க்காரர்களின் 'கொள்ளிக்கண்' தன்மீது படுவதாக ஒரு பிரமை.

சமுத்திரத்துக்குள் அடிக்கடி வியர்த்துக் கொட்டுகிறது. அடிவயிற்றில் ஐஸ்கட்டியைச் சொருகுவதைப் போன்ற பயச் சிலிர்ப்பு.

சமுத்திரம் டீக்கடைக்கு வந்தான்.

வழக்கமாக இந்நேரம் டீக்கடை. 'ஜேஜே' என்று கிடக்கும். நாலு ஊரு ஜனமும் வந்து அலைமோதும்.

இப்ப என்னடாவென்றால்...

காற்றாடுகிற டீக்கடை. கறுப்பு வெள்ளை டி.வி.யில் சினிமா ஓடிக்கொண்டிருக்கிறது. மூன்றே மூன்று ஆள்தான். நாலாவது ஆளாக சமுத்திரம்.

"ஒரு டீ போடப்பா."

டீயை வாங்கிய சமுத்திரம், ஆவியை நுகர்ந்து கொண்டே டீயை உறிஞ்சுகிறான். டி.வி.யைப் பார்க்க மனச்சம்மதமில்லை.

உழைத்துக் கஞ்சி குடிக்கிற அன்றாடங்காய்ச்சிகளுக்கு இந்தச் சூழ்நிலை, எம்புட்டு சிரமப்படுத்தும்.

உலை காயாமல், அடுப்பெரியாமல்... வேலை ஜோலிக்குப் போக இயலாமல்... பசியும் பட்டினியுமாக எம்புட்டுத் துயரப்படும்... கவலை ஈக்கள் மனப்புண்ணை மொய்க்கின்றன.

டீக்கிளாஸை பெஞ்சில் வைக்கிற சமுத்திரம். அந் நேரம்-

மொது மொதுவென்று ஊர் ஜனம் ஓடுகிறார்கள். பதற்றமும் பதைப்புமான புலம்பல்களுடன் பரபரத்துப் பாய்கின்றனர். பெண்கள் தலைவிரிகோலமும், மாரடிப்பு மாக ஓடுகின்றனர். கண்ணீரும் கம்பலையுமான ஒரு துக்கம் பரவுகிறது.

"ஐயோ... நம்ம முனியசாமியை வெட்டிச் சாய்ச்சிட் டாகளே..."

"ஊரணி வேலிமரக் கூப்புக்குள்ளே ஒடம்பு கெடக்கு தாம்..."

பொதுவாக... இப்படிப்பட்ட தருணத்தில், சமுத்திரம் எதிர்த் திசையில் ஓடுவான். சந்துக்களின் வழியாக வீடு போய்விடுவான். ரத்தத்தைப் பார்த்தால் மயக்கம் வந்துவிடும், இவனுக்கு.

இப்ப... அப்படி ஓட முடியாது. டீக்கடைக்காரன் பார்வையில் இவன். 'பயந்தாரிப்பய' என்று டீக் கடையில் தன்னைப் பேசிவிடக்கூடாதே என்ற பயம்.

கூட்டத்தின் கடைசியில்... தனியாளாக ஓடிக் கொண்டிருக்கிற அரைமனசுச் சமுத்திரம்.

அரை ஓட்டமாகக் கால் ஓட்டமாகப் பின்வாங்கிய சமுத்திரம், உள்ளுக்குள் நடுங்கினான். 'என்னாகுமோ ஏதாகுமோ' என்று பதறிப் பதைத்தான்.

ஒரு சந்து வழியாக ஒதுங்கிக்கொண்டான். ஒரு சிறு தெருவைத் தாண்டி மறு சந்துக்குள் நுழைந்தால், தன் வீடு. பதுங்கிக் கொள்ளலாம். பூனைபோல பம்மிப் பம்மி நடந்தான். காலடிச் சத்தம் அவனுக்கே கேட்க வில்லை.

அப்போதுதான்... அந்தக் காட்சி.

ரெட்டை மாடிக் காரை வீட்டில்தான் அந்த அலங் கோலம். முப்பத்தைந்து வயது வாழாவெட்டிப் பெண் ராசாத்தி. அரைகுறை ஆடைக் குலைவில் அவள். அவளைக் கொஞ்சிக் கொண்டே பிரிந்து வருகிற முத்துராசு. உடம்பெல்லாம் வியர்வைக் காடு. ராசாத்தி யுடன் கூடிக் களித்துவிட்டு கொடுத்து வாங்கிய சுகச் சுவடுகளின் மனத்திளைப்பு. அவனது முகத்தில்.

பயங்கரம் நிகழ்ந்த தருணத்து ஊர் வெறுமையைப் பயன்படுத்திக் கொண்டு... இந்த நாய்கள் இப்படியா, வெட்கங்கெட்ட தனமாக... ச்சீச்சீய்...!

இவனை நோக்கி வருகிற முத்துராசு.

வழக்கமாகப் பயந்து சாகிற சமுத்திரத்துக்குள் சண் டாளமாகப் பொங்கிப் பெருகுகிற ரௌத்ரம். சக்தியின் ரூபமான சரசுவே அவனுள் இறங்கி, இயங்குவதைப் போல அப்படியொரு ஆத்திரம் ஆங்காரம்.

முத்துராசுவின் கழுத்துத் துண்டை இறுக்கிப் பிடித் தான், இடது கையால், வலது கையால், செருப்பைக் கழற்றி 'சப், சப், சப்'பென்று அறைகிற சமுத்திரம். சாமியருள் வந்தவனைப் போல வெறித்தனமாக அடிக்கிற பேயடிகள்.

ஆவேசமாகக் கத்தினான்.

"ஏண்டா, ஊருஜனம் பூராவும் கவலையிலேயும் பயத்துலேயும் கலங்கிக் கிடக்கையிலே... ஊரே நாசக் காடாகிக் கிடக்கையிலே... ஒனக்கு மட்டும் குறுக்கு வழியாடா? ராஸ்கல், நாய்ப் பிறவியாடா? வெக்கங் கெட்ட மூதி..."

இவன் இடது கை லேசாகத் தளரவும், உருவிக் கொண்டோடுகிற முத்துராசு. பிடிபட்ட ஊமைக் கள்ள னாகப் பேச்சற்று மூச்சற்று அடிவாங்கிய அவன், ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்.

சாமியாடிய ஆவேசத்தில் இளைக்கிறது. சமுத்திரத் துக்கு. சரசு விட்டு விலக... சாமி மலை ஏற... ரௌத்ரம் வடிய... செருப்பைக் காலில் மாட்டிய சமுத்திரம்.

அவனை அவனே விலகி நின்று பார்த்த நினைப் பில்... 'தான் மட்டும் குறுக்கு வழியில் பதுங்கலாமா' என்ற சுய யோசனையில்...

இவனும் திரும்பினான். வெட்டுப்பட்டு கிடக்கிற முனியசாமியைத் தூக்குகிற ஆள்களோடு இவனும்...

இப்போது...

'ஜாதிச்சண்டை, வீண் சச்சரவு இல்லாத காலம் வந்தால், நன்றாக இருக்குமே.'

சமுத்திர ஆழத்தில் இப்படியொரு நினைப்பாக ஓடிய ஒரு கனா.

–'குமுதம்'–25–07–2007

திருவரசு புத்தக நிலையம்